
# 13 இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)



சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

Web| www.nie.lk Email| info@nie.lk

# இஸ்லாம்

## க.பொ.த உயர் தரம்

## தரம் - 13

## ஆசிரியர் வழிகாட்டி

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**ISLAM - TEACHERS' GUIDE**

**GRADE 13**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 13
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2017**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா, பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மத்**
பிரதிப் பணிப்பாளர்,
ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா, பேருவளை

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.பாரி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.எல்.எம்.ஹனீபா**
துறைத் தலைவர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை,
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**கலாநிதி எஸ்.எம்.மஸாஹிர்**
சிரேஷ்ட விரிவுரையாளர், பீடாதிபதி
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்

**அஷ்ஷெய்க் எம்.ரி.ரிஸ்வி**
துறைத் தலைவர்,
இஸ்லாமிய நாகரிக கற்கைகள் துறை
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரி. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

| | |
|---|---|
| **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்,** | தேசிய கல்வி நிறுவகம் |

**வெளியக**

| | |
|---|---|
| **அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.புஹாரி** | *ஆசிரிய ஆலோசகர்,*<br>மினுவங்கொடை கல்வி வலயம் |
| **எம்.எச்.எம். நாளிர்** | *ஓய்வுபெற்ற ஆசிரியர்.* |
| **எம்.எஸ்.எம். அனஸ்** | *ஓய்வுபெற்ற ஆசிரியர்.* |
| **அஷ்ஷெய்க் எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்** | *ஆசிரியர்,*<br>அலிகார் மு.வி, கல்-எலிய |
| **மௌலவி எம்.எஸ்.ஏ. நாளிம்** | *ஆசிரியர்,*<br>ஸாஹிரா தேசிய பாடசாலை,<br>மாவனல்லை |
| **அஷ்ஷெய்க் எம்.எச்.எம். பர்ஹான்** | *ஆசிரியர்,*<br>அலுத்கம்வீதிய மு.ம.வி, தர்கா நகர். |
| **அஷ்ஷெய்க் எம்.எம். மொஹிடீன்** | *ஆசிரியர்,*<br>அரபா முஸ்லிம் ம.வி, உடுகொட |
| **மௌலவி எஸ்.எம்.எம். முகர்ரம்** | *ஆசிரியர்,*<br>ஸாஹிரா மு.வி, எல்லளமுல்ல, பஸ்யால |
| **அஷ்ஷேய்க் அரபாத் கரீம்** | *விரிவுரையாளர்,*<br>ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா,<br>பேருவளை |
| **அஷ்ஷேய்க் பஸ்லுல் பாரிஸ்** | *ஆசிரியர்,*<br>அல்மின்ஹாஜ் மு.ம. வி,<br>பெருக்குவெட்டான் |

தட்டச்சு - எம்.எப்.எம்.பாஹிம்

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாகத் தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

......

செயற்றிட்டத் தலைவர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii - iv |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| • கலைத்திட்டக் குழு | vi - vii |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | viii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1 -185 |

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 06: மனித வாழ்வின் விமோசனத்திற்கு ஆன்மீகமே அடிப்படை என்பதை விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1: ஆன்மீகம் பற்றிய இஸ்லாமிய நோக்கையும் ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளையும் விளங்கி ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாக உள்ள அம்சங்களைத் தவிர்த்து வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**நேரம்: : 15 பாடவேளைகள்**

**கற்றல்பேறுகள்**

- ஆன்மீகம் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கை ஆதாரங்களுடன் விளக்குவார்.
- தஸ்கியதுந் நப்ஸின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாக இறை நெருக்கத்தை வலுப்படுத்திக் கொள்வார்.
- ஆன்மீக வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாக உளச்சாந்தி பெறுவார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாக உள்ள அம்சங்களை இனங்கண்டு கூறுவார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாக உள்ள அம்சங்கள் ஆன்மாவைப் பாதிக்கும் விதம் பற்றி விளக்குவார்.
- அவற்றிலிருந்து தவிர்ந்து ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**ஆன்மீகம் பற்றிய அறிமுகம்**

- மனிதன் இரு விதமாக நோக்கப்படுகிறான்.

1. மதங்கள் மனிதனை, ஆன்மாவைப் பிரதானப்படுத்தியே நோக்குகின்றன. சில மதங்கள் உடம்பை வருத்துவதன் மூலம் ஆன்மீக விமோசனம் பெறலாம் என்கிறது.
2. உலகில் காணப்படும் கொள்கைகள், அல்லது நாகரிக உலக சித்தாந்தங்கள் மனிதனை உடலும், அறிவும் கொண்டவனாக நோக்குகிறது.
   மனிதன் = உடல் + அறிவு

   இவ்விரு நோக்குகளும் மனிதனிடம் பொதிந்துள்ள ஆன்மாவை மொத்தமாகப் புறக்கணிக்கின்றன. உடலையும், அறிவையும் வளர்ப்பதற்கான சகல வழிகாட்டலையும் அவை வழங்குகின்றன. ஆன்மாவுக்கு எத்தகைய வழிகாட்டலும் அங்கு கிடைப்பதில்லை. எனவே இந்த மனிதன் ஆன்மீக வறுமை கொண்டவனாக மாறிவிடுகிறான்.

- இஸ்லாம் மனிதனை மூன்று கூறுகள் கொண்டவனாக நோக்குகிறது. எனவே இவை மூன்றுக்குமான உயரிய வழிகாட்டலை அது வழங்குகிறது.

  மனிதன் = உடல் + அறிவு + ஆன்மா

இவை பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது.

*உடல் :*

''நாம் மனிதனை அழகான அமைப்பில் படைத்தோம்'' (அத்தீன் : 4)

*அறிவு :*

''அவன் ஆதமுக்கு அனைத்து பொருட்களினதும் பெயரைக் கற்றுக் கொடுத்தான்'' (பகரா: 31)

*ஆன்மா :*

''அவரை நான் செவ்வையாக உருவாக்கி அவரில் என் ஆவியிலிருந்து ஊதியதும் அவருக்கு சிரம் பணியுங்கள் என்று கட்டளையிட்டான்'' (அல் ஹிஜ்ர் -29)

**ஆன்மீகத்தின் முக்கியத்துவம்**

- இஸ்லாத்தில் ஆன்மீகம் உயர் அந்தஸ்தைப் பெற்றுள்ளது. ஆன்மீகத்துக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தைப் பின்வரும் அடிப்படைகளில் விளக்கலாம்.

**1. நபி (ஸல்) அவர்களது பணியின் ஓர் அம்சம்**

நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரதான பணிகளில் ஒன்றாக ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவது அமைந்துள்ளமை ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. நபி (ஸல்) அவர்களுக்கு இந்தச் சமூகத்தைச் சீர்திருத்தி வழிகாட்டும் பாரிய பணி வழங்கப்பட்டது. இந்தப் பணியை வெற்றிகரமாக அமைக்க ஆன்மீகத்தைக் கவனிக்க வேண்டிய முக்கிய தேவை இருந்தது. நபி (ஸல்) அவர்களது இப்பணியை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. *''நிச்சயமாக அல்லாஹ் மு.்மின்களுக்கு அருள்புரிந்துள்ளான். அவன் அவர்களுக்கு அவர்களில் இருந்தே ஒரு ரஸுலை அனுப்பினான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார். இன்னும் அவர்களை (பாவத்தை விட்டும்) பரிசுத்தமாக்குகிறார். மேலும் அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்கொடுக்கிறார். அவர்களோ நிச்சயமாக இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டில் இருந்தனர். (ஆல இம்ரான் : 164)*

**2. அல்குர்ஆன் ஆன்மீகத்தை வலியுறுத்தியுள்ளமை.**

இறை ஞாபகத்துடன் வாழ்வதை வலியுறுத்துவதினூடாக அல்குர்ஆன் ஆன்மீக விருத்திக்கு வழிகாட்டுகிறது. ஆன்மீக உணர்வை வளர்க்கக் கூடிய அம்சங்களான மரணம். கப்ருடைய வாழ்வு, மறுமைக் காட்சிகள், சுவர்க்க நரக காட்சிகள் முதலானவற்றைப் பற்றி அல்குர்ஆன் அடிக்கடி வலியுறுத்துகுன்றது. அல்குர்ஆனின் பின்வரும் வசனங்கள் அவற்றுக்கான உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

*''யார் எனது உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்; மேலும் நாம் அவனை கியாம நாளில் குருடனாகவே எழுப்புவோம்'' (தாஹா - 124)*

*''பூமி கடுமையாக ஆட்டப்படும் பொழுது, பூமி தனது சுமைகளை வெளியாக்கிவிடும் பொழுது'' (அஸ்ஸல்ஸலா - 1,2)*

*"யார் நரகை விட்டும் தூரமாக்கப்பட்டு சுவனத்தில் நுழைவிக்கப்படுகிறாரோ அவர் வெற்றியடைந்து விட்டார்" (ஆலஇம்ரான் - 185)*

**3. நபி (ஸல்) அவர்கள் ஆன்மீகம், உளத்தூய்மை பற்றி வலியுறுத்தியுள்ளமை.**
நபி (ஸல்) அவர்களின் அதிகமான போதனைகளில் ஆன்மீகம் பற்றியும் உளத்தூய்மை பற்றியும் பேசியிருப்பதானது இஸ்லாத்தில் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. உள்ளத்தைச் சீர்செய்வதன் அவசியத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். *உடலில் ஒரு சதைத்துண்டு உண்டு. அது சீரடைந்தால் முழு உடலும் சீரடைந்துவிடும். அது சீர்கெட்டால் முழு உடம்பும் சீர்கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள். அதுதான் உள்ளமாகும். (புஹாரி)*
*யா அல்லாஹ் எமது உள்ளங்களுக்கு இறையச்சத்தைக் கொடுத்துவிடுவாயாக, அதனை நீ பரிசுத்தப்படுத்துவாயாக (முஸ்லிம்)*

**4. ஆரம்பகால முஸ்லிம்கள் ஆன்மீகத்துக்கு முன்னுரிமை வழங்கியமை**
ஒரு சமூகத்தின் அடித்தளம் உறுதியாக அமையும்பொழுது அந்தச் சமூகம் நிலைத்திருக்கும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் ஆரம்ப சமூகத்தின் அடித்தளத்தை இறைநெருக்கத்தை முன்வைத்து உருவாக்கினார்கள். இதனால் இந்தச் சமூகம் இன்றுவரை நிலைத்திருந்தது, இனியும் நிலைத்திருக்கும்.

ஆரம்ப கால முஸ்லிம்கள் ஆன்மீகத்தை முன்னுரிமைப்படுத்தினார்கள். ஆன்மீகத்துடன் கல்வி, பொருளாதாரம், வீரம் என அனைத்துத் துறைகளிலும் சிறப்புற்று விளங்கினார்கள்.

முன்னோர்கள் ஆன்மீகத்தில் கவனம் செலுத்தியதானது ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**5. ஆன்மீகம் நித சிந்தனையை சீர்படுத்துவதாக அமைந்துள்ளமை.**
ஆன்மீக விமோசனமானது ஒரு மனிதனில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும். அதில் ஒன்றுதான் ஆன்மீக பக்குவம் பெற்ற மனிதனின் சிந்தனை தெளிவுள்ளதாக இருக்கும். அல்லாஹ் அத்தகைய மனிதனுக்குக் கல்வி ஞானத்தை கொடுப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இதனைப் பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகிறது.

*"ஈமான் கொண்டவர்களே நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள். அவன் உங்களுக்குப் பிரித்தறியும் ஆற்றலை வழங்குவான்" (அல்அன்பால் - 29)*

**6. ஆன்மீகம் மனிதனுக்கு உயரிய அந்தஸ்தை வழங்குகின்றமை.**
ஒவ்வொரு மனிதனிடமும் மிருகத்தனமான பண்பும், இறைவனுடன் தொடர்புபடுகின்ற பண்பும் காணப்படுகின்றது. இப்பண்புகளின் எது அவனிடம் மிகைக்கிறதோ அதற்குச் சார்பான மனிதனாகக் கொள்ளப்படுகிறான். மிருக உணர்வு மிகைத்தால் மிருக பண்புகொண்டவனாகவும், ஆன்மீகப் பண்பு மிகைத்தால் ஸாலிஹான மனிதனாகவும் மாறுகிறான். எனவே, ஆன்மீகம் மனிதனுக்கு உயர் அந்தஸ்தைக் கொடுக்கின்றது.

*நிச்சயமாக யார் அதனை (உள்ளத்தைத்) தூய்மைப்படுத்துகிறாரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார். (அஷ்ஷம்ஸ்: 9)*

**ஆன்மீக மேம்பாட்டுக்குரிய வழிமுறைகள்**

ஆன்மீக மேம்பாட்டுக்கு இஸ்லாம் பல்வேறு வழிமுறைகளைக் காட்டித் தந்துள்ளது. அவற்றுள் சிலவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

**தௌபா**

- தௌபா என்ற சொல் திரும்புதல், மீளுதல் போன்ற கருத்துக்களைத் தருகின்றன. இஸ்லாமிய வழக்கில் 'பாவமன்னிப்பை'க் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, ஓர் அடியான் இதுவரை காலமும் வாழ்ந்து வந்த வழிமுறையிலிருந்து திரும்பி புதியதொரு வழிமுறையை நோக்கி மீள்வதையே இது குறிக்கின்றது. நாவு மன்னிப்புக் கேட்க, உள்ளம் அதற்காக வருந்த, உறுப்புக்கள் அந்தப் பாவங்களை விட்டுவிட வேண்டும் அதுவே *தௌபா* ஆகும்.

- மனிதன் தவறு விடக்கூடியவன் என்ற கருத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது. எனவே, அவன் தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு இலக்கை நோக்கி நடைபோடுவதாக இருக்க வேண்டும் என அது எதிர்பார்க்கிறது. தவறுகளே ஒரு மனிதனின் வழக்கமாக அமைந்து விடுவதை அது ஏற்பதில்லை.

  *"எனது ஆன்மா யாரின் கையிலிருக்கிறதோ அவன் மீது சத்தியமாக நீங்கள் பாவம் செய்யாவிட்டால் அல்லாஹ் உங்களை அழித்து விடுவான். வேறொரு சமூகத்தை உருவாக்குவான். அவர்கள் பாவம் செய்த பிறகு தௌபாவும் செய்வர்; அல்லாஹ்வும் அவர்களை மன்னிப்பான்" (முஸ்லிம்)*

  மனிதன் தவறு செய்வான் என்பதையும் அத்தவறுகளுக்காக அவன் இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டுத் தன்னை திருத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் மேலுள்ள ஹதீஸ் குறிப்பிடுகிறது.

  *"நிச்சயமாக அல்லாஹ் அடிக்கடி பாவமன்னிப்புக் கோருபவர்களையும் தூய்மையாக இருப்பவர்களையும் விரும்புகின்றான்." (பகரா: 222)*

  *விசுவாசிகளே நீங்கள் அனைவரும் கலப்பற்ற மனதோடு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள் (அத்தஹ்ரீம்:8)*

- உடலைத் தூய்மையாக வைத்திருக்க எவ்வாறு அடிக்கடி அதனைச் சுத்தப்படுத்துவது அவசியமோ அவ்வாறே உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்கவும் அதன் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும் அடிக்கடி பாவமன்னிப்புக் கோருவது அவசியமாகும். இவ்வாறு உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருப்பவர்களை இறைவன் விரும்புகிறான் என்பதை மேலுள்ள வசனம் விளக்குகின்றது.

  *"விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். அதன்மூலம் நீங்கள் வெற்றிபெறுவீர்கள்" (அந்நூர்: 31) என்ற வசனமும் ஏற்கனவே விளக்கப்பட்ட கருத்தையே முன்வைக்கிறது.*

  நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோருபவர்களாக காணப்பட்டார்கள்.

*"மனிதர்களே! நீங்கள் அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோருங்கள். ஏனெனில் நான் ஒரு நாளைக்கு 100 தடவை அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோருகிறேன்." (முஸ்லிம்)* என்ற ஹதீஸ் இதனையே தெளிவுபடுத்துகிறது.

மனிதன் தனது தவறுகளை உணர்ந்து அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கேட்கும் போது அவன் மிகவும் சந்தோஷப்படுகிறான்.

*"பாலைவனத்தில் தவறவிட்ட ஒட்டகம் கிடைக்கப்பெற்று அதில் ஏறும்போது உங்களில் ஒருவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாரோ அதனைவிட அல்லாஹ் தனது அடியான் பாவமன்னிப்புக் கோரும்போது மகிழ்ச்சியடைகிறான்." (புஹாரி)*

**பாவமன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகள்**

1. தூய எண்ணத்துடன் (இக்லாஸுடன் பாவமன்னிப்புக் கோரல்
2. குறிப்பிட்ட பாவச்செயல்களில் ஈடுபடுவதை முற்றுமுழுதாக விட்டுவிடல்.
3. தான் செய்த பாவத்தை நினைத்து மனம் வருந்துதல்.
4. குறிப்பிட்ட பாவச்செயலில் இனிமேல் ஈடுபடுவதில்லை என்று உறுதிகொள்ளல்.
5. மனிதனோடு தொடர்புற்ற ஒரு குற்றச்செயலாயின் மேலுள்ள நிபந்தனைகளோடு மேலும் இன்னொரு நிபந்தனை பேணப்பட வேண்டும். செய்த பாவம் மனிதர்களுடன் சம்பந்தப்பட்டதெனில் அவர்களிடம் மன்னிப்புக் கோரல்.

மேலே குறிப்பிட்ட நிபந்தனைகள் பேணப்பட்டு கேட்கப்படும் தௌபாவை நிச்சயம் இறைவன் ஏற்றுக்கொள்வான். ஏனெனில் அவன் மிகவும் கருணையுள்ளவன்.

***தக்வா***

- தக்வா என்பது இறையச்சத்தைக் குறிக்கிறது. இறைவனுக்கு அஞ்சித் தனது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளும் உணர்வை இது குறிக்கிறது.

  *"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். நீங்கள் முஸ்லிமாகவேயன்றி மரணிக்க வேண்டாம்." (ஆல இம்ரான்: 102)*

  முஸ்லிமாக மரணிக்க விரும்பின் இறைவனை அஞ்சுவது அவசியம் என்ற கருத்தை இவ்வசனம் உணர்த்தி நிற்கின்றது. இறைவனை உரிய விதத்தில் அஞ்சி நடத்தல் என்னவென்பதை பின்வரும் வசனம் விளக்குகிறது.

  *"ஆகவே உங்களால் இயன்றவரை அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்." (அத்தகாபுன் :16)*

  நபி (ஸல்) அவர்கள் அதனைத் தருமாறு கூறி இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்.

  *"இறைவா உன்னிடத்தில் நேர்வழியையும், இறையச்சத்தையும், அன்பையும் திருப்தியையும் கோருகிறேன்." (முஸ்லிம்)*

  நேர்வழியில் நிலைத்திருக்க இறையச்சமும் உதவி செய்யும். ஆதலால் இங்கு நபி (ஸல்) அவர்கள் நேர்வழியை அடுத்து இறையச்சத்தைக் கோரியிருப்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

- இறையச்சமானது உள்ளத்தில் உறங்கிக் கிடப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது செயற்பாடுகளில் பரிணமிக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்

*''விசுவாசிகளே அல்லாஹ்வை அஞ்சுங்கள். நேர்மையான வார்த்தையே பேசுங்கள்.'' (அல் அஹ்ஸாப்: 70)*

*''அல்லாஹ்வை அஞ்சுங்கள். ஐவேளை தொழுங்கள்; ரமழானில் நோன்பு பிடியுங்கள், உங்களது செல்வங்களுக்குரிய ஸகாத்தைக் கொடுங்கள்; உங்களது தலைவருக்கு கட்டுப்படுங்கள்; உங்களினது இரட்சகனின் சுவனபதியில் நீங்கள் நுழைவீர்கள்.'' (திர்மிதி)*

*''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்வீர்களானால் அவன் உங்களுக்குப் பிரித்தறியும் அறிவைக் கொடுப்பான். உங்களை விட்டும் உங்களது பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான்.'' (அல் அன்பால்: 29)*

நேர்வழியில் நடைபோடச் சத்தியத்தையும், அசத்தியத்தையும் சரியாகப் பிரித்தறியும் ஆற்றல் மிகமிக இன்றியமையாததாகும். அதனைப் பெறுவதற்கு இறையச்சமே அடிப்படை என அல்குர்ஆன் இங்கு குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

- மனித இயல்புகளின் அடிப்படையிலேயே தக்வாவை இஸ்லாம் விளக்குகிறது.

*''நான் உங்களுக்கு ஏவியவற்றை உங்களால் முடிந்தளவு செய்யுங்கள். நான் எவற்றை விட்டும் உங்களைத் தடுத்தேனோ அவற்றை விட்டுப் பூரணமாகத் தவிர்ந்து கொள்ளுங்கள்.'' (புஹாரி)* என்ற ஹதீஸ் இக்கருத்துக்குச் சான்றாகும்.

***வர.:.***

- ஒரு முஸ்லிம் பாவத்தில் வீழ்ந்து விடலாம் என்ற அச்சத்தின் காரணமாகப் பாவமா? இல்லையா? என்று சந்தேகமான ஒரு செயலைக் கூட தவிர்ந்து கொள்வதையே வர.:. என்பர். வர.:. எனும் பேணுதல் ஒரு மனிதன் தீமையிலிருந்து தன்னை காத்துக்கொள்ள உதவி செய்யும் என்பதைப் பின்வரும் ஹதீஸ் உணர்த்துகிறது.

*''ஹலால் தெளிவானது. அவ்வாறே ஹராமும் தெளிவானது. இவ்விரண்டுக்கும் இடையே சந்தேகமான சில விடயங்கள் உள்ளன. சந்தேகத்திற்குரிய பாவங்களிலிருந்து விலகி இருப்பவன், பகிரங்கமான பாவங்களிலிருந்தும் கண்டிப்பாக விலகியே இருப்பான். சந்தேகத்திற்குரிய பாவங்களில் துணிவுடன் ஈடுபடுபவன் வெளிப்படையான பாவங்களில் வீழ்ந்துவிடப் பெரிதும் வாய்ப்புண்டு. பாவங்கள் அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்ட பகுதிகள் ஆகும். தடைசெய்யப்பட்ட பகுதியின் அருகே மேய்கின்ற பிராணி அதனுள் விழுந்துவிடப் பெரிதும் வாய்ப்பு உண்டு.'' (புஹாரி)*

- ஆன்மீக ரீதியாகத் தன்னை உயர்ந்த நிலைக்கு வளர்த்துக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் வர.:. இன்றியமையாதது என்ற கருத்தைப் பின்வரும் ஹதீஸ் முன்வைக்கிறது.

''நாம் பாவத்தில் வீழ்ந்து விடுவோமோ என்ற அச்சத்தால் ஒரு பாவமில்லாத விடயத்தை கூட விட்டுவிட முன்வராத வரை இறைவனை அஞ்சும் நல்லடியார்களின் பட்டியலில் எந்த மனிதனும் இடம்பெற முடியாது.''

பேணுதல் என்ற பெயரில் தேக்க நிலையில் இருப்பதோ நவீன விடயங்களை எதிர்நோக்காது ஒதுங்கி இருப்பதோ பிழையானதாகும். திட்டவட்டமான

ஆதாரங்களோடு ஒரு விடயம் ஹலால் என தெரிய வரும் போது அதைத் தவிர்ப்பது பேணுதல் என்று கூறமுடியாது.

அபூஸஹ்லபா (றழி) அவர்கள் கூறுகிறார்கள், ''அல்லாஹ்வின் தூதரே எனக்கு ஹலாலானவற்றையும் என்மீது ஹராமாக்கப்பட்டதையும் கூறுங்கள்'' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் *''நன்மை உள்ளம் அமைதிய அடையக்கூடியதும் ஆத்மா நிம்மதி பெறக்கூடியதுமாகும். தீர்ப்புக் கூறுபவர்கள் தீர்ப்புக் கூறினாலும் சரியே எனக் கூறினார்கள்.'' (அஹ்மத்)*

***ஸுஹ்த்***

- உலகப் பற்றின்மை ஸுஹ்த் என அழைக்கப்படுகிறது. இஸ்லாம் துறவறத்தை அங்கீகரிக்கவில்லை. அதேவேளை உலக வாழ்வில் தீவிர ஈடுபாடு கொண்டு அதிலே மூழ்கி விடுவதையும் அது ஏற்பதில்லை. இவ்விரு போக்குகளுக்கும் இடைப்பட்ட சமநிலையான போக்கைக் கையாளுமாறும் அது போதிக்கிறது. உலக கவர்ச்சிகளுக்கு முன்னால் நிலைகுலைந்து அவற்றின் பின்னால் ஓடுபவனை உலகாயதவாதி எனலாம். அதேநேரம் உலக வாழ்வை முற்றாகத் துறந்து செல்பவனை துறவி எனலாம். இவ்விரு தீவிர நிலைகளுக்குமிடையே ஒரு சமநிலையான போக்கைக் கடைப்பிடிப்பவனே ஸாஹித் அல்லது ஸுஹ்த் உள்ளவனென இஸ்லாம் கூறுகிறது.

  உலகவாழ்வு அற்பமானது அதனது இன்பங்கள் அற்பமானது என்ற கருத்தை அல்குர்ஆன் பல இடங்களில் விளக்கியுள்ளது. அவ்வசனங்களைச் சரிவரப் புரிந்துகொள்வதனூடாக ஸுஹ்த் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ளலாம்.

  *''உலக வாழ்க்கை வீண் விளையாட்டும் கேளிக்கைகளுமாகும். தக்வா உள்ளவர்களுக்கு மறுமையே சிறந்ததாகும். நீங்கள் சிந்திக்கமாட்டீர்களா?'' (அல் அன்ஆம் : 32)*

  மனிதன் இவ்வுலகில் சோதனைக்காகவே படைக்கப்பட்டிருக்கிறான். எனவே இவ்வுலக வாழ்வை ஒரு பரீட்சைக்களமாகக் கருதி நடந்துகொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதனூடாகவும் அவனிடத்தில் பற்றற்ற தன்மையை வளர்த்து விட இஸ்லாம் முயற்சி செய்கிறது.

  *''உங்களில் எவர் செயலில் மிகச் சிறந்தவர் எனச் சோதிப்பதற்காக அவன் வாழ்வையையும், மரணத்தையும் படைத்தான்.'' (அல் முல்க் : 2)*

- பற்றற்ற தன்மையை வளர்க்க இஸ்லாம் கையாண்டுள்ள இன்னுமொரு வழி இவ்வுலக வாழ்க்கையிலே அதனது ஆசாபாசங்களிலே மூழ்கி, இறைவனை மறந்து அவன் தன்மீது சுமத்தியுள்ள பொறுப்புகளையும் கடமைகளையும் மறந்து, வாழ்வோருக்குரிய இடம் நரகம் எனக் கடுமையாக எச்சரிப்பதாகும்.

  *''எவர் வரம்பு மீறி உலக வாழ்வை மேலாக மதிக்கிறாரோ நரகமே அவரது ஒதுங்கிடமாகும்.''*

  பற்றற்ற தன்மை தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள்.

1. *"உலகம் மு:.மினின் சிறைச்சாலை. அது காபிரின் சுவனம்." (முஸ்லிம்)*
2. *"உலகில் பற்றற்றவனாக இரு. அப்போது அல்லாஹ் உன்னை விரும்புவான். மக்களிடம் உள்ளவறில் பற்றற்றவனாக இரு. அப்போது மக்கள் உன்னை விரும்புவார்கள்." (இப்னு மாஜா)*
3. *"உலகத்தில் நீ அறிமுகமற்றவனைப் போல் இரு அல்லது வழிப்போக்கனைப் போல் இரு." (அஹ்மத்)*

   ஸுஹ்தை சரிவர விளங்கி அமுல்படுத்துவது அவசியம். இவ்வாறு அமுல்படுத்துவது நடுநிலையான சமூக அமைப்பொன்றின் உதயத்திற்குக் காரணமாக அமையும் என்ற கருத்தை இஸ்லாமிய அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**தவக்குல்**

- வாழ்க்கையில் இறைவனே ஆதிக்கம் செலுத்துகிறான். வாழ்க்கையின் அனைத்துத் தொழிற்பாடுகளும் அவனது சக்திக்கும் ஆற்றலுக்கும் உட்பட்டவையாகும். அவனை விட்டு விலகி அவனை அறியாது எதுவும் இடம்பெற முடியாது என்ற நம்பிக்கையில் அவனிடம் பொறுப்புச் சாட்டுவதையே தவக்குல் என்பர்.

  அல்குர்ஆனும், ஹதீஸும் தவக்குலை அதிகமாக வலியுறுத்தி உள்ளன.

  *"மேலும் அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான். எவர் அல்லாஹ்வின் மீது தன் காரியத்தை ஒப்படைத்து முழுமையாக நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே முற்றிலும் போதுமானவன்; நிச்சயமாக அல்லாஹ் தன் காரியத்தை அடைந்தே தீருவான். ஆயினும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அளவைத் நிர்ணயம் செய்திருக்கிறான்." (அத்தலாக்: 3)*

  *"நீங்கள் அல்லாஹ்வின் மீது உரிய விதத்தில் தவக்குல் வைப்பீர்களாயின் பறவைகளுக்கு உணவளிப்பது போன்று அவன் உங்களுக்கு உணவளிப்பான். அவை காலையில் வெறும் வயிற்றோடு செல்கின்றன. மாலையில் வயிறு நிரம்பிய நிலையில் திரும்பி வருகின்றன." (திர்மிதி)*

- செயற்படாது இருந்துகொண்டு தவக்குல் வைக்கக்கூடாது என்று அல்குர்ஆனும் ஹதீஸும் உணர்த்துகிறன. *"நம்பிக்கை கொள்ளாதவர்களிடம் நீர் கூறுவீராக. நிச்சயமாக நாங்களும் செயற்படுகின்றோம். நீங்கள் உங்களது போக்கில் நடந்து கொள்ளுங்கள். நீங்களும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருங்கள். நாங்களும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வானங்கள் பூமியிலுள்ள மறைப்பொருட்கள் அல்லாஹ்வுக்கே உரியன. அவனிடமே எல்லாக் கருமங்களும் மீளும். ஆகவே அவனையே வணங்குங்கள். அவன் மீது நம்பிக்கை வைத்துப்பொறுப்புச் சாட்டுங்கள்." (ஹூத்: 121-123)*

  இவ்வசனத்தில் தொடர்ந்தேர்ச்சையான செயற்பாடும் தொடர்ந்தேர்ச்சையான பொறுமையும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதன்பின்னரே தவக்குல் பற்றிய ஏவல் வந்துள்ளது.

  *"ஒரு காட்டறபி (பதவி) நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஒட்டகத்தைக் கட்டிவிட்டு தவக்குல் வைக்கவா? அல்லது கட்டாது விட்டுவிட்டு தவக்குல் வைக்கவா? என வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அதனைக் கட்டிவிட்டு தவக்குல் வைப்பீராக என்றார்கள்." (திர்மிதி)*

  இந்த ஹதீஸ் செயற்பாட்டுக்குப் பின்னரே தவக்குலை வலியுறுத்தியுள்ளது.

**மஹப்பத்**

- இவ்வுலகில் ஒரு விசுவாசி அன்புணர்வில் முதலிடத்தை அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் தான் வழங்க வேண்டும் என்ற கருத்தை இஸ்லாம் முன்வைக்கிறது.

  *“அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு அவர்களை அல்லாஹ்வை நேசிப்பது போன்று நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வையே மிக அதிகமாக நேசிக்கக் கூடியவர்கள்.” (பகரா: 165)* என்று அல்குர்ஆன் கூறுகிறது.

  இறைவனிலும் அவனது தூதரிலும் வைத்துள்ள அன்புணர்வுக்கும் வேறு விடயத்தில் கொண்டுள்ள அன்புணர்வுக்குமிடையேயான போராட்டத்தில் அல்லாஹ்வின் மீது வைத்துள்ள அன்புணர்வு வெற்றிகொண்டால் ஒருவன் மு.ஃமீனாகக் கருதப்படுவான். இல்லையெனின் பாஸிகாகக் கருதப்படுவான். பின்வரும் அல்குர்ஆன் வசனம் இக்கருத்தை உணர்த்துகிறது.

  *“(நபியே! விசுவாசிகளிடம்) நீர் கூறுவீராக. உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய ஆண் மக்களும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவியரும், உங்களுடைய குடும்பத்தினரும், நீங்கள் எதனைச் சம்பாதித்து வைத்திருக்கிறீர்களோ அந்தச் செல்வங்களும், நீங்கள் எதனுடைய நஷ்டத்தைப் பயப்படுகிறீர்களோ அத்தகைய வியாபாரமும், நீங்கள் எதனைத் திருப்திபடுகிறீர்களோ அத்தகைய (உங்கள்) குடியிருப்பிடங்களும், அல்லாஹ்வையும் அவனது தூதரையும், அவனுடைய பாதையில் போர் செய்வதையும் விட உங்களுக்கு மிக்க விருப்பமானவையாக இருந்தால், அப்போது நீங்கள் (தண்டனையைப் பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் எதிர்ப்பார்த்திருங்கள். மேலும் பாவிகளான கூட்டத்தினரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தவும்மாட்டான்.” (9:24)*

- கடமைகளைப் பாழ்படுத்திக்கொண்டு, பொறுப்புகளை அலட்சியம் செய்து கொண்டு அல்லாஹ்வில் அன்பு வைத்திருப்பதாகப் பறைசாட்டுவது அர்த்தமற்றது. எனவே தான் அல்குர்ஆன் நபியவர்களைப் பார்த்து,

  *“நபியே! மனிதர்களிடம் கூறுவீராக. நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை நீங்கள் பின்பற்றுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் உங்களுக்காக மன்னித்துவிடுவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் கிருபையுடையவன்.” (ஆல இம்ரான்: 31)* எனச் சமூகத்துக்குப் பணிக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

  இறைவனது அன்பைக் குறிக்கோளாகக் கொண்டு ஒரு மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளும் போது அவனது வாழ்வு சாதாரண மனிதர்களின் வாழ்வு போன்றதல்லாது இலட்சிய வாழ்வாக அமையும் என்பதனால் தான் அல்குர்ஆனும், ஹதீஸும் இப்பண்பை வலியுறுத்தி உள்ளன.

**ரிழா**

- ரிழா என்ற பதத்திற்கு திருப்தி என்பது பொருள். இது அன்புணர்வின் விளைவாகும். ஆன்மீக படித்தரங்களில் இது மிகுந்த உயர் நிலையாகும். அல்குர்ஆன் ஸஹாபாக்களைப் பற்றிக் குறிப்பிடும் போது,

*''அல்லாஹ்வும் அவர்களைப் பற்றித் திருப்தி அடைந்தான். அவர்களும் அவனைப் பற்றித் திருப்தியடைந்தனர்.'' (அல்பையினாஹ்: 8) எனக் குறிப்பிட்டுள்ளது.*

மனிதன் இறைவனது தீர்ப்பிலே திருப்தி அடைவது தான் அவன் இறை திருப்தியை பெற வழியாக அமையும். திருப்தி என்ற பண்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக கீழ்வரும் ஹதீஸ் அமைகிறது.

''நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களில் ஒரு குழுவினரை நோக்கி நீங்கள் யார்? என்று வினவிய போது, விசுவாசிகள் என்றனர். உங்களது ஈமானுக்குரிய அடையாளம் என்னவென்று வினவிய போது,

1. சோதனைகளின் போது பொறுமையாக இருக்கிறோம்.
2. வசதியாக இருக்கும் போது நன்றி செலுத்துகிறோம்.
3. இறைவனது தீர்ப்புக்குரிய இடங்களில் திருப்தியோடு இருக்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் க.ஃ.பாவின் இரட்சகன் மீது சத்தியமாக நீங்கள் மு.ஃ.மின்கள் தான்.'' என்றார்கள்.

இறை திருப்தியை நோக்காகக் கொண்டு தொழிற்படுவது சுவனத்தை அடைய வழியாகும். இதனைத் தான் இப்னு அப்பாஸ் (றழி) ''எல்லா நிலைமைகளிலும் அதிருப்தி அடையாது அல்லாஹ்வைப் புகழ்கிறவர்களே சுவனத்திற்கு முதன் முதல் அழைக்கப்படுவர்'' என்றார்கள்.

## ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையான அம்சங்கள்

- மனித உள்ளத்தில் தவ்ஹீத் பலவீனமடையும் போதும், நபி (ஸல்) அவர்களது சுன்னாவுக்குப் புறம்பான வழிமுறைகளைக் கைக்கொள்ளும் போதும் ஆன்மீக விருத்தி தடைப்படும்.

ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாக அமையும் அம்சங்களுள் சிலவற்றை சுருக்கமாக நோக்கலாம்.

### 1. அகம்பாவம்

- தற்பெருமை மனிதனுக்கு இருக்கக்கூடாத ஒரு பண்பென இஸ்லாம் கருதுகிறது. உண்மையில் அது இறைவனுக்குரிய பண்பாகும். எனவே மனிதன் அகம்பாவம் பிடித்தலைவது இறைவனுக்குரிய சுவிசேஷசமான பண்பில் அவனோடு போட்டியிடுவதாக அமையும். எனவேதான் இப்பண்புடையவர்களுக்குரிய இடம் நரகம் என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

*''கண்ணியம் எனக்குரிய ஆடை. அகம்பாவம் எனக்குரிய போர்வை. எனவே யார் என்னோடு இவ்விடயத்தில் முரண்படுகிறாரோ அவரை நான் தண்டிப்பேன்.'' (முஸ்லிம்)*

பெருமை பிடித்துத் திரிபவர்கள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள். அவர்களுக்குரிய இடம் நரகம் என்பதை அல்குர்ஆன் பல இடங்களில் முன்வைக்கிறது.

*''அந்த மறுமையின் வீட்டை பூமியில் அகம்பாவத்தையும், குழப்பத்தையும் நாடாதவர்களுக்கும் அதை நாம் சொந்தமாக ஆக்கிவிடுவோம். இன்னும் நல்ல முடிவு பயபக்தி உடையவருக்குத் தான்.'' (அல்கஸஸ்: 83)*

இஸ்லாம் கண்டிக்கின்ற பெருமை எது என்பதை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்கினார்கள்.

*"யாருடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்கிறதோ அவர் சுவனத்தில் நுழைய மாட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது ஒரு மனிதன் தனது ஆடை அழகானதாக இருக்கவேண்டும்; தனது பாதணி அழகானதாக இருக்கவேண்டும் என்று விரும்பினால் அது பெருமையாகுமா? என வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் அழகானவன்; அவன் அழகை விரும்புகிறான். தற்பெருமை என்பது சத்தியத்தை மறுப்பதும் மனிதர்களை அலட்சியப்படுத்துவதும் எனப் பதிலளித்தார்கள்." (முஸ்லிம்)*

பெருமை உண்மையை, நன்மையை மதிக்காது நடக்கத் தூண்டுவதனால் இறுதியில் மனிதனுக்கு அழிவையே தேடிக்கொடுக்கும். இதனால் தான் நபி (ஸல்) அவர்கள்,

*"அகங்காரம் பிடித்தவர்களில் பதியப்பட்டு அவர்களுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேரும் வரை மனிதன் பெருமையடித்துக் கொண்டே இருப்பான்." (திர்மிதி)* எனக் குறிப்பிட்டார்கள்.

ஆன்மீக ரீதியாகத் தன்னை வளர்த்துக்கொள்ள விரும்பும் ஒருவர் அடுத்தவரை மதிப்பவராக, அவர்களது நியாயமான கருத்துக்களை மதிப்பவராக இருப்பது அவசியமாகும்.

**2. பொறாமை**

- பொறாமை ஆன்மீக மேம்பாட்டிற்கு தடையாக அமைவதோடு சமூகத்தில் பல்வேறு தீமைகள் இடம்பெறவும் வழிவகுக்கிறது. எனவே தான் இதனை விட்டும் பாதுகாப்புக் கோரும்படி அல்குர்ஆனும், ஹதீஸும் தூண்டுகின்றன.

*"பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது வரும் தீங்கிலிருந்து வைகறையின் இரட்சகனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்." (அல்பலக்: 5)*

பொறாமை ஒரு முஸ்லிமிடம் இருக்கக்கூடாக பண்பு என்ற கருத்தையும் நபியவர்கள் முன்வைக்கிறார்கள்.

*"ஒரு மனிதனின் உடம்பில் அல்லாஹ்வின் பாதையில் பட்ட தூசும், நரக நெருப்பும் ஒன்றிணையமாட்டா. ஒரு மனிதனின் உள்ளத்தில் ஈமானும் பொறாமையும் ஒன்றுசேர மாட்டா." (பைஹகி)*

பொறாமை மனிதன் செய்யும் நற்செயல்களை வீணாக்கிவிடுகிறது.

*"பொறாமை கொள்வதை இட்டு நான் உங்களை எச்சரிக்கிறேன். நெருப்பு விறகைச் சாப்பிடுவது போல் பொறாமை நன்மைகளை சாப்பிட்டுவிடும்." (அபூதாவூத்)*

பொறாமைப்படுவது தவறு என்பதை இரு வழிகளில் விளக்கலாம். பொறாமை உலக இன்பங்களுக்காக அலைந்து திரியக்கூடிய அவற்றுக்காக வாழக்கூடிய மறுமையை மறக்கக்கூடிய தன்மையை மனிதனில் ஏற்படுத்தி விடுகிறது.

**பொறாமையை களைவதற்கான வழிகள்**

1) சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு இறைவனே காரணம் என்ற கருத்தை உள்ளங்களில் ஆழப்பதித்து கொள்ளல்:-

*"அல்லாஹ் தனது அருட்கொடைகளிலிருந்து மனிதர்களுக்காக வழங்கி இருப்பதற்காக அவர்களைப் பார்த்து இவர்கள் பொறாமைப்படுகின்றார்களா?" (அந்நிஸா: 54)*

*"இறைவா! என்னிடம் இருக்கும் அருட்கொடைகள் அல்லது உனது சிருஷ்டிகளில் வேறு ஒருவரிடம் இருக்கும் அருட்கொடைகள் உன்னிடமிருந்து மட்டுமே பெறப்பட்டன. உனக்கு இணையில்லை; உனக்கே புகழ் அனைத்தும் உனக்கே நன்றிகளும் (அபூதாவூத்)*

என நபி (ஸல்) அவர்கள் காலையிலும் மாலையிலும் 3 தடவைகள் ஓதி வந்துள்ளார்கள்.

2) எம்மை விடத் தரத்தில் கூடியவர்களை நோக்காது குறைந்தவர்களை நோக்குதல். "உங்களை விடத் தாழ்ந்தவர்களைப் பாருங்கள்; உங்களை விட உயர்ந்தவர்களை பார்க்காதீர்கள். அதுவே அல்லாஹ் உங்கள் மீது புரிந்திருக்கும் அருட்கொடைகளை நீங்கள் பரிகசிக்காதிருக்க மிகவும் பொருத்தமானதாகும்." (முஸ்லிம்)

பொறாமை இவ்வளவு பாரதூரமாக இருந்தபோதிலும், இரு விடயங்களில் பொறாமைப்பட இஸ்லாம் அனுமதித்துள்ளது.

1. ஒரு மனிதனுக்கு அல்லாஹ் அறிவைக் கொடுத்து அதன்மூலம் நல்ல விடயங்களில் ஈடுபடுகிறான். அவனைப் பார்த்து அதுபோன்ற அறிவு எனக்குக் கிடைத்தால் நானும் அவ்வாறு செயற்படுவேன் எனப் பொறாமைப்படலாம்.
2. ஒரு மனிதனுக்கு அல்லாஹ் செல்வத்தைக் கொடுத்து அதன் மூலம் அல்லாஹ்வின் பாதையில் செலவளிக்கிறான். அவனைப் பார்த்து அல்லாஹ் எனக்குச் செல்வத்தை தந்தால் நானும் அவ்வாறு செய்வேன் எனப் பொறாமைப்படலாம்.

### 3. பேராசை

- இது மனிதனை மனோ இச்சைகளுக்கு அடிமைப்பட்டவனாகவும், இறைவன் வழங்கியிருப்பவற்றைக் கொண்டு திருப்தியடையாதவனாகவும், இறைவனது கடமைகளை அலட்சியம் செய்துவிட்டு நிரந்தரமற்ற இவ்வுலக இன்பங்களுக்கு பின்னால் அலையக்கூடியவனாகவும் ஆக்கிவிடுகிறது.

*"மனிதனுக்கு ஒரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் இருந்தாலும் தனக்கு இரண்டு பள்ளத்தாக்குகள் இருக்கவேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவனது வாயை மண்தான் நிரப்பும்" (புஹாரி)*

மனிதன் வளரவளர அவனோடு சேர்ந்து பேராசையும் வளரும் என்ற கருத்தை பின்வரும் ஹதீஸ் குறிப்பிடுகிறது.

மனிதன் முதுமையடைவான் அதனோடு இணைந்து இரு பண்புகள் இளமையடைகின்றன. 1. பேராசை 2. பண ஆசை

**பேராசையை ஒழிப்பதற்கான வழிமுறைகள்**

1. செலவளித்தல், வாழ்க்கை வசதிகளை அனுபவிப்பதில் நடுநிலையாக நடந்து கொள்ளல்.
   "நடுநிலையாக இருப்பவன் வறுமைக்குள்ளாக மாட்டான்" (தபராணி)

2. எதிர்காலத்தை நினைத்துக் கவலைப்படாமல் இருத்தல்.
   *"யார் அல்லாஹ்வை அஞ்சி நடக்கின்றானோ அவனுக்கு அல்லாஹ் ஒரு வழியை உருவாக்குவான். அவனுக்கு அல்லாஹ் அவன் எண்ணியிராத புறத்திலிருந்து வாழ்க்கை வசதிகளை அளிக்கிறான்." (அத்தலாக் :2-3)*

3. உள்ளதைக் கொண்டு திருப்தியடைவதால் வரும் நன்மைகளையும் பேராசையினால் ஏற்படும் இழிவையும் உணர்ந்து கொள்ளுதல்.
   *"மு.்.மீனின் கண்ணியம் மனிதர்களிடம் தேவையற்றவனாக அவன் இருப்பதிலே உள்ளது" (தபராணி)*

4. உலகில் நல்ல மனிதர்களின் வாழ்வையும் தீய மனிதர்களின் வாழ்வையும் ஒப்புநோக்கிப் பார்த்தல்.

5. தன்னை விடத் தரத்தில் கூடியவனை நோக்காது குறைந்தவர்களை நோக்குதல்.

**4. பொய்**

- இது இஸ்லாம் வெறுக்கின்ற மோசமான பண்பாகும்.

  "பொய்யை விட நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் வெறுப்பான எந்தவொரு பண்பும் இருக்கவில்லை. ஒருவரிடம் ஏதேனுமொரு விடயத்தில் பொய் காணப்படுகிறது என அவர்கள் தெரிந்து கொண்டால் அவன் அதற்காகப் பாவமன்னிப்புக் கோரிவிட்டார் என்று தெரியும் வரை அவர்களது உள்ளத்திலிருந்து மனிதன் அகன்றே இருப்பான்."

  மனிதன் தவறுவிடக்கூடியவன் என்று கருதும் இஸ்லாம் மனித பலவீனங்கள் அவனை ஆட்கொள்ளும் என்பதை மறுக்கவில்லை. ஆனால் பொய் ஒரு முஸ்லிமிடம் இருக்கவே கூடாத பண்பென இஸ்லாம் குறிப்பிடுகிறது.

  *"நபி (ஸல்) அவர்களிடம் மு.்.மீன் கோழையாக இருப்பானா என வினவப்பட்ட போது அவர்கள் 'ஆம்' என்றார்கள். மு.்.மீன் உலோபியாக இருப்பானா? என வினவப்பட்டபோது அவர்கள் 'ஆம்' என்றார்கள். மு.்.மீன் பொய்யனாக இருப்பானா?* என வினவப்பட்டபோது அவர்கள் 'இல்லை' என்றார்கள். (மாலிக்)

- சிறுசிறு விடயங்களில்கூட பொய்யைத் தவிர்க்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கட்டளையாகும்.

  *"அஸ்மா.். (ரழி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் தான் விரும்புகின்ற ஒன்றை தாம் விரும்பவில்லையென்று கூறினால் அது பொய்யாகக்*

*கருதப்படுமா? என வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் பொய், பொய் என்றே எழுதப்படும். எதுவரையெனில் சிறிய பொய்யொன்றைக் கூறினாலும் சிறிய பொய்யென எழுதி வைக்கப்படும் எனக்கூறினார்கள்.'' (முஸ்லிம்)*

- மனிதர்கள் பரிகாசத்துக்காகப் பொய்யுரைப்பதைப் பாரதூரமாகக் கருதுவது கிடையாது. ஆனால் இஸ்லாம் பரிகாசத்துக்குக்கூடப் பொய்யைப் பயன்படுத்த அனுமதி வழங்கவில்லை.

*''ஓர் அடியான் தான் உண்மையாளனாக இருந்தாலும் பரிகாசத்தின் போதும் விவாதத்தின் போதும் பொய்யை விடும் வரை பூரணமான ஈமான் உள்ளவனாக ஆக மாட்டான்'' (அஹ்மத்)*

சாட்சியம் சொல்லும்போது பொய்யுரைப்பது பாரதூரமான ஒரு குற்றமாக இஸ்லாம் கருதுகிறது.

*''நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை பெரும் பாவங்களில் பாரியவற்றை நான் உங்களுக்குச் சொல்லித்தரட்டுமா? என 3 தடவைகள் வினவினார்கள். நாங்கள் 'ஆம்' எனப் பதிலளித்தோம். அதற்கு அவர் அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோருக்கு மாறு செய்தல், கொலை செய்தல் எனக் கூறினார்கள். பின் சாய்ந்து கொண்டிருந்த அவர்கள் எழுந்து இக்காரணம் கொண்டும் பயந்து கொள்ளுங்கள்; அறிந்து கொள்ளுங்கள் பொய் சொல்லுதலும், பொய் சாட்சியம் சொல்லுதலும் பெரும் பாவங்களே என்று கூறினார்கள். இவர் மௌனமாக இருந்தால் நன்று என நாங்கள் நினைக்கும் அளவுக்குத் திருப்பித்திருப்பி அதனைக் கூறிக்கொண்டே இருந்தார்கள் என அபூபக்கர் (ரழி) கூறுகிறார்கள்.'' (புஹாரி)*

ஒரு சமூகத்தின் வெற்றி பொய்யையையும் அதைத் தழுவிய செயற்பாடுகளையும் விட்டுத் தூரமாய் இருப்பதிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து தொழிற்படுவது அவசியமாகும். இல்லையெனில் பொய்யைக் கடைப்பிடித்து ஆன்மீக ரீதியாக வீழ்ச்சியடைவதோடு இறுதியில் நரகத்திலேயே நுழைய வேண்டி வரும்.

## 5. கோள்

- சகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பைக் காண விரும்பும் இஸ்லாம் அதற்குத் தடையாக அமையும் அனைத்தையும் தடுக்கிறது. அந்தவகையில்

*''கோள் சொல்பவன் சுவனத்திலே நுழையமாட்டான்'' (புஹாரி)*

*''நபி (ஸல்) அவர்கள் இரு புதைகுழிகளைக் கடந்துசெல்லும் போது இவர்கள் இருவருமே வேதனை செய்யப்படுகின்றனர். பெரிய விடயத்துக்காக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. இவர்களில் ஒருவர் கோள் சொல்லித் திரிபவராக இருந்தார். அடுத்தவர் சிறுநீர் கழித்துவிட்டுச் சுத்தம் செய்யாதவராக இருந்தார்.'' (புஹாரி)*

*''உங்களில் மோசமானவர்களை நான் சொல்லித்தரட்டுமா? என நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை வினவ அவர்கள் 'ஆம்' என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் கோள் சொல்லித் திரிபவர்கள், நண்பர்களைப் பிரித்து வைப்பவர், நிரபராதியிடம் குறை தேடுபவர்கள் என்றார்கள்.'' (அஹ்மத்)*

*''நபி (ஸல்) அவர்கள் இரும்பு துருப்பிடிப்பது போல உள்ளங்கள் துருப்பிடிப்பதுண்டு'' எனக்கூற ஸஹாபாக்கள் அதனை அகற்றுவதற்கான வழி யாது? என வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''மரணத்தை ஞாபகப்படுத்தலும், அல்குர்ஆனை ஓதுவதுமாகும் என விடை பகர்ந்தார்கள்.'' (மாலிக்)*

**தேர்ச்சி 06: மனித வாழ்வின் விமோசனத்திற்கு ஆன்மீகமே அடிப்படை என்பதை விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2: தஸவ்வுப் பற்றி விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 15 பாடவேளைகள்**

**கற்றல்பேறுகள்**

- தஸவ்வுப் தோன்றி வளர்ந்த பின்னணியை எடுத்துக் காட்டுவார்.
- ரப்பானிய்யா, ரஹ்பானிய்யா ஆகிய சொற்பிரயோகங்களை தஸவ்வுப் துறையோடு தொடர்புபடுத்தி விளக்குவார்.
- ஆன்மீகத் துறையில் தஸவ்வுபின் பங்களிப்புக்களையும், பிரதிபலிப்புக்களையும் முன்வைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**தஸவ்வுப் கலை**

- 'தஸவ்வுப்' எனப்படுவது இஸ்லாமிய ஆத்மஞானக் கோட்பாட்டைக் குறிக்கிறது. இக்கோட்பாட்டினடியாக வாழ்வை அமைத்துக் கொண்டவர் ஸூபி என அழைக்கப்படுகிறார்.

- ''தஸவ்வுப்'' என்ற சொல் ''ஸபா'' என்ற அரபு மூல வேர்ச்சொல்லிலிருந்து தோற்றம்பெற்றது. தூய்மை என்ற கருத்தினை இது கொண்டுள்ளது. அதிலிருந்து தோற்றம் பெற்ற ஸூபி என்ற சொல் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துபவரைக் குறிக்கிறது. இன்னொரு சாரார் ''ஸூப்'' எனும் சொல்லிலிருந்து தோன்றியது எனக் குறிப்பிடுகின்றனர். கம்பளி என்ற கருத்தினை இது தருவதாகக் குறிப்பிடுகின்றனர். எளிமையைப் பிரதிபலிக்கும் கம்பளிப் போர்வையை அணிந்தவர் எனும் கருத்தை ஸூபி என்ற சொல்லுக்கு இவர்கள் வழங்குகின்றனர். இன்னும் சிலர் ஸப் என்ற சொல்லிலிருந்து ஸூபி என்ற சொல் தோன்றியிருக்கிறது எனக் குறிப்பிடுகின்றனர். தொழுக்கைக்கான முதல் அணியிலுள்ளவர் ''ஸூபி'' என்ற கருத்தை இவர்கள் வழங்கியிருக்கின்றனர்.

  மேலும் அஸ்ஹாபுஸ் ஸூப்பா திண்ணைத் தோழர்கள் மற்றும் ஆலு ஸூபா (ஜாஹிலிய்யாக் காலத்தில் க.்.பாவில் பணிவிடை செய்த ஒரு குடும்பம்) போனற் சொற்களிலிருந்து ஸூபி என்ற சொல் தோன்றியது என்றும் குறிப்பிடுவர்.

  இஸ்லாமிய கண்ணோட்டத்தில்,

  ''உள்ளத்தில் கீழான உணர்ச்சிகளுக்கெதிராகப் போர்தொடுத்து அதனை அடிமைப்படுத்தி இஸ்லாமிய பணியில் ஈடுபடும் வகையில் இறை நேசம், மறுமை வாழ்வில் பற்று , உலக வாழ்வைத் துச்சமாக மதிக்கும் மனநிலை ஆகிய பண்புகளை உள்ளத்தில் தோற்றுவிக்கும் வழிமுறையாக தஸவ்வுப் விளங்குகின்றது எனலாம்''

  வணக்க வழிபாடுகள் மூலம் உள்ளத்தைப் பண்படுத்தி, பயிற்றுவித்து இறை சட்டங்களுக்கு அமைய மனித வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான ஓர் ஆன்மீக

முயற்சி என்ற கருத்தை தஸவ்வுப் என்ற பதம் எடுத்துக் காட்டுகிறது.

- உயர் இலட்சியப் போராட்டங்களுக்கு உள்ளத்தைப் பக்குவப்படுத்த எடுக்கப்படும் பிரயத்தனமும் முயற்சியுமே இஸ்லாமிய துறவு நிலையாகும். இந்தத் துறவு நிலையைக் கடைப்பிடித்து உள்ளத்தைப் பண்படுத்தியவன், இஸ்லாமிய த.்.வா பணியில் சளைக்காது உழைக்கும் மனோ வல்லமையும் அறிவுப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடும் உள வலிமையும் பெறுகின்றான்.

- மனிதன் உடல், ஆன்மா, அறிவு ஆகிய மூன்று கூறுகளையும் கொண்டு படைக்கப்பட்டவன். இந்த மூன்று கூறுகளும் சமநிலையில் பேணப்படல் வேண்டும். ஒன்றைப் போசித்து இன்னொன்றைப் போசிக்காமல் விட்டாலும் அல்லது போசிப்பதில் குறைகள் விட்டாலும் குறை விடப்பட்டுப் போசிக்கப்படாத பகுதி தளர்ச்சியடையும். இதனால், மனிதன் சமநிலையற்றுப் போவான். எனவேதான் இஸ்லாம் இம்மூன்று கூறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் போசிப்பதற்கான வழிமுறைகளை வழங்கியுள்ளது.

- தஸவ்வுப் அல்லது ஸூபித்துவம் என்ற பெயரில் நபி (ஸல்) அவர்களது காலத்திலோ ஸஹாபாக்களின் காலத்திலோ ஆன்மாவைப் போசிக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையாயினும் ஆன்மீகப் பயிற்சியும் ஆன்மாவுக்கான முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு ஆன்மா போசிக்கப்பட்டதை எவரும் மறுப்பதற்கில்லை. நபி (ஸல்) அவர்கள் தனது மக்கத்துக் கால த.்.வாப் பணியில் தாருல் அர்க்கத்தில் இதனை மேற்கொண்டார்கள். மௌட்டீக சிந்தனையில் வாழ்ந்த மக்களை ஆன்மீகத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர்களை நெறிப்படுத்தினார்கள். ஈமானிய பலமும் ஆன்மீக பலமும் நபித்தோழர்களிடம் காணப்பட்டதால் இஸ்லாத்திற்காக எதனையும் செய்யக்கூடிய மனோ வலிமையைப் பெற்றுக்கொண்டனர்.

- அப்பாஸிய ஆட்சியில் அறிவியல் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இக்காலம் அறிவியற் துறையின் பொற்காலம் என அழைக்கப்பட்டது. ஆனால் இக்காலப் பகுதியில் ஆன்மீகப் பகுதி கவனிக்கப்படாததன் காரணமாக ஆன்மா தளர்ச்சியடைய ஆரம்பித்தது. மங்கோலிய தாத்தாரியரின் படையெடுப்பு கி.பி 1258ஆம் ஆண்டு இடம்பெற்றது. அது முஸ்லிம் சமூக அமைப்பைச் சீரழித்ததுடன் முஸ்லிம்களின் ஆட்சியையும் ஆட்டங்காணச் செய்தது. பலநூறு ஆண்டு கால அதன் பண்பாட்டு, பாரம்பரிய சின்னங்கள் அழிந்தொழிந்தது. ஒரு இருண்ட யுகமாக முஸ்லிம்களைப் பொறுத்தவரை அக் காலம் கருதப்பட்டது.

  இந்நிலையிலிருந்து முஸ்லிம்களை விடுவிக்க ஆட்சியாளர்கள் இருக்கவில்லை. ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த ஸூபி மகான்கள் இதனைச் சீர் செய்ய முன்வந்தார்கள். இஸ்லாத்தையே அழித்தொழிக்க முயன்ற மங்கோலியர்களையே இவர்கள் இஸ்லாத்தைத் தழுவச் செய்தார்கள். இஸ்லாத்தை அழிக்கப் போராடிய மங்கோலியர்களை இஸ்லாத்தின் மாண்பு காக்கும் போர் வீரர்களாக மாற்றினார்கள். ஆத்மஞான பண்பாட்டின் விளைவாக பெற்ற ஈமானிய வலிமை போராட்டக் களங்களில் இஸ்லாத்தைப் பாதுகாக்கும் போராளிகளாக அவர்களை அது மாற்றியது.

- ஸூபிகள் இந்த நோக்கத்தை இலக்காக வைத்து தரீக்காக்களை உருவாக்கினார்கள். அல்குர்ஆன், சுன்னா அடிப்படையில் செயன்முறைகளை அதற்கு வழங்கினார்கள்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் வாழ்ந்த ஸூபிமகான்களின் பங்களிப்புக்களை வரலாற்றில் காணலாம்.

- அபூ ஹாஸிம் (ஹி : 150)
- புழைல் இப்னு இயாழ் (ஹி : 187)
- ஷகீக் அல்பல்கி (மரணம் : ஹி 194)
- ஹாதிம் அல் அஸம் (ஹி : 227)
- இப்றாஹீம் இப்னு அத்ஹம்
- அப்துல் காதிர் ஜீலானி (ஹி: 470)
- அபூ யஸீத் அல் பிஸ்தாமி (மரணம் ஹி : 261)
- அபூஹாமித் அல் கஸ்ஸாலி (ஹி : 450)
- இப்னு அரபி (மரணம் ஹி : 638)

- ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டுப் பகுதியில் ஸூபி தரீக்காக்களின் ஷெய்குகள் ஜிஹாத் முனைகளிலும் முன்னணியில் இருந்ததோடு மக்களை ஆன்மீக வழியில் நெறிப்படுத்துவதிலும் பெரும் பங்காற்றினார்கள். இந்த வரிசையில் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) (ஹி. 470 - 561) அவர்களின் பங்கு முக்கியமானதாகும். அவரது பயிற்சி வழிமுறையை அடியொட்டியே ''காதிரியா தரீக்கா'' தோற்றம் பெற்றது.

  ஆன்மீகத் துறையில் மிக மோசமான நிலையில் இருந்த மக்களைத் நெறிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையை அறிமுகம் செய்தார். இறைவனுக்குப் பொருத்தமான தூய்மையான வாழ்வு வாழ்வதற்காக ஷெய்கின் கையில் பைஅத் எனும் விசுவாசப் பிரமாணம் செய்யும் முறையொன்றை நடைமுறைப்படுத்தினார். பைஅத் செய்தவர்கள் முரீதுகள் என அழைக்கப்பட்டனர். பைஅத் பெற்றவர்களை ஆன்மீகப் பாதையில் நெறிப்படுத்தி அவர்களது உள்ளத்தின் மாசகற்றிப் பண்படுத்தி அல்குர்ஆன், சுன்னா வெளிச்சத்தில் ஆத்மீக, தார்மீக (உலகம்) உயர்ச்சிக்கு இட்டுச் செல்வதே இவர்களது இலக்காக இருந்தது. இஸ்லாமிய உலகில் சாதுலிய்யா, சுஹ்ரவர்தியா, நக்ஷபந்தியா, தீஜானியா, சனூஸியா போன்ற தரீக்காக்கள் இஸ்லாத்துக்குப் பெரும் பங்காற்றியதை வரலாற்று ஆதாரங்களினூடாகக் கண்டுகொள்ள முடிகிறது.

- 19ஆம் நூற்றாண்டில் வட ஆபிரிக்காவில் ஏகாதிபத்தியவாதிகள் ஊடுருவி உஸ்மானிய ஆட்சியின் கீழ் ஒன்றுபட்டிருந்த முஸ்லிம்களைத் துண்டாட முற்பட்டபோது அதற்கெதிராக ஆத்மீக, பண்பாட்டு வழிநின்று போராடிய இயக்கமே சனூஸி இயக்கமாகும். அதன் ஸ்தாபகத் தலைவராக ஸெய்யித் அஹ்மத் ஷரீப் அஸ்ஸனூஸி" என்பவர் இருந்தார். ஸனூஸி இயக்கத்தின் ஸாவியா அமைப்பு பல்துறை பங்காற்றியதை வரலாறு கூறுகின்றது. மத்திய ஆசியாவில் நக்ஷபந்தியா தரீக்கா, போராடுவதற்குரிய ஆன்மீக பலத்தை முஸ்லிம்களுக்கு வழங்கியது. இதன் ஸ்தாபக தலைவராக ''காதி முஹம்மத்'' என்பவர் இருந்தார். (மரணம் கி.பி 1832) இந்தோனேசியாவிலும் இந்தியாவிலும் இருந்த ஸூபித்துவ வாதிகள் அப்பிரதேச முஸ்லிம்களின் ஆன்மீகத் துறைக்குப் பங்காற்றி இருப்பதையும் காணமுடிகிறது.

- இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கான இயக்க ரீதியான அழைப்புக்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்திலிருந்து சமகாலம் வரை ஸூபி மகான்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் மேற்குறிப்பிட்ட விளக்கங்களினூடாகத் தெளிவாகியுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் தஸவ்வுப்பை சுருக்கமாக பின்வருமாறு

குறிப்பிடலாம்.

1. தஸவ்வுப் என்பது வெறும் துறவறக் கோட்பாடன்று.
2. அது ஆன்மீகப் பேரியக்கம்.
3. இஸ்லாமிய சிந்தனையை அல்குர்ஆன், ஸுன்னா வழியில் வழங்கிய இயக்கம்.
4. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காகப் போராடிய அமைப்பு.

- ஸுபித்துவவாதிகளின் முயற்சியினால் தரீக்காக்கள் உருவாகி அந்த தரீக்காக்கள் ஏகாதிபத்தியவாதிகளின் இஸ்லாத்துக்கெதிரான சூழ்ச்சிகளையும் சதித்திட்டங்களையும் முறியடித்ததனால் இத்தரீக்காக்களை ஒழிப்பதை ஏகாதிபத்தியவாதிகள் தமது முக்கிய பணியாகக் கொண்டார்கள். இதற்குப் பின்வரும் இரண்டு பிரதான வழிகளை அவர்கள் கையாண்டார்கள்.

1. முஸ்லிம்கள் மத்தியில் அல்லது மக்கள் மத்தியில் தஸவ்வுப்பில் வெறுப்பையும் அதன் தூய்மையில் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும் நோக்கோடு தஸவ்வுப் பற்றிய தவறான விளக்கங்களை மிகநுட்பமாகவும் தந்திரமாகவும் முஸ்லிம்கள் மத்தியில் பிரசாரம் செய்யக் கூடியவர்களை உருவாக்கினார்கள்.

2. ஸுபி தரீக்காக்களை மாசுபடுத்தும் வகையில் அவற்றுள் ஊடுருவி பல்வேறு ஸுபி தரீக்காக்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தினார்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை**

1. கைருல் பஷர், ஷரீஆவின் பார்வையில் தஸவ்வுப் (1998)- புஷ்ரா பதிப்பகம், தர்கா நகர்
2. அக்தார் அஸாம், ஆன்மிக வறுமை, இலங்கை ஜமாஅதே இஸ்லாமி இஸ்லாமிய வெளியீடு
3. கலாநிதி எம்.ஏ.எம். ஷுக்ரி, ஆத்ம ஞானிகளும் அறப்போராட்டங்களும், நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், பேருவலை
4. நவவி இமாம், ரியாலுஸ் ஸாலிஹீன் (2004), மத்ரஸது ரஷாதில் அரபிய்யா வெளியீடு, கொழும்பு -14
5. கஸ்ஸாலி இமாம், இறை திருப்தி (2005), யுனிவேர்ஸல் பப்ளிகேஷன், சென்னை
6. முஹம்மத் அல் கஸ்ஸாலி, ஒழுக்க மாண்புகள் (2004), இலக்கியச் சோலை, சென்னை.
7. முகம்மத் அக்ரம், ஆன்மீக வாழ்வு போதனைகளும் வழிமுறைகளும் (2004), முசல்மான் பப்ளிகேஷன், பஸ்யால
8. அகார் முஹமத்மத் ஏ.ஸீ, நபி வழி I,II (1991), அல்கலம் பதிப்பகம், பேருவலை
9. இப்னு தைமிய்யா, இறைநேசச் செல்வர்களும் ஷைத்தானின் தோழர்களும், ஹிரா பப்ளிகேஷன்
10. இமாம் கஸ்ஸாலி, உளத்தூய்மை, யுனிவேர்ஸல் பப்ளிகேஷன், சென்னை

**தேர்ச்சி 07: சமூக வாழ்வில் முஆமலாத் பற்றி அறிந்து அவற்றை வாழ்வில் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1: முஆமலாத் பற்றிய தெளிவைப் பெற்று, கொடுக்கல் வாங்கல் முறைகளை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**பாடவேளை : 35 பாடவேளைகள்**

**கற்றல்பேறுகள்**

- பொருளாதாரம் பற்றிய இஸ்லாமிய நோக்கை அறிந்து விளக்குவார்.
- இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களையும் பண்புகளையும் ஒப்பு நோக்கி விளக்குவார்.
- உழைப்பின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் முன்வைப்பார்.
- உழைப்பு, நுகர்வு என்பவற்றுக்கான விதிமுறைகளையும் ஒழுக்கங்களையும் விளங்கிச் செயற்படுத்துவார்.
- பொருளீட்டல் நடவடிக்கைகள் பற்றி விளங்கி பொருளீட்டலின் போது பேண வேண்டிய விதிமுறைகளையும் ஒழுக்கங்களையும் விளக்கிக் கூறுவார்.
- இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகளை அறிந்து அவற்றின் ஒழுக்கங்களைப் பேணிச் செயற்படுவார்.
- வியாபாரம், கைத்தொழில், சேவைத் தொழில், வேளாண்மை போன்றவற்றின் முக்கியத்துவத்தையும் சிறப்புக்களையும் அறிந்து கூறுவார்.
- வியாபாரம், கைத்தொழில், சேவைத்தொழில், வேளாண்மை, முதலியவற்றின் விதிமுறைகளையும் ஒழுக்கங்களையும் அறிந்து பின்பற்றுவார்.
- வியாபாரத்தின் போது தவிர்ந்து கொள்ள வேண்டியவற்றை விளங்கி ஒழுகுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**பொருளாதாரம் பற்றிய இஸ்லாமிய நோக்கு.**

- இஸ்லாம் மனித வாழ்வின் சகல துறைகளுக்குமான சீரிய வழிகாட்டலைக் கொண்ட மார்க்கம் என்ற வகையில் அது பொருளாதாரம் பற்றிய உன்னத வழிகாட்டலையும் தந்துள்ளது.

  மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் என்பவற்றையும் சமூக வளர்ச்சியுடன் தோற்றம் பெற்ற கல்வி, பாதுகாப்பு, தொலைத்தொடர்பு, பொழுதுபோக்கு போன்ற பல்வேறு தேவைகளையும் அடைந்து கொள்வதற்கான முயற்சிகள் பொருளாதார நடவடிக்கைகளைச் சார்ந்ததாகும். இந்நடவடிக்கைகளுள் வளங்கள், முயற்சி, மூலதனம் முதலானவற்றை உள்ளடக்கிய தொகுதியையும் அவற்றின் செயன்முறையையும் பொருளியல் விளங்குகிறது.

- பொருளாதாரம் பற்றிய மனிதர்களது நோக்கும் அதைப் பெற்றுக் கொள்ள அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் ஆளுக்காள் வேறுபடுகின்றன. இதன் காரணமாக மனிதர்களின் பொருளாதார நிலையும் வேறுபடுகின்றது. இயல்பாக உருவாகும் இவ்வேற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில் எல்லா மனிதர்களினதும் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் முன்வைக்கப்படும் திட்டமே சிறந்த பொருளாதாரத் திட்டமாகும்.

- இன்றைய நவீன உலகில் மனிதர்களது பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இரு பிரதான பொருளாதாரச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று, தனிநபர் பொருளாதார நலனிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் முதலாளித்துவப் பொருளாதாரச் சிந்தனை. மற்றையது, தனிநபர்களின் பொருளாதார நலனை நிராகரித்துச் சொத்துக்கள் அனைத்தையும் பொதுவுடைமையாக்கும் சமவுடைமைப் பொருளாதாரச் சிந்தனை. இவ்விரண்டும் மனிதர்கள் தோற்றுவித்த ஒன்றுக்கொன்று முரணான சிந்தனைகளாகும். இவை இரண்டும் நடுநிலையற்றவை. இவற்றின் மூலம் உலகப் பொருளாதாரம் தீர்க்க முடியாப் பல சவால்களை எதிர் கொண்டது. ஆனால் இஸ்லாம் நடுநிலையான பொருளாதாரக் கோட்பாடொன்றை முன் வைத்துள்ளது. அது தனிநபர்களினதும் சமூகத்தினதும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடியதாகவும் உள்ளது.

இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் இருவகைப்படும்.

1. கோட்பாட்டு ரீதியானவை.(நம்பிக்கை சார்ந்தவை)
2. நடைமுறை சார்ந்தவை.

**கோட்பாட்டு ரீதியான அடிப்படைகள்**

- பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

1. வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன.அவற்றை அவன் மனிதர்களுக்காகப் படைத்துள்ளான்.

*“மேலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அல்லாஹ்வுக்குரியவை” (அந்நஜ்ம்: 31)*

*“அவன் தான் புவியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்.”*

2. செல்வம் தொடர்பாக மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான்.

*“உங்களுக்கு இறைவன் அளித்த அருளைப் பற்றியும் பின்னர் அந்நாளில் நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்” (அத்தகாதுர்: 08)*

3. தனிநபர் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு.

*“அவர்களது சொத்தில் கேட்டு வருவோர்க்கும் இல்லாதோர்க்கும் குறித்த அளவு பங்குண்டு” (அல் மஆரிஜ்: 24-25)*

4. செல்வத்தைத் திரட்ட மனிதன் மேற்கொள்ளும் முயற்சி பலனளிப்பதும் பலனளிக்காதிருப்பதும் அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொறுத்ததே.

*“நிச்சயமாக உங்கள் இறைவன் தான் விரும்பியவர்களுக்கு விரிவாகக் கொடுக்கிறான் தான் விரும்பியவர்களுக்குச் சுருக்கிக் குறைத்தும் அளவாகவும் கொடுக்கிறான்.”(அல்இஸ்ரா: 30)*

*5. செல்வம் மனிதனைச் சோதிக்கத் தரப்பட்டதாகும்.*

*"நிச்சயமாக உங்கள் செல்வங்களும் பிள்ளைகளும் ஒரு சோதனையாகவே உள்ளன. (அத்தகாபுன்: 15)*

மேற்கூறப்பட்ட நம்பிக்கைசார்ந்த கோட்பாடுகளே இஸ்லாமியப் பொருளாதாரத்தின் உயிரோட்டமாகும். இவற்றின் மூலமே முதலாளித்துவ, சமவுடைமைப் பொருளாதார முறைமைகளால் மனிதனுக்குக் கிடைக்கத் தவறிய நிம்மதி, மனநிறைவு, உளச் சாந்தி போன்றன இஸ்லாமியப் பொருளாதார முறை மூலம் கிடைக்கின்றன.

**நடைமுறை சார்ந்த அடிப்படைகள்.**

- இஸ்லாமிய பொருளாதார அடிப்படைகளில் நடைமுறை சார்ந்த அம்சங்களைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல்.

   *"இது நான் நன்றி செலுத்துகிறேனா இல்லையா என்று என்னைச் சோதிப்பதற்காக என் இறைவன் எனக்குப் புரிந்த பேரருளாகும்"(அந்நம்ல்: 40)*

2. ஸகாத், ஸதகா, ஏனைய தர்மங்கள் மூலம் சமூகத்துக்குரிய பங்கைச் செலுத்துதல்.

   *"தானமெல்லாம் வறியவர்களுக்கும் ஏழைகளுக்கும் தானத்தை வசூலிப்பவர்களுக்கும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் கடனில் மூழ்கியவர்களுக்கும் அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோருக்கும் வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்தியதாகும்". (அத்தவ்பா: 60)*

3. செலவு செய்வதிலும் சேமிப்பதிலும் நடுநிலை பேணல்.

   *"உலோபியைப் போன்று உம்முடைய பொருள்களில் எதையும் செலவு செய்யாது உம் கையை உம் கழுத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.அன்றி உம்மிடம் இருப்பதை எல்லாம் கொடுத்து உம் கையை முற்றிலும் விரித்தும் விடாதீர்கள்."(அல் இஸ்ரா: 29)*

4. எந்தவொரு பொருளாதார நடவடிக்கையிலும் வட்டி இடம் பெறாது கவனமாயிருத்தல்.

   *"வட்டி வாங்கி உண்டோர் சைத்தான் பிடித்துப் பித்தம் கொண்டோர் எழும்புவது போலன்றி எழும்பமாட்டார்கள்".(பகரா: 275)*

5. லஞ்சம்,ஏமாற்று,சூது,சுரண்டல் போன்ற ஒழுக்க விழுமியங்களுக்கு முரணான செயற்பாடுகளை முழுமையாகத் தவிர்த்தல்.

   *"உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்.உங்கள் வாதம் பொய்யானதென நீங்கள் அறிந்திருந்தும் இதர மனிதர்களின் பொருள்களில் எதையும் பாவமான வழியில் அநியாயமாக லஞ்சம் கொடுத்து அபகரித்துக்கொள்ள அதிகாரிகளிடம் செல்லாதீர்கள்"(பகரா: 188)*

6. காலச் சூழ்நிலைகளால் ஏற்படும் பொருளாார ரீதியான தேவைகள்,மாற்றங்கள், சிக்கல்களின் போது இஸ்லாமிய அறிஞர்கள் இஜ்திஹாத் செய்து தீர்வு காணல்.

இவ்வடிப்படைக் காரணமாகத் தான் இஸ்லாமியப் பொருளாதார முறைமைகள் எல்லாக் கால, இட, சூழ்நிலைகளுக்கும் ஏற்றதாய் அமைகின்றது.

7. ஒப்பந்தரீதியான பொருளாதாரச் செயற்பாடுகள் சாட்சிப்படுத்தப்படலும் எழுதப்படலும்.

*"நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஒரு குறித்த தவணையின் மீது கடன் கொடுத்துக் கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள்."(பகரா: 282)*

இஸ்லாமியப் பொருளாதாரத்தின் இவ்விரு அடிப்படைகளுக்கும் ஆதாரமாக அல்குர்ஆன் வசனங்களை மாத்திரமே தந்துள்ளோம். இவற்றைப் பலப்படுத்தும் பல ஹதீஸ்களும் உள்ளன. அவை இவ் அல்குர்ஆன் வசனங்களுக்கு நடைமுறை சார்ந்த விளக்கங்களாகவும் உள்ளன. முஹம்மத்(ஸல்) அவர்களே முஸ்லிம் சமூகத்தில் இவ்வடிப்படைகளை முதன்முதலாக நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.அதன் சிறந்த பெறுபேற்றை அவரது முன்மாதிரியைப் பின்பற்றிய கலீபாக்கள் காலத்தில் முஸ்லிம் சமூகம் கண்டு கொண்டது.

**இஸ்லாமியப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களும் பண்புகளும்**

**1. அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்டது.**

நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகள் மனித சிந்தனையால் உருவாக்கப் பட்டவையாகும். எனவே அவற்றில் மனித பலவீனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால் இஸ்லாமியப் பொருளியல் கோட்பாடு வஹீயின் வழிகாட்டலில் கட்டியெ முப்பப்பட்டுள்ளதால் அதில் தெய்வீகத் தன்மை காணப்படுகிறது.இதனால் அது பூர ணத்துவம் வாய்ந்ததாகவும் பொருத்தப்பாடு உடையதாகவும் உள்ளது. மனிதர்கள் உருவாக்கும் கோட்பாட்டுத் திட்டங்களிலுள்ள குறைபாடுகளை அதில் காணமுடி யாது.

**2. சமகாலத்தில் நெகிழாத் தன்மையும் நெகிழும் தன்மையும் கொண்டு இயங்கும் பொருளாதார முறை.**

இதன் தெய்வீகத் தன்மை கொண்ட பகுதி நெகிழாத் தன்மை கொண்டதாகவும் இஜ்திஹாதுக்கு அல்லது ஆய்வுக்குரிய பகுதிகள் நெகிழும் தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இதனால் இப்பொருளாதார முறை எல்லாக் காலத் துக்கும் பொருத்தமானதாக அமைகின்றது.

**நெகிழாத் தன்மை கொண்ட பொருளாதார விதிகள்.**

- இப்பிரபஞ்சத்திலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மனிதன் அவற்றைப் பயன்படுத்த முடியும் *''மேலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அல்லாஹ் வுக்குரியவை."(அர்ரஹ்மான்: 31)*
- மனிதர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ்வளங்களைப் பயன்படுத்த உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிமனிதனதும் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை இப்பொருளாதார

முறை ஏற்றுள்ளது *''அவர்களின் செல்வங்களில் கேட்போருக்கும் கேட்காதோருக்கும் குறித்ததோர் உரிமையுண்டு.''(அல்மஆரிஜ்: 24-25)* மேலும் நபி (ஸல்) அவர்கள் 'வசதியற்றோரைப் பொறுப்பேற்பது எனது கடமை. அத்தகையோர் என்னிடம் வரட்டும்'. (ஹாகிம்) என்று கூறியுள்ளார்கள்.

- இஸ்லாமியப் பொருளாதார முறை செல்வச் சுழற்சிக்கு வழிவகுக்கின்றது. எனவே ஒரு சிலரிடம் செல்வம் தேங்கி சமநிலையற்ற நிலை தோன்றுவதை இது தடுத்து விடுகின்றது. *'செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மாத்திரம் சுற்றிக் கொண்டிருக்காது இருக்க.....(அல்ஹ்ஷ்ர்: 07)* எனும் குர் ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

- இஸ்லாமியப் பொருளாதார முறையில் தனிமனித சொத்துரிமை உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. அதாவது சொத்துகளை வைத்துக் கொள்ளவும் செலவிடுவதற்குமான உரிமை வழங்கப்பட்டுள்ளது *''ஆண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும் பெண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும்'' (அந்நிஸா: 32)* எனும் குர்ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

- இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டில் பொருளாதார சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். வாழ்வாதாரங்களைத் தேடும்போது அல்குர்ஆனும் சுன்னாவும் விதித்த சட்டதிட்டங்களை மீறமுடியாது.அது அனுமதிக்கப்பட்ட பொருளீட்டல் முறை, தடுக்கப்பட்ட பொருளீட்டல் முறை என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. *''உங்களின் சொத்துக்களை உங்களுக்கிடையில் நியாயமற்ற முறையில் விழுங்காதீர்கள்.''(பகரா:188) என அல்குர்ஆன் விதித்துள்ளது.*

- *செலவினங்களை ஒழுங்குபடுத்தி வீண்விரயத்தைத் தடுக்கின்றது. ஆடம்பரங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். ''அளவு கடந்து வீண்விரயம் செய்யாதிருப்பீராக. நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர்.''(அல் இஸ்ரா: 26)* எனும் குர்ஆன் வசனம் இவ்விதியைத் தருகின்றது.

மேற்படி விதிகள் அனைத்தும் கால மாற்றங்களாலோ, பிரதேச வேறுபாடுகளினாலோ மாற்றமடைவதில்லை. எங்கும் எப்பொழுதும் இவை நிலையானதாகவே இருக்கும். கருத்து வேறுபாடுகளற்ற தெய்வீகத்தன்மை கொண்டதாகவே அவை இருக்கும்.

**நெகிழும் தன்மை கொண்ட அல்லது ஆய்வுக்குரிய விதிகள்**

- இஸ்லாமிய பொருளாதாரமொன்றினில் நெகிழும் தன்மை கொண்டவைகளை பின்வருமாறு நோக்கலாம்.

- பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீட்டின் அளவைத் தீர்மானிக்கும் நடவடிக்கை.

- சமகால பொருளாதார நிலைமைகளுக்கேற்ப, பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி அமுல்படுத்தல்.

- பொருளாதாரத் துறைகளைப் பொதுவுடைமை, தனியுடைமையாக மாற்றுவது தொடர்பாக வரையறைகளைக் கொண்டு வருதல்.

- வேதனங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்.

- வட்டியுடன் தொடர்பான செயற்பாடுகளைத் தெளிவுபடுத்தல்.

மாறா விதி மற்றும் மாறும் விதிக்கமையவே இஸ்லாமியப் பொருளாதார வட்டம் சுழல்வதால் அது சிறந்த பொருளாதார முறையாக நிலைத்து நிற்கின்றது.

**3. இயற்கைக்கும் மனித இயல்புக்கும் ஏற்ற பொருளாதார முறை**

இயற்கைச் சட்டங்களை முறிப்பதற்கோ மனித இயல்புடன் இரண்டறக் கலந்துள்ள வாழ்க்கைக் கோட்பாடுகளைச் சிதைப்பதற்கோ இஸ்லாமியப் பொருளாதார முறை இடமளிப்பதில்லை. *உதாரணமாக*

விபசாரத்தை ஒரு பொருளீட்டும் முறையாகக் கொள்வதை இஸ்லாம் தடுக்கின்றது. அது இயற்கை நியதியை முறிக்கின்றது. மது உற்பத்தி, மது விநியோகம், மதுப் பாவனை முதலியவற்றை இஸ்லாம் தடுக்கின்றது.

*''நீங்கள் விபசாரத்தை நெருங்காதீர்கள். நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச்செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது.'' (அல்இஸ்ரா: 32) (அல் மாயிதா: 90-91)*

'போதை தரக்கூடிய அனைத்தும் மதுவாகும். எல்லா மது வகைகளும் ஹராமானதாகும்.' (முஸ்லிம்)

**4. ஒழுக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறை**

எந்த வகையைச் சார்ந்த உற்பத்தியாக இருப்பினும் விநியோகமாக இருந்தாலும், நுகர்வாக இருந்தாலும் அது ஒழுக்கம் பண்பாட்டைத் தகர்ப்பதாக இருந்தால் இஸ்லாம் அதனை அங்கீகரிப்பதில்லை. உதாரணமாக: அரைகுறை ஆடையுற்பத்தி, விநியோகம், நுகர்வு முதலிய விவகாரங்களில் இஸ்லாமிய விதிமுறைகள் மீறப்படுமாயின் அது அனுமதிக்கப்படுவதில்லை.

திரைப்படத் தயாரிப்பு, வெளியீடு போன்றன இஸ்லாமிய ஒழுக்கம் பண்பாட்டுக்கு முரண்படுமானால் இஸ்லாம் அதனை அனுமதிப்பதில்லை.

**5. சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்கும் இடையில் இணக்கம் காணல்**

நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகள் முதலாளித்துவம் அல்லது தனிமனித நலனை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படுகின்றன. சமவுடைமைப் பொருளாதார முறை சமூகநலனை மட்டும் கருத்திற்கொள்கின்றது. ஆனால் இஸ்லாமியப் பொருளாதார முறையில் மனிதனது தனித்துவத்தை முறையாக விருத்தி செய்து கொள்ளவும் சமூக நலனைப் பேணவும் போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்றுக்காக மற்றொன்றை இழந்துவிடுவதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒன்று மற்றொன்றில் சார்ந்து நின்று தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிவகைகளையே அது மேற்கொள்கின்றது.

**6. சமநிலைத் தன்மை கொண்டுள்ளமை.**

இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கை சமநிலைத் தன்மை வாய்ந்ததாகும். ஏனைய பொருளியல் சிந்தனைகளைப் பொறுத்தளவில் அவை தனிமனித நலன்களில் அல்லது

சமூக நலனில் தீவிர கவனம் செலுத்துகிறது. முதலாளித்துவப் பொருளாதாரம் தனி மனித நலனில் மாத்திரமே கருத்திற் கொள்கிறது. சம உடமைப் பொருளாதாரம் சமூக நலனை மாத்திரம் கருத்திற்கொள்கின்றது. இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கை தனிமனித, சமூக நலன்களை சமநிலையில் கருத்திற் கொள்வதாகக் குறிப்பிடலாம்.

அவ்வாறே ஆன்மீகத்திற்கும் லௌகீகத்துக்கும் இடையில் சமநிலை பேணுகின்றது. மனிதன் ஆன்மா அறிவு என்பவற்றைக் கொண்டவனாக இருப்பதனால் வெறுமனே இலாபத்தைக் கருத்திற்கொண்டோ உடலியல் தேவைகளை மாத்திரம் கருத்திற் கொண்டோ இஸ்லாம் பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்தவில்லை.ஆன்மீகத் தேவைகளையும் லௌகீகத் தேவைகளையும் கவனத்திற் கொண்டு பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

**7. அல்லாஹ்வின் அருள் அபிவிருத்தி மற்றும் நீதியைக் கொண்டமைந்துள்ளமை**

இஸ்லாமியப் பொருளாதார முறை அருள் அபிவிருத்தி மற்றும் நீதி நிறைந்ததாக வுள்ளது. (பகரா: 279)

வரலாற்றில் அது சீராக அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதிகளில் அதன் பொலிவைக் காண முடிந்தது. இப்பொருளாதாரமுறை கைவிடப்பட்டுள்ளதால் இன்றைய பொருளா தாரம் மனித வாழ்க்கையில் பிரச்சினைகளைக் கொண்டுவந்துள்ளதைக் காணலாம்.

**8. இஸ்லாமியப் பொருளாதார நடவடிக்கைகள் இபாதத்தாகக் கருதப்படுகின்றமை**

இப்பொருளாதார முறை அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மேற்கொள் ளப்படுவதால் அது இபாதத்தாகவே அமைகின்றது. அல்குர்ஆனும் ஸுன்னாவும் பொருளீட்டலில் ஈடுபடுவதைத் தூண்டியுள்ளன. அவற்றுக்கான வழிகாட்டல்களை வழங்கியுள்ளன. பொருளீட்டலில் தவிர்ந்து கொள்ள வேண்டிய அம்சங்களை தெளிவுபடுத்தியுள்ளன.

தனது குடும்பத்திற்குத் தேவையான பொருளீட்டலில் ஈடுபட்டுக் குடும்பத்தைப் பராமரிப்பது வாஜிபாகும். அவ்வறே அல்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமூக நலனிற்காகச் செலவிடுவதை வலியுறுத்தியுள்ளது.

**9. பூரணத்துவம் வாய்ந்தது**

இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கை பூரணத்துவம் வாய்ந்ததாகும் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. ''*இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பூரணமாக்கி வைத்துவிட்டேன். மேலும் என்னுடைய அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக பொருந்திக்கொண்டேன்'' (அல்மாஇதா :3)*

மார்க்கத்தை முழுமையாக்கிய அல்லாஹ் அதன் வழிகாட்டல்கள் அடங்கிய பொருளாதாரக் கொள்கைகளையும் முழுமையாக்கியுள்ளான். மனிதனால் உருவாக்கப்பட்ட கொள்கைகள் பொருளியல் சிந்தனைகள் காலத்திற்குக் காலம் மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. ஆனால் பூரணத்துவம் மிக்க அடிப்படை வழிகாட்டல்களைக் கொண்ட இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைகள்

நிலையானதாகவும் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய பூரணத்துவம் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

**உழைப்பின் முக்கியத்துவம்**

- இஸ்லாம் உழைப்புக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற மார்க்கமாகும். ஒவ்வொரு தனிமனிதனையும் அது உழைப்புக்கு ஊக்குவிக்கின்றது.

  *‘‘அவன்தான் உங்களுக்குப் பூமியை வசதியாக ஆக்கி வைத்தான். எனவே அதன் பல கோணங்களிலும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவைகளைப் புசிப்பீர்களாக.’’ (அல்முல்க்: 15)*

  என்று அல்குர்ஆன் கூறுகின்றது. உழைப்புக்காக வெளியேறிச் செல்பவரே தனக்குரிய உணவைப் பெறுவார் என்பதையே இந்த அல்குர்ஆன் வசனம் உணர்த்துகின்றது.

- நேர்மையான உழைப்புக்குரிய எல்லா வாயில்களையும் இஸ்லாம் திறந்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட உழைப்பில் தான் ஈடுபட வேண்டும், ஒரு குறிப்பிட்ட தொழிலைத் தான் செய்ய வேண்டும் என்று அது எவரையும் நிர்ப்பந்திப்பதில்லை. தனி மனிதனுக்கோ அல்லது சமூகத்திற்கோ ஏதேனும் ஒரு வகையில் தீங்கு பயக்கும் தொழில்களைத் தவிர வேறெந்தத் தொழிலையும் இஸ்லாம் ஹராமாக்குவதும் இல்லை.

- ‘தவக்குல்’ என்ற பெயரில் உழைப்பில் ஈடுபடாமல் ‘அல்லாஹ் தருவான்’ என்று கூறிக்கொண்டு பள்ளிவாயலில் முடங்கிக் கிடந்த சில மனிதர்களைக் கண்ட உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள், அம்மனிதர்களை நோக்கி தனது சாட்டையை உயர்த்திப் பின்வருமாறு கூறினார்கள். ‘உழைக்காமல், வருமானத்தைத் தேடிச் செல்லாமல் உங்களில் எவரும் வீணே இருக்கக் கூடாது. ‘அல்லாஹ்வே! நீ எனக்கு ரிஸ்கை வழங்கு!’ எனப் பிரார்த்தனை செய்தால் மட்டும் போதாது. வானம் தங்கத்தையோ, வெள்ளியையோ மழையாகப் பொழியப் போவதில்லை.’ என்று கூறிவிட்டு, பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

  *‘(ஜும்ஆ)தொழுகை முடிந்து விட்டால் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்.’ (அல் ஜுமுஆ : 10)*

- ஒரு முறை ஷகீக் அல் பல்கி ரஹ்மஹுல்லாஹு அவர்கள் வியாபார நோக்கமாக ஒரு பயணம் மேற்கொண்டார். இவரது இந்தப் பயணம் நீண்டநாள் பயணமாகவே அமைய இருந்தது. ஆனால் ஓரிரு நாட்களுக்குள் அவர் ஊர் திரும்பினார். அவரைப் பள்ளி வாயிலில் சந்தித்த இப்ராஹிம் இப்னு அத்ஹம் ஆச்சரியப்பட்டு ‘என்ன நடந்தது? ஏன் அவசரமாக ஊர் திரும்பி விட்டீர்கள்?’ எனக் கேட்டார். அதற்கு அல் ஷகீக் அல் பல்கி, ‘நான் எனது பயணத்தின் போது இடையில் ஓய்வெடுத்துக் கொள்வதற்காக ஓரிடத்தில் தங்கினேன். அது பாழடைந்த ஓர் இடமாக இருந்தது அங்கே நான் குருடான, முடமான ஒரு பறவையைக் கண்டேன். கண்பார்வையற்ற, பறக்கவோ, அசையவோ முடியாத அந்தப் பறவை இந்த ஒதுக்குப் புறமான இடத்தில் எப்படி உயிர் வாழ்கிறது! என நினைத்து நான் ஆச்சரியப்பட்டேன். சற்று நேரத்தின் பின்னர் அங்கே மற்றொரு பறவை வந்தது. அது இந்தப் பறவைக்கு உணவைக் கொண்டு வந்திருந்தது. இவ்வாறு ஒரு நாளைக்கு பல தடவைகள் அது இந்தப் பறவைக்குப் போதுமான உணவைக் கொண்டுவந்து கொடுப்பதை

நான் அவதானித்தேன். இதன் மூலம் இந்த இடத்தில் இந்தப் பறவைக்கு உணவளிப்பவன் எனக்கு உணவளிக்க முடியுமானவனாக இருக்கிறான்' என்ற உண்மையை உணர்ந்த நான் உழைப்பை நோக்காகக் கொண்ட எனது பயணத்தை இடைநடுவில் கைவிட்டு ஊர்திரும்பினேன்' என்றார்.

இதைக் கேட்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம், 'ஷகீகே! உமது இந்த நிலைப்பாடு எனக்கு பெரும் ஆச்சரியமாக இருக்கின்றது. பிறரின் தயவில் வாழ்கின்ற அந்த குருடான, முடமான பறவையாக நீர் இருக்க விரும்புகிறீரா? ஏன் தனக்காகவும் குருடர்களாகவும், முடவர்களாகவும் இருக்கும் பிறருக்காகவும் உழைக்கின்ற அந்தப்பறவையின் நிலையில் நீர் இருக்கக் கூடாது? (கொடுக்கும்) உயர்ந்த கரம் (வாங்கும்) தாழ்ந்த கரத்தைவிட சிறந்தது என்பதை நீர் அறிய மாட்டீரா? என வினவினார்கள். இதைக் கேட்ட ஷகீக், இப்ராஹிம் இப்னு அத்ஹம் அவர்களின் கரங்களைப் பற்றி முத்தமிட்டு 'அபூ இஸ்ஹாக்கே! நீங்கள் எமது ஆன்மீக குரு அல்லவா? எனக் கூறிவிட்டு மீண்டும் தனது தொழிலை மேற்கொள்வதற்காகத் திரும்பினார்.

*''நீங்கள் அல்லாஹ்வின் மீது சரியான முறையில் 'தவக்குல்' வைப்பீர்களாயின் அவன் பறவைக்கு உணவளிப்பது போல உங்களுக்கும் உணவளிப்பான். அவை காலையில் வெறும் வயிற்றுடன் சென்று மாலையில் நிரம்பிய வயிற்றுடன் திரும்புகின்றன.' (அஹ்மத், திர்மிதி)*

- இந்த ஹதீஸை உழைக்காதிருப்போர் தமது நிலைப்பாட்டுக்கு ஆதாரமாகக் கொள்வதுண்டு. உண்மையில் இந்த நபிமொழி அவர்களுக்குச் சார்பானதல்ல. எதிராகவே இருக்கின்றது. வெறும் வயிற்றுடன் உள்ள அந்தப் பறவைகள் காலையில் தமது கூடுகளை விட்டு வெளியேறி உணவைத் தேடிச் செல்வதனால் தான் மாலையில் வயிற்றை நிறைத்துக் கொண்டு திரும்ப முடிகின்றது என்றே ஹதீஸ் கூறுகின்றது. இது 'ரிஸ்கைப் பெறுவதற்கு முயற்சி அவசியம், உழைப்புத் தேவை, பௌதிகக் காரணிகளைக் கைக்கொள்ளல் வேண்டும் என்ற உண்மையையே உணர்த்துகின்றது.

  *''தனது வீட்டிலோ அல்லது பள்ளிவாயிலிலோ அமர்ந்து கொண்டு நான் தொழில் எதுவும் செய்யமாட்டேன். எனக்குரிய உணவு என்னை வந்து சேரும் எனக் கூறும் ஒருவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் வினவப்பட்டது. அதற்கு அன்னார், 'அவன் அறிவில்லாத ஒரு மனிதன் ''எனக்குரிய ரிஸ்க் எனது ஈட்டியின் நிழலில்தான் இருக்கின்றது' என்ற நபிமொழியை அவன் கேட்டதில்லையா?'' என்று பதிலளித்தார்.(அஹ்மத்)*

- அல்லாஹ் தனது அடியார்கள் அனைவருக்குமான ரிஸ்கை உத்தரவாதப்படுத்தி இருக்கிறான் என்பது உண்மையே. ஏன் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களினதும் உணவையும் அவன் உத்தரவாதப்படுத்தியே உள்ளான். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

  *''பூமியிலுள்ள எந்தவோர் ஊர்வனவாயினும் அதற்குரிய ரிஸ்கை வழங்குவது அல்லாஹ் மீது பொறுப்பாகவே இருக்கின்றது.'' (ஹூத்: 6)*

  ஆயினும் ஒவ்வொருவரும் தனக்குரிய ரிஸ்கை முயற்சி செய்து, உழைத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது 'ரஸ்ஸாக்'காக விளங்குகின்ற அல்லாஹ்வின்

ஏற்பாடும் நியதியுமாகும். எனவே தான் ரிஸ்கைத் தேடிப் பெற்று உட்கொள்வதற்காகப் பூமியின் நாலாபக்கங்களிலும் பரந்து சென்று உழைக்குமாறு கட்டளையிடுகின்றான்.

- ''வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றோம்'' என்ற நியாயத்தை முன்வைத்து ஒருவன் தொழிலில் ஈடுபடாமல் இருப்பதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஏனெனில், ஒருவன் தனக்காகவும் தன் குடும்பத்தை வாழவைப்பதற்காகவும் தன் இனபந்துக்கள், அயலவர்கள் முதலானவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகவும் சமூகநலப் பணிகளில் தன் பங்களிப்பைச் செய்வதற்காகவும் உழைப்பில் ஈடுபடுவது ஒரு பெரும் இபாதாவாகக் கொள்ளப்படுகிறது. இதனால் தான் அல்குர்ஆன் உழைப்பை, தொழிலை, வருமானம் தேடலை ''அல்லாஹ்வின் அருள்'' என வர்ணிக்கின்றது. உழைப்புக்காக வர்த்தக வாணிப முயற்சிகளில் ஈடுபட்டுப் பயணம் மேற்கொள்வோரை அல்லாஹ்வின் பாதையில் செல்கின்ற முஜாஹிதுகளுடன் இணைத்து அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

*''வேறு சிலர் அல்லாஹ்வின் அருளைத் தேடிப் பூமியின் பல பாகங்களிலும் செல்ல வேண்டியிருக்கும் என்பதையும் அவன் நன்கு அறிவான்.'' (அல்முஸம்மில் - 20)*

உமர் இப்னு கத்தாப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் *'ஜிஹாதுக்கு அடுத்த நிலையில், நான் அல்லாஹ்வின் அருளைத் தேடிக் கொண்டிருக்கும் வேளையில் எனக்கு மரணம் சம்பவிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்'*

*'நம்பிக்கையும் நீதமுமுள்ள வியாபாரி மறுமையில் நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷஹீதுகள் ஆகியோருடன் இருப்பான்' என்று கூறி வியாபாரத்தில் ஈடுபட ஊக்கமளித்தார்கள் (திர்மிதி, ஹாகிம்)*

நபி (ஸல்) அவர்கள் கைத்தொழில் முதலானவற்றின் முக்கியத்துவத்தையும் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். உதாரணமாகப் பின்வரும் ஹதீஸ்களைக் குறிப்பிடலாம்.

*'ஒருவன் சுயதொழில் மூலம் பெற்ற வருமானத்தைக் கொண்டு உட்கொள்ளும் உணவை விட வேறு சிறந்த உணவை உட்கொள்வதற்கில்லை.' (புஹாரி)*

*'எவர் ஹலாலான உழைப்பில் ஈடுபட்டுக் களைப்படைந்த நிலையில் ஓர் இரவை அடைகிறாரோ அவர் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் அவ்விரவை அடைந்தவராவார்.' (இப்னு அஸாகீர்)*

அல்குர்ஆன் பல்வேறுபட்ட கைத்தொழில்களைக் குறிப்பிட்டு அவற்றை அல்லாஹ்வின் அருள் என வர்ணிக்கின்றது.

*'எனது ஆத்மா எவன் வசம் இருக்கின்றதோ அவன்மீது சத்தியமாக, உங்களில் ஒருவர் தனது கயிற்றை எடுத்துச் சென்று விறகு சேர்த்து (தொழில் செய்து) வருவது, - ஒரு மனிதன் கொடுத்தாலும், மறுத்தாலும் - அவனிடம் சென்று யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும்.' என்பது நபி மொழி. (புஹாரி, முஸ்லிம்)*

- உழைக்கக் கூடிய சக்தியுள்ள ஒருவர் எவ்விதத் தொழிலும் செய்யாமல் இருப்பது ஹராமாகும். அத்தகையோருக்கு ஸகாத்தில் பங்கு கொடுக்கப்படவும் முடியாது. இதனை நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

  'வசதியுடையவருக்கும், உழைக்கும் சக்தி பெற்றவருக்கும் ஸகாத்தில் பங்கில்லை. மற்றைய அறிவிப்பின்படி 'ஸகாத் இவர்களுக்கு ஹலாலாக மாட்டாது என வந்துள்ளது.

- உலகில் ஒரு முஸ்லிம் மூன்று முக்கிய பணிகளை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றான். இபாதத், கிலாபத், இமாரத் ஆகிய மூன்றுமே அவையாகும். இங்கு இமாரத் என்ற மூன்றாவதோடு உழைப்பும் தொழிலும் தொடர்புபடுகிறது. ஓர் உண்மையான மு.்மின் வணக்க வழிபாடுகளில் மட்டுமன்றி தொழில் நடவடிக்கை யிலும் ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும் என்பதே அல்லாஹ்வின் விருப்பமாகும். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

  *''பலர் இருக்கின்றனர், அவர்களுடைய வர்த்தக, கொடுக்கல் வாங்கல் முதலியன அவர்கள் அல்லாஹ்வை திக்ர் செய்வதிலிருந்தும், தொழுகையை நிலைநாட்டுவதி லிருந்தும், ஸகாத் கொடுப்பதிலிருந்தும் அவர்களைத் திருப்பிவிடாது.''(அந்நூர் - 37)*

  நபி (ஸல்) அவர்கள் எல்லா வகையான தொழில் முயற்சிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார்கள். விவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும் ஊக்கமளித்துள்ள அன்னார் பிற கைத்தொழில்களும் முக்கியமானவை என்பதை விளக்கி உள்ளார்கள்.

- கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் பர்ளு கிபாயா எனும் கூட்டுக்கடமையாக இஸ்லாம் அவற்றைக் கருதுகின்றது. அல்குர்ஆன் பல்வேறு கைத்தொழில்களைக் குறிப்பிட்டு அவற்றை அல்லாஹ்வின் அருளாகச் சித்தரிக்கின்றது.

  மேலும் நிச்சயமாகத் தாவூதுக்கு நாம் நம்மிடமிருந்து பேரருளைக் கொடுத்தோம். *''மலைகளே! நீங்கள் அவருடன் சேர்ந்து துதி செய்யுங்கள்'' என்று கூறினோம். மேலும், பறவைகளையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம். இரும்பையும் அவருக்கு மிருதுவாக்கிக் கொடுத்தோம் மேலும் 'நிறைவான போர்க் கவசங்களைச் செய்வீராக! அவற்றின் வளையங்களின் அளவை ஒழுங்குபடுத்துவீராக' என்றும், 'நீங்கள் நற்கருமங்களையே செய்து கொண்டிருங்கள்' நான் நீங்கள் செய்பவற்றைப் பார்க்கிறேன்' என்றும் கூறினோம்.'' (ஸபா.்:10-11)*

  மற்றுமோர் அல்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

  *''நீங்கள் போரிடும் போது உங்களைக் காப்பாற்றக் கூடிய கவசங்களைச் செய்யும் முறையை நாம் தாவூத் ஆகிய அவருக்குக் கற்றுக் கொடுத்தோம். நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறீர்களா?'' (அல்அன்பியா: 80)*

  இரும்பின் பயனையும் பெறுமதியையும், அதன் பயன்பாடு பற்றி உலகம் அறிய முன்னரே அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை வியக்கத்தக்கதாகும். 'அல்ஹதீத்'- இரும்பு எனும் தலைப்பைப் பெற்ற அத்தியாத்தில் பின்வருமா*று கூறப்படுகின்றது.:*

  *'இரும்பையும் நாம் இறக்கினோம், அதில் பெரும் பலம் இருக்கின்றது. மனிதர்களுக்குப் பெரும் பயன்களும் இருக்கின்றன.' (அல்ஹதீத் : 25)*

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கப்பல் கட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பிடும் அல்குர்ஆன் பாரிய ஒரு வகைக் கப்பலைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

சமுத்திரத்தில் செல்லும் மலைகளைப் போன்ற கப்பல்களும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்."(அஷ் ஷூரா :32)

அல்குர்ஆன் வேட்டையாடுதல், முத்துக் குளித்தல், மீன் பிடித்தல் போன்றன பற்றியெல்லாம் குறிப்பிடுகிறது.

**உழைப்பு நுகர்வு என்பவற்றுக்கான விதிமுறைகளும் ஒழுக்கங்களும்.**

- இறைவன் கூறுகின்றான். (மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களுக்குப் பூமியில் சகல வசதிகளையும் அளித்து அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்தினோம். (அல்அ.்.ராப்: 10) அவன்தான் பூமியில் உள்ள யாவற்றையும் உங்களுக்காகப் படைத்தான். (பகரா: 29) அவனே உங்களுக்காகப் பூமியை வசிக்கும் இடமாகவும் வானத்தை ஒரு விதானமானதாகவும் அமைத்து மேகத்தில் இருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு உங்களுக்கு உணவாகக்கூடிய கனிவகைகளையும் வெளிப்படுத்துகின்றான். (பகரா: 22) படர்ந்த கொடிகளும், படராத செடிகளும், உள்ள சோலைகளையும் பேரீச்ச மரங்களும் உண்ணக்கூடிய விதவிதமான தானியங்களையும் (பார்வைக்கு) ஒன்று போலும் (சுவையில்) வெவ்வேறாகவும் உள்ள ஒலிவம், மாதுளை முதலியவைகளையும் அவனே படைத்து இருக்கின்றான். ஆகவே அவை பயன் அளித்தால் அவைகளைப் புசியுங்கள். (அல் அன்ஆம்: 141)

- கால்நடைகளில் (சிலவற்றை உங்கள்) சுமை சுமப்பதற்காகவும் (வேறு சிலவற்றை) உங்கள் உணவுக்காகவும் (அவனே படைத்து இருக்கின்றான். ஆகவே) அல்லாஹ் உங்களுக்கு அளித்து இருக்கும் இவற்றில் (புசிக்க வேண்டியவற்றை) நீங்கள் புசியுங்கள். (அல்அன்ஆம்: 142) வித்துகளையும் கொட்டைகளையும் நிச்சயமாக அல்லாஹ்தான் வெடி(த்து முளைக்)கச் செய்கின்றான். (அல்அன்ஆம்: 95) அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே சுகமடைவதற்காக இரவை ஆக்கினான். கணக்கை அறிவதற்காக சூரியனையும் சந்திரனையும் ஆக்கினான். (அல் அன்ஆம்: 96)

- உலகில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருட்களும் இறைவனின் அருட் கொடையாகும். அவன் அளித்து இருக்கின்ற இயற்கை வளங்களோடு மனித உழைப்பும் (அதுவும் இறைவனது அருட்கொடை) சேர்ந்து பொருட்கள் உலகில் உற்பத்தியாகின்றன. இவ்வுலகை சகல வசதிகளுடன் படைத்திருக்கின்ற இறைவன் அவைகளை அனுபவிக்கவும் 'உண்ணுங்கள் பருகுங்கள்' என்று உரிமை வழங்குகின்றான். மாறாக இவ்வுலகில் பொருட்களையும் சேவைகளையும் அனுபவிக்கின்ற உரிமையை எவரும் தன்னிச்சையாக எடுத்துக்கொள்ள முடியாது. அரசும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இவ்வுலகில் வாழ அனுமதிக்கப்பட்டு இருக்கின்ற மனிதர்கள் பொருட்களை அனுபவிக்கின்ற உரிமையையும் தங்கள் பிறப்போடு பெற்று இருக்கின்றார்கள். எனவே மனிதர்கள் எவரும் பொருட்களை அனுபவிக்கின்ற உரிமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்கலாகாது. ஜாதியின் பெயராலோ மதத்தின் பெயராலோ இனத்தின் பெயராலோ இவ்வுரிமை எவருக்கும் மறுக்கப்படலாகாது. அவ்வாறு எவரேனும் செய்தால் அது அநீதியாகும்.

பொருட்களை அனுபவிக்கின்ற உரிமைகள் மனிதர்களுக்கு எவ்வித நிபந்தனைகளும் இன்றி அளிக்கப்படவில்லை. அந்த நிபந்தனைகளை மீறுகின்ற உரிமை மனிதர்களுக்குக் கிடையாது. மீறினால் இறைவனின் தண்டனைக்கு ஆளாக நேரிடும். இறைவன் கேட்கின்றான். ''நீங்கள் பூமியில் பயிரிடுபவைகளைக் கவனித்தீர்களா? அதனை நீங்கள் பயிராக்குகிறீர்களா? அல்லது நாம் தான் பயிராக்குகின்றோமா? நாம் விரும்பினால் அதனை விளையாத சாவிகளாக்கிவிடுவோம். அந்நேரத்தில் நீங்கள் ஆச்சரியப்பட்டு நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்து விட்டோம்: அன்றி எங்களுக்கு ஒன்றுமே கிடைக்காது போயிற்று (என்று கூறிக்கொண்டு இருப்பீர்கள்.) நீங்கள் குடிக்கின்ற நீரைக் கவனித்தீர்களா? மேகத்தில் இருந்து அதனை நீங்கள் பொழியச் செய்கின்றீர்களா? அல்லது நாம் பொழியச் செய்கின்றோமா? நாம் விரும்பினால் அதனைக் குடிக்க முடியாத உப்பு நீராக்கியிருப்போம். இதற்கு நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா? (அல்வாகிஆ: 63-70) நுகர்வோர் இயல்பும் பொருளாதாரத்தில் அது ஏற்படுத்துகின்ற தாக்கத்தையும் இஸ்லாமிய கண்ணோட்டத்தோடு ஆராய்தல் நலம் பயக்கும். எனவே உலகப் பொருட்கள் நுகர்வதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

- நுகர்வோர்கள் ஒரு பொருளாதார அமைப்பில் ஒரு அங்கமாகத் திகழ்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் உலக மக்கள் அனைவரும் நுகர்வோர்களாகவே இருக்கிறார்கள். நுகர்வோர்களின் வளம், மேம்பாடு, நன்மைகள் ஆகியவைகளை மட்டும் பாதுகாக்க வேண்டும் என்று எவரேனும் வாதிட்டால் அது தவறான கருத்தாகும். ஏனெனில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டால் அன்றி அவைகளை வாங்கி அனுபவிக்க முடியாது. எனவே உற்பத்தியாளர்களின் செயற்பாடுகள் முக்கியத்துவம் அடைகின்றன. மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நுகர்வோர்களை வந்தடைய வேண்டும். அப்பொழுது வியாபாரம் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய நவீனகால பொருளியல் கோட்பாடுகள் அனைத்தும் நுகர்வோர்கள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் என்று தனித்தனியாக அவர்களது நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனது விளைவு உற்பத்தியாளர் நலனை நுகர்வோர்கள் கருத்தில் கொள்வதில்லை. அதே போன்று நுகர்வோர் நலனை உற்பத்தியாளரும் கருத்தில் கொள்வதில்லை. அவரவர்கள் தங்கள் நலனிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். இதனால் பிறர் நலன் பாதிக்கப்படுகின்றது. மேற்கத்திய பொருளாதாரக் கோட்பாடுகள் இலாபம் மிகைப்படுத்துதல் (PROFIT MAXIMIZATION) பயன் மிகைப்படுத்துதல். (UTILITY MAXIMIZATION) என்று தனித்தனியாக ஆராய்வதால் ஒருவர் நலன் மற்றொருவர் நலனுக்கு எதிராக அமைகிறது.

  ஆனால் இஸ்லாமிய பொருளாதார கோட்பாடுகள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், நுகர்வோர்கள் ஆகிய அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு அழகிய வழிமுறையை அமைத்துத் தந்திருக்கிறது. இந்த மூன்று பிரிவினருக்கும் எதிரெதிராகக் குறிக்கோள்கள் இல்லாமல் எல்லோருக்கும் நலன் பயக்கக்கூடிய விதத்தில் முதலாவதாக இவ்வுலக வாழ்க்கையின் தத்துவத்தை இஸ்லாம் எளிதாகச் சுட்டிக்காட்டுகிறது: அதாவது, இவ்வுலக வாழ்க்கை ஒரு சோதனை. அது முடிவு பெறாத ஒன்றல்ல. இவ்வுலக இன்பங்கள் அனைத்தும் வரையறைக்கு உட்பட்டவைகள். உலக இன்பங்கள் அனைத்தையும் எல்லோராலும் எல்லா வயதிலும் ஒன்று போலவே அனுபவிக்க முடியாது. ஏனெனில் அவைகள்

வயதிற்கேற்ப, உடல் அமைப்பிற்கேற்ப, காலத்திற்கேற்ப, தட்ப வெப்ப சூழ்நிலைக்கு ஏற்ப மாறக்கூடியது. இன்ப துன்பங்கள் இணைந்தே இருக்கின்றன. மேலும் உயிரோடு இருப்பவர்கள் அனைவரும் ஒரு நாள் மரணமடையத்தான் வேண்டும் என்ற தத்துவங்களைக் கூறி அந்தந்த வரம்பிற்குட்பட்டு இவ்வுலகில் வாழ்ந்து இன்பங்களை அனுபவித்து வரலாம் என்ற இயற்கை உண்மையை இஸ்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுகிறது. உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், நுகர்வோர்கள் என்று வெவ்வேராக இருந்த போதும் எல்லோரும் நுகர்வோர்களாகவே இருக்கின்றனர். நுகர்வோர் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று வற்புறுத்துகின்ற இஸ்லாம் நுகர்வோர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளையும் எடுத்துக்காட்டுகின்றது. வரையறை இல்லாத நுகர்ச்சியை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

- அதனால் பொருட்கள் மற்றும் சேவைகள் வாங்கும் போது எந்த நோக்கத்துடன் வாங்க வேண்டும் எந்தெந்த பொருட்கள் வாங்கலாம் எவைகளை வாங்கக்கூடாது அவை வாங்கப்படும் முறைகள், அவற்றை அனுபவிக்கின்ற முறைகள் போன்றன பற்றி இஸ்லிம் குறிப்பிட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு (CONSUMER PROTECTION ) என்று உயர்வாகப் பேசப்படும் நடவடிக்கையை இஸ்லாம் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே செயல்படுத்தியுள்ளதில் எந்த வியப்புமில்லை. மக்களுக்குத் தீங்கு பயக்கக்கூடிய போதைப்பொருட்கள் போன்றவற்றை இப்பொழுது தான் உலகில் உற்பத்தி செய்வது விற்பது வாங்குவதைத் தடை செய்யும் சட்டம் இயற்றியுள்ளார்கள். இது ஏற்கனவே இஸ்லாமிய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதே போன்று பல்வேறு உதாரணங்களை எடுத்துக்கூறலாம்.

- நுகர்வைப் பொறுத்தவரை இஸ்லாமிய அணுகுமுறை பகுத்தறிவு பூர்வமானதாகவும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் மனித வளர்ச்சிக்கு உகந்ததாகவும் இருக்கிறது. பொருட்களை வாங்கும் போது இருக்க வேண்டிய நோக்கங்கள் எவை என்பதைப் பட்டியல் போட்டு கூறுவதை விட பொருட்கள் வாங்கும் போது இருக்கக்கூடாத பண்புகள் எவை என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டால் நடைமுறையில் பின்பற்றுவது எளிதாக இருக்கும். மேலும் இது மனிதர்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு உரிய எல்லையை விரிவுபடுத்தும். பகட்டு, ஆடம்பரம், கௌரவம், பொறாமை விளம்பரத்துக்கு விலை போதல் போன்றவற்றைத் தவிர்த்து இறைவனை அஞ்சி மறுமை வாழ்க்கையை நினைவு கூருதல் ஆகியவைகளை இங்கு குறிப்பிடலாம்.

## இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகள்.

**வர்த்தகம் :**

ஒரு உடமைக்கு அல்லது பொருளுக்குப் பிரதியீடு ஒன்றைப் பெற்றுக் கொண்டு அதன் உரிமையை மற்றொருவருக்குக் கையளிக்கும் நடவடிக்கை வர்த்தகம் எனப் படுகிறது. அதாவது பொருட்களையும் சேவைகளையும் பரிமாறிக்கொள்ளும் ஒரு செயன்முறையாகும்.விவசாய உற்பத்தியாயினும், கைத்தொழில் உற்பத்தியாயினும் அவை வர்த்தக நடவடிக்கைகளினூடாகவே மக்களை வந்தடைகின்றன. இவ்வ கையில் வியாபாரி உற்பத்தியாளனுக்கும் பாவனையாளருக்கும் இடையில்

தொடர்பாளனாக செயற்படுகிறான். எனவே இஸ்லாம் வர்த்தகத்தை அனுமதித்ததுடன் வியாபாரியின் இச்சேவையைப் பாராட்டியுமுள்ளது.

வர்த்தகம் என்பது சிக்கலான ஒரு பொருளீட்டல் செயற்பாடாகும். எனவே சிக்கலான இப்பொருளாதாரச் செயற்பாடடின் ஹலாலான செயன்முறையைத் தெளிவுபடுத்துவ தற்காக இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் குர்ஆன், சுன்னாவின் அடிப்படையில் வர்த்தகம் தொடர்பான சட்டதிட்டங்களை விளக்கியுள்ளனர். ஒரு முஸ்லிம் வியாபாரி அவற்றை அறிந்து அதன்படி செயற்படுவது அவர்மீதுள்ள கடமையாகும்.

**1. முஷாரகா.**

உலகில் காணப்படும் உற்பத்தி முயற்சிகள், வியாபார நடவடிக்கைகள் மிகச்சிறிய அளவிலும், பாரிய அளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. பாரிய அளவிலான உற்பத்தி,வியாபார நடவடிக்கைகளில் ஒரு தனிநபர் மாத்திரம் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுவதுண்டு.இதனால் தான் பலர் ஒன்று சேர்ந்து முதலிட்டு இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதைக் காண முடிகிறது. முஷாரகா முறையும் அவ்வாறானதொன்றே.

‘‘பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல் லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக் கின்றது.’’

**2. முழாரபா.**

நவீன கால இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அலி ஹபீப் என்பவர் முழாரபா வுக்குப் பின்வரும் கருத்தைக் கொடுத்துள்ளார் ‘ஒரு தரப்பினரின் மூலதனத்தையும் மற்றொரு தரப்பினரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின் போது கிடைக்கப்பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்குகொள்ளுதல் என்ற வகையில் இடம்பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்கா ண்மை உடன்படிக்கையே முழாரபாவாகும்.’’

இஸ்லாமிய அறிஞர்களும் இது கூடும் என்பதில் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர் *‘‘அல்லாஹ்வின் அருளைத் தேடிப் பூமியின் பல பாகங்களிலும் செல்ல வேண்டியிருக்கும்’’ (2:198), (62:60), (73:20)* என்பன போன்ற வசனங்கள் முழாரபாவைச் சட்டபூர்வமானது என உறுதிப்படுத்துவதாக முபஸ்ஸிரீன்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துக்கு முன் கதீஜா (ரழி) அவர்களிடமிருந்து முழாரபா அடிப்படையிலேயே வியாபாரப் பொருட்களை ஷாம் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள்.

ஜாஹிலியாக் காலத்திலே பிரபல்யமாக இருந்த இந்த வியாபார முறையினை இஸ்லாத்தின் வருகைக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள்.

**3. முராபஹா.**

முராபஹா என்ற சொல் ‘ரபிஹ’ என்ற வினையடியிலிருந்து தோன்றியதாகும். இலாபமடைந்தான் என்பது இதன் பொருளாகும். இஸ்லாமிய அறிஞர்கள் இதனைப் பல்வேறு அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

முராபஹா என்பது ஒரு வியாபாரி தனது விற்பனைப் பொருளின் கொள்விலையை அதனை வாங்க வருபவரிடம் தெளிவுபடுத்தி அதனோடு தான் அப்பொருளை விற்கின்ற போது எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிட்ட இலாபத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை, இலாபம் என்பவற்றைக் கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வர்.

சாதாரண பொருள் விற்பனையிலிருந்து இது வித்தியாசமானதாகும்.சாதாரண விற்பனையில் வியாபாரி விற்பனைப் பொருளில் கொள்வனவு விலையைக் குறிப்பிடாமல் கொள்வனவு விலையோடு இலாபத்தைக் கூட்டி மொத்தத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை, இலாபம் என்பவற்றைக் கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வர்.

**4. முஸாரஆ.**

விவசாயப் பங்குடமை என்று இது அழைக்கப்படும்.ஒருவர் தனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொரு உழைப்பாளரோடு இணைந்து உற்பத்திக்காகப் பயன்படுத்து வதே விவசாயப் பங்குடமை ஆகும். நிலங்களைத் தரிசாக வைத்திருக்காது பயன்ப டுத்த வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

தனது சொந்த நிலத்தை இன்னொருவருக்குப் பயிரிடக் கொடுத்து உடன்படிக்கை ஒன்றின் மூலம் விளைச்சலில் பாதியை அல்லது விகிதத்தைப் பெற்றுக் கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் முஸாரஆவின் ஓரமைப்பைத் தடை செய்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் விவசாயியிடம் குறிப்பிட்டளவு தானியம் தரப்பட வேண்டுமென்றோ அல்லது குறிப்பிட்ட நிலப்பரப்பின் விளைச்சல் தனக்குத் தரப்பட வேண்டுமென்றோ நிபந்தனையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. விவசாயம் நட்டங்களை எதிர்கொள்கின்ற போதும் அல்லது விளைச்சல் குறைவாக உள்ள போதும் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விவசாயி செலுத்த வேண்டியிருப்பதால் அது வட்டி என்றே கணிக்கப்படும்.

**5. ஸலம் (முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்)**

காலம் தாழ்த்திப் பொருளை ஒப்படைத்தல் முறையில் கொள்வனவு செய்தல் ஸலம் எனப்படும்.இவ்வியாபார அமைப்பில் பொருளின் விலைக்குரிய முழுப் பணத்தையும் வாங்குபவர் செலுத்திவிட விற்பனையாளர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பொருளை ஒப்படைப்பார்.

இவ்வியாபார அமைப்பு குர்ஆன், ஸுன்னா, இஜ்மா அடிப்படையில் அனுமதி பெற்ற தாகும். மனிதர்களுக்கு ஏற்படும் ஒரு பொதுவான தேவையை நிறைவு செய்வதற் காகவே இவ்வமைப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.பணமுள்ளவன் பொருளை வாங்க வேண்டிய தேவையிலிருப்பான்.பொருளின் சொந்தக்காரனோ அதனை உற்பத்தி செய்ய முன்னரோ அல்லது அறுவடை செய்ய முன்னரோ பணத்தேவையுள்ளவனாய் இருப்பான். உதாரணமாக விவசாயிக்கு அறுவடைக்கு முன் ஏற்படும் தேவைகளைக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த போது அங்கே இக்கொடுக்கல்-வாங்கல்முறை இருந்தது. இதனை ஷரீஅத்திற்கு இணங்கியதாக அமைப்பதற்கான நிபந்தனைகளை

நபி (ஸல்) அவர்கள் விதித்தார்கள். 'எதற்காவது முற்பணம் செலுத்துவோர் குறித்த அளவு, நிறை ஆகிய இரண்டுக்குமே அவ்வாறு செலுத்த வேண்டும். மேலும் காலத்தையும் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.'

### 6. பைஉல் முஅஜ்ஜல் அல்லது பைஉத் தக்ஸீத்

- பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் அல்லது தவணை அடிப்படையிலான கொடுக்கல்-வாங்கல் வியாபாரத்தை இது குறிக்கும்.இவ்வியாபார ஒப்பந்தத்தில் பொருள் முன்னராகவும் அதற்குரிய பெறுமதி பின்னரும் வழங்கப்படுவதால் பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் என வழங்கப்படுகிறது. இவ்வியாபாரத்தில் மூன்று நபர்கள் சம்பந்தப்படுகின்றனர். விற்பனையாளர், கொள்வனவாளர்,தரகர்.தரகர் விற்பனையாளனையும் கொள்வனவாளனையும் இணைப்பவராக இருப்பார்.கொள் வனவாளனுக்காகப் பொருளின் விலையைத் தரகர் வியாபாரிக்கு வழங்குவார்.பின் அவ்விலையை விட மேலதிகமான தொகையையும் சேர்த்துக் கொள்வனவாளனிடம் தவணை அடிப்படையில் தரகர் பெற்றுக் கொள்வார். இவ் வியாபார ஒப்பந்தத்தில் பொருளுக்கான விலை நடைமுறை விலையிலும் கூடியதாகவே காணப்படும்.

  இவ்வியாபாரம் நான்கு மத்ஹபுகளையும் சார்ந்த பெரும்பான்மை அறிஞர்களின் கருத்துப்படி ஷரீஆவின் பார்வையில் அனுமதிக்கப்பட்டதாகும். இதில் பெறப்படும் மேலதிகதொகை ஹலாலானது என்கின்றனர். இதனை நவீனகால அறிஞர்களும் சட்டத்துறை அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. இவ்வியாபாரம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது எனச் சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

  *''அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வைத்து வட்டியைத் தடுத்து விட்டான்.'' (பகரா: 275)*

  இவ்வசனம் அனைத்து வகையான வியாபாரத்தையுமே குறிப்பதாக உள்ளது. உடன் காசுக்குக் கொடுத்தாலும் தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் கொடுத்தாலும் அவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டவையாகும்.

  *''விசுவாசம் கொண்டவர்களே நீங்கள் குறிப்பிட்ட தவணை வரை ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள்.'' (பகரா: 282)*

- பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரத்தில் ஒப்பந்தம் இடம்பெறுமிடத்தில் பொருளின் பெறுமதி பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.பொருள் மாத்திரம் கைமாற்றப்படுவதால் இதில் ஒருவகைக் கடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகிறது. ஆகவே மேற்படி வசனமும் கடன் அடிப்படையிலான வியாபாரத்தை அனுமதித்துள்ளது.

  பின்வரும் ஹதீஸும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

  *''யாராவது பேரீத்தம்பழத்தைக் கடனாகக் கொடுத்தால் அதனை அவர் அறியப்பட்ட அளத்தல் அல்லது நிறுத்தல் அளவையில் வரையறுக்கப்பட்ட காலத்துக்குக் கடனாகக் கொடுக்கவும்.'' (முஸ்லிம்)*

  இங்கு நபி(ஸல்) அவர்கள் பேரீத்தம்பழத்தை வியாபாரப் பண்டங்களில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.எனவே வர்ணனைக்கு உட்படக்கூடிய அளக்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும் பேரீத்தம்பழத்துடன் ஒப்புநோக்க முடியும்.

- பின்வரும் நிபந்தனைகளைப் பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் பெற்றிருந்தால் அவ்வகை வியாபாரமும் அதன் இலாபமும் ஷரீஆவில் அங்கீகரிக்கப்படும். அவையாவன

1. ஏமாற்று, மோசடி, பொய் என்பவற்றிலிருந்து நீங்கப்பெற்றவையாக வியாபார முறைமை காணப்படல்.

2. வியாபாரப் பொருள் ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டதாயிருத்தல்.

3. பணம் செலுத்தப்படவேண்டிய கால எல்லை வரையறுக்கப்பட்டிருத்தல்.

4. நுகர்வாளருக்குக் கொடுப்பதற்கு முன்னர் விற்பனையாளர் பொருளைக் கையேற்றிருத்தல்.

இவற்றோடு கொடுக்கல் வாங்கலின் போது இருசாராரும் கைக்கொள்ள வேண்டுமென ஷரீஆ பொதுவாக விதித்துள்ள நிபந்தனைகளும் அடங்கும்.

- பொருளீட்டல் தொடர்பான முறைமைகளில் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் என்பன பிரதானமானவையாகும். அவை தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடுகளை நோக்குவோம்.

**வியாபாரம் :**

- இஸ்லாமிய சட்டவழக்கில் வியாபாரம் என்பது வாங்குவோர் விற்போர் ஆகிய இரு தரப்பினரதும் பரஸ்பர மனத்திருப்தியினடிப்படையில் நடைபெறும் பண்டப்பரிமாற்றத்தைக் குறிக்கிறது. அல்லது அனுமதிக்கப்பட்ட விதத்தில் ஒருவர் பிரதியீட்டைப் பெற்றுத் தனது உடைமையை மற்றொருவருக்குக் கையளிப்பதைக் குறிக்கிறது. வியாபாரம் இஸ்லாத்தில் பூரண அங்கீகாரத்தைப் பெற்றதாகும்.

*'அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வைத்து வட்டியைத் தடுத்துவிட்டான்.' (பகரா: 275)*

*'நம்பிக்கையும் நாணயமும் உள்ள வியாபாரிகள் மறுமையில் நபிமார்கள் மற்றும் ஷுஹதாக்களுடன் இருப்பர்.'(திர்மிதி)*

*'உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமுமாகும்'.(அஹ்மத்)*

வியாபாரத்திற்கு முக்கியத்துவமளிக்கும் இஸ்லாம் அதனை 'பழ்முல்லாஹ்' இறைவனின் அருள் என வர்ணிக்கின்றது.

பூமியில் வியாபாரத்துக்காகப் பயணம் செய்வோரை முஜாஹிதீன்களுடன் இணைத்து அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

*'வேறு சிலர் அல்லாஹ்வின் அருளைத் தேடிப் பூமியின் (பல பாகங்களுக்கும்) செல்ல வேண்டியிருக்கும் என்பதையும் மேலும் சிலர் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்ய வேண்டியிருக்கும் என்பதையும் (அவன் நன்கு அறிவான்.)73:20*

அல்லாஹ் அல்குர்ஆனில் வியாபாரத்திற்குத் தேவையான வழிவகைகளையும் வசதிகளையும் மனிதனுக்குச் செய்து தந்திருப்பதாகக் கூறுகிறான்.

*'இறைவனுடைய அருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காகக் கப்பல் நீரைக் கிழித்துக்கொண்டு செல்வதைக் காண்கின்றீர்கள். இதற்கு நீங்கள் நன்றி செலுத்துங்கள்.' (அல் பாதிர்: 12)*

**வியாபாரத்திற்கான அடிப்படைகள்.**

வாங்குவோர் விற்போர் தொடர்பாகப் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாதல் வேண்டும்.

**01. வாங்குவோன்-விற்போன்**

1. பருவமடைந்தவராயிருத்தல்.
2. புத்தியுடையவராயிருத்தல்.
3. வியாபாரம் பற்றிய விபரம் தெரிந்தவராயிருத்தல்.

**02. வியாபாரப் பொருள்**

வியாபாரப் பொருள் தொடர்பாக பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

1. விற்பவருக்குச் சொந்தமானதாக இருத்தல்.
2. வாங்குபவருக்கு ஒப்படைக்கும் தகுதியுடையதாயிருத்தல்.
3. கையிருப்பில் காணப்படல்.
4. இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் சுத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல்.

**03. ஈஜாப்-கபூல்**

ஈஜாப் என்பது விற்றவர் தான் குறித்த பொருளை விற்று விட்டதாகவும்,கபூல் என்பது அதனை வாங்கியவர் தான் அதை ஏற்றுக் கொண்டதாகவும் வெளிப்படுத்தும் திருப்தியைக் குறிக்கும். இது வாய்மொழியாகவோ, எழுத்து வடிவிலோ அல்லது நடைமுறையிலுள்ள வேறு வழிமுறைகள் மூலமோ இடம்பெறும்.

**வியாபாரக் கொடுக்கல் வாங்கலின் போது தவிர்ந்துகொள்ள வேண்டியவை**

இஸ்லாம் கூறும் வியாபாரமுறை நேர்மையானது. ஆனால் இன்றைய வியாபாரத்தில் எண்ணற்ற பல விடயங்கள் வியாபார நுணுக்கங்களாகத் தலைதூக்கியுள்ளன.பலர் எந்த வியாபாரம் ஹலாலானது எந்த வியாபாரம் ஹராமானது என்பதை அறியாமலேயே வியாபாரம் செய்து வருகின்றனர்.எனவே வியாபாரம் செய்யும் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு இஸ்லாம் சில வரையறைகளை விதித்திருப்பதோடு தவிர்க்க வேண்டியவற்றையும் தெளிவுபடுத்தியுள் ளது. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

1. வட்டி
2. தேவையற்ற சத்தியம்.
3. அளவை நிறுவை மோசடி
4. பதுக்கல்
5. நியாயமற்ற விலை விதிப்பு
6. கலப்படம்
7. பொய் பேசல்
8. ஏமாற்றுதல்
9. பொதுச் சட்டங்களை மீறுதல்.

வியாபாரத்தின் போது வாங்குவோனும் விற்போனும் மேற்படி இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணிச் செயற்படும் போது அவர்கள் பல்வேறு நலன்களை அடைந்து கொள்வர்

1. அவர்களது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை வணக்கமாகிவிடும்.
2. வாங்குவோன் விற்போனுக்கிடையில் உறவு பேணப்படும்.
3. வர்த்தகம் ஸ்திரத்தன்மையடையும்.
4. வீண் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.
5. ஹராமான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மீட்சி கிடைக்கும்.

**கைத்தொழில்:**

- இஸ்லாம் அனுமதிக்கும் தொழில் முயற்சிகளில் கைத்தொழிலும் இடம்பெறுகின்றது. நபிமார்கள் பலர் இவ்வாறான பிரதான கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். தாவூத் (அலை) இரும்புருக்கு உற்பத்தியிலும், நூஹ் (அலை) கப்பல் கட்டும் தொழிலும், ஸகரிய்யா (அலை) தச்சுத் தொழிலும் ஈடுபாடு காட்டினர். நபி (ஸல்) காலப்பிரிவில் சில ஸஹாபாக்கள் ஆயுதங்கள். நகைகள் செய்வதற்கான பட்டறைகளை வைத்திருந்தனர். நபித்தோழியர்களும் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். நபி (ஸல்) அவர்களது மனைவியர்களுள் ஒருவரான ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) வலை பின்னி வாழ்க்கை நடாத்தினார் என்று அறிகிறோம்.

  மனிதத் தேவைகளுள் அதிகமானவை இரும்புடன் தொடர்புபடுகின்றன. வாகனங்கள், வீடுகள் நானாவிதப் பொருட்கள், கட்டடங்கள் குறிப்பிடத்தக்கவை. இதனால் தான் இரும்பின் பயன்பாடுகள் பற்றி அல்குர்ஆன் விளக்குகின்றது. இரும்பு என்ற கருத்தைத் தரும் 'அல் ஹதீத்' என்ற பெயரில் ஓர் அத்தியாயமும் அல்குர்ஆனில் இடம்பெறுகின்றது.

*''இரும்பையும் படைத்தோம், அதில் கடும் அபாயமுமிருக்கிறது, எனினும் (அதில்) மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன' (அல்ஹதீத்: 25)*

அல்குர்ஆனின் இவ்வசனத்தில் வரும் கடும் சக்தியென்பது போராயுதங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருளைக் குறிக்கின்றது. மேலும் 'பல்வகைப் பயன்' என்பது அன்றாடப் பாவனைக்குரிய பொருள், கைத்தொழிலுக்கான இயந்திரங் கள், ஏனைய உபகரணங்கள் என்பவற்றுக்கு இரும்பைப் பயன்படுத்துவதனைக் குறிக்கின்றது.

- தாவூத் (அலை) ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார். இரும்பைப் பயன்படுத்தக் கூடிய நுட்பங்களை அல்லாஹ் அவருக்குக் கற்றுக் கொடுத்திருந்தான். மேலும் அதன் மூலம் எந்த வகையான ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதனையும் அல்லாஹ் கற்றுக் கொடுத்தமை பற்றி அல்குர்ஆன் விளக்குகிறது.

*''மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம். வலுப்பமுள்ள போர்க் கவசங்கள் செய்வீராக! அவற்றின் கண்ணிகளை பலமுள்ளவையாக ஒழுங்கு படுத்திக் கொள்வீராக! நற்கருமங்கள் செய்வீராக! நீர் செய்பவற்றை உற்று நோக்குபவனாக இருக்கின்றேன் (என்றும் சொன்னோம்.)' (ஸப.்: 10,11)*

*''இன்னும் நீங்கள் பேரிடும் போது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கவசங்கள் செய்வதை, அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தோம்'' (அல்அன்பியா: 80)*

ஆரம்ப காலப்பிரிவிலிருந்தே கடல் மார்க்கமான பயணங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. நூஹ் (அலை) அவர்களுக்கு கப்பல் கட்டுவதற்கான நுணுக்கங்களை அல்லாஹ் கற்றுக் கொடுத்திருந்தான். பெருந்தொகையான வியாபாரப் பொருட்கள் கப்பல்கள் மூலமே நாட்டுக்கு நாடு எடுத்துச் செல்லப்படுவதனால் நவீன வசதிகளுடன் கூடிய கப்பல்களையும் அமைக்கும் தொழில் முயற்சி இன்று முன்னேற்றம் கண்டிருக்கின்றது.

கைத்தொழில் புரட்சிகள் உலக பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றத்தை உருவாக்கிவிட்டன. இதில் இரும்பின் பிரயோகம், நபிமார்கள் பின்பற்றிய நுட்பங்கள் என்பன பெரிதும் பயன்பட்டிருக்கின்றன.

கைத்தொழிலின் முக்கியத்துவத்தை விளக்கிய இஸ்லாம் அதனைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதனை ஸுன்னாவாகவும், சிறந்த இபாதாவாகவும் அமைத்திருக் கின்றது. இவை கற்றுக் கொடுக்கப்படுமானால் பாரிய கைத்தொழில்களுடன் சாதாரண அளவிலான கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில் என்பன முன்னேற்றம் கண்டு சமூகத்தில் பொருளாதார அபிவிருத்தியைத் தோற்றுவிக்க முடியும்.

கைத்தொழிலில் ஈடுபடுவோர் இஸ்லாத்தின் ஹலால், ஹராம் வரையறைகளைப் பேணி நடந்து கொள்வது இன்றியமையாதது. இந்த வகையில் போதைப் பொருள் உற்பத்தி, இசைக்கருவி, இசைத்தட்டுக்கள் போன்றவற்றை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் போன்றவை தடுக்கப்பட்டுள்ளன.

**சேவைத்துறை:**

- மக்களின் தொழில்சார் முயற்சிகளில் சேவைத் தொழிலும் முக்கியம் பெறுகின்றது. அரசாங்க உத்தியோகம், தனியார்துறை என்பவற்றில் பலர் சேவையாற்றுகின்றனர். ஆட்சியாளர் தொடக்கம் ஆசிரியர்கள், மருத்துவர்கள், தாதிமார்கள், இராணுவ சேவையில் ஈடுபடுவோர், போக்குவரத்துச் சேவை, சுகாதாரப் பிரிவு என்ற அடிப்படையில் சேவைத் தொழிலில் ஈடுபடும் பலர் தமது வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்கின்றனர்.

பொறுப்புகளைப் பெறுவோர் தாம் தமது வருமானத்திற்கான ஒரு தொழிலை மட்டும் செய்கிறோம் என்று மட்டும் சிந்திக்க முடியாது. அவர்கள் சமூகத் தொண்டொன்றையே புரிகின்றனர் என்ற வகையில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக் கடமைப்படுகின்றனர். பொறுப்புக்கள் அமானிதங்கள் என்ற வகையில் மறுமையில் ஒவ்வொருவரும் தாம் சுமந்துள்ள பொறுப்புகளுக்கு அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றனர்.

*''நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள்.உங்களில் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள்.''(புஹாரி)*

**மனிதர்கள் புரியும் சில சேவைகள் பற்றிக் கீழ்வருமாறு நாம் விளக்கமுடியும்.**

1. ஆட்சியாளர்கள்.

ஆட்சியாளர் நாட்டு மக்களின் தலைவர் என்ற வகையில் பொறுப்பு வாய்ந்த பதவியை வகிக்கின்றார். இவருடன் அரச பணிகளில் ஈடுபட்டிருக்கும் சிற்றூழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது பணிக்கு ஓர் ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.குடிமக்கள் தமது உரிமைகளை ஒரு தலைவனிடம் வழங்குவதால் இக்குடிமக்களின் உரிமைகளில் அத்தலைவன் தவறிழைக்க முடியாது.

இவ்வாறான பொறுப்பு வாய்ந்த பதவிகளை எல்லா நிலைகளோடும் சுமக்க முடியுமானவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்வுயர் பதவிகளில் சிறந்த அறிவும், ஆளுமையுமிக்கோரும், அழகிய குணப்பண்புகளைக் கொண்டோரும், குடிமக்களிடம் பாசமிக்கோரும் மட்டுமே அமர்த்தப்படல் வேண்டும். நபியவர்களிடம் அபூதர் (ரழி) அவர்கள் தன்னை ஒரு பிரதேச ஆளுனராக நியமிக்கக் கோரிய போது நபியவர்கள் அப்பொறுப்பைச் சுமப்பதிலுள்ள சிரமங்களை எடுத்துக் காட்டினார்கள்.

*'அபூதர்ரே! நீங்கள் பலவீனமானவர். இப்பொறுப்பு ஓர் அடைக்கலப் பொருளாகும். இறுதித்தீர்ப்பு நாளில் நீர் கண்ணியத்தை இழக்கும் நிலைக்கும்,அவமானப்படுவதற்கும் இது காரணமாக அமையலாம். எனினும் இப்பொறுப்பை அதன் எல்லாச் சுமைகளோடும் ஏற்றுக்கொண்டு, நிறைவு செய்வோர் காப்பாற்றப்படுவர்.'(முஸ்லிம்)*

அபூபக்ர் (ரழி) தனக்குப் பின் உமர் (ரழி) அவர்களைக் கலீபாவாக நியமித்த போது அவரிடம் பின்வருமாறு கூறினார்கள்.

'கத்தாபின் புதல்வரே! முஸ்லிம்கள் மீது நீர் கொண்டிருக்கும் பரிவையும்,இரக்கத்தையும் கருத்திற் கொண்டே உம்மை எனக்குப் பின் கலீபாவாக நியமித்துள்ளேன்'

மேலும் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

*'ஒரு கூட்டத்தாரில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான ஒருவர் இருக்க அவரைப் புறக்கணித்து மற்றொருவரை யார் அக்கூட்டத்தினருக்கு அதிகாரியாக நியமிக்கி றாரோ அவர் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும், விசுவாசிகளுக்கும் மோசம் செய்துவிட்டார்'(ஹாகிம்)*

குடிமக்களை அன்போடு நேசிக்கும், பொது நலனில் எத்தகைய குறையையும் வைக்காத, நீதமுள்ள ஆட்சியாளரை அல்லாஹ் விரும்புகிறான். மறுமையில் அல்லா ஹ்வின் அர்ஷின் நிழல் இவருக்குக் கிடைக்கும். இதனால் தலைவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியில் நேர்மையாக நடந்து கொண்டு ஊதியம் பெறுவதே அழகானது.

2. அரச பணிகள்.

- சேவைத் தொழிலில் அதிகமானோர் அரசாங்க ஊழியர்களாகப் பணி புரிகின்ற னர். கல்விசார் பணிகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள் சேவையாற்றுகின்றனர். வளரும் இளம் சந்ததியினர் இவர்களது கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இவர்கள் தமது பணியைச் சிறப்பாக மேற்கொண்டே ஊதியம் பெறுவது ஹலாலாக அமைகின்றது. இவர்களது தகுதியும் பொறுப்புணர்வுமே இப்பணி சிறப்புறக் காரணமாகின்றது. கட்டம் கட்டமாக இப்பணியில் ஈடுபட்டிருப்போர் தமது பணியை அழகாக நிறைவேற்றுவதற்கான திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பொறுப்புகளைச் சுமந்தோர் அவர்களது பணியில் அலட்சிய சுபாவத்துடன் நடக்கக் கூடாதென அல்குர்ஆன் பணிக்கின்றது.

*'நீ உலகில் ஆற்ற வேண்டிய பணியை மறந்து விடாதே.அல்லாஹ் உனக்கு நல்ல தைச் செய்திருப்பது போல் நீயும் நல்லதைச் செய்.'(அல் கஸஸ்:77)*

பணிகளில் ஈடுபடுவோர் தம்மை அதற்காகத் தயார்படுத்திக் கொள்வது தமது பணியை நேர்த்தியாகப் புரிய உதவியாக அமைகின்றது. நபியவர்கள் ஒரு முஸ்லிமின் பணி எவ்வாறு அமைய வேண்டுமென்பதை விளக்கியுள்ளார்கள்.

*'ஒரு மு.்.மின் தனது காரியங்களை நேர்த்தியாகவும், கச்சிதமாகவும் செய்வதைக் காண அல்லாஹ் விரும்புகிறான்.' (புஹாரி)*

இவை இரண்டு முக்கிய விடயங்களை எடுத்துக் காட்டுகின்றன.

1. சேவைக்காலத்தை உரிய முறையில் பிரயோகித்தல்.
2. அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்.

பாதுகாப்புப் பணிபுரிவார் எத்தகைய உலக நோக்கமுமின்றி தாம் அல்லாஹ்வுக்காகவே செயற்படுகிறோம் என்ற உணர்வுடன் சேவையாற்ற வேண்டும். பட்டம், பதவி, பதக்கங்கள் என்பன அவரது இலட்சியத்தைத் திசைதிருப்பிவிடக் கூடாது.அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரழி) அவர்களுக்கு நபியவர்கள் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்துக்காகவே போரிடுமாறு கூறினார்கள்.

போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ளோர் ஒரு மகத்தான சேவையைச் செய்கின்றனர். ஏனைய சகல துறைகளதும் சீரான இயக்கம் போக்குவரத்துத் துறையில் தங்கியிருக்கின்றது. இது சீராக அமையாவிட்டால் அரச ஊழியர்கள் தமது தொழில்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைவதில் சிரமங்களை எதிர்கொள்வர். இப்பணியில் ஈடுபடுவோர் பயணிகளின் பாதுகாப்புப் பற்றியும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

தொடர்பூடக சேவை மக்களுக்குச் செய்திகளையும், தகவல்களையும் வழங்குகின்றது. மக்கள் தொடர்புக்கும் இது பெரிதும் உதவுகின்றது. இப்பணியும் சீராக மேற்கொள்ளப்படல் வேண்டும். பொய்யான செய்திகள், தகவல்கள் இடம்பெறாவண்ணம் இத்துறையைப் பாதுகாப்பதும், தொடர்பூடகங்கள் சீராகச் செயற்பட நடவடிக்கை எடுப்பதும் மனித நலன்களுக்கான சேவையாக அமைகின்றது.இவ்வாறு இப்பணியைச் செய்தால் மட்டுமே இதன் மூலம் ஊதியம் பெறுவது ஹலாலாக அமைகின்றது.

- சுகாதார சேவை மனித உயிர்களுடன் தொடர்பானது என்ற வகையில் அத்தியவசிய சேவையாகவும் அது அமைந்துள்ளது. மருத்துவர்கள், தாதிமார், பரிசோதனைக் கூடங்களில் பணி புரிவோர், அவசர சேவைப் பிரிவில் கடமையாற்றுவோர் அனைவரும் இப்பிரிவில் இடம்பெறுவர். இப்பணியில் தொழில் தகைமையற்றோர் நியமிக்கப்படுவது பாரதூரமான பின்விளைவுகள் உருவாகக் காரணமாக அமையும். இவர்களது சேவைக் காலம் வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதால் இந்நேரங்களில் வேறு அலுவல்களில் ஈடுபடுவது அல்லாஹ்விடத்தில் பாவமாக அமையும்.

**ஏனைய கொடுக்கல் வாங்கல் முறைகள்**

**1. அல்-இஜாரா** :

மனிதர்கள் எல்லோரும் தமக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எப்போதும் சொந்தமாக வைத்திருப்பதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இரவல் வாங்குதல் மூலம் அல்லது வாடகைக்குப் பெறுதல் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டியேற்படுகிறது. அல்-இஜாரா என்பது வாடகைக்குப் பெறுதல் என்பதையே குறிக்கிறது.

'ஒரு நபரிடம் அல்லது ஒரு பொருளிலிருந்து பயன் பெறுவதற்காக குறித்த ஒரு தொகையைப் பதிலீடாகச் செலுத்துதலைக் குறிப்பது இஜாராவாகும்'

உதாரணமாக ஒரு வாகனத்தை, கட்டடத்தை, பொருளை, வாடகைக்கு எடுத்தலையும் ஒரு நபரைக் கூலிக்கு அமர்த்துவதையும் குறிப்பிடலாம்.

**2. அர்-ரஹ்ன் (அடகு வைத்தல்)**

கடன் பெற்றவர் தான் பெற்ற கடனுக்கு ஈடாக கடன் கொடுத்தவரிடத்தில் பணப்பெறுமதியுள்ள ஒரு பொருளை வைப்புச் செய்வதனை அடகு அல்லது

ஈடுவைத்தல் என வழங்குகிறோம். ஒருவர் இன்னொருவரிடமிருந்து ஒருதொகைப் பணத்தைக் கடனாகப் பெறுகிறார்.தான் பெற்ற கடனுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை ஒரு நிலத்தையோ ஒரு மிருகத்தையோ விட்டு வைக்கிறார். இச்செயற்பாடே அடகுவைத்தல் என வழங்கப்படுகிறது.அடகுவைத்தல் இஸ்லாமிய சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.இதற்குக் கீழ்வரும் அல்-குர்ஆன் வசனம் ஆதாரமாக உள்ளது.

*'நீங்கள் பிரயாணத்திலிருந்து (கொடுக்கல்-வாங்கல் செய்ய) எழுத்தாளனைப் பெறாவிட்டால் (ஒரு பொருளை) ஈடாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.' (பகரா: 283)*

நபி (ஸல்) அவர்களும் இவ்வாறு அடகுவைப்பதை அங்கீகரித்துள்ளதுடன் அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் யூதனிடம் ஈடுவைத்து அவனிடமிருந்து உணவுப்பொருளைப் பெற்றுள்ளார்கள். (புஹாரி)

இவ்வமைப்பு சட்டபூர்வமானது என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் ஆரம்பகாலம் முதலே ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

**3. அல்-கர்ழ்: (கடன்)**

சமூகத்தில் ஒரு மனிதருக்கு மற்றவரின் உதவிகளும் தேவைகளும் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அவசரத் தேவைகளின் போது கடன் பெறுவதும் அவற்றுள் ஒன்றாகும். இஸ்லாம் கடன் வாங்குவதையும் கொடுப்பதையும் அனுமதித்திருக்கிறது. இயன்றவரை கடன் வாங்குவதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் அறிவுரை பகர்கிறது. 'கடனை விட்டுவிடு, சுதந்திரமாக வாழலாம்' என்பது நபி(ஸல்) அவர்களின் பொன்மொழியாகும். கடன் வாங்குபவருக்கு அறிவுரை கூறிய இஸ்லாம் கடன் கொடுப்பவரைப் பார்த்து *'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு இரு தடவை கடன் கொடுப்பது ஒரு தடவை தர்மம் செய்வதைப் போலாகும்' (ஹாகிம்)* என ஊக்குவிக்கின்றது.

கடன் வழங்கும் போதும் ஈஜாப்-கபூலும், சாட்சியும் அவசியமாகும். முடியுமாயின் எழுத்தில் அமைவதும் சிறந்ததாகும். சிலவேளை பிணைநிற்றலும் தேவைப்படுகின்றது. அதற்கு ஏனைய சகோதரர்கள் உதவ வேண்டும். பணத்தை மட்டுமன்றி அளவை நிறுவைக்கு உட்படக் கூடிய எந்தப் பொருளையும் கடனாகப் பெறலாம், கொடுக்கலாம். கடன் வழங்கல் பிறருக்கு உதவி செய்யும் ஒரு வழியே அன்றி வருமானம் தேடும் வழிமுறையல்ல. ஆதலால் கொடுத்த தொகைக்கு அதிகமாகக் கடனைத் திரும்பப் பெற முடியாது, பெறக்கூடாது. கடனைப் பெற்றவர் ஏற்கனவே நிபந்தனையிடப்படாத நிலையில் சுயவிருப்பத்தின் பேரில் கடன் கொடுத்தவருக்குக் கூடுதலாக வழங்கினால் மட்டுமே அதனை ஏற்றுக் கொள்ளலாம். மேலும் கடன் பெற்றவர் நெருக்கடி நிலையிலிருப்பின் அவருக்கு அவகாசமளிப்பது அல்லது அக்கடனை அவருக்குத் தர்மமாக மாற்றி விடுவது போன்றன உயர்ந்த பண்புகளாகும்

ஒருவர் தாம் பெற்ற கடனை முடியுமானவரை அவசரமாகத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். கடனுள்ள நிலையில் மரணிப்பதை நபி(ஸல்)அவர்கள் விரும்பவில்லை. கடன்பட்ட ஒருவர் அதனை நிறைவேற்றாத நிலையில் மரணித்த போது அவருக்காக ஜனாஸாத் தொழுகை நடாத்துவதை விட்டும் பின்வாங்கியுள்ளார்கள். அத்தோடு கடனிலிருந்து பாதுகாப்புத் தேடி அல்லாஹ்விடம் பிரார்த்தனையும் செய்துள்ளார்கள்.

## 4. ஸம்ஸரா: (தரகு)

இஸ்லாத்தில் தரகராக இருப்பதற்குத் தடையேதுமில்லை.இது விற்பவருக்கும் வாங்குபவருக்குமிடையில் ஒருவகைத் தொடர்பை ஏற்படுத்துவதுடன் இலாபகரமான கொடுக்கல் வாங்கலுக்கும் உதவுகிறது. இமாம்களான இப்னு ஸீரீன், அதாஉ, இப்றாஹீம், அல்ஹஸன் போன்றோர் தரகராகச் செயற்படுவதிலும் அதற்காக ஒருதொகைப் பணத்தைப் பெறுவதிலும் எத்தகைய தவறையும் காணவில்லை என இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் 'இந்த ஆடையை விற்பனை செய்ய வேண்டிய இன்ன விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தால் மேலதிக தொகை உமக்குரியதாகும்' என்று ஒருவர் இன்னொருவருக்குக் கூறுவதில் தவறில்லை என்கிறார். ஆகவே, ஒரு தரகர் சேவைக்காக ஒரு கட்டணத்தைப் பெற முடியும் என்பதே பலமான கருத்தாகக் கொள்ளப்படுகிறது.

## 5. வகாலா

வகாலா என்பது இஸ்லாம் அனுமதித்த உடன்படிக்கை முறைகளுள் ஒன்றாகும். ஒருவர் அரசதுறை அல்லது நீதித்துறை போன்ற யாதேனுமொரு துறையில் இஸ்லாம் அனுமதித்துள்ள விடயமொன்றை மேற்கொள்ளும் போது அவரால் அதற்குச் சமுகமளிக்க முடியாத நோய் விபத்துப் போன்ற நிலைமையொன்று ஏற்படும் பட்சத்தில் அவ்வேலைக்காக தனக்குப் பதிலாகப் பொருத்தமான ஒருவரைப் பொறுப்புச்சாட்டுதலையே இப்பதம் குறித்து நிற்கிறது.

*உதாரணமாக:*

தனக்குரிய கூலியைப் பெற்றுக்கொள்ளல்.

நீதிமன்ற வழக்கொன்றுக்குச் சமுகமளித்தல்.

அடகு வைக்கப்பட்ட பொருளொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

இதனை இஸ்லாம் அனுமதித்திருப்பதைப் பின்வரும் ஆதாரங்கள் தெளிவுபடுத்து கின்றன.

*'தானத்தை வசூலிப்பவர்களுக்கும்' (அத்தௌபா: 60)*

(அதற்காகப் பொறுப்புச் சாட்டப்பட்டவர்களுக்கும் ஸக்காத்தை ஒப்படையுங்கள்.)

ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் ஜாபிர்(ரலி) அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: *'கைபரில் என்னால் பொறுப்புச்சாட்டப்பட்டவரை நீங்கள் சந்தித்தால் அவரிடமிருந்து பதினைந்து வஸ்குக்குகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவர் உம் மிடம் அத்தாட்சியை வேண்டினால் அவரது ஆவணத்தில் உங்கள் விரலடையா ளத்தைப் பதித்துக் கொடுங்கள்.' (அபூதாவூத்)*

பொறுப்புச்சாட்டப்பட்டவரை நியமித்தல் குறித்த பிரதேச வழமைக்கேற்ப வாய் மொழி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ அமையலாம்.

அத்துடன் பொறுப்புச்சாட்டப்பட்டவர் தன்னை நியமித்தவரின் அனுமதியுடனேயே எக்காரியத்தையும் செய்தல் வேண்டும்.

**மேலதிக வாசிப்புக்குரியவைகள் :**


1. முகம்மத் அக்ரம் கான், இஸ்லாமிய பொருளியல்,(1994) இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்.
2. கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, ஹலாலும் ஹராமும், (1986), ரேஷ்மா பதிப்பகம்
3. அப்துர் ரஹ்மான், வறுமை ஒழிப்பு, (1999), புர்கான் பப்ளிகேஷன்.
4. மௌதூதி, பொருளாதாரப் பிரச்சினை, (1983), ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு, கொழும்பு
5. அப்துல் அழீம், முதலீட்டு அடிப்படையிலான வியாபாரம், (2007), நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், பேருவல.
6. ஆதம் முஹியத்தீன், ஷாபி பிக்ஹின் சட்டக் களஞ்சியம் (2002), தாருல் புஷ்ரா, செய்துங்க, நல்லூர்.
7. அகார் முகம்மத். ஏ.ஸீ, சன்மார்க்க சட்ட விளக்கங்கள் (1996), அல்கலம் பதிப்பகம், பேருவல

**தேர்ச்சி 07: சமூக வாழ்வில் முஆமலாத் பற்றி அறிந்து அவற்றை வாழ்வில் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2: செல்வப் பங்கீட்டுக்கான இஸ்லாத்தின் கோட்பாட்டினையும் அதற்கான வழிமுறைகளையும் விளக்குவார்.**

**பாடவேளைகள் : 35**

**கற்றல்பேறுகள்**

- செல்வப் பங்கீடு பற்றிய இஸ்லாத்தின் நோக்கினை விளக்கி எழுதுவார்.
- செல்வப் பங்கீட்டுக்கான இஸ்லாத்தின் வழிமுறைகளை இனங்கண்டு விபரிப்பார்.
- செல்வப் பங்கீட்டுக்கான இஸ்லாமிய வழிமுறைகளை அறிந்து அவற்றிற்குப் பங்களிப்புச் செய்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**செல்வப் பங்கீடு பற்றிய இஸ்லாத்தின் நோக்கு**

- இஸ்லாமியப் பொருளியலின் பிரதான எண்ணக்கரு புவியிலுள்ள செல்வங்கள், வளங்கள் பற்றியதாகும். அல்லாஹ் இவற்றை எல்லா மனித இனத்துக்காகவும் படைத்து மனிதனையே அவற்றுக்குப் பொறுப்புதாரியாகவும் ஆக்கியுள்ளான்.

  *''அவனே உலகத்திலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்''(பகரா: 29)*

  *'வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும், இவ்விரண்டிற்கும் இடையே உள்ளவையும், மண்ணுக்கு அடியில் உள்ளவையும் அவனுக்கே உரியன.' (தாஹா: 06)*

- மனிதன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி அடைவதற்காகவே அச்செல்வங்களைப் பயன்படுத்த வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான். அவ்வெற்றிக்கு இட்டுச் செல்லும் இச்செல்வங்களை நோக்கிய மனித நடத்தை, அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் அதிலேற்பட்டுள்ள விருத்தி என்பன பற்றியெல்லாம் இந்த இஸ்லாமிய பொருளியல் கற்பிக்கின்றது. ஏனெனில், மனிதன் இச்செல்வங்களின் உண்மையான உரிமையாளனல்ல; அவற்றைப் பயன்படுத்துவதில் சுதந்திரமானவனுமல்ல. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப அவற்றை வழிப்படுத்தவே வேண்டப்படுகின்றான். மேலும், அல்லாஹ் இவ்வுலகில் அனைத்தையும் ஒரு நோக்கத்துடனேயே படைத்துள்ளான். புவியிலுள்ள செல்வங்கள் யாவும் அல்லாஹ்வின் படைப்புக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதற்குரிய சாதனங்களாகும். ஆகவே, மனிதன் இச்செல்வங்களை அவனைப் போல் ஏனையோரும் பயன்படுத்துவதைத் தடுக்கக்கூடாது. ஒருவர் செல்வங்களைப் பயன்படுத்தும்போது, அதனை ஏனையோருக்காகவும் விட்டுவைக்க வேண்டும் என்பது மிகப் பிரதானமானது.

அல்லாஹ் அவனது படைப்புகளுக்குப் போதுமான செல்வங்களைப் படைத்திருப்பதாக அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஆகவே, தற்போது காணப்படும் செல்வங்களின் பற்றாக்குறையானது, ஒன்றில் தவறான பாவனை அல்லது சமமற்ற பங்கீடு என்பவற்றாலேயே ஏற்பட்டுள்ளது என்பதனை உறுதியாகக் கூறமுடியும்.இஸ்லாமியப் பொருளியலானது மனிதனின் இம்மை மறுமை வெற்றியுடன் பிரதானமாகத் தொடர்புபட்டுள்ளது. அவ்வெற்றியை அடைந்து கொள்வதற்கு இப்புவியிலுள்ள செல்வங்கள் போதுமானவை. ஆகவே, பற்றாக்குறை சிறிய அளவில் காணப்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தேவையான போதிய வளங்களை மீளுருவாக்கும் வழிகள் மற்றும் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இது உற்பத்தி அடிப்படையில் தொழிநுட்பத்தை முன்னேற்றல், செல்வங்களின்/ வளங்களின் மீள்பங்கீடு அல்லது மனித தேவைகளைக் குறைத்தல் என்பவற்றின் மூலமே அடையப்பட முடியும். வளப் பற்றாக்குறை என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு நிலைமை என்பதோடு, இஸ்லாமிய பொருளியல் அதனைத் திருத்தியமைப்பதற்கான வழிகள் மற்றும் சாதனங்களை ஆராய்கின்றது.

மேலும், மனிதன், மறுமையில் அவனது செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவனாவான். இச்செல்வங்களை அவன் பயன்படுத்திய முறை பற்றியும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளான். ஏனெனில், இஸ்லாம் செல்வங்களைச் சேர்ப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் மற்றும் உரிமை மாற்றம் செய்வதற்கும் என அனைத்து ஒழுங்கு விதிகளையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. எனவே, இவை உயர் ஒழுக்கப் பண்புகளை உள்ளடக்கியுள்ளன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

*'அவனே, அதன் மேலிருந்து உயரமான மலைகளை அமைத்தான். அதன் மீது (சகல விதமான) பாக்கியங்களையும் பொழிந்தான். இன்னும், அதில் அவற்றின் உணவுகளை நான்கு நாட்களில் சீராக நிர்ணயித்தான். (இதைப் பற்றி) கேட்கக் கூடியவர்களுக்கு (இதுவே விளக்கமாகும்).' (புஸ்ஸிலாத்: 10)*

- புவியிலுள்ள செல்வங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அனைத்துப் படைப்புகளுக்காகவும் படைக்கப்பட்டிருப்பதோடு, இச்செல்வங்களிலிருந்து பயனை அடைந்து கொள்வதில் அனைத்துப் படைப்புகளும் பங்கேற்றாக வேண்டும். இவ்விடயத்தில் மனித சமூகம் ஏனைய ஜீவராசிகளையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்பது இஸ்லாத்தின் கண்ணோட்டமாகும். நீண்டகாலத்தில் சமூக, பொருளாதார நிபந்தனைகளால் செல்வங்களின் பாய்ச்சல் உருவாக்கப்படுவதற்கு பொருளாதார நிதி பங்கேற்றாக வேண்டும் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. அது, மக்கள் தமது செல்வங்களை வறுமையில் உழலும் ஏனையோருக்காகவும் ஒதுக்கிவைக்கத் தூண்டுகின்றது. இஸ்லாத்தின் இச்சிந்தனை முழுக்க முழுக்க எளிமையானது. அதாவது, யாரிடம் தமது அடிப்படைத் தேவைகளை விட மிகையாக செல்வங்கள் காணப்படுகின்றதோ, அப்பங்கு ஏனையோரைச் சென்றடைய வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். சமமற்ற செல்வப்பங்கீட்டைச் சீரமைப்பதற்காக, ஏனையோருக்கும் அவர்களுக்குரிய பங்கினை விருப்பத்துடன் வழங்க முன்வர

வேண்டும். மேலும், ஒரு சிறந்த அரசு எப்போதுமே குறையுள்ள சமூக, பொருளாதார நிபந்தனைகளைத் தடுக்க முனைப்புடன் செயற்படும்.

- நபி (ஸல்) அவர்களின் காலத்தில், மக்கள் அவர்களிடம் மிகையாகக் காணப்பட்ட உணவு, வீடு மற்றும் நிலங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். அஷ்அர் கோத்திர மக்கள் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரங்களில், தமது உணவுப் பண்டங்களை வழங்கியமையை நபி (ஸல்) அவர்கள் பாராட்டியுள்ளார்கள். மக்களிடையே '.·.பை' எனப்படும் வரிகள் மற்றும் ஆள்வரிகளைக் கொண்ட நிதியினை விநியோகிப்பதில் நபி (ஸல்) அவர்களின் தீர்மானங்கள் கூட, செல்வங்களில் மக்களின் 'பங்கேற்புக்கான' அன்னாரது உறுதியான விருப்பத்தெரிவைச் சுட்டிக்காட்டும் ஒன்றாகவேயுள்ளது. நபி (ஸல்) அவர்கள் அரச திறைசேரிக்கு செல்வம் கிடைக்கப் பெற்றால் அதனை விநியோகிப்பதில் காலம் தாழ்த்தமாட்டார்கள். யுத்தத்தில் பெற்றுக் கொண்ட கனீமத் பொருட்களின் விநியோகம் பற்றிய அல்-குர்ஆனின் உத்தரவுகளும் கூட, அதில் எதிர்த்துப் போரிட்ட, போரிடாத அனைவரின் பங்கேற்பையும் காட்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள் போரில் பெற்ற இக்கனீமத் பொருட்களில் அரசினுடைய பங்கினை வறிய மற்றும் தேவையுடைய மக்களுக்கிடையே, அவர்கள் யுத்தத்தில் திறமையாகப் பங்கேற்காவிட்டாலும் பகிர்ந்தளித்தார்கள் அதேபோல்,

  *''.(நபியே! தர்மத்திற்காக எவ்வளவில்) எதைச் செலவு செய்ய வேண்டும்' என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் '(உங்கள் தேவைக்கு வேண்டியது போக) மீதமானவற்றைச் செலவு செய்யுங்கள்' என்று கூறுவீராக'' (பகரா: 219)*

  என்ற அல்-குர்ஆனின் உத்தரவும் கூட மிகையாகக் காணப்படும் செல்வத்தை ஏனையோருடன் பகிர்ந்துகொள்ளும் உயர்ந்ததோர் குறிக்கோளையே பிரதிபலிக்கின்றது.

### செல்வப் பங்கீட்டுக்கான இஸ்லாத்தின் கோட்பாடும் வழிமுறைகளும்

- மனிதன் தேவைகள் நிறைந்தவனாகவும் அவனது தேவைகளுக்காகவே உலகச் செல்வங்கள் படைக்கப்பட்டிருப்பதாகவும் இஸ்லாம் கூறுகிறது. இதனடிப்படையில் இச்செல்வங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது எவ்வாறு பயன்படுத்துவது எவ்வாறு செலவு செய்வது என்பதற்கான இறை ஒழுங்குகளையும் வழிமுறைகளையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது.

  செல்வம் அனைத்திற்கும் இறைவனே சொந்தக்காரன். மனிதன் அதனைப் பராமரிக்கின்ற பிரதிநிதி. செல்வமானது மனித சமூகத்திற்குப் பணிபுரியும் ஒரு சாதனம். எவன் அதனைச் சொந்தமாக்குவதைத் தனது இலட்சியமாக்குகின்றானோ அவனை மனிதத் தன்மைக்கும் இயற்கை ஒழுங்குக்கும் களங்கமேற்படுத்த முயல்பவனென்று இஸ்லாம் கண்டிக்கின்றது.

  இஸ்லாமிய செல்வம் மற்றும் வருமானப் பங்கீட்டு முறை ஏனைய பொருளியல் அமைப்புக்கள் வகுத்திருக்காத முக்கிய உண்மைகளை எமக்கு உணர்த்துகிறது.

ஸக்காத் சிறந்த வருமானப் பங்கீட்டு அணுகுமுறையாகும்.இதனால் தனிமனிதர் கையில் செல்வத்தின் திரட்சி தடுக்கப்படுவதுடன் ஏழைகளின் நலனில் செல்வந்தர்கள் பங்குதாரர்களாகவும் மாற்றப்படுகின்றனர். இது தவிர 'ஸதகா' 'ஹிபத்' 'ஹதிய்யா' 'வஸிய்யத்' 'வக்ப்' வாரிசுச் சொத்துக்கள் பொதுச்சொத்துக்கள் திறைசேரி (பைத்துல்மால்) வரிக்கொள்கை, வங்கியமைப்புக்கள் போன்றவற்றிற்கும் சிறந்த திட்டங்களை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது.

- இதனால் தான் இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள் தனது அல்-முஹல்லா என்ற நூலில் ஸகாத் என்ற அத்தியாயத்தில் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். 'ஓர் இஸ்லாமிய நாட்டில் சேகரிக்கப்பட்ட ஸகாத் போதாமல் போகின்ற பொழுது அங்குள்ள ஏழைகளைப் பராமரிப்பது செல்வந்தர்கள் மீது கடமையாகிவிடுகின்றது. அரசு சட்டரீதியாகச் செல்வந்தர்களை நிர்ப்பந்தித்து இதனைச் செய்விக்க வேண்டும். இவ்வகையில் ஒரு நாட்டில் வாழ்கின்ற வசதிகளற்ற அனைத்து மக்களுக்குமான போதியளவு உணவு, பருவகாலங்களுக்கேற்றவாறு அணிவதற்கான உடை, இயற்கைச் சக்திகளின் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்வதற்கு வசதியான வீடு போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.'

இமாமவர்களின் இக்கூற்றில் மூன்று அடிப்படை உண்மைகளை அவதானிக்க முடிகின்றது.

1. சமூகக்கூட்டு ஒத்துழைப்புக்கான தூண்டுதல்
2. தனிநபர்களின் சமூக உரிமைகளை அரசு பெற்றுக்கொடுத்தல்
3. ஒவ்வொரு தனிநபருக்கும் ஆகக்குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்துக்கேனும் உத்தரவாதமளிக்கப்படல்.

இக்கருத்தை இமாமவர்கள் பல்வேறு ஆதாரங்களை முன்வைத்து நிறுவுகிறார்கள்.

'யார் மக்களிடம் இரக்கம் காட்டவில்லையோ அல்லாஹ்வும் அவர் மீது இரக்கம் காட்டமாட்டான்.' என்ற நபிமொழியின் அடிப்படையில் யார் தன்னிடமுள்ள மேலதிக செல்வத்தால் பசியுடனும் ஆடையின்றியும் கஷ்டப்படும் தனது சகோதரனுக்கு உதவவில்லையோ அவர் நிச்சயமாக மக்களிடம் இரக்கம் காட்டவில்லை என்ற உண்மையை விளங்கிக்கொள்ள முடியும்.

'யாரிடம் இருவருக்கான உணவு இருக்கிறதோ அவர் மூன்றாவது ஒருவரையும் சேர்த்துக்கொள்ளட்டும்.யாரிடம் நான்கு பேருக்குப் போதுமான உணவு உள்ளதோ அவர் ஐந்தாவது அல்லது ஆறாவது நபரையும் சேர்த்துக்கொள்ளட்டும்.'

இந்த நபிமொழி மேற்கூறிய உண்மையை தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றது.

'என்னால் நிறைவேற்ற முடியாமல் போன கடமைகளை நிறைவேற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் செல்வந்தர்களிடமிருக்கும் அவர்களின் தேவைகளுக்கு மேலதிகமான செல்வத்தை எடுத்து ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பேன்' என்ற உமர்(ரலி) அவர்களின் கூற்றும்

'அல்லாஹ் ஏழைகளைப் பராமரிக்கப் போதுமான செல்வத்தைப் பணக்காரர்களின் செல்வத்திலேயே வைத்திருக்கின்றான். எனவே ஏழைகள் பட்டினியால் வாடவோ ஆடையின்றிக் கஷ்டப்படவோ நேர்ந்தால் அது பணக்காரர்கள் தமது கடமையைப் புறக்கணித்ததன் விளைவு தான்.' என்ற அலி(ரலி) அவர்களின் கூற்றும் இங்கு கவனிக்கத்தக்கது.

- எனவே தனிநபர்களின் சமூக உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பது சமூகத் தலைமைகளினதும் அரசினதும் கடமையாகும் என்ற கூற்றை ஒருமுறை கலீபா உமர்(ரலி) அவர்கள் ஒரு திம்மிக் கிழவரின் ஜிஸ்யா வரியை நீக்கி அவருக்கான பராமரிப்புச் செலவை முஸ்லிம்களின் பைத்துல் மாலிலிருந்து கொடுத்த சம்பவம் உறுதிப்படுத்துவதை இமாமவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

  'ஏழைகள், வசதியற்ற அநாதைகள், கடன்பட்டோர், திருமணம் செய்யலாம் எனக் கருதும் வசதியற்றோர் என்னிடம் வந்து உதவித் தொகை பெற்றுக் கொள்ளலாம்' என்று கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் தம் ஆட்சிக்காலத்தில் நாள் தோறும் பொது அறிவிப்புச் செய்யும்படி ஆணையிட்டார்கள்.(அல்பிதாயா வந்நிஹாயா)

  இறைவன் மனிதனுக்கு வழங்கிய செல்வத்திலிருந்து ஏழைகளுக்கும் தேவைப்பட்டோருக்கும் உதவி செய்யாவிட்டால் அந்தச் செல்வம் மனிதனுக்கு அழிவையும் இழப்பையும் தேடித் தரும் என்று இஸ்லாம் கூறுகின்றது.

  இதனால் தான் நபி(ஸல்) அவர்கள் போரில் பெற்ற கனீமத் பொருட்களை ஹுமுஸ் எனப்படும் அரசின் பங்கினை வறிய மற்றும் தேவையுடைய மக்களிடையே அவர்கள் யுத்தத்தில் திறமையுடன் பங்கேற்காவிட்டாலும் கூட பகிர்ந்தளித்தார்கள்.

- எனவே செல்வந்தர்களின் கையில் செல்வம் தேங்கி நிற்காமல் அது மக்களுக்குப் பயனுள்ளதாக அமையவே மேற்கூறப்பட்ட பல்வேறு விநியோக முறைகளையும், செலவு செய்யும் முறைகளையும் வகுத்துத் தந்துள்ளது.

  இவ்வாறு செல்வங்களைத் தேவைக்கேற்றவாறு செலவு செய்வதும் அதனைப் பகிர்ந்தளிப்பதும் இஸ்லாத்தின் பிரதான சட்டமாக அமைந்து இருக்கின்றது. 'நீதமாகப் பகிராதவன் நரகத்திற்குரியவன்' என்ற ஹதீஸ் இதனை விளக்குகின்றது.

  *'மேலும் அவர்களின் செல்வங்களில் யாசிப்போருக்கும் இல்லாதோருக்கும் உரிமை இருந்தது.'(அத்தாரியாத்: 19)*

  கலீபா அபூதாஹிர் என்பவர் 'திறைசேரி இருப்பது செல்வத்தை நிறைத்து வைப்பதற்காகவல்ல. நன்மையான வேலைகளுக்குச் செலவிட்டுக் காலியாக்குவதற்கே'. என்று கூறியதும் இங்கு கவனிக்கத்தக்கது.

- இவ்வாறு செல்வங்கள் நீதமான முறையில் பகிரப்படாத போது சமூகத்தில் பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், சீர்கேடுகளும், குழப்பங்களும் உருவாகி விடலாம் என்பதைக் கருத்திற் கொண்டு செயற்படுவது எமது கடமையாகும்.

**தேர்ச்சி 07: சமூக வாழ்வில் முஆமலாத் பற்றி அறிந்து அவற்றை வாழ்வில் உரிய முறையில் நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.3: சமகால பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான இஸ்லாத்தின் தீர்வை முன்வைப்பார்.**

**பாடவேளைகள் : 35**

**கற்றல்பேறுகள்**

- சமகால பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான இஸ்லாமிய தீர்வுகளை முன்வைப்பார்.
- இஸ்லாமிய நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மதிப்பிடுவார்.
- இஸ்லாமிய நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒப்புநோக்கி விளக்குவார்.
- இஸ்லாமிய நிதி நிறுவனங்களின் விழுமியப் பண்புகளை விளக்கி எழுதுவார்.
- முஆமலாத்துக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பை விளக்குவார்.
- முஆமலாத் தொடர்பான ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளைப் பேணி நடப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**சமகால பொருளாதாரப் பிரச்சினைகள்**

இன்றைய உலகம் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது. முறையற்ற வளப்பங்கீடு, பயன்பாடு போன்றன அவற்றுக்கான காரணங்களாகும். பொருளாதார சீர்கேடுகள் சமூகத்தின் பல்வேறு துறைகளையும் பாதித்துள்ளன. முறையான பொருளாதாரத் திட்டமே பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகும்.

**1.வட்டி**

வட்டியை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அதற்குப் பிரதியீடாக பல்வேறு அம்சங்களைத் தந்திருக்கிறது. அவற்றுள் வியாபாரம், ஸகாத், கர்ளுல் ஹஸன் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

**வியாபாரம்**:

*'அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கியுள்ளான் வட்டியை ஹராமாக்கியுள்ளான்' (பகரா: 275)*

எவர் வர்த்தக வாணிப, வியாபார, விவசாய நோக்கங்களுக்காக வட்டியமைப்பை நாடவேண்டியுள்ளதோ அவருக்கு இஸ்லாம், 'முழாரபா' என்ற கூட்டுப்பங்கான்மை, 'முஷாரகா' என்ற கூட்டுறவு வர்த்தகம், 'அஸ்ஸலம்' என்ற முற்பணக் கொடுப்பனவு வியாபாரம், 'அல்பைஉல் முஅஜ்ஜல்' என்ற தவணைக்கட்டண கொடுக்கல் வாங்கல் 'முஸாரஆ' எனும் விவசாயப் பங்குடமை முதலான பல்வேறு வியாபார அமைப்புக்களை தீர்வாக முன்வைத்துள்ளது.

**ஸதகா:**

- 'அல்லாஹ் வட்டியை அழிக்கிறான் தான தர்மங்களை வளர்க்கிறான்.'(பகரா: 276)

யார் தனது உணவுக்காக, அன்றாட அடிப்படைத் தேவைகளுக்காக வட்டியை நாடவேண்டியிருக்கிறதோ இஸ்லாம் அவருக்கான தீர்வை ஸதகாவில் வைத்திருக்கின்றது. இங்கு ஸதகாவில் வட்டியில்லாத 'கர்ளுல் ஹஸன்' எனும் கடனும் அடங்குகிறது.

ஆரம்பமாக இஸ்லாம் வட்டியை அடிப்படையாகக் கொண்ட கடன் கொடுக்கல் வாங்கலுக்குப் பதிலாக தான தருமத்தை ஊக்குவிக்கிறது. வட்டியை அடிப்படையாக வைத்து தமது பொருளாதாரத்தை அமைத்துக் கொண்ட சமூகத்தில் உலோபித்தனம், சுயநலம், குறுகிய மனப்பான்மை, பேராசை, பணத்தைப் பூஜிக்கும் தன்மை போன்ற மோசமான குணங்களே மிகைத்து நிற்கும். இஸ்லாம் வட்டிக்கு வழங்கும் முதலாவது பிரதியீடான ஸதகாவை ஒரு பெரிய அமலாக வர்ணிக்கிறது. அல்குர்ஆன் கூறுகிறது:

*'தர்மமாக எதைச் செலவு செய்வது? என்று அவர்கள் கேட்கிறார்கள். (தங்கள் தேவைபோக) எஞ்சியிருப்பதை என்று (நபியே) கூறுவீராக!' (பகரா: 219)*

இவ்வாறு அல்லாஹ்வின் பாதையில் சமூகநலன்களுக்காக செலவு செய்வதற்கு இஸ்லாம் தூண்டும்போது இதற்குப் பின்னால் ஒரு கோட்பாட்டை முன்வைக்கிறது. அதுதான் அடிப்படையில் செல்வம் என்பது அதனைத் தேடிய தனிமனிதனுக்குரியதுமல்ல. சமூகத்திற்குரியதுமல்ல. மாறாக செல்வத்தின் உண்மையான சொந்தக்காரன் அல்லாஹ் ஆவான். எனவே, மனிதன் அடையும் ஒரு பொருளின் மீதான சொத்துரிமை அல்லாஹ்வினால் அவனுக்குக் கொடுக்கப்பட்டதாகும். அல்குர்ஆன் இதனை மிகத் தெளிவாகக் கூறுகிறது.

*'அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருளிலிருந்து நீங்கள் அவர்களுக்குக் கொடுங்கள்.' (அந்நூர்: 33)*

'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்குச் சொந்தமானவையே.'

- இந்த அடிப்படையில் மனிதனுக்கு அவன் தேடிய பொருள்கள் மீது 'சொத்துரிமை' உண்டு. ஆனால் அது பூரண அல்லது தன்னிச்சையான அல்லது முடிவற்ற உரிமையல்ல. மாறாக இந்த உரிமையானது செல்வத்தின் உண்மையான உரிமையாளன் விதித்துள்ள சில கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளது. அவனது கட்டளைப்படியே அதை நாம் செலவுசெய்தல் வேண்டும். நாம் செல்வத்தின் சொந்தக்காரரல்ல. மாறாக அதன் உண்மையான உரிமையாளனின் பிரதிநிதிகள். இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் அதனை மேலும் விளக்குகின்றது.

*'மேலும் உனக்குக் கொடுத்ததிலிருந்து (செலவு செய்து) மறுமையின் வெற்றியை தேடிக்கொள். இம்மையில் உனக்குரிய பங்கை மறந்துவிடாதே. அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தவாறு நீயும் உபகாரம் செய். பூமியில் நீ குழப்பத்தைத் தேடாதே. நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை விரும்புவதில்லை.' (அல்கஸஸ்:77)*

இந்த வசனம் செல்வம் பற்றிய இஸ்லாமிய நோக்கை மேலும் தெளிவாக விளக்குகிறது. ‘அல்லாஹ் உனக்கு கொடுத்ததிலிருந்து’ என்ற சொற்றொடர் மூலம் மனிதன் உரிமை பாராட்டும் செல்வமெல்லாம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்றதாகும் என்பது உணர்த்தப்படுகிறது.

‘மறுமையின் வெற்றியை நாடு’ என்ற பகுதி செல்வத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மனிதனது இறுதி இலக்காக எது அமைதல் வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

அவ்வாறே செல்வம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்றதால் மனிதன் அதனை அல்லாஹ்வின் கட்டளைப்படியே கையாளுதல் வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. வசனத்தின் அடுத்த பகுதி அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்வதுபோல நீயும் அடுத்தவர்களுக்கு உபகாரம் செய் எனக்கூறுகிறது.

‘பூமியில் குழப்பத்தை நாடாதே’ என்ற வசனத்தின் அடுத்த பகுதி ஒருவர் தான் விரும்பியவாறு செல்வத்தை பயன்படுத்தலாகாது சமூகத்தில் பாதிப்பும் அநீதியும் ஏற்படும் விதத்தில் செல்வத்தைப் பயன்படுத்த எவருக்கும் அனுமதியில்லை என்பதை உணர்த்துகிறது.

இந்தவகையிலேயே இஸ்லாத்தில் ஸதகா அடங்கலான தர்மம் செய்தல் சம்பந்தமான வழகாட்டல்களும் போதனைகளும் அமைந்துள்ளன. மேலும் செல்வம் பற்றிய இஸ்லாத்தின் குறித்த கண்ணோட்டமே வட்டியைத் தடைசெய்வதற்கும் தர்மத்தை தூண்டுவதற்கும் போதிய நியாயமாகும்.

**கர்ளுல் ஹஸன்**

- ‘அல்லாஹ்வுக்கு நீங்கள் அழகியமுறையில் கடன்கொடுப்பீர்களாயின் அதை அவன் உங்களுக்கு பன்மடங்காக்கிக்கொண்டே செல்வான். உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான்.’(அல்குர்ஆன்)

  நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்

  *‘ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு இருதடவைகள் கடன்வழங்கினால் அதில் ஒரு தடவை அவர் ஸதகா செய்தவரைப்போன்றவராவார்.’ (இப்னுமாஜா, இப்னுஹிப்பான்)*

- இஸ்லாம் கூறும் ஸதகா சார்ந்த மற்றுமோர் அம்சம்தான் கர்ளுள் ஹஸன் எனும் வட்டியில்லா அழகிய கடனாகும். வர்த்தக, வாணிப, வியாபார நோக்கங்களுக்காக வட்டியை நாடவேண்டியுள்ளவர்களுக்கு இஸ்லாம் பல்வேறு பொருளீட்டல் முயற்சிகளை பிரதியீடாக வழங்கியிருக்கிறது.

- கடன் வழங்குவது ஒரு வகை உதவியும், ஒத்துழைப்புமே அன்றி உழைப்புக்கான வழியல்ல என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். எனவே, கடன்கொடுத்தவர் தான் கொடுத்த அளவையே கடன் வாங்கியவரிடமிருந்து திருப்பிப்பெற வேண்டும். கொடுத்த தொகையைவிடக் கூடியதாக திருப்பித்தரவேண்டும் என எதிர்ப்பார்ப்பதும் ஹராமாகும் இதனையே இஸ்லாம் வட்டி என்கிறது. கடன் கொடுப்பது இஸ்லாத்தில் பெரும் சமூகநலப்பணியாகக் கொள்ளப்படுகிறது. ஒருவர் கடன் வழங்கிச் செய்கின்ற

உதவியை அடுத்த சகோதரனின் கஷ்டங்களில் பங்கேற்கும் நன்மையான காரியமாக இஸ்லாம் கருதுகிறது.

*'எவர் ஒரு முஸ்லிமுடைய உலகக் கஷ்டங்களில் ஒன்றை நீக்க உதவுகிறாரோ அவரின் மறுமைநாள் கஷ்டங்களில் ஒன்றை அல்லாஹ் நீக்கிவிடுவான். மேலும் எவர் கஷ்டத்திலிருக்கும் ஒருவருக்கு உதவி செய்து, அவருக்கு வசதியேற்படுத்திக் கொடுக்கின்றாரோ அல்லாஹ் உலகிலும் மறுமையிலும் அவருடைய கஷ்டங்களை இலேசாக்கிக் கொடுப்பான்.' (முஸ்லிம்).*

**2.வறுமை**

- இஸ்லாம் வறுமையை வெறுக்கிறது. வறுமையின் தீய பாதிப்புக்களை விட்டுப் பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்று சொல்கிறது. வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்றே இஸ்லாம் கருதுகின்றது.

  'வறுமை களையப்படக் கூடாத ஒன்று, அது விதிவசமானது' என்று சில மதவாதிகள் நினைக்கின்றனர்.

  'வறுமை ஒரு அருட்பேறு, அது துன்பம் தரக்கூடியதன்று, அப்படியே துன்பம் தந்தாலும் அதை விரும்பி நேசிக்க வேண்டும்' என்று சில துறவிகள் கருதுகின்றார்கள்.

  'பசித்திருந்து, பட்டினி கிடந்து, ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி இறையன்பைப் பெற வேண்டும், அதற்கு வறுமையே சரியான வழி' என்று சில குருமார்கள் கூறுகின்றார்கள்.

  ஆனால் இஸ்லாமோ, வறுமையை ஒரு பேராபத்தாக எண்ணுகிறது. அது களையப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.

- நபி (ஸல்) அவர்கள் வறுமை நிலையை வெறுத்திருக்கிறார்கள். வறுமைத் தொல்லையில் இருந்து விடுபட்டு வாழ இறைவனிடம் பிரார்த்தனையும் செய்திருக்கின்றார்கள். மற்றவர்களையும் இறைவனிடம் பாதுகாப்புத் தேட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இது தொடர்பாக ஆதாரபூர்வமான பல நபிமொழிகள் காணப்படுகின்றன. 'இறைவா! இறை நிராகரிப்பிலிருந்தும், வறுமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். (அபூதாவூத், நஸாயீ, அஹ்மத்)

  மற்றொரு நபி மொழியில் இவ்வாறு வருகிறது : *நபி (ஸல்) அவர்கள் 'வறுமை, பற்றாக்குறை, இழிவு ஆகியவற்றிலிருந்தெல்லாம் இறைவா! உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். (இப்னு மாஜா, அபூதாவூத், நஸாயீ)*

  இன்னொரு தடவை இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள், *'இறைவா! கடும் பசியை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.' (அபூதாவூத், இப்னுமாஜா, நஸாயீ.)*

இறைவன் திருக்குர்ஆனில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வறுமையைப் போக்கி, அவர்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததை சொல்லிக்காட்டுகின்றான்.

*'நபியே! இறைவன் உம்மைத் தேவைகள் நிறைந்த ஒரு ஏழையாகக் கண்டு. பிறகு உம்மைத் தன்னிறைவாக (கனீயாக) ஆக்கினான்.' (அழ்ழுஹா : 08)*

இந்தச் சான்றுகள் யாவும் இஸ்லாம், வறுமையை ஒழிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகக் கருதுகிறது என்பதை விளக்குகிறது. ஆகவே, வறுமை களையப்பட வேண்டும், அதற்காக, திட்டங்கள் தீட்டப்பட வேண்டும், தீர்வுகளும் காணப்படல் வேண்டும்.

**வறுமை ஒழிப்பு முயற்சிகள்**

- பொதுவாக, மனித வரலாற்றின் தொடக்க காலம் தொட்டு வறுமை ஒழிப்பு முயற்சிகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. ஏழைகள், எளியவர்கள் காணப்படுகின்ற பல பகுதிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. இவர்களின் இந்தத் தீர்வு சரியானதுதான் என்று ஆதரிப்போர் எல்லா நாடுகளிலும் சமூகங்களிலும் வாழ்கிறார்கள். ஆனால் இம்மாதிரித் திட்டம் கூட வறுமையை முழுமையாகக் களைய வகை செய்யவில்லை.

**வறுமை ஒழிப்பில் இஸ்லாம்**

வறுமை ஒழிப்புக் கொள்கையை முழுமையாக வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அவற்றில் ஸகாத்துக்கு அதிக முக்கியத்துவமுண்டு.

- ஸகாத் எனும் திட்டத்தை முஸ்லிம்கள் செயல்படுத்த முன்வர வேண்டும். ஸகாத் எனும் வறுமை ஒழிப்புத் திட்டம் சட்டப்படி முறையாக, ஒழுங்காக எந்தப் பகுதியில் செயல்படுத்தப்பட்டாலும் அங்கிருந்து பஞ்சத்தையும் வறுமையையும் எளிதில் களைந்து விட முடியும். ஸகாத் என்பது ஏழைகளின் கோரிக்கையின் பேரிலோ அல்லது புரட்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டதன் விளைவாகவோ நிறைவேற்றப்படும் திட்டமல்ல மறாக, இது இஸ்லாத்தின் ஐம்பெரும் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். இது பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் என்பதுடன், ஒரு பொருள் வழி வணக்கமும் வழிபாடுமாகும். ஸகாத் வறுமையை முற்றிலுமாக ஒழிப்பதற்கு வகை செய்கிறது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்றை இங்கு காண்போம்.

அது ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது

- இறைநம்பிக்கை, இரக்கம், நேர்மை, நியாயம் போன்ற ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் அமைந்த திட்டமே இதுவாகும். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையில் பாசத்தையும் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் தோற்றுவிக்கக் கூடிய ஓர் உயர் திட்டமே ஸகாத். அது இறைநம்பிக்கையின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டுமென்று இஸ்லாம் கூறுகிறது. இதைத் திருமறை வெவ்வேறு இடங்களில் விளக்கிக் காட்டுகிறது. ஏக இறைநம்பிக்கை உள்ளவர், நல்லவர், வாய்மை உள்ளவர், நேர்மையுள்ளவர் என்றெல்லாம் ஒருவரைப் பற்றி வர்ணிக்க

வேண்டுமானால் அவர் ஸகாத் வழங்குபவராக இருக்க வேண்டும் என இறைவன் கூறுகிறான்:

*'இறைநம்பிக்கை உள்ளவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்கள் தாம் உள்ளச்சத்தோடு தொழுவார்கள், மேலும் தேவையற்ற விவகாரங்களிலிருந்து விலகி நிற்பார்கள். ஸகாத்தை செயல்படுத்துவார்கள்' (அல்மு.்.மினூன் : 1 - 4)*

வசதியிருந்தும் யார் ஸகாத் வழங்கவில்லையோ, அவர் மிகவும் கேடு கெட்டவர், மோசமானவர், கொடியவர், நயவஞ்சகம், கபட நம்பிக்கை முதலிய மோசமான தன்மைகளைக் கொண்டவர். இறையருளைப் பெற முடியாதவர். தலைமைப் பதவிக்கும் பொறுப்புக்களை நிர்வகிப்பதற்கும் தகுதியற்றவர் என்றெல்லாம் இடித்துரைக்கின்ற இறைவசனங்கள் திருமறையில் காணப்படுகின்றன. (அல்குர்ஆன் வசனங்கள் (41 : 6,7), (9 : 54), (67 : 71), (7 : 154), (5 : 55, 22), (40 : 41)

ஸகாத் எனும் இத்திட்டம் இறைவனுடன் மனிதன் கொண்டிருக்கும் தொடர்பைப் பிரதிபலித்துக் காட்டக் கூடிய ஒரு கொள்கை அடிப்படையிலான ஒழுக்க ரீதியிலான திட்டமாகும். இறைவனுக்கு மட்டும் அடிபணிய வேண்டிய பணவசதி படைத்த மக்கள், பொருளுக்கும் செல்வத்துக்கும் அடிபணிந்து வாழக் கூடாது என்ற தத்துவத்தை இத்திட்டம் வெளிப்படுத்துகிறது.

### 3. வேலையின்மை

- உலகின் பொருளாதார ஒழுங்கு, பணவீக்கம் மற்றும் வேலையின்மை என்ற இரட்டைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. இன்று எமது நாட்டில் கூட வேலையின்மை ஒரு பிரதான பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கான பிரதான காரணம் இன்றைய உலகப் பொருளாதார முறையில் காணப்படுகின்ற மூலதனத்தின் மீதான வட்டி நடைமுறையாகும். இது முதலீட்டு மட்டம் அதிகரிக்கும் வேகத்தைக் குறைப்பதோடு வேலையின்மைக்கும் இட்டுச்செல்கிறது. வேலையின்மை போன்ற நவீன பிரச்சினைகள் தோன்ற முன்பே இஸ்லாம் அதற்கான தீர்வுகளை பைத்துல்மால், ஸகாத் நிதிகள் மூலம் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களை வகுத்துள்ளது.

#### தொழில் செய்ய உதவும் நிதி

- சட்ட அறிஞர்கள் 'ஸகாத் வாங்குவதற்குத் தகுதியுள்ள ஒரு ஏழையினால் உழைக்க முடியுமென்றால், அதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை அவருக்குச் செய்து தர வேண்டும்' என்று விளக்கம் தருகின்றார்கள்.இப்படிச் செய்வதன் மூலம் வேலையின்மையிலிருந்து விடுபடவும் ஏழைகள் பொருளாதாரத்தில் தொடர்ந்து முன்னேறவும் பசி பட்டினியிலிருந்து மீளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அவர்களுக்கு தொழில் செய்யப் போதிய நிதியுதவி வழங்கியோ, அவர்களின் தொழிலுக்குத் தேவையான கருவிகளை ஸகாத் நிதியிலிருந்து வாங்கிக் கொடுத்தோ அவர்களின் வறுமையை ஒழிக்க வேண்டும்.

அதே போல், வேலையற்ற ஒருவருக்கு வியாபாரம் செய்யத் தெரியுமானால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும். விவசாயம் செய்யத் தெரியுமானால் நிலத்தின் ஒரு பகுதியை வாங்கிக் கொடுத்து அதில் விவசாயம் செய்து பிழைக்கத் தேவையான நிதியுதவியை வழங்கிட வேண்டும். ஓர் ஏழை முதியவராகவோ ஊனமுற்றவராகவோ மனநலம் பாதிக்கப்பட்டவராகவோ இருந்து,

அதனால் எதுவும் செய்ய இயலாமல் போனால் அவருடைய அத்தியவசிய வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு ஒரு நிரந்தரமான ஆண்டு வருமானத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறாக ஸகாத் நிதியிலிருந்து வேலையற்றிருப்போர் மற்றும் ஏழைகள் தொடர்ந்து வறுமையின்றி வாழ்வதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

- நபி (ஸல்) அவர்கள் தங்கள் குடும்பத்திற்காக ஓராண்டுக்குத் தேவையான உணவுப் பண்டங்களைச் சேகரித்து வைத்திருந்தார்கள் என்று உமர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த ஆதாரபூர்வமான அறிவிப்பை (புகாரி) அடிப்படையாகக் கொண்டு ஓர் ஏழைக்கு ஓராண்டு காலம் குடும்பம் நடத்துவதற்குத் தேவையான நிதியுதவியைச் செய்து கொடுத்தால் போதும் என்று சிலர் கருத்துக் கூறுகின்றனர்.

  நபி (ஸல்) அவர்கள் மறுநாளைக்காக எதையுமே சேமித்து வைக்க மாட்டார்கள் என்ற அறிவிப்பு இந்த அறிவிப்புடன் முரண்படவில்லை. காரணம் இங்கு தங்கள் குடும்பத்திற்காக ஓராண்டு உணவைச் சேகரித்து வைத்திருந்தார்கள் என்று வருகின்றது. ஆனால், அதில் தங்களுக்காக (தனிப்பட்ட தேவைக்காக) எதையும் சேகரித்து வைக்கவில்லை என்று கூறப்பட்டது. ஆகக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் சேர்த்து வைத்தார்களே தவிர தங்கள் சொந்தத் தேவைக்காக அன்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு குடும்பமும் மனைவி மக்களும் இல்லையெனில் எதையுமே நாளைக்கு என்று சேர்த்து வைத்திருக்க மாட்டார்கள். (ஃபத்ஹுல் பாரி 9 : 503)

- ஆகவே தொழில் செய்யத் தெரிந்தவர்களுக்கு அதற்கான மூலதனத்தை ஸகாத் நிதியிலிருந்து வழங்கி அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும், தொழில் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காண வழிவகை செய்ய வேண்டும். எதுவுமே செய்ய முடியாத நிலையிலுள்ள ஏழைகளுக்கு அவர்களின் ஓராண்டு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதம் ஏற்பாடுகள் செய்ய முடியும். என்று கூட இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

  உமர் (ரழி) அவர்கள் தமது காலத்தில் கணிசமான ஏழைகளுக்குக் கொடுத்துதவினார்கள். வறுமையை முழுமையாகக் களையப் பாடுபட்டார்கள். இதற்கு வரலாற்றில் பற்பல சான்றுகள் காணப்படுகின்றன. உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள் 'நீங்கள் ஓர் ஏழைக்கு வழங்கினால் பிறரிடம் அவர் இனியும் தேவைப்படாத அளவுக்கு தன்னிறைவு உடையவராக அவரை ஆக்கி விடுங்கள்' (அல் அம்வால் - அபூ உபைதா)

- வேலையின்மையின் மூலவேர் நிதியின் மீதான வட்டியே என்பதை எம்மால் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்.எனினும் இஸ்லாமியப் பொருளாதார முறைகள் முற்றிலும் எளிமையானதாகக் காணப்படுகிறது.அது மூலதனத்தின் மீதான வட்டியை அதனுடைய அனைத்து வடிவங்களிலும் அழிப்பதோடு முதலீட்டை அதன் உச்சத்திற்கு உயர்த்துவதற்கு அனுமதிக்கின்றது. இதன் மூலம் அது வேலைவாய்ப்பு மட்டங்களை உயர்த்துவதோடு சமூகப்பாதுகாப்புத் தேவையையும் குறைத்து வேலையின்மைப் பிரச்சினைக்கான தீர்வையும் ஸக்காத் என்ற பாரிய திட்டத்தின் மூலம் பெற்றுத் தருகின்றது.

எனவே நாம் வேலையற்றவர்கள், ஏழைகள் போன்றோருக்குப் போதியளவு உதவிகளை ஸக்காத், ஸதகாக்கள் மூலம் வழங்கிச் சமூகத்தில் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வோம்.

**இஸ்லாமிய நிதி நிறுவனங்கள்**

**1. பைத்துல்மால்:**

- பைத்துல்மால் என்பது இஸ்லாமிய நாட்டில் காணப்படும் அரச திறைசேரியாகும். இஸ்லாமிய அரசின் நிழலில் வாழும் பிரசைகளின் அத்தியாவசிய தேவைகளை உறுதிப்படுத்துவதற்கான பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அரசினால் திரட்டப்படும் பணத்தைப் பராமரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பைத்துல்மால் காணப்படுகிறது. இவ்வழிமுறை நபி(ஸல்) அவர்களது காலம் முதல் அரச நிதி நிறுவனமாகவும் பொதுத் திறை சேரியாகவும் நடை முறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.எனினும் ‘பைத்துல்மால்’ என்ற பெயர் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடைய காலத்திலிருந்தே இஸ்லாமிய வழக்கத்தில் இடம்பெறுகிறது.

  இதற்கு ‘முஸ்லிம்களின் பொதுச்சொத்துக்களின் களஞ்சியம்’ என்றும் ‘அல்லாஹ்வின் சொத்துக்களின் களஞ்சியம்’ என்றும் இரண்டு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் பைத்துல்மால் என்பதன் சரியான கருத்து இஸ்லாமிய அரசின் கருவூலம்-கஜானா என்பதாகும். ‘ஸகாத்’எனும் ஏழைவரி ‘ஹராஜ்’ எனும் நிலவரி ‘கனீமத்’ எனும் யுத்த வெற்றிப் பொருட்கள், அதிலிருந்து ஆட்சியாளருக்கு ஒதுக்கப்படும் ‘ஹுமுசு’ என்ற ஐந்திலொரு பங்கு, சமாதான உடன்படிக்கைகள் வழியாகக் கிடைக்கும் ‘ஃபைஉ’ எனும் வரவு மற்றும் ‘ஜிஸ்யா’ எனும் வரி, அரச பொதுச்சொத்துக்கள், உரிமையாளன் இன்றிக் கைவிடப்பட்ட பொருட்கள், ‘வக்பு’ செய்யப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பைத்துல்மாலில் சேர்க்கப்படும்.

- ஆரம்ப காலத்தில் பைதுல்மால் பள்ளிவாசலை ஒட்டிய பொது இடத்தில் அனைவருடைய கண்காணிப்பிலும் இருக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்தது.பின் பாதுகாப்பான தனிக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன.

  இந்த பைதுல் மாலிலிருந்து அதிகாரிகளுக்கான சம்பளம்,இராணுவச் செலவுகள், அணைகள், பாலங்கள், நகரமைப்புத் திட்டங்கள, கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், பள்ளிவாசல்கள், சிறைக்கூடங்கள் போன்ற சமூக நலத்திட்டங்கள், ஏழைகளுக்கான உதவிகள் மேற்கொள்ளப்படும்.

  உமர்(ரழி) அவர்கள் காலத்தில் சிரியா, ஈராக், எகிப்து, ஆர்மீனியா, ஆஸர்பைஜான் போன்ற பகுதிகளிலிருந்து குவியல் குவியலாகப் பொருட்கள் அரசாங்க கஜானாவிற்கு வந்த பொழுது அழுதபடியே அவற்றைப் பெற்றுக் கொண்ட உமர்(ரழி) அவர்கள் அவற்றை பைதுல் மாலில் சேர்த்து ஒரு வருடத்தில் திரளும் தொகை அனைத்தையும் அந்த வருடத்திற்குள்ளாகவே செலவு செய்திட உத்தரவிடுவார்கள் என்று இப்னுல் ஜவ்ஸி மனாகிபு அமீரில் முஃமினீன் உமர் பின் கத்தாப் என்ற நூலில் குறிப்பிடுகிறார்கள்.

  அலி(ரழி) அவர்கள் ஒரு வாரத்தின் வரவுகளை அந்த வாரத்திற்குள் செலவு செய்திட உத்தர விடுவார்கள் என்று அபுல் அப்பாஸ் அந்நாஸிரி அல் இஸ்திக்ஸா என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

பைதுல்மாலின் தொகைகளில் எது எந்த விடயத்துக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்காக பைதுல்மாலிற்கான வழிகாட்டிகளாக சட்ட அறிஞர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் அம்மார் பின் யாசிர் (ரழி) அவர்களை கூபாவின் ஆளுனராக நியமித்த போது பைதுல்மால் விடயத்தில் அவருக்கு ஆலோசகராகவும்,அமைச்சராகவும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களை நியமித்தார்கள் என்று இப்னு ஸஃது தனது தகாப்பதுல் குப்ராவில் குறிப்பிடுகிறார்.

பைதுல்மாலில் பலதரப்பட்ட பொருட்கள் வந்து சேரும் காரணத்தாலும் ஸகாத் போன்ற உதவிகள் குறிப்பிட்ட சில பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்பதாலும் ஹனபி மத்ஹபின் சட்ட அறிஞர்கள் பைதுல்மால் அமைப்பை 4 பிரிவுகளாகப் பிரித்தனர்.

1. தர்மங்களுக்கான பைதுல்மால்
2. வரிகளுக்கான பைதுல்மால்
3. வெற்றிப் பொருட்களுக்கான பைதுல்மால்
4. அநாமதேயப் பொருட்களுக்கான பைதுல்மால்

இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கணக்குகள் வைக்கப்பட்டு அதற்குரிய பயனீட்டாளர்கள் முடிவு செய்யப்பட்டனர்.பைத்துல்மாலுக்கான தொகைகள் நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் ஆட்கள் அனுப்பி வசூலிக்கப்பட்டதை நபிமொழிகள் உறுதிப்படுத்துகின்றன.

வேலையின்மையை நீக்குவதிலும் வறுமை ஒழிப்பிலும் ஸக்காத்தின் பங்களிப்பு அளப்பரியது.ஸக்காத்தை பைத்துல்மால்கள் மூலம் நிறைவேற்றுவது சிறப்பு என்பதும் அவ்வாறு நிறைவேற்றினால் ஸக்காத் கொடுத்தவரின் கடமை முடிந்துவிடும் என்பதும் இஸ்லாமிய ஆட்சி நடைபெறக்கூடிய பகுதிகளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகும். முஸ்லிம்களின் பொறுப்பாளியாக கலீபா இருப்பதால் அவர் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அவர்களது ஸக்காத்தைச் செலவிட அதிகாரம் பெற்றவர் என்கிற வகையில் இது சாத்தியமாகிறது.

## 2. இஸ்லாமிய வங்கிமுறை

- இன்று முஸ்லிம் நாடுகளிலும், முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் இஸ்லாமிய வங்கி அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. உலகிலுள்ள ஐந்து கண்டங்களிலும் சிறிய அளவிலும் பாரிய அளவிலும் பல்வேறு பெயர்களில் இந்த வங்கியமைப்பு செயற்படுத்தப்படுகின்றது. மக்கள் இதன்மீது பூரண நம்பிக்கை கொண்டு தமது கணக்குகளை வைப்புச் செய்கின்றார்கள். தமது கொடுக்கல் வாங்கல் தொடர்புகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த வகையில் நவீன பொருளாதாரக் கருத்தோட்டத்திற்குச் சவாலாக அமையும் விதத்தில் இதன் வளர்ச்சியும் துரிதமடைந்துள்ளது. தற்காலப் பொருளாதார அமைப்பில் நிலவும் சீர்கேடுகள், ஒழுங்கற்ற நிலைமைகள் என்பவற்றை அகற்றி உலகின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக மேம்பாட்டிற்கும் இதன் மூலம்

உதவலாம் என்பது நிதர்சனமான உண்மையாகிவிட்டது. பல நூற்றாண்டு கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட வட்டி முறையின் அடிப்படையிலான (Traditional System) வங்கிகளோடு போட்டியிட்டு சுமார் இரண்டு தசாப்த காலப்பகுதிக்குள் இஸ்லாமிய வங்கி அடைந்திருக்கின்ற முன்னேற்றம் நவீன கால பொருளியல் விற்பன்னர்களை பிரமிக்கச் செய்துள்ளது. எனவேதான் முஸ்லிம் நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாத்திரமன்றி பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மன், போன்ற நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கூட இஸ்லாமியப் பொருளியல், இஸ்லாமிய வங்கியியல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியம் (I.M.F) இதற்கெனத் தனியானதொரு ஆய்வுப்பிரிவையே உருவாக்கியிருக்கின்றது.

**இஸ்லாமிய வங்கியின் தன்மையும் ஒழுங்கமைப்பும்**

- இஸ்லாமிய வங்கி என்பது சமூகத்தில் பரவலாகக் காணப்படும் செல்வத்தைத் திரட்டி சமூக மேம்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும் பயன் நல்கும் விதத்திலும், இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டு வாழ்வுக்குத் துணைசெய்யும் விதத்திலும் நீதமான செல்வப் பகிர்வை உறுதி செய்வதையும், வட்டி நீங்கலான செல்வப்பரிமாற்றத்திற்கு உதவுவதையும் இஸ்லாமிய ஷரீஅத் விதிமுறைகளுக்கேற்ப செல்வத்தை முதலீடு செய்வதன் மூலம் அபிவிருத்தியடைய வழிவகுப்பதையும் இலக்காகக் கொண்ட ஒரு நிதி நிறுவனமாகும். இதன் செயற்பாடுகள் அனைத்தும் தக்வாவின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

இஸ்லாமிய வங்கி தனது இலக்குகளை அடைவதற்குப் பின்வரும் மூன்று பிரதான ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கின்றது.

1) சேமிப்புக்கான தூண்டுதலும் அதற்கான பயிற்சியை வழங்குதலும்

2) உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சி வழங்குதல்.

3). முதலீட்டுத் துறையில் எதிர்நோக்கப்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொடுத்தல்.

**இஸ்லாமிய வங்கியின் அடிப்படைகள்**

இஸ்லாமிய வங்கி தனது இலக்குகளை எய்துவதில் பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்கும்.

1. வட்டியுடனான தொடர்புகள், செயற்பாடுகளை முற்றாகவே தவிர்த்தல்.
2. செல்வம் திரட்டுவதற்குரிய மூலதனமாகப் பணம் மட்டுமன்றி, மனிதனது உடல்ரீதியான, சிந்தனாரீதியான உழைப்பும், நம்பிக்கை, நாணயமும் அவசியமாகின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.
3. பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தல்.
4. செல்வப் பரிமாற்றங்களை இலகுபடுத்தல்.
5. உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.

6. மூலதனத்தை விருத்தி செய்தலும் உறுதிப்படுத்தலும்.

7. இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டுவாழ்வுக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுப்பதோடு மக்கள் மத்தியில் நீதியானதும், சமத்துவமானதுமான வளப்பகிர்வு இடம்பெற உதவுதல்.

8. சமூக ஐக்கித்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் வகைசெய்தல்.

9. ஷரீஅத் சட்ட விதிமுறைகளுக்கமைவான தொழிற்றுறைகளையும் முதலீட்டு முயற்சிகளையும் அறிமுகஞ் செய்தல்.

10. வங்கியின் இயக்கம், செயற்பாடுகள் ஆகிவற்றை இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதிகளுக்கு இசைவாக அமைத்துக் கொள்ளல்.

**3. அத்த.்.மீன் (காப்புறுதி):**

- இஸ்லாமிய அரசு தனது ஆட்சியின் நிழலில் வாழும் எல்லாப் பிரஜைகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இவ்வுத்தரவாதம் சமூகக் கூட்டுப் பொறுப்பினூடாகவோ அல்லது ‘பைத்துல்மால்’ எனப்படும் திறைசேரி மூலமாகவோ நிறைவேற்றப்படுகின்றது. உண்மையில் பைத்துல்மால் என்பது இஸ்லாத்தின் காப்புறுதிக் கம்பனியாகச் செயற்படக் கூடிய ஒரு அமைப்பாகும்.

நாட்டு மக்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு கைகொடுத்து உதவுவது இஸ்லாமிய அரசின் கடமையாகும்.

கடன்பட்ட நிலையில் உள்ளோருக்கும் இஸ்லாம் ஸகாத்தில் இருந்து ஒரு விசேட தொகையை வழங்குகின்றது. இது தவிர இன்னும் பல அமைப்புக்களின் மூலமாகவும் இஸ்லாம் மனிதர்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்றது.

இந்த வகையில் இஸ்லாத்தின் கொடுக்கல் வாங்கல் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் காப்புறுதி அமைப்புக்களைச் செயற்படுத்துவதில் தவறில்லை. இஸ்லாத்தின் காப்புறுதி அமைப்பு என்பது ஒத்துழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்பவற்றின் அடிப்படையில் நன்கொடைகளைப் பெற்று இயங்கும் ஒரு நலன்புரி நிறுவனமாகவே பெரும்பாலும் அமையும்.

ஆயினும் இன்று நடைமுறையில் உள்ள நவீன காப்புறுதிக் கம்பனிகளும் அவற்றின் செயற்பாடுகளும் இஸ்லாத்திற்கும் அதன் அடிப்படைகளுக்கும் முரண்பட்டதாகவே அமைந்துள்ளன.

இதனாலேயே நடைமுறையில் நாம் காணும் ஆயுள் காப்புறுதி உட்பட அனைத்து வகையான நவீனகாப்புறுதி அமைப்புக்களும் ஹராமானவை என அறிஞர்கள் கருதுகின்றனர். ‘மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமி’ எனும் இஸ்லாமிய சட்டமன்றமும் இத்தீர்ப்பையே வழங்கியுள்ளது. சூதுக்குரிய பண்புகள், வட்டி, பிறர் செல்வத்தை எத்தகைய பிரதியீடும் இன்றிப் பெறும் நிலை ஆகியன நவீன காப்புறுதியுடன் தொடர்புபட்டுள்ளன.

அத்தோடு கொடுக்கல், வாங்கலில் இருக்கக்கூடாத மயக்கமான, தெளிவற்ற தன்மைகள் காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்டிருப்பதனாலும் இவ்வமைப்புக்கள் விலக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதி அமைப்பு பெரியளவில் இஸ்லாமிய சட்டத்துடன் முரண்படுகின்றது. ஏனைய காப்புறுதி முறைகளைப் பொறுத்தவரையில் (உ.ம்) அனர்த்தங்களுக்கான காப்புறுதி) அவற்றை சில திருத்தங்கள் செய்வதன் ஊடாக இஸ்லாமியமயப்படுத்த முடியும்.

உதாரணமாக இஸ்லாமிய சட்ட அறிஞரான கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அனர்த்தங்கள் மீதான காப்புறுதியை 'நஷ்டஈட்டு நிபந்தனையுடன் கூடிய நன்கொடை' என்ற அடிப்படையில் இஸ்லாமிய முறையில் மேற்கொள்ளலாம் என்கிறார். அதாவது ஒருவர் தனக்கு (பொருள்) ஆபத்து ஏற்படும் போது அதன் இழப்பின் சுமையைக் குறைக்கக்கூடிய ஒரு தொகையைத் தனக்கு நட்டஈடாகத் தர வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தனது கொடுப்பனவைக் கம்பனிக்கு நன்கொடையாக வழங்குகிறார். அந்தக் கம்பனி வட்டி அமைப்பைத் தவிர்ப்பதாக இருக்கும் போது இக்காப்புறுதி முறை ஷரீஅத்துக்கு உடன்பாடானதாக இருக்கும்.

**அஹ்லாகியதுல் முஆமலாத் :**

**முஆமலாத்துக்கும் அஹ்லாக்குக்குமிடையிலான தொடர்பு:**

- இஸ்லாமிய சட்டமென்பது இபாதாத், முஆமலாத், ஜினாயாத், ஹுதூத் முதலிய மனித வாழ்வின் சகல துறைசார்ந்த நடவடிக்கைகளையும் விளக்குகிறது.இபாதாத் தனிமனிதனோடு தொடர்புள்ளதாகவும் அவற்றினாலேற்படும் விளைவுகள் பெரும்பாலும் அவனோடு மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டதாகவும் அமைந்துள்ளது. எனினும் முஆமலாத் எனும் வார்த்தையால் குறிக்கப்படும் கொடுக்கல்-வாங்கல் தொழில் சார் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அவை தனிமனிதனுடன் மாத்திரமன்றி அவன் வாழும் சமூகத்துடனும் தொடர்புடையதாக உள்ளன. அந்த வகையில் முஆமலாத் பற்றிய விளக்கம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

  இஸ்லாம் சந்தையின் சுதந்திர இயக்கத்துக்குத் தடையாக அமையாத அதேவேளை நுகர்வோனின் நலன் நோக்கிய பரிமாற்றம் அங்கு நடைபெறுவதை உறுதிப்படுத்துகின்றது. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் சந்தையை மிகக் கவனமாக நோக்குபவராக இருந்தார்கள். மதீனாவில் முஸ்லிம்களுக்கென்றே பிரத்தியேக சந்தையொன்று அமைக்கப்பட்டிருந்தது. யூதர்களான பனூ கைனுகாக்களின் சந்தை ஆக்கிரமிப்புப் போக்குக்கு எதிராக நபி (ஸல்) அவர்கள் இவ்வழிமுறையைக் கையான்டார்கள். முஸ்லிம்களின் இந்தச் சந்தையை நபியவர்கள் கடந்து செல்லும் போதெல்லாம் வியாபாரிகளை நெறிப்படுத்துபவர்களாகவும், அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவராகவும்,எச்சரிப்பவர்களாகவும், மேற்பார்வை செய்பவராகவும் நடந்து கொள்வார்கள்.ஏனெனில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கம் பேணப்படும் போது சமூகநலன் மேம்படுத்தப்பட வழி பிறக்கிறது.

  நவீன பொருளியல் சிந்தனைகள் சந்தையை ஒழுக்கப் பெறுமானங்கள் மிளிர வேண்டிய ஓரிடமாக என்றும் கருதியதில்லை.உற்பத்தியாளன் தனது உற்பத்திப் பொருட்களைக் கேள்வி நோக்கம் கருதாது நிரம்பல் செய்து உச்ச லாபத்தை எவ்வழிமுறையைக் கையாண்டேனும் அடைவதில் தவறில்லை என்பதே அதன்

நிலைப்பாடாகும்.எனவே தான் சாதாரண மனித தர்மங்களே மோசமானவை எனக் கருதும் மோசடி, ஏமாற்றுதல், வஞ்சித்தல் போன்ற பண்புகளை வியாபாரத் திறன்கள்,வணிக நுட்பங்கள் என அது வர்ணிக்கின்றது.

இஸ்லாம் இப்பகுதியில் மிக நிதமானதாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்கிறது.தனி மனித முயற்சிகளை உற்சாகப்படுத்தும் அதேவேளை அவை இன்னொருவரின் நலன்களைப் பாதிக்காதிருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றது. இஸ்லாமிய வர்த்தகக் கொள்கையும், வியாபார முறைமைகளும் உயர்ந்த ஒழுக்கப் பண்பாட்டு விழுமியங்களின் அடியாக வடிவமைக்கப்பட்டுள்ளமையை அவற்றைக் கூர்ந்து நோக்கும் எவரும் எளிதாகப் புரிந்து கொள்வர்.

இஸ்லாம் அனுமதிக்காத எப்பொருளையும் விற்றல்,வாங்கல்,நுகர்தல் அதற்கு நடுவராக இருத்தல் உள்ளிட்ட அனைத்துக் கருமங்களையும் அது முற்றாகத் தடுக்கின்றது. இவ்வகையில் இஸ்லாம் தடுத்துள்ள எப்பண்டத்தையும் சேவையையும் பரிமாற்றம் செய்யக் கூடாது எனக் கண்டிப்பாகக் கூறப்பட்டுள்ளது.ஜாபிர்(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறுகிறார்கள்: 'நிச்சயமாக அல்லாஹ் மதுவை, இறந்தவற்றை, பன்றியை, சிலைகளை விற்பனை செய்வதைத் தடுத்துள்ளான்.'

இஸ்லாத்தின் விற்பனை ஒழுங்குகளில் மனித நலனுக்குத் தீங்காக அமையும் அனைத்தும் தடுக்கப்பட்டிருப்பதால் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பன வரையறுத்துக் கூறாத மனித ஆரோக்கிய வாழ்வுக்குத் தடையாக அமையும் அனைத்து வியாபார நடவடிக்கைகளும் முற்றாகத் தடுக்கப்பட்டனவாகும்.இவ்வகையில் பழுதடைந்த உணவுகள், பானங்கள், காலாவதியான உணவுப் பொருட்கள்,பானங்கள்,சிபாரிசு செய்யப்படாத மருந்துவில்லைகள்,கதிர்வீச்சுக்குள்ளான பொருட்கள்,புகைத்தல் பொருட்கள் முதலியவற்றை விற்பனை செய்வது ஹராமாகும்.அவ்வாறே தங்கப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் போன்றவற்றையும் விற்பனை செய்ய முடியாது. இவற்றை ஆபரணங்களாகப் பயன்படுத்த அனுமதித்த இஸ்லாம் பாத்திரங்களாக இவற்றைப் பயன்படுத்துவதைக் கண்டிக்கின்றது. அத்தோடு தங்கத்தையும் வெள்ளி யையும் பிறருக்கு வழங்காமல் சேகரித்து வைத்திருப்போரை அல்குர்ஆன் எச்சரிக்கின்றது.

அவ்வாறே இஸ்லாம் அனுமதிக்காத வர்த்தக முறைகளுள் கீழான உணர்வுகளையும், நெறிபிறழ்ந்த சிந்தனைகளையும் தூண்டும் தொடர்பு சாதனங்களை விற்பதும் அடங்குகின்றது.இவ்வகையில் ஆபாச இறுவட்டுகள், திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், பாடல்கள், சஞ்சிகைகள் முதலியவற்றை உற்பத்தி செய்வது, சந்தைப்படுத்துவது, விற்பனை செய்வது முதலிய அனைத்துக் கருமத்தொடர்களும் தடுக்கப்பட்டனவாகும்.

## முஆமலாத் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்

ஒரு முஸ்லிம் முஆமலாத் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பின்வரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி நடப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. உண்மை பேசுதல்.

ஒரு மு.்.மினின் ஈமானிய உணர்வின் வெளிப்பாடாக இஸ்லாம் இப்பண்பைக் கருதுகின்றது. இன்றைய உலகின் வர்த்தக நடவடிக்கைகளில் பொய்யும் ஏமாற்றுதலும் வியாபார உத்திகளாகவே கருதப்படுகின்றன.அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற வியாபாரியை நபி(ஸல்) அவர்கள் ''அத்தாஜிரு அஸ்ஸதூக்'' எனக் குறிப்பிட்டார்கள்.

'நேர்மையான வியாபாரி மறுமையில் நபிமார்களுடனும் நல்லடியார்களுடனும் ஷுஹதாக்களுடனும் இருப்பர்' என்ற நபிமொழி இக்கருத்தை விளக்குகின்றது. (திர்மிதி).

உண்மை பேசல் வாங்குவோனுக்கும் விற்போனுக்கும் அருளாக அமைகின்றது என்ற கருத்தைப் பின்வரும் நபிமொழி விளக்குகின்றது. *'விற்போனும்,வாங்குவோனும் விற்பனையில் நேர்மையாகவும், சத்தியம் பேணியும் நடந்து கொண்டால் அவர்களிருவரது வியாபாரத்திலும் அருள் பாலிக்கப்படுகின்றது.உண்மையை மறைத்தும்,பொய்யுரைத்தும் நடந்து கொள்வார்கள் என்றால் அவர்களது வியாபாரத்தில் அருள் அழிக்கப்படும்.' (புகாரி, முஸ்லிம்)*

தனது வியாபாரப் பொருட்களை விற்க வேண்டும் என்பதற்காக அதன் தன்மைகளைக் கூறிப் பொய்ச் சத்தியம் செய்வதை நபி(ஸல்)அவர்கள் கண்டித்துள்ளார்கள்.

நபி(ஸல்)அவர்கள் கூறுகிறார்கள் அல்லாஹ் 04 பிரிவினரை வெறுக்கிறான்.

1. பொய்ச் சத்தியம் செய்யும் வியாபாரி
2. கர்வம் பிடித்த ஏழை
3. வயோதிப விபச்சாரி.
4. அநியாயக்கார ஆட்சியாளன்.(நஸயீ)

இன்றைய வர்த்தக உலகில் இத்தகைய பொய்ச்சத்தியங்களின் இடத்தை வர்த்தக விளம்பரங்கள் பிடித்திருப்பதாக கலாநிதி யூசுப் அல் கர்ளாவி குறிப்பிடுகிறார். நுகர்வோனை ஈர்க்கக் கூடிய வகையில் பொய்யான மாயைகளைக் கற்பிதம் செய்து வசீகரமான வசனங்களாலும், கவர்ச்சிகரமான பாடல்கள்,நடனங்கள் என்பவற்றாலும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி இலாபமீட்டும் வணிக முயற்சியாகவே விளம்பரங்கள் அமைகின்றன.எனவே இத்தகைய பண்பாடற்ற செயற்பாடுகள் அனைத்தும் உண்மைக்கு முரணானவை என்ற வகையில் இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை.

2. நாணயம்.

நம்பிக்கை நாணயம் இஸ்லாம் வரவேற்கும் அதியுயர் பண்பாகும். அல்குர்ஆன் இதனை மு.்.மின்களின் பண்பாகக் குறிப்பிடுகின்றது.

*‘அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தமது வாக்குறுதிகளிலும் நம்பிக்கை நாணயத்திலும் பேணுதலுடன் நடந்து கொள்வார்கள்.’(அல் மு.ஃ.மினூன்: 08)*

அவ்வாறே இதற்கு எதிர் பண்பாக அமையும் மோசடி செய்வதை இஸ்லாம் முனாபிக்களின் இயல்பாகக் கருதுகின்றது. நபி(ஸல்)அவர்கள் கூறுகிறார்கள் பின்வரும் நான்கு குணங்களும் எவரிடம் காணப்படுகின்றனவோ அவர் தெளிவான முனாபிக் ஆவார்.

1. நம்பினால் துரோகம் செய்வார்.
2. பேசினால் பொய் பேசுவான்.
3. வாக்களித்தால் மாறு செய்வான்.
4. உடன்படிக்கை செய்தால் மீறி நடப்பான். (புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் வியாபார நடவடிக்கைகளில் நாணயம் எனும் பண்பு கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்கிறது. அதிலும் குறிப்பாக ஒரு தரப்பினரின் பொறுப்பு இன்னொரு தரப்பினரிடம் விடப்படும் கூட்டு வியாபாரம், கூட்டுப்பங்காண்மை, பங்குடமை முதலிய ஒப்பந்தம் சார்ந்த வியாபார நடவடிக்கைகள் நம்பிக்கை நாணயத்தின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன.

3. அந்நஸீஹாவைப் பேணல்.

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் விற்போன் தனது வியாபாரப் பொருளின் உள்ளார்ந்து இருக்கும் சிறிய குறைபாடுகளையும் வாங்குவோனுக்கு விளக்கி விற்பனை செய்யும் பண்புள்ளவனாக இருக்க வேண்டுமென்பதை இப்பதத்தினூடாக விளக்குகிறார்கள்.

நபி(ஸல்) அவர்கள் இப்பண்பை இதுவே முழுமையான மார்க்கமாகும் என்று கூறியுள்ளார்கள். இந்நபிமொழியை தமீமுத்தாரி(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். *‘மார்க்கம் என்பது நல்லுபதேசமாகும். அது அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் அவனது வேதத்திற்காகவும் முஸ்லிம்களின் தலைவர்களுக்காகவும் முஸ்லிம் சமூகத்துக்காகவும் அமையும். (முஸ்லிம்)*

இந்நபி மொழி மிகப் பரந்த பொருளைத் தருகின்றது.இமாம் கதாபி உள்ளிட்ட பல இமாம்களும் இதனை விரிவாக விளக்குகின்றனர். அந்நஸீஹாவைப் பேணுவது பற்றி இந்நபிமொழியைப் பார்க்கும் போது ‘முஸ்லிம் சமூகத்துக்கும்’ எனும் பதம் முஸ்லிம்களின் அனைத்து நலன்களிலும் அக்கறை எடுத்தல், அவர்களை ஏமாற்றுதல், வஞ்சித்தல், மோசடி செய்தல் போன்ற பண்புகளிலிருந்து தவிர்ந்து நடத்தலைக் குறிக்கின்றது.

அவ்வாறே நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரனாவான்.எனவே ஒரு முஸ்லிம் தனது சகோதரனுக்கு ஒரு பொருளை விற்பனை செய்யும் போது அதில் குறை இருப்பின் அதை விளக்கிக் காட்டியே அல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. (முஸ்னத் அஹ்மத்)

4. நேர்மையும் நீதமும்.

வியாபார நடவடிக்கைகளில் மட்டுமல்லாது இஸ்லாமிய பொருளியல் சிந்தனைகளினதும் அடிப்படையாக இப்பண்பு அமைகின்றது.இப்பண்பின் பிரத்தியட்ச வெளிப்பாடாகவே வட்டி தடை பற்றிய சட்டவிதிகள் அமைந்துள்ளன.

அவ்வாறே அளவை நிறுவைகளில் மோசடி செய்தல் நீதமாக நடத்தலுக்கு எதிரான பண்பாக அமைகிறது.இதனை அல்குர்ஆன் பல இடங்களில் விளக்குகின்றது.

*'அளவையிலும் நிறுவையிலும் நீதியைக் கடைப்பிடியுங்கள் (அல்அன்ஆம்: 152)*

*'மேலும் அளந்து கொடுக்கும் போது நிறைவாக அளந்து கொடுங்கள்.எடை போடும் போது சரியான தராசைக் கொண்டு எடை போடுங்கள்.இதுவே முறையானதும் மிக நல்லதுமாகும்.(அல்இஸ்ரா: 35)*

இறைத்தூதர் சுஐப் அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட 'அய்கா' சமூகம் அளவை நிறுவைகளில் மோசடி செய்து அல்லாஹ்வின் வரம்புகளை மீறி நடந்த போது அச்சமூகமே அழிக்கப்பட்டதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.எனவே நீதமாக நடந்து கொள்ளல் இஸ்லாமிய வணிக நடைமுறைகளில் அவசியம் பேணப்பட வேண்டிய பண்பாகும்.

5. தாராளத்தன்மை.

இஸ்லாமிய வணிக நடைமுறைகளில் பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் இன்னொரு விழுமியமாக தாராளத் தன்மை அமைகின்றது. நபி(ஸல்)அவர்கள் கூறியதாக ஜாபிர்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

*'தாராளத்தன்மையோடு நடந்து கொள்ளும் ஓர் அடியான் மீது அல்லாஹ் அருள் புரிகிறான்.அவன் விற்றாலும் வாங்கினாலும் உரிமையொன்று கேட்கப்பட்டாலும் அவற்றில் தாராளத்தன்மையோடு நடந்து கொள்கிறான். (புஹாரி)*

6. ஏனையவர்களது உரிமைகளைப் பேணல்.

வணிக முயற்சிகளில் மற்றயவர்களின் விற்றல்,வாங்கல் உரிமைகளைப் பாதிக்காது நடந்து கொள்வது அவசியமாகும் என இஸ்லாம் கருதுகின்றது.இன்றைய வணிக நடவடிக்கைகள் அனைத்தும் பிறரது உரிமைகளைப் பேணுவதை நிபுணத்துவமற்ற வணிக நடத்தைகளாவவே கருதும்.இஸ்லாம் இப்பண்பை சமூக உருவாக்கத்தின் அடித்தளமாகவே கருதுகின்றது. நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா(ரழி) அவர்கள் கூறினார்கள்:

*'உங்களில் ஒருவர் தனது சகோதரனுக்கெதிராக வியாபாரம் செய்ய வேண்டாம்.தனது சகோதரனின் திருமணப் பேச்சுக்கு எதிராக திருமணப் பேச்சில் ஈடுபட வேண்டாம்.' (புஹாரி, முஸ்லிம்)*

*'உங்களில் ஒருவர் தனது சகோதரனின் வியாபாரத்துக்குப் போட்டியாக வியாபாரம் செய்ய வேண்டாம். தனது சகோதரனின் பேரம் பேசலுக்கெதிராக பேரம் பேச வேண்டாம்.' (முஸ்லிம்)*

7. எல்லைப்படுத்தப்படாத தர்மம்.

வணிக நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய களங்கங்களிலிருந்து தூய்மை பெறும் நோக்கோடு தர்மங்கள் செய்வதை இஸ்லாம் உயரிய விழுமியங்களில் ஒன்றாகக் கருதுகின்றது.கைஸ் இப்னு அபீ கர்ஸா(ரழி)அவர்கள் அறிவிக்கிறார்கள்.நபியவர்களது காலப்பிரிவில் நாங்கள் வியாபாரத்தில் தரகு செய்து கொண்டிருந்தோம்.அப்போது எம்மைக் கடந்து சென்று கொண்டிருந்த நபியவர்கள் அதனைவிட மிக அழகியதொரு பெயரால் அதைப் பெயரிட்டு இப்படிக் கூறினார்கள் *'வியாபாரிகளே!நிச்சயமாக வணிகம் பொய்ச்சத்தியத்தையும் அத்துமீறல்களையும் கொண்டது.எனவே அவற்றிலிருந்து தூய்மை பெற தர்மம் செய்யுங்கள்'.(அபூதாவூத்).*

இங்கு தர்மம் என்று குறிப்பிடுவது வியாபாரியின் சுதந்திரத்திற்கு விடப்பட்டுள்ளது.

நேர்மையான வியாபாரி தனது வணிக முயற்சிகளை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறத்தக்கவாறு அமைத்துக் கொள்வான்.அவனது வாழ்வின் இலக்காக இறை திருப்தியைப் பெறுவது அமைந்திருக்கும்.இவ்வகையில் மறுமைப் பயன்களை இலக்காகக் கொள்ளும் ஒரு வியாபாரி பின்வரும் பண்புகளைப் பேணுவது அவசியமாகும் என இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் தனது இஹ்யாவில் குறிப்பிடுகிறார்கள்:

1. எண்ணத்தை சீரமைத்துக் கொள்ளல்.
2. மார்க்கத்தில் முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ள கடமைகளுள் ஒன்றை நிறைவேற்றுவதாக உணர்தல்.
3. மறுமைப் பயன்களுக்கு முக்கியத்துவமளித்தல்.
4. சதாவும் அல்லாஹ்வின் நினைவில் அவனைத் துதி செய்து வாழல்.
5. திருப்தியோடும் பேராசையின்றியும் இருத்தல்.
6. சந்தேகத்துக்கு இடமளிப்பவற்றைத் தவிர்ந்து கொள்ளல்.
7. தனது அனைத்துச் செயல்களையும் சுய விசாரணை செய்து கொள்ளல்.

மேற்கூறப்பட்ட அனைத்து ஒழுக்கப் பண்புகளையும் எமது முஆமலாத் நடவடிக்கைகளில் பேணி வருவதோடு நுகர்வோருடனான சகல உறவுகளையும் அல்லாஹ்வுக்குப் பொருத்தமாக அமைத்துக் கொள்வதும் அவை ஒவ்வொன்று பற்றியும் சுயவிசாரணை செய்து தன்னளவில் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் ஒரு நல்ல வியாபாரியின் பண்பாகும்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**


1. இஸ்மாயில் முகம்மத், முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டம் (1872), அனஸ் புக் சென்டர், சென்னை.
2. அன்வர்தீன், இஸ்லாம் இயம்பும் பாகப்பிரிவினை (1887), ஹாஜியார் புக் டிப்போ, தரீகாவூர்
3. அரபாத் கரீம், இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம் (2011), நதா பப்ளிகேஷன், பேருவல
4. மஸாஹிர் எஸ். எம், வங்கி
5. கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, ஹலாலும் ஹராமும், (1986), ரேஷ்மா பதிப்பகம்
6. முகம்மத் முஜீப், முதலீட்டு அடிப்படையிலான வியாபாரம் (2007), நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், பேருவல.
7. முகம்மத் அக்ரம் கான், இஸ்லாமிய பொருளியல் (1994), இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்.
8. அப்துர் ரஹ்மான், வறுமை ஒழிப்பு, (1999) புர்கான் பப்ளிகேஷன்.

**தேர்ச்சி 08: தனிமனித குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி குடும்ப வாழ்வை சீர்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1: திருமணம் பற்றிய இஸ்லாமிய வழிமுறைகளை விளக்கிக் காட்டுவார்.**

**பாடவேளைகள் : 16**

**கற்றல்பேறுகள்**

- திருமணத்திற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவார்.
- திருமணத்திற்கான இஸ்லாத்தின் விதிமுறைகளையும் ஒழுங்குகளையும் விபரிப்பார்.
- திருமணம் தொடர்பான இஸ்லாமிய போதனைகளை விளங்கி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- **திருமணத்தின் முக்கியத்துவம்**
  இஸ்லாம், திருமணத்தை இபாதாவாகக் கருதுகின்றது. மனித இனத்தின் அடிப்படையாகவும் வாழ்வொழுங்கின் அடித்தளமாகவும் திருமணம் நோக்கப்படுகின்றது. திருமணத்தின் முக்கியத்துவத்தை பல்வேறு வழிமுறைகளில் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

- திருமணம் தொடர்பான அல்குர்ஆன் ஸுன்னாப் போதனைகள் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

  *“(ஆணாயினும் பெண்ணாயினும்) உங்களில் எவருக்கும் வாழ்க்கைத் துணை இல்லாவிட்டால் அவர்களுக்குத் திருமணம் செய்து விடுங்கள்” (அன்நூர்: 32)*

  *“நீங்கள் சேர்ந்து வாழக் கூடிய உங்கள் மனைவிகளை உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்குத் இவைகளில் நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன” (அர்ரூம்: 21)*

  மேற்படி அல் குர்ஆன் வசனங்கள் ஒவ்வொரு கோணங்களில் திருமணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. முதல் வசனம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கத் திருமணத்தின் அவசியப்பாட்டையும், இரண்டாவது வசனம் மன நிம்மதியோடு வாழ்வதற்கு திருமணத்தின் தேவையையும் எடுத்துக் கூறுகின்றது.

- அகில உலகிற்கும் முன்மாதிரி வாழ்க்கையொன்றை வாழ்ந்து காட்டிய முஹம்மத் (ஸல்) அவர்களது போதனைகளும் திருமணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றன.
  *“வாலிபர்களே உங்களில் பலமுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளவும், ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும், கற்பைப் பேணவும் சிறந்ததாகும்.*

*சக்தியில்லாதவர்கள் நோன்பு நோற்கவும், அது அவருக்குப் பாதுகாப்பாகும்'' (புகாரி)*

நபி (ஸல்) அவர்களது மனைவியரிடம் அவரது இபாதா பற்றிக் கேட்ட சில நபித்தோழர்கள் தம்மைக் குறைவாக மதிப்பிட்டு ஒருவர் தான் இரவு முழுவதும் இபாதத் செய்வதாகவும்,மற்றவர் காலமெல்லாம் நோன்பு நோற்பதாகவும், மற்றவர் தான் திருமணம் முடிக்காமல் பெண்களிலிருந்து ஒதுங்கி வாழப்போவதாகவும் கூறிக்கொண்டார்கள். இதையறிந்த நபி (ஸல்) அவர்கள் ''நீங்கள்தானே இவ்வாறு கூறியவர்கள். சத்தியமாக உங்களை விட நான் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுகிறேன். உங்களை விட நான் அவனுக்கு பயபக்தியுடையவனாக இருக்கிறேன். எனினும் நான் நோன்பு நோற்கிறேன். நோன்பை நோற்காமலுமிருக்கிறேன். நான் தொழுகிறேன். நித்திரையும் செய்கின்றேன். பெண்களை விவாகமும் புரிகின்றேன். எவன் எனது (ஸுன்னாவை) வழி முறையைப் புறக்கணிக்கின்றானோ அவன் என்னைச் சார்ந்தவன் அல்லன்'' என்று கூறினார்கள். (புஹாரி)

*''திருமணம் செய்துகொள்ளுங்கள். உங்களைக் கொண்டு சமூகம் பெருகுவதை விரும்புகின்றேன். நீங்கள் துறவிகள் போல் இருக்க வேண்டாம்'' (பைஹகி)*

*''ஒரு மனிதன் இறந்ததன் பின்னர் மூன்று விடயங்களைத் தவிர மற்றைய அனைத்து விடயங்களும் அவனை விட்டும் துண்டிக்கப்பட்டுவிடும். அவை நிலையான தர்மம், பயனுள்ள கல்விக்காகச் செய்துவிட்டுச் செல்லும் சேவைகள், தமக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான குழந்தைகள் உருவாக்கிவிட்டுச் செல்லல்'' (புஹாரி)*

- இஸ்லாமியக் கண்ணோட்டத்தின் திருமணத்தின் இலக்குகள் பற்றி நோக்குவதினூடாகவும் திருமணத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். இஸ்லாம் திருமணத்தை வெறுமனே பாலியல் தேவையை மாத்திரம் அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு அனுமதிக்கவில்லை. மாறாக ஈருலக வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கக்கூடிய உயர் நோக்கங்களை அது கொண்டுள்ளது.

1. ஆண்கள், பெண்கள் தம் கற்பையும், ஒழுக்கத்தையும் பாதுகாத்துக் கொள்ளல்.
   எனவேதான் இஸ்லாம் விபசாரம், தன்னினச் சேர்க்கை போன்ற தகாத உறவுகளை நெருங்கக் கூடாது என வலியுறுத்திப் பாலியல் உணர்வைத் தீர்த்துக் கொள்வதற்கும், கற்பைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கும், ஒழுக்கப் பண்புகளைக் காத்துக் கொள்வதற்குமான அரண் அல்லது கோட்டை எனக் கூறுகின்றது.

2. பண்பாடுள்ள சமூக இனவிருத்திக்கு அடிப்படையாகவுள்ளது.
   மனித சமூகத்தின் நிலைப்பாட்டுக்கும் அவனது வாழ்க்கைப் பணிகளை நிலைநாட்டுவதற்கும் திருமணம் அடிப்படையாகின்றது.

3. கணவன் மனைவியரிடையே அன்பு, இரக்கம், பாசம், பரஸ்பர உதவி செய்தலையும் ஊக்குவித்தல்.
   அல்குர்ஆனில் கணவன், மனைவி உறவு, உடைக்கும் உடலுக்கும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளமை அவ்விருவரிடமும் இருக்க வேண்டிய நெருக்கமான உறவின் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது.
4. குடும்ப, சமூக நலன்களையும் மானிடப் பெறுமானங்களையும் காத்தல்.

திருமணம் மூலம் கணவன் மனைவி பொறுப்புணர்வு தோற்றுவிக்கப்படுவதன் மூலம் ஆரோக்கியமான குடும்பம், சமூகம் உருவாக வழி பிறக்கின்றது.

5. ஒரு தலைமுறை இன்னொரு தலைமுறைக்கு மனிதத்துவப் பண்பாடுகளைக் கடத்த முடிகின்றமை.
திருமணம் மூலம் உருவாகும் இவ்வாறான சந்ததிகளே மனித இனத்தின் ஆரோக்கியமான நீண்டகால இருப்பை உறுதி செய்கின்றன.

- திருமணத்தின் முக்கியத்துவத்தை அது தரும் பயன்பாடுகளை வைத்தும் புரிந்து கொள்ளலாம். உடல், உள, ஒழுக்க, சமூக ரீதியிலான பயன்பாடுகளை இஸ்லாமிய வழிமுறையிலான திருமணத்தின் மூலம் அடைந்து கொள்ள முடிகின்றது.

அல் குர்ஆனில் அர்ரூம்: 21 வசனத்தில் மன நிம்மதி, அன்பு, நேசம் எனும் உளரீதியான நன்மைகள் திருமணத்தின் மூலம் கிடைப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இதனால்தான் திருமணத்திற்கு முன்னர் கடின மனப்பாங்குடையவர்களாக இருந்தவர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகவும், பாசம், இரக்க சுபாவம் உள்ளவர்களாகவும் மாறுவதைக் காண முடிகின்றது. சோம்பேறியாகவும், ஊதாரியாகவும், உலோபியாகவும் இருந்தவர்கள் சுறுசுறுப்பு, மிதமாக செலவளிக்கும் பண்பும், செலவழிக்கும் பொறுப்புணர்வுள்ளவராகவும் நடந்து கொள்ளும் மனப்பாங்கைப் பெற்றுக் கொள்வதைக் காண முடிகின்றது.

- பாலியல் உணர்வை நெறிப்படுத்துவதற்கு ஒரு மாற்றீடாக இஸ்லாம் திருமணத்தை அறிமுகம் செய்கின்றது.

'விசுவாசிகளே விபசாரத்தை நெருங்காதீர்கள்.ஏனென்றால் நிச்சயமாக அது மானக் கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கின்றது" (அல்இஸ்ரா: 32) எனக் கூறுகின்றது.

இஸ்லாம் அறிமுகப்படுத்தும் திருமணம் ஆரோக்கியமான குடும்பங்களை உருவாக்குகின்றது. இதனால் ஆரோக்கியமானதொரு சமூகம் உருவாகின்றது. சமூகத்திலுள்ள குடும்பங்கள் புரிந்துணர்வோடும், அன்பு பாசம் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவுதலில் ஈடுபடுகின்றார்கள். இதனால் சமூகப் பெறுமானம் உயர்கின்றது.
*''அவன்தான் (ஒரு துளி) விந்திலிருந்து மனிதனை (இரத்தக்கலப்பு) உற்பத்தி செய்கின்றான். பின்னர் அவனுக்குச் சந்ததிகளையும், சம்பந்தங்களையும் ஆக்குகிறான்'' (அல்புர்கான்: 54)*
திருமணம் செய்து கொள்வதால் உடல் ரீதியிலான நன்மைகளும் கிடைக்கின்றன. உலக விவகாரங்களில் ஈடுபடும் போது ஏற்படும் களைப்பு, நிம்மதியற்ற நிலை, சோர்வு போன்றவற்றை இது போக்கி விடுகின்றது.

**திருமணத்திற்கான நிபந்தனைகள்**

- திருமணத்தைக் குறிக்க அறபியில் ''நிகாஹ்'' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. மொழி ரீதியாக இப்பதம் திருமண ஒப்பந்தம் செய்தல், மற்றும் மனைவியுடன் உடல் ரீதியாக ஒன்றிணைதல் எனும் கருத்திலும் பிரயோகிக்கப்படுவதுண்டு. இஸ்லாமிய நோக்கில் பின்வரும் அடிப்படையிலேயே அது குறித்துக்

காட்டப்படுகின்றது. ''திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமடையே ஷரீஆ விதித்துள்ள நிபந்தனைகளைப் பேணி, நிர்ப்பந்தமில்லாமல் ஏற்படுத்தி வைக்கப்படுகின்ற ஓர் உடன்படிக்கையைக் குறிக்கின்றது.
உடன்படிக்கைகள் அனைத்தும் அவற்றுக்குரிய நிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றப்பட வேண்டுமென இஸ்லாம் பணிக்கின்றது. திருமணமும் ஒரு புனிதமான ஒப்பந்தம் எனும் அடிப்படையில் அதற்குரிய நிபந்தனைகளைப் பேணி நிறைவேற்ற வேண்டுமென இஸ்லாம் பணிக்கின்றது.

- பொதுவாக திருமண ஒப்பந்தம் சட்டரீதியாக இடம்பெறவும் திருமணத்தால் ஏனைய சட்டங்கள் நடைமுறைக்கு வரவும் சில நிபந்தனைகள் அவசியமாகின்றன. அவற்றை திருமணம் செல்லுபடியாவதற்குரிய நிபந்தனைகள் எனக் குறிப்பிடலாம். ஒரு திருமணம் செல்லுபடியாவதற்குரிய நிபந்தனைகளுள் பின்வரும் விடயம் முதன்மையானதாக நோக்கப்படுகின்றது. அதாவது திருமணம் முடிக்கும் ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக திருமணம் முடிக்க ஆகுமானவர்களாகக் காணப்படல். ஆகவே திருமணத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் மஹ்ரம், அஜ்னப் பற்றிய விடயமாகும். திருமணம் முடிக்க ஹராமாக்கப்பட்ட பெண்கள் யார் என்பதை அறிவதனூடாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்களை அறிந்து கொள்ளலாம். மஹ்ரமிகள் அடிப்படையில் இரு பிரிவினராக நோக்கப்படுகின்றார்கள்.

1. நிரந்தரமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர் (மஹ்ரம் முஅப்பத்)
2. தற்காலிகமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர் (மஹ்ரம் முஅக்கத்)

நிரந்தரமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாமை மூன்று காரணங்களால் நிகழும்

1. இரத்த உறவு
2. திருமண உறவு
3. பால்குடி உறவு

**இரத்த உறவால் திருமணமுடிக்க அனுமதிக்கப்படாதோர்.**

1. பிறப்பின் காரணமாக தாய், தாயின் தாய், இவ்வகையில் மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்.
2. பெற்றெடுத்த பிள்ளைகள், பிள்ளையின் பிள்ளைகள் இவ்வாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
3. தனது சொந்தத் தாய் தந்தையினர் அல்லது அவர்களில் ஒருவரது பிள்ளைகள், அப் பிள்ளைகளின் பிள்ளைகள் இவ்வாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்.
4. சொந்தப் பாட்டன், பாட்டியின் பிள்ளைகள் இது முதலாவது கட்டத்தோடு நின்றுவிடும்.

**திருமண உறவால் மண முடிக்க அனுமதிக்கப்படாதோர்.**

1. மனைவிகளைப் பெற்றெடுத்தோர். அதாவது மனைவியின் தாய், தாயின் தாய், இவ்வாறு மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்.
2. தன்னுடன் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட்ட மனைவியின் பிள்ளைகள், மனைவியின் பிள்ளைகளின் பிள்ளைகள் இவ்வாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்

3. மகனின் மனைவி, மகனின் மகனின் மனைவி, மகளின் மகனின் மனைவி இந்த அடிப்படையில் தொடர்ந்து கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
4. தந்தையின் மனைவி

**பால்குடி காரணமாகத் திருமணம் முடிக்க விலக்கப்பட்டோர்**

1. பால் கொடுத்த பெண்
2. பால் கொடுத்த பெண்ணின் தாய்
3. பால் கொடுத்த பெண்ணின் கணவரின் தாய்
4. பால் கொடுத்த பெண்ணின் சகோதரி
5. பால் கொடுத்த பெண்ணின் கணவரின் சகோதரி
6. பால் கொடுத்த பெண்ணின் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும்
7. ஒரு பெண்ணிடத்தில் பால் குடித்த வகையில் உறவாகும் சகோதரி

இரத்த உறவால் திருமண உறவுவைக்க அனுமதிக்கப்படாதோரே பால் குடியாலும் திருமண உறவு வைக்க அனுமதிக்கப்படாதோராவர்'' (புகாரி, முஸ்லிம்)

**பால்குடி முறையில் மஹ்ரமாவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும்.**

(அ) இரண்டு வயதுக்குட்பட்ட நிலையில் குழந்தையாக இருந்த போது பால் குடித்தவராக இருத்தல்
(ஆ) மார்பகத்தில் வாயை வைத்துக் குடித்திருத்தல்
(இ) குழந்தை நன்கு பசிதீரப் பால் குடித்தல்.

**தற்காலிகமாக திருமண முடிக்க அனுமதிக்கப்படாதோர்**

1. மனைவியின் சகோதரி (ஏக காலத்தில் இரு சகோதரிகளை மனைவியாகக் கொள்ளல்)
2. மனைவியின் தந்தையின் சகோதரி (ஒரு பெண்ணையும் அவளது தந்தையின் சகோதரிகளையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்)
3. மனைவியின் தாயின் சகோதரி (ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்)
4. இன்னொருவரின் மனைவி (திருமணம் முடித்த ஒரு பெண் ஒருவரின் மனைவியாக இருக்கும் வரை வேறொருவரைத் திருமணம் முடிக்கக் கூடாது)
5. தன்னால் மூன்று முறை தலாக் சொல்லப்பட்ட பெண் (மூன்று முறை தலாக் சொல்லப்பட்ட பெண் முதற் கணவனுக்குத் தற்காலிகமாகத் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவளாவாள்)
6. முஷ்ரிக்கான பெண்
7. விபசாரிகள்

மேற்குறிப்பிட்ட சட்ட வரையறைகளைப் பின்பற்றி மஹ்ரமியல்லாத பெண்களை மணமகளாகத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். மஹ்ரமானவர்களைத் திருமணமுடிப்பது ஹராமாகும்.

**மணமகன் - நிபந்தனைகள்**

- முஸ்லிமாக இருத்தல்
- சமகாலத்தில் மூன்றுக்கு மேற்பட்டவர்களைத் திருமணமுடிக்காதவராக இருத்தல்
- மணப் பெண்ணுக்கு அஜ்னபியாக இருத்தல்
- ஹஜ்ஜுக்கோ, உம்ராவுக்கோ இஹ்ராம் தரிக்காதவராயிருத்தல்

**மணமகள் - நிபந்தனைகள்**

- முஸ்லிம் அல்லது தூய அஹ்லுல் கிதாபாக இருத்தல்
- மஹ்ரமாக இல்லாதிருத்தல்
- இத்தா அனுஷ்டித்துக்கொண்டிருப்பவளாக இல்லாதிருத்தல்
- ஹஜ்ஜுக்கோ,உம்ராவுக்கோ இஹ்ராம் தரிக்காதவளாயிருத்தல்

- திருமண நிபந்தனைகளுள் மணப் பெண்ணுக்காய் பொறுப்பு நிற்றல் முக்கியமானதொன்றாகும். பொறுப்பு நிற்பவர் 'வலி' என்று அழைக்கப்படுகிறார்.

*பொறுப்புதாரரின்றி திருமணமில்லை; (அஹ்மத், திர்மிதி)*

பொறுப்புதாரராக வருபவர் முஸ்லிமாகவும், புத்தி சுவாதீனமுள்ளவராகவும், சுதந்திர மனிதராகவும், பருவ வயதை அடைந்தவராகவும் ஆணாகவும் இருத்தல் வேண்டும். வலி அல்லது பொறுப்பாளர்கள் யார் என்பதில் இமாம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி ஒரு பெண்ணின் திருமணம் அவளுக்கு நெருங்கிய உறவாகவுள்ள பொறுப்புதாரரின் வார்த்தை மூலமே நிறைவேறும். அவர் இல்லாத போது தூர உறவு கொண்ட பொறுப்புதாரரின் வார்த்தை மூலம் நிறைவேறும். அவரும் இல்லையாயின் நீதிபதியின் வார்த்தையால் நிறைவேறும். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி பொறுப்பாளர் பின்வரும் ஒழுங்கில் வருவார்.

1. தந்தை
2. தந்தையின் தந்தை
3. உடன் பிறந்த சகோதரன்
4. தந்தையின் ஊடாக வந்த சகோதரன்
5. உடன் பிறந்த சகோதரனின் மகன்
6. சகோதரனின் மகன்
7. தந்தையின் சகோதரன்
8. தந்தையின் சகோதரனின் மகன்
9. நீதிபதி

வலி அல்லது பொறுப்புதாரர் ஒழுங்கில் உள்ளவர்கள் எவரும் இல்லாத போது காழி அல்லது நீதிபதி பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய வலியாக வருவார்.

- பொறுப்புதாரர் மத்தியில் பிரச்சினைகள் ஏற்படல்
- பொறுப்புதாரர் இல்லாதிருத்தல்

- திருமணம் நிறைவேறுவதற்கு இரண்டு சாட்சிகள் அவசியமாகும். அவர்கள் சாஹித்கள் எனப்படுகின்றனர். சாட்சிகள் இல்லாவிட்டால் திருமண ஒப்பந்தம் செல்லுபடியாகாது.

*''பொறுப்புதாரர், இரு நேர்மையான சாட்சிகள் இன்றித் திருமணம் என்பது கிடையாது'' (தாரகுத்னி)*

சாட்சியாக வருபவர்கள் முஸ்லிமாகவும், புத்தி சுவாதீனமுள்ளவராகவும், பருவ வயதை அடைந்தவராகவும், சுதந்திரவானாகவும், ஒப்பந்தத்தின் இரு தரப்பினரதும் பேச்சைக் கேட்டு விளங்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். சாட்சிகள் நேர்மையுடையவராகவும் நன்னடத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும் என்பது ஷாபிஈ மத்ஹபினரது கருத்தாகும். சாட்சிகள் இரு ஆண்களாக இருக்க வேண்டுமென்பது மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி மத்ஹபினரின் கருத்தாகும்.

இஸ்லாமிய ஷரீஅத்தில் திருமணம் என்பது நிர்ப்பந்தத்திற்குட்படாத பரஸ்பர திருப்தியில் உருவாகும் ஓர் ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தத்தின் ஷர்த்துக்களைப் பேணி இதனை எங்கும் எவ்விடத்திலும் நிறைவேற்றலாம். திருமண ஒப்பந்தத்தின் அடிப்படைப் பகுதி ஆண், பெண் இருவரினதும் பரஸ்பர திருப்தியாகும். திருப்தி உள்ளத்தோடு சார்ந்த செயலாகவுள்ளது. உள நிலையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். உள்ளத்தின் நிலையைப் புரிந்து கொள்ள வாய்மொழியே சாதனமாகவுள்ளது. திருமண ஒப்பந்தத்திலும் இது கடைப்பிடிக்கப்படுகின்றது. திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினரும் தங்கள் திருப்தியைச் சொற்களின் மூலம் வெளியிடுவது ஒரு ஷர்த்தாகவுள்ளது. திருமண ஒப்பந்தத்தில் இரு தரப்பினரிலும் முதலில் பேசுபவரின் வாய் மூல வெளியீடாகத் ;திருப்தியை உறுதிப்படுத்தல்; (ஈஜாப்) எனவும் இரண்டாவது தரப்பினரின் வாய்மூல வெளியீடாகத் திருப்தியுடன் ஏற்றல்; (கபூல்) எனவும் வழங்கப்படுகிறது. ஈஜாப், கபூல் நிறைவேற்றுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் அவசியமாகின்றன.

1. ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர் அதற்கான பூரண தகுதி கொண்டவராக இருக்க வேண்டும்.
2. ஈஜாப், கபூல் ஒரே அமர்வில் நடைபெறல் வேண்டும்.
3. திருமண ஒப்பந்தத்தின் வார்த்தைகளை இரு சாராரும் செவிமடுத்தல்
4. ஈஜாபின் வார்த்தைகளுக்கு முரணாக கபூலின் வார்த்தைகள் அமையாதிருத்தல்

மஹர் என்பது திருமண ஒப்பந்தத்தின் போது மணமகன் மணமகளுக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டிய ஒரு கொடுப்பனவைக் குறிக்கின்றது. இதனைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ வழங்க முடியும். அல் குர்ஆனில் இப்பதம் 'ஸதுகாத்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸதாக் எனவும் இதனை அழைப்பதுண்டு. ஜாஹிலிய்யாக் காலத்திலும் மணப் பெண்ணுக்கு இவ்வாறான அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. இஸ்லாம் பெண்ணின் அந்தஸ்தை உயர்த்தும் ஒரு நடைமுறையாகவும், ஒரு கட்டாயக் கொடுப்பனவாகவும் இதனை விதித்தது.

*''நீங்கள் (திருமணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹரை (திருமணக் கட்டணத்தை) கண்ணியமான முறையில் கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஒரு சிறிதை அவர்கள் (தங்கள்) மனமாற உங்களுக்கு விட்டுக் கொடுத்தால் அதனை நீங்கள் மகிழ்ச்சியுடன் புசிக்கலாம்'' (அந்நிஸா: 4)*

திருமணத்தின் போது மஹர் தொகையை நிர்ணயித்து குறிப்பிடாவிட்டாலும் அல்லது குறிப்பிட்ட பின் உடனடியாகக் கொடுக்காது விட்டாலும் நிகாஹ் செல்லுபடியாகும். ஆனால் பின்னர் மஹரைக் கொடுப்பது நிர்ணயித்ததைக் கொடுப்பது கட்டாயமானதாகும். மஹர் தொகையைக் கணவனது சக்திக்கும் மனைவியின்

அந்தஸ்த்துக்கும் ஏற்ப நிர்ணயிப்பதையே இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

“பணக்காரன் தன் தகுதிக்கேற்பவும் ஏழை தன் சக்திக்கேற்பவும் கண்ணியத்தோடு (அவர்களுக்கு கொடுத்து) பயனடையச் செய்ய வேண்டியது நல்லோர் மீது கடமையாகும்)” (பகரா: 236)

திருமண ஒப்பந்தத்தின் பின்னர் மனைவியுடன் உறவு கொள்ள முன்னர் மஹரை வழங்கிவிடுவதே ஏற்றமானதாகும். மஹரைக் கொடுக்காமல் விடுவதும். கொடுத்த மஹரை மனைவியின் விருப்பமின்றித் திருப்பி எடுப்பதும் கூடாத காரியமாகும். மனைவியாக விரும்பிச் செலவு செய்தால் தவறேதும் கிடையாது.

### திருமணத்தைப் பகிரங்கப்படுத்தல்

- திருமண ஒப்பந்தத்தில் கணவன், மனைவி ஒன்று சேர்ந்ததைப் பகிரங்கப்படுத்தும் ஒரு ஸுன்னத்தான செயலாக வலீமா அமைகின்றது. வலீமா என்பது திருமணத்தின் பின் மணமகன் வழங்கும் விருந்துபசாரமாகும். இந்த விருந்துபசாரத்தில் உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஏழைகள், செல்வந்தர்கள் போன்ற எல்லோரும் அழைக்கப்படுவது சிறந்தது. இது சமூகத்தின் நெருக்கத்தை அதிகரிக்கச் செய்யும். தம்பதியர்களுக்கு துஆச் செய்யவும், வாழ்த்தவும், அறிவுரை கூறவும் வாய்ப்பைத் தரும்.
  நபி (ஸல்) அவர்கள் திருமணத்திற்குப் பின் இரண்டு ‘முத்’ அளவு வலீமா விருந்து கொடுத்தார்கள் என புகாரியில் பதிவாகியுள்ளது. ‘திருமணத்தைப் பகிரங்கப்படுத்தி அறிவியுங்கள்; அதனைப் பள்ளிவாயல்களில் நடத்துங்கள். தப் (ரப்பான்) எனும் இசைக் கருவியைக் கொண்டு முழக்கம் செய்யுங்கள். (திர்மிதி)

திருமண விருந்துபசாரத்திற்கு (வலீமா) அழைத்தால் அதற்குப் பதிலளிப்பது கடமையாகும்.
*உங்களில் ஒருவர் மணவிருந்துக்கு அழைக்கப்பட்டால் அவர் அதற்குச் சென்று விடட்டும்; (புகாரி)*

தம்பதியர்களைப் பின்வரும் துஆவைக் கூறி வாழ்த்திவிடுவது ஸுன்னத்தாகும்.
*“பாரகல்லாஹு லக வபாரக்க அலைக்க வஜமஅ பய்னகுமா பீ கைர்”*
*“அல்லாஹ் உனக்கு அருள் செய்வானாக. உன்னிலும் பரகத் செய்வானாக! நல்ல விடயங்களில் உங்கள் இருவரையும் ஒன்று சேர்ப்பானாக” (அபூ தாவூத்)*

### திருமணத்துக்கான முன்னாயத்தம்

இஸ்லாமிய ஷரீஅத்தின் முதல் முக்கிய நோக்கமாகிய அடங்குகின்ற ழரூரிய்யாத்தின் ஐந்து அடிப்படை அம்சங்களில் பரம்பரையைப் பாதுகாத்தல் பேணலுக்கு திருமணம் அடிப்படையாகின்றது. இந்த வகையில் திருமணம் ஒரு முக்கியமான இபாதத்தாகவுள்ளது. அடிப்படையிலேயே ஸுன்னாவாகவுள்ள திருமணம் ஆணினதும், பெண்ணினதும் உடல், உள, பொருளாதார, சமூக நிலையைப் பொறுத்து வாஜிப், முஸ்தஹப், ஹராம், மக்ரூஹ் என்றவாறு சட்டவிதிமுறையின் பெறுமானம் மாறுபடுகின்றது. மேற்படி விடயங்கள் திருமண முன்னாயத்தத்தில் கவனிக்கப்பட வேண்டும்.

- திருமண முன்னாயத்தத்தில் தெரிவு செய்தலும் ஒன்றாகும். இஸ்லாம் ஆண், பெண் இருபாலாருக்கும் தம் வழ்க்கைத் துணையைத் தெரிவு செய்யும் போது நிலையான அடிப்படைகளின் மீது கவனம் செலுத்துமாறு போதிக்கின்றது. மார்க்க உணர்வு, நல்லொழுக்கம் தெரிவின் அடிப்படையாக இருக்க வேண்டும். செல்வம், அழகு, குடும்பம் என்பன தெரிவின் முதல் அடிப்படைகளாக அமையக் கூடாது என இஸ்லாம் கூறுகின்றது.
*''பெண் நான்கு காரணங்களுக்காகத் திருமணம் முடிக்கப்படுகின்றாள். செல்வம், அழகு, குடும்பம், மார்க்க உணர்வு என்பவையே அவை. மார்க்க உணர்வு கொண்ட பெண்ணையே நீ தெரிவு செய். அவ்வாறு நடந்து கொள்ளவில்லையாயின் உன்னை வறுமை பீடிக்கட்டும்'' (புகாரி, முஸ்லிம்)*

- திருமண முன்னாயத்தத்தில் திருமணம் பேசுதல் என்பதும் ஒன்றாகும். திருமணம் பேசுதல் (கித்பா) மூலம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

- திருமணத்திற்கான முன்னாயத்தத்தில் மணமுடிக்க விரும்பும் பெண்ணைப் பார்த்தலும் ஒன்றாகும். ஒரு முஸ்லிம் மணமுடிக்க உறுதி கொண்டு திருமணம் பேசவும் தீர்மானித்தால் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபட முன்னர் அவளைப் பார்ப்பதனை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

  ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் *''உங்களில் யாராவது ஒருவர் ஒரு பெண்ணைத் திருமணம் பேசினால் உங்களைத் திருமணம் முடிக்கத் தூண்டும் வகையில் அவளைப் பார்க்கட்டும்; ஜாபிர் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். நான் பனூ ஸலமா பிரிவைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் பேசியிருந்தேன். அவளை நான் ஒழித்திருந்து பார்த்தேன். அது அவளைத் திருமணம் முடிக்க என்னைத் தூண்டியது.; (அபூ தாவூத்)*

  பெரும்பாலான சட்ட அறிஞர்கள் மணிக்கட்டையும், முகத்தையுமே பார்க்க முடியும் என்ற கருத்தைப் பெண் பார்க்கும் விடயத்தில் முன்வைத்துள்ளார்கள். இது விடயத்தில் வரம்பு மீறுவதற்கு அனுமதி வழங்கலாகாது. ஆண் பெண்ணைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதைப் போன்று மண முடிக்க இருக்கும் ஆணைப் பெண் பார்ப்பதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் சட்ட அறிஞர்கள் பல கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

- திருமணத்திற்கான முன்னாயத்தத்தில் மிகப் பிரதானமானதொரு அம்சமாக மணமகளிடம் அனுமதி அல்லது விருப்பம் பெறல் உள்ளது. கன்னிப் பெண்ணாக இருந்தாலும் விதவைப் பெண்ணாக இருந்தாலும் அனுமதி பெறுவது கட்டாயமானதாகும். தந்தையோ, பாதுகாவலரோ அவளது விருப்பத்திற்கு மாறாக திருமண முடித்து வைப்பது தவறானதாகும். கன்னிப் பெண்ணின் அனுமதி எவ்வாறு அமையும் என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது ''அவள் மௌனமாக இருப்பது அவளது அனுமதியைக் காட்டும்; (புகாரி) எனப் பதிலளித்தார்கள். விதவைப் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளது வார்த்தை மூலம் அனுமதி பெறப்பட வேண்டும்.

- ‘கபாஅத்’ அல்லது ‘குப்உ’ எனப்படும் பொருத்தப்பாடு பார்ப்பதும் திருமண முன்னாயத்தங்களில் ஒன்றாகும். இது திருமணம் நிறைவேற அவசியமான நிபந்தனையாக இல்லாவிட்டாலும் திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக நீடிப்பதற்கு ஒரு காரணமாகும். இதற்குப் பின்வரும் நிகழ்வை ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

  அடிமையாக இருந்து சுதந்திரம் பெற்ற ஸைது (ரழி) அவர்களுக்குச் சுதந்திரப் பிறவியான ஸைனப் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் விவாகம் செய்து வைத்தார்கள். இவர்களது வாழ்வில் பிரச்சினை ஏற்பட்டது. மனம் பொருந்திக் கொள்ளாததால் அத்திருமணம் முறிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**திருமணத்தின் போது தவிர்க்கப்பட வேண்டியவை**

- குடும்ப வாழ்வின் பிரவேசம் திருமணத்தோடு ஆரம்பிக்கின்றது. இதன் பின்னணியில்தான் சிறந்த சமூகம் உருவாகின்றது. சிறந்த குடும்பங்கள் உருவாகாத நிலையில் சிறந்த சமூகம் உருவாக வாய்ப்பே இல்லை. எனவேதான் இஸ்லாம் திருமணம் தொடர்பாக சிறந்த போதனைகளை முன்வைத்துள்ளது. சடவாத சிந்தனையின் தாக்கத்திற்கு உட்பட்டு வாழும் மனிதன் அவனது வாழ்வின் ஒவ்வொரு விவகாரங்களிலும் அதன் தாக்கத்திற்கு உட்பட்டு பிரச்சினைகளுக்கும் ஒழுக்க வீழ்ச்சிகளுக்கும் முகம் கொடுக்கின்றான். திருமணத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களும் ஒழுக்கங்களும் முரணாகத் தொழிற்படுவதனால் குடும்ப வாழ்வு சீரழிந்து, ஒழுக்கம் சீர் குலைந்து அழிவை நோக்கிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கியம் மனிதர்களுக்கு ஏற்படுகின்றது. திருமணத்திற்கான முன் ஆயத்தம் பற்றிய இஸ்லாமிய வழிகாட்டல்கள், திருமணத்திற்கு இஸ்லாம் கொடுக்கும் முக்கியத்துவம் பற்றிய போதனைகள் எல்லாம் சிறந்த குடும்ப, சமூக உருவாக்கத்திற்கு வழிவகுக்கக் கூடியவைகள் ஆகும். நடைமுறையில் அவை கடைப்பிடிக்கப்படாததால் முஸ்லிம் உம்மத் திருமணம், குடும்ப வாழ்வு, சமூக வாழ்வில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எண்ணிலடங்காதவைகளாக உள்ளன.

- இஸ்லாம் திருமணத்தை ஏன் அனுமதித்திருக்கின்றது என்பது பற்றிய அறிவின்மை தம்பதியர்கள் வாழ்வில் பிரச்சினைகளுக்கு உட்படக் காரணமாக அமைகின்றது. இஸ்லாமிய சட்ட விதிகள் புறக்கணிப்பு, கணவன் மனைவி கடமைகள் உரிமைகள் பற்றி அறியாமை திருமணத்தின் பின்னுள்ள வாழ்வைப் பாதிக்கச் செய்கின்றது.

- மணமகனுக்குச் சீதனம் வழங்கும் மாற்று மத சம்பிரதாயங்கள் உள் நுழைந்துள்ளதால் திருமணம் பிழையான இடத்திற்கு மனித சமூகத்தை கொண்டு செல்கின்றது. முக்கிய இரண்டு விதமான விளைவுகள் இதனால் ஏற்படுகின்றது. ஒன்று சீதனம் வழங்க முடியாத பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு மண மகனைப் பெற முடியாமையும் இதனால் தகாத வழிமுறைகளை நாடும் நிலையும் உருவாகின்றது. இரண்டு சீதனம் பெறும் ஆண்கள் தமது சுய கௌரவத்தை இழந்து அடிமையாக வாழ வேண்டிய நிலையும் உருவாகின்றது.

- பெண் பார்த்தல் என்ற அடிப்படையிலும், கணவன் மனைவி அனுமதி பெறல்

எனும் விடயங்களிலும் விடப்படுகின்ற தவறுகள் பல்வேறு பிரச்சினைகளைச் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாம் இது விடயத்தில் அழகான வழிமுறைகளை முன்வைத்திருந்தும் அவை கடைப்பிடிக்கப்படாமையினால் குறிப்பாக பெண்கள் மன அழுத்தங்களுக்கும், பெற்றோருடன் பிரச்சினைப்படும் நிலைமைகளுக்கும் கொண்டு செல்கின்றது. வீண் செலவினங்களும் பிழையான சம்பிரதாயங்களும் இதனால் உருவாவதைக் காண முடிகின்றது.

திருமணத்திற்கு முன்னரே திருமணப் பேச்சுவார்த்தைகள் முடிந்தவர்களைச் சந்திப்பு, தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் நிலையும் பல்வேறு சீரழிவுகளைச் சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ளது.

- நேரடியான, தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமான இந்தத் தொடர்புகள் ஹராமான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்வதைக் காண முடிகின்றது. இதனால் திருமணத்தின் முன்னரே தகாத நடத்தைகளில் ஈடுபட வாய்ப்பை இது பெற்றுக் கொடுப்பதைக் காண முடிகின்றது. இதன் மூலம் மணவாழ்வு பாதிப்படையும் நிலைகளும் உருவாகின்றது.

- திருமண ஏற்பாடுகளின் போது இடம்பெறும் பிழையான வழிமுறைகளும் சமூகத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதைக் காண முடிகின்றது. இஸ்லாம் அனுமதிக்காத இசை, ஆண் பெண் கலப்பு, இஸ்லாம் அனுமதிக்காத உடை, அணிகலன்கள், ஒப்பனை என பல்வேறு விடயங்களைக் குறிப்பிடலாம். மணப் பெண்ணைக் காட்சிப்படுத்தல் என்பனவெல்லாம் அல்லாஹ்வின் அருளை விட்டும் மனிதனை தூரப்படுத்திவிடுகின்றது.

- வீண்விரயம், ஸுன்னத்தான விருந்துபசாரத்திற்கு மேலதிகமாக விருந்துபசாரங்களை ஏற்படுத்திக் கொள்ளல் என்பன மூலம் தன்னைத் திருமணத்தின் பெயரால் கஷ்டத்திற்கு உட்படுத்திக் கொள்கின்றான். எளிமை பேணப்படாததனால் வீண் சுமைகளுக்கு மனிதன் தன்னை இட்டுச் சென்று பிரச்சினைகளுக்கு உட்படுத்திக் கொள்கின்றான்.

- திருமணத்தில் அந்நிய மதத்தவர்களது சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றி இஸ்லாமிய வழியிலிருந்து விலகிச் செல்பவர்களும் உள்ளார்கள். இது மாத்திரமின்றி மணமகன் மணமகள் ஆகியோருக்குப் பகிடிவதைகளும் செய்யத் துவங்கியுள்ளனர். இது இழிவான நிலைகளைத் தோற்றுவித்துள்ளதோடு பல்வேறு பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது. இதிலிருந்து விடுபட்டு இஸ்லாமிய நெறிமுறைகள் முஸ்லிம்களின் திருமணத்தில் பின்பற்றப்பட வேண்டும்.

**தேர்ச்சி 08: தனிமனித குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி குடும்ப வாழ்வை சீர்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.2: குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய அணுகுமுறையை விரிவாக விளக்கித் தெளிவுபடுத்துவார்.**

**பாடவேளைகள் : 18**

**கற்றல்பேறுகள்**

- இஸ்லாமிய குடும்ப அமைப்பின் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் விளக்குவார்.
- குடும்ப வாழ்வின் ஒவ்வொரு உறுப்பினருக்குமான கடமைகளையும் பொறுப்புக்களையும் விபரிப்பார்.
- குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான உறவினைச் சீராகப் பேணுவதன் ஊடாக அமைதியான குடும்ப வாழ்விற்குப் பங்களிப்புச் செய்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இஸ்லாமிய குடும்ப அமைப்பின் முக்கியத்துவமும், அவசியமும்

  சிறந்த குடும்பங்கள் உருவாகுவதையும், சிறந்த சமூகம் உருவாகுவதையும் இலக்காக வைத்து இஸ்லாம் சிறந்த தனி மனிதனை உருவாக்குவதற்கான போதனைகளை முன்வைத்துள்ளது. ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் கட்டடத்தின் கல்லுக்கு நிகரானவர்கள். நல்ல தனிமனிதர்களைக் கொண்டு நல்ல குடும்பங்களும் நல்ல குடும்பங்களைக் கொண்டு நல்லதொரு சமூகமும் உருவாகின்றது. எனவேதான் இஸ்லாம் சிறந்த தனி மனிதர்களை உருவாக்குவதில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

  இதன் பின்னணியிலேயே குடும்பம், சமூகம் உருவாகின்றது. ஓர் ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக மண வாழ்வில் இணையும் போது குடும்பம் உருவாகின்றது. குடும்பத்தின் இறுக்கமான பிணைப்பை இரத்த, பால்குடி, திருமண உறவுகள் தீர்மானிக்கின்றன. இதற்கு முரணான எதனையும் குடும்ப உறவாக இஸ்லாம் கருதுவதில்லை. அல்லாஹ் வகுத்து வழங்கியுள்ள குடும்ப உருவாக்கத்தில் இயற்கை நியதி, ஆண் - பெண் என்ற எதிர்பாலான தனிமனிதர்கள் சட்டபூர்வமான பங்காளிகளாக இணைவதே அடிப்படையாகவுள்ளது. இஸ்லாம் மனித இன விருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செயற்படும் நிறுவனமாகக் குடும்ப அமைப்புக்கு அதி கூடிய முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது. இஸ்லாம் திருமணத்தைத் தூண்டிக் குடும்ப வாழ்வில் இணையுமாறு வேண்டுகின்றது. ஏனெனில் குடும்பம் என்பது தனிமனிதர்களை பாதுகாக்கும் கோட்டையாகவுள்ளது. குடும்பங்களின் வெற்றி சமூகத்தின் வெற்றியாக அமையும்.

- கணவன், மனைவி, பெற்றோர் பிள்ளைகள், உற்றார் உறவினர், அயலவர் என பல்வேறு கூறுகள் சம்பந்தப்படுகின்றன. இந்த ஒவ்வொரு தரப்பும் பரஸ்பரம் தத்தமது கடமைக் கூறுகளைப் பேணி வாழும் போது குடும்ப வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக மாறிவிடுகின்றது. குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தையும், குடும்பங்களாக இணைந்து வாழ்வதன் அவசியத்தையும் இஸ்லாம் போதிப்பது போலவே ஒவ்வொரு தரப்பினரதும் கடமைகளையும் பொறுப்புக்களையும் வகுத்துள்ளது.

**கணவன் மனைவி கடமைகளும் உரிமைகளும்**

- ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே வெவ்வேறான இயல்புகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளார்கள். இரு பாலாரிடமும் சில சிறப்பம்சங்களும் பலவீனங்களும் காணப்படுகின்றன. எனினும் ஒருவர் மற்றவரைச் சார்ந்து ஆறுதல் பெறுகின்ற இயற்கைத் தன்மையில் அல்லாஹ் இரு சாராரையும் படைத்துள்ளான். இத்தகைய தன்மைகளைக் கருத்திற்கொண்டே ஒருவருக்கொருவர் உதவி வாழும் வகையில் இருபாலாருக்கும் கடமைகளையும், உரிமைகளையும் அல்லாஹ் விதித்துள்ளான். பொறுப்புக்கள் நிறைவேற்றப்படும் போது மகிழ்ச்சியும் இன்பமும் நிறைந்த குடும்ப வாழ்வு கணவன், மனைவிக்கிடையே உருவாகும். திருமணத்தின் மூலம் குடும்ப வாழ்வில் இணைகின்ற கணவனும் மனைவியும் தாம் இணைந்திருப்பது விளையாட்டுக்காகவோ ஆபாசத்துக்காகவோ அன்றி அல்லாஹ் வைத்துள்ள இயற்கை விதியை நடைமுறைப்படுத்துவதற்காகவே என்றுணர வேண்டும். இவை சீராக இடம்பெறவும் கணவன் மனைவியின் இடைத்தொடர்பும் சீர்மை பெறவும் இருவரது கடமைகளும், உரிமைகளும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

- கணவன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்
  - திருமண ஒப்பந்தத்தின் போது கணவன் மனைவிக்குரிய மஹரை ஒப்படைத்தல்
  - மனைவியின் உடற் தேவைகளை நிறைவேற்றுதல்
  - மனைவியின் தாபரிப்பை மேற்கொள்ளல் (நபகா, கிஸ்வா, ஸகன்)
  - மனைவியை இஸ்லாமிய வழியில் இட்டுச் செல்லல், தர்பியா, ஆலோசனைகள் வழங்குதல்
  - மனைவியைப் பாதுகாத்தல்
  - மனைவியின் மீது அன்பும் கருணையும் காட்டுதல்
  - மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்
  - மனைவியின் வெறுப்புக்கு ஆளாகாதிருத்தல்
  - மனைவி தனது பெற்றோர், ஏனைய உறவுகளைத் தரிசிக்கவும், தொடர்புகள் வைத்துக் கொள்ளவும் இடமளித்தல்
  - மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற உதவியாக இருத்தல்

- கணவனது உரிமைகள்
  - குடும்பத்தைத் தலைமை தாங்கி வழிநடாத்தல்
  - தனது பாலியல் தேவைகளை அடைந்து கொள்ளல்
  - மனைவியைக் கற்பு பேணி வாழச் செய்தல்
  - தனது கட்டுப்பாட்டில் மனைவியை வைத்திருத்தல்
  - மனைவியின் சொத்தில் உரிமை பெறல்
  - மனைவி தன்னையும் கணவனது சொத்துக்களையும் பாதுகாத்தல் என்ற உரிமை

- மனைவியின் கடமைகள்
  - கணவனின் உரிமைகளைக் காத்தல்
  - வீட்டு நிர்வாகத்தை மேற்கொள்ளல்
  - கணவனுக்குக் கட்டுப்பட்டு நடத்தல்
  - கற்புப் பேணி வாழுதல்

- கணவனது கோபத்திற்கு உள்ளாகாதிருத்தல்
- கணவனுக்கு விசுவாசமாக நடத்தல்
- கணவனை கண்ணியப்படுத்தல்
- கணவனுக்குக் கவர்ச்சியாக இருத்தல்
- கணவனது அனுமதியுடன் எதனையும் செய்தல்
- பிள்ளைகளுக்குப் பண்பாட்டு பயிற்சி வழங்குதல்

• மனைவியின் உரிமைகள்
  - தனது உடற் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்
  - சகல செலவினங்களையும் பெற்றுக் கொள்ளல்
  - அன்பு, கருணை பெறல்
  - தனக்குரிய பாதுகாப்பைப் பெறல்
  - மன நிறைவோடு வாழுதல்
  - உறவுகளோடு சேர்ந்து உறவு பேணுதல்
  - சமயக் கடமைகளை நிறைவேற்றல்
  - கணவனது சொத்தில் வாரிசுரிமை பெறுதல்

**பிள்ளைகள் தொடர்பாக பெற்றோருக்குள்ள கடமைகள்**

குடும்ப வாழ்வில் கணவன், மனைவி பிரவேசிக்கும் அடுத்த கட்டம் தாய், தந்தை எனும் படியாகும். பெற்றோருக்கு இருக்கும் அடிப்படையான கடமைகளில் ஒன்றுதான் குழந்தை வளர்ப்பு. ஒரு தந்தை தனது பிள்ளைகளுக்கான ஸாலிஹான ஒரு தாயைத் தேர்ந்தெடுப்பதுடன் இக்கடமை ஆரம்பித்து ஆண் குழந்தையாக இருந்தாலும் பெண் குழந்தையாக இருந்தாலும் அவர்களைத் திருமணம் முடித்து வைக்கும் வரை இப்பணி தெடர்கின்றது.

- தனது குழந்தைகளை ஸாலிஹான குழுந்தைகளாக வளர்ப்பேன் என்ற தூய எண்ணம்
- ஸாலிஹான குழந்தையை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்
- கருவறையில் வளரும் குழந்தைக்கு மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புக்களைச் செய்தலும்.
- குழந்தை பிறந்ததும் வலது காதில் அதானும் இடது காதில் இகாமத்தும் ஓதி ஊதுவதும் தஹ்னீக் செய்தலும்
- குழந்தை பிறந்து ஏழாவது தினத்தில் தலை முடியைச் சிரைத்து அதன் நிறைக்கு வெள்ளியில் தர்மம் செய்தல், அகீகா கொடுத்தல், நல்லதொரு பெயர் சூட்டுதல்
- குழந்தைக்கு விருத்த சேதனம்(கத்னா) செய்தல்

*''ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடுகளும் பெண் குழந்தைக்கு ஓர் ஆடும் அகீகாவாகக் கொடுக்க வேண்டும்'' (திர்மிதி)*

அபூ முஸா அஷ்அரி (ரழி) அறிவிக்கின்றார்கள். *''எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. நான் அதனை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு சென்ற போது அவர் அதற்கு இப்ராஹீம் எனப் பெயரிட்டார்கள். ஈச்சம் பழத்தை மென்று அதன் வாயில் தேய்த்துவிட்டு அதற்கு அருள்பாலிக்குமாறு துஆக் கேட்டார்கள். பின்னர் என்னிடம் தந்தார்கள்'' (புகாரி)*

- குழந்தை பெறும் உரிமைகளில் உயிர்வாழும் உரிமையும், வாழ்வாதாரங்களைப் பெறும் உரிமையும் முக்கியமானவைகளாகும்.

*''வறுமையைப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்'' (அல்இஸ்ரா:31)*
*''அவர்களுக்கு ஆகாரமும், ஆடையும் கொடுத்து வருவது தந்தை மீது கடமையாகும்'' (பகரா: 233)*
''தாய்மார்கள் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் பாலூட்டுவார்கள்'' (பகரா:233)

- தாய்ப்பாலை ஊட்டுவதும், ஹலாலான உணவு வகைகளை வழங்குவதும் மனிதத்துவ பண்புகளுடனும், ஸாலிஹான குழந்தையாகவும் வாழ வழிசெய்வதும்.
- பெற்றோர் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பெறுமதியான அம்சம் நல்லொழுக்கமும் பண்பாட்டுப் பயிற்சியுமாகும்.

*''ஒருவருக்கு ஒரு குழந்தை பிறந்தால் அதற்கு அழகிய பெயர் சூட்டவும். அதனை நல்லொழுக்கமுள்ளதாக உருவாக்கவும்; (பைஹகி)*
*''நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குச் சிறந்த ஒழுக்கங்களையும், பண்பாடுகளையும் கற்றுக் கொடுப்பது நீங்கள் ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்குத் தர்மம் செய்வதைவிடச் சிறந்ததாகும் (தபரானி)*

- பெற்றோர் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய மாபெரும் பொக்கிஷம் நல்ல கல்வி, மார்க்க விவகாரங்கள், தொழிற் கல்வி, வீட்டு விவகாரங்கள் என பல்வேறு விடயங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

*''கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும் (ஹதீஸ்)*

வீட்டிலும், வீட்டுக்கு வெளியேயும் பேண வேண்டிய ஒழுங்கு முறைகளைச் சொல்லிக் கொடுத்து பயிற்றுவித்தல். உதாரணமாகச் சிறியோருக்கு அன்பு காட்டல், பெரியோருக்கு மரியாதை செய்தல், இஸ்லாமிய ஆடை ஒழுங்கைப் பேணுதல், வீட்டில் நுழையும் போது ஸலாம் சொல்லுதல், வீட்டினுள் பேண வேண்டிய ஒழுக்கங்களைப் பேணுதல், நல்ல நட்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- தொழுதல், நோன்பு நோற்றல், குர்ஆன் ஓதுதல், தர்மம் செய்தல் போன்ற விடயங்களில் சிறந்த முறையில் செயற்பட தர்பியா வழங்கல். குழந்தைகள் ஏழு வயதானதும் தொழும்படி ஏவுவதும் பத்து வயதாகியும் தொழாவிட்டால் அடித்துத் தொழ வைக்குமாறும் இஸ்லாம் கூறுகின்றது.

- பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டியது கடமையாகும்.
  முன்மாதிரியாக நடத்தல், மனம் விட்டுக் கலந்து பேசுதல், அன்பு செலுத்துதல், நம்பகமாக நடத்தல், ஊக்கமளித்து உற்சாகமூட்டல், நீதியாக நடத்தல், பாரபட்சம் காட்டாதிருத்தல், நளினமாகவும் கண்டிப்பாகவும் இருத்தல்.

*''விசுவாசிகளே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதனுடைய எரிகட்டை மனிதர்களும் கற்களுமாகும்'' (அத்தஹ்ரீம்: 06)*

- ஆண் குழந்தைகளுக்கு தொழிற் கல்வியும், பெண் குழந்தைகளுக்கு குழந்தை பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு பற்றியதுமான அறிவைப் பெற்றுக் கொடுத்தலும் பெற்றோரின் பொறுப்பாகும்.
- நல்லதொரு இடத்தில் பிள்ளைகளைத் திருமணம் முடித்து வைப்பதும் பெற்றோரது கடமையாகும்.
- குழந்தை வளர்ப்பில் ஈடுபடும் பெற்றோர் பின்வரும் அல்குர்ஆன் வசனத்திற்கு ஏற்பத் தமது பணிகளை நிறைவேற்ற வேண்டும் '' *விசுவாசிகளே! உங்களது பொருள்களும், குழந்தைகளும் அல்லாஹ்வின் நினைவிலிருந்து உங்களை திருப்பிவிட வேண்டாம். எவரேனும் அவ்வாறு செய்தால் நிச்சயமாக அவர் நஷ்டமடைந்தவர்தான்; (அல்முனாபிகூன்: 09)*

**பெற்றோருக்காகப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகள்**

- குடும்ப வாழ்க்கை தொடர்பான போதனைகளில் பெற்றோர் விடயத்தில் பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய பணிகளை அல்குர்ஆன் ''பிர்ருல் வாலிதைன்; எனக் குறிப்பிடுகின்றது. இப்பணி இஸ்லாமிய நோக்கில் அல்லாஹ்வுக்கும், ரஸுலுக்கும் அடுத்த தரத்தில் வைத்து நோக்கப்படுகின்றது.

  *''தனது தாய், தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனது தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து அவனைச் சுமந்தாள். (பிறந்த) பிறகு இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே நீ எனக்கு நன்றி செலுத்தி தாய் தந்தையர்களுக்கும் நன்றி செலுத்து! முடிவிலும் நீ என்னிடமே வந்து சேர வேண்டியுள்ளது; (லுக்மான்:14)*

- தாய், தந்தை இருவரிலும் உபகாரம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டவர் தாயாவார். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் நடந்து கொள்ள மிகவும் தகுதியானவர் யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார். உமது தந்தை என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

  பொற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இரண்டாக வகைப்படுத்தி நோக்கலாம்.

  1. பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை
  2. பெற்றோர் மரணித்த பின் செய்ய வேண்டியவை.

**பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை**

- பெற்றோர் உயிருடன் இருக்கும் போது அவர்களது அழைப்புக்கு உடனடியாகப் பதிலளித்தல்
- அவர்களுடன் அன்புடனும், கனிவுடனும் நடந்து கொள்ளல்

- பெற்றோருக்கு அவர்கள் செய்த தியாகத்திற்காக நன்றியுணர்வுடன் நடந்து கொள்ளுதல்
- அவர்களைப் புண்படுத்தும் வார்த்தைகளையோ, காரியங்களையோ செய்யாதிருத்தல்
- அவர்களுடன் மிக்க பணிவாக நடந்து கொள்ளல்
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளல்
- பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்தல்
- அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தல்
- பிறரது நிந்தனைகளுக்கு எமது பெற்றோரை உட்படுத்தாதிருத்தல்
- பெற்றோரின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அவர்களோடு நடந்துகொள்ளல்

**பெற்றோர் இறந்த பின்னர் செய்ய வேண்டிய கடமைகள்**

- பெற்றோரின் ஜனாஸா கடமையில் கலந்து கொள்ளல்
- அல்லாஹ்விடம் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருதல்
- அவர்கள் செய்திருந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் (மரண சாசனம், வாக்குறுதிகள்)
- அவரது உறவினர்களைக் கண்ணியப்படுத்தல், அவர்களுக்கு முடிந்தளவு உபகாரம் புரிதல்
- அவர்களது நண்பர்கள், பழகியவர்களைக் கண்ணியப்படுத்தலும் அழகாக நடந்துகொள்ளலும்

**இரத்த உறவுகள் கடமைகளும் உரிமைகளும்**

- ஒரு முஸ்லிம் பெற்றோர் மனைவி பிள்ளைகளோடு தம்மைச் சுருக்கிக் கொள்ளாமல் உறவினர் இரத்த பந்தங்களோடு பரஸ்பரம் நெருக்கமும், நட்புறவும் உபகாரமும் புரிந்து வாழ வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது. இவர்கள் ‘‘ அர்ஹாம்; என அழைக்கப்படுகின்றார்கள். ‘‘ரஹ்ம்; எனும் சொல்லுக்குக் கர்ப்பமூல உறவு, அன்பு, பாசம், கருணை முதலான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இரத்த உறவு மூலம் உறவாடும் அனைவரும் இதில் உள்ளடங்குவார்கள்.

அல்குர்ஆனும், ஸுன்னாவும் இவ்வுறவைப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.
*“விசுவாசிகளே! நீங்கள் நீதி செலுத்தும்படியாகவும் நன்மை செய்யும் படியாகவும் உறவினர்களுக்கு உதவி செய்யும் படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் ஏவுகின்றான்” (அந்நஹ்ல்: 90)*

*“உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுடைய உரிமைகளைக் கொடுத்து வரவும்”(அல்இஸ்ரா: 26)*

*“மக்களை உறவினர்களுடன் இணைத்து வைக்கவும் இணை வைப்பதை ஒழிக்கவும் ஏகத்துவத்தை நிலைநாட்டவுமே அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான்” (முஸ்லிம்)* என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

*“குடும்ப உறவை துண்டித்து வாழ்பவன் சுவர்க்கம் நுழையமாட்டான்”*

- இரத்த உறவைப் பேணுவதால் பல நன்மைகள் கிடைக்கின்றன.

  - சுவனம் புகும் பாக்கியம் கிடைக்கும்
  - வாழ்வில் பரகத் அபிவிருத்தி ஏற்படும்
  - அதிக நன்மைகள் கிடைக்கும்.
  - செயல்கள் அங்கீகரிக்கப்படும்
  - இறை தண்டனைகளிலிருந்த பாதுகாப்புக் கிடைக்கும்.
  - இறைவனது தொடர்பு வலிமையடையும்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**


1. மன்ஸூர் எம்.ஏ.எம், திருமணம் (2007), தாருல் அர்கம் பதிப்பகம், மல்வான.
2. பைரோஸ் கான் முகம்மத், மணக்கும் மணவாழ்வு (2007), மக்கள் சேவை பதிப்பகம், சென்னை.
3. ஜமாலுத்தீன்.எம்.ஏ.எம், இஸ்லாத்தில் குடும்பவியல் (2001), புர்கான் பப்ளிகேஷன்டிரஸ்ட், சென்னை.
4. அலி அல் ஹாஷிமி முகம்மத், முன்மாதிரி முஸ்லிம் (2007), தாருல் ஹுதா, சென்னை.
5. அமீன் எம்.ஐ.எம், இஸ்லாமிய குடும்ப வாழ்வு (2008), அல்ஹஸன் பதிப்பகம், ஹெம்மாதகம.
6. ரமீஸ் ஏ.ஸீ.எம் (2010), இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு (2010), மீள்பார்வை ஊடக மையம் வெளியீடு, கொழும்பு.
7. ஹிஷாம் அத்தாலிப், பெற்றோர் பிள்ளை உறவுகள் (2013), புஸின் டெக்ஸ் வெளியீடு, தர்கா நகர்.
8. அப்துல் காதிர் உமரி, கணவன் மனைவி விரிந்து பரவும் உறவு (2016), இஸ்லாமிய பதிப்பகம், சென்னை.

**தேர்ச்சி 08: தனிமனித குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி குடும்ப வாழ்வைச் சீர்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.3: உணவு, உடை, உறையுள் பற்றிய இஸ்லாத்தின் நோக்கை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 23**

**கற்றல்பேறுகள்**

- உணவு, உடை, உறையுள் தொடர்பான இஸ்லாத்தின் போதனைகளை விளக்குவார்.
- சீரான தனிமனித குடும்ப சமூக வாழ்வுக்காக உணவு உடை உறையுள் ஆகியவற்றில் இஸ்லாமியப் போதனைகளைக் கடைப்பிடிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- உணவு தொடர்பான இஸ்லாமிய வழிமுறைகள்

மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் அவன் உயிர்வாழ்வது அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்ட வாழ்க்கைப் பணிகளை நிறைவேற்றுவதற்காகும். மனிதன் உயிர்வாழ உணவு அவசியமாகின்றது. ஆரோக்கியமாக இருந்தால்தான் மனிதனால் பரிபூரணமாக அவனது வாழ்க்கைப் பணிகளை நிறைவேற்ற முடியும். இதனைத் தீர்மானிப்பதில் மனிதன் உட்கொள்ளும் உணவு, பானங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இவை மனிதனுக்குப் பொருத்தமானதாக அமைந்தால்தான் அவனால் ஆரோக்கியமாக உயிர்வாழ்ந்து கடமைகளை நிறைவேற்ற முடியும். எனவேதான் இஸ்லாம் உணவு தொடர்பான விடயத்தில் மிகப் பொருத்தமான சட்டவிதிகளை வைத்திருக்கின்றது. இதனைக் அல்குர்ஆனும், ஸுன்னாவும் தெளிவுபடுத்துகின்றன.

''நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்'' (பகரா:172)

நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவன். அவன் பரிசுத்தமானதையே ஏற்றுக் கொள்வான். ரஸுல்மார்களுக்கு கட்டளையிட்டதையே அவன் விசுவாசிகளுக்கும் கட்டளையிட்டிருக்கின்றான். அதுதான் ''(நம் தூதர்கள் ஒவ்வொருவரிடத்திலும்) தூதர்களே! நல்ல பொருள்களிலிருந்தே நீங்கள் உண்ணுங்கள் (ஸாலிஹான) நல்லமல்களைச் செய்யுங்கள் நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன் (அல்மு.ஃ.மினூன்: 51)

''ஹலாலான உணவைத் தேடியடைந்து கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்'' (தபாரனி)

ஒரு மனிதரைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரஸ்தாபித்தார்கள். ''அவன் நீண்ட தூரம் பயணம் செய்கின்றான். அவர் தலைமயிர் பரட்டையாகவும், தூசு படிந்ததாகவும் காணப்படுகின்றது. தனது இரண்டு கைகளையும் வானத்தை

நோக்கி உயர்த்துகின்றான். எனது இரட்சகனே! எனது இரட்சகனே என அல்லாஹ்வை அழைக்கின்றான். அதே வேளை அவனது உணவு ஹராமானதாக இருக்கின்றது. அவனது ஆடை ஹராமானதாக இருக்கின்றது. அவன் ஹராமானவற்றினால் போசிக்கப்பட்டிருக்கின்றான். எனவே அவனது துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்". (முஸ்லிம், திர்மிதி)

மேற்படி போதனைகள் ஒரு முஸ்லிமினது உடல், ஆன்மா, அறிவு சம்பந்தமான விடயங்களில் ஹலால், ஹராம் பேணுவது எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை விளங்கிக் கொள்ளப் போதுமானவைகளாக உள்ளன.

- வியாபாரம், விவசாயம், சேவைத் தொழில், கைத்தொழில் போன்ற அனைத்து உழைப்பு முயற்சிகளிலும், உழைப்பின்றிப் பெறுபவற்றிலும் ஹலால், ஹராம் பேணப்படுதல் வேண்டும். மாமிச வகைகளிலும் , தாவர வகைகளிலும், ஹலால், ஹராம் விதிமுறைகள் உண்டு. இவற்றைப் பேணியே உணவு உட்கொள்ள வேண்டும்.

1. மாமிச வகைகளில் தடுக்கப்பட்டவை பற்றி அல்குர்ஆனினதும், ஸுன்னாவினதும் போதனைகள் முன்வைக்கின்றன.

(தானாகச்) செத்தது, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் அதன் மீது கூறப்பட்ட (அறுக்கப்பட்ட)தும், கழுத்து நெறித்துச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், கீழே விழுந்து செத்ததும், கொம்பால் குத்தப் பட்டுச் செத்ததும், (கரடி, புலி போன்ற) விலங்குகள் கடித்(துச் செத்)தவையும் உங்கள் மீது ஹராமாக்கப் பட்டிருக்கின்றன. (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து, முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர (அதை உண்ணலாம். அன்றியும் பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும், அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன) - இவையாவும் (பெரும்) பாவங்களாகும். இன்றைய தினம் கா∴பிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே. அஞ்சி நடப்பீர்களாக. இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன். ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான். (அல்மாஇதா: 3)

''நபி (ஸல்) அவர்கள் மிருகங்களில் வேட்டைப் பற்களைக் கொண்ட பிராணிகளையும், பறவைகளில் வேட்டை நகங்களைக் கொண்ட பறவைகளையும் உண்ண வேண்டாமெனத் தடுத்தார்கள்; (புகாரி)

உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்களான ஆடு, மாடு, ஒட்டகம், பறவைகளான கோழி, வாத்து போன்றவற்றில் உடலில் துர்நாற்றம் வீசும் அளவுக்கு அழுக்குகளையே சாப்பிட்டு வாழ்பவற்றையும் சாப்பிட வேண்டாம் என இஸ்லாம் கூறுகின்றது.

மேற்படி போதனைகள் மிகத் தெளிவாக மாமிச வகைகளில் சாப்பிடத் தடுத்தவை பற்றி எடுத்துக் கூறுகின்றன.

2. தாவர வகைகளில் ஹராமாக்கப்பட்டவை

மனிதனது உயிருக்கு, உடலுக்கு, புத்திக்கு தீங்கு விளைவிக்கும் எதனையும் உணவாகவோ, பானமாகவோ, வேறு வகையிலோ உட்கொள்ள முடியாது.

உதாரணமாக புகையிலை, கஞ்சா, அலரிப் பருப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. தடுக்கப்பட்ட பொருளீட்டல் முறைகளில் பெறப்பட்டவை.

அளவை நிறுவை மோசடி, பதுக்கல், கலப்படம், வட்டி, சூது, இலஞ்சம், களவு, போதைப் பொருள் விற்பனை, ஹராமாக்கப்பட்ட உத்தியோகம் மூலம் வருமானங்கள் என்பவற்றை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

4. பொருத்தமற்ற முறையில் கிடைக்கும் தர்மங்கள்

ஸகாத், ஸகாதுல் பித்ர் பெறத் தகுதியற்றவர் அவற்றைப் பெறுவதைக் குறிப்பிடலாம்.

5. நஜீஸானவை, அருவருக்கத் தக்கவை

பூச்சி, புழுக்கள், பாம்பு, எலி போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

ஹலாலான உணவு வகைகளை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களும், ஹராமான உணவுவகைகளை உட்கொள்வதால் ஏற்படும் தீங்குகளும்.

**ஹலால்**

1. ஆன்மீக வாழ்வு உறுதி பெறும்
2. இறைவணக்கமாக மாறி நன்மை கிடைக்கும்.
3. உள்ளம் பிரகாசமடையும்.
4. வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படும்.
5. சுகமான வாழ்வு கிடைக்கும்
6. வாழ்வில் அமைதியும் திருப்தியும் ஏற்படும்
7. நல்ல செயற்பாடுகள் உருவாகும்.
8. சமூக வாழ்வில் அமைதி ஏற்படும்
9. அறிவு விருத்தி உலகப் பற்றின்மை உருவாகும்.
10. மறுமையில் சுவர்க்கம் கிடைக்கும்.

## உடை தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகள்

- மனிதன் அல்லாஹ்வினது பிரதிநிதி என்ற வகையில் அவனது உலகியல் விவாகரங்கள் அனைத்தும் இபாதாவாகவே கணிக்கப்படுகின்றது. இந்த வரிசையில் உடை சம்பந்தமான முஸ்லிமினது செயற்பாடும் இபாதாவாகவே கணிக்கப்படுகின்றது. முஸ்லிம் தனது வெளித் தோற்றத்தை அழகாகவும், நேர்த்தியாகவும், மரியாதையாகவும் அமைத்துக் கொள்ள இஸ்லாம் அனுமதிக்கின்றது. அத்தோடு அவ்வாறு செயற்படுமாறு இஸ்லாம் கட்டளையுமிடுகிறது. ஆடை, அணிகலன்கள் அல்லாஹிவின் அருட்கொடைகள் என்பதால் அவற்றை மனிதர்கள் அனுபவிக்க முடியும். இஸ்லாம் ஆடை அணிதலுக்கு இரண்டு நோக்கங்களை வைத்துள்ளது.

1. உடலையும் மானத்தையும் மறைத்தல்
2. உடற் தோற்றத்தை அழகுபடுத்தல்

மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்திக் காட்டுவது ஆடையாகும். மிருகத்தைப் போன்று தனது அவ்ரத்தை ஆணாயினும், பெண்ணாயினும் வெளிக்காட்ட முடியாது. மக்களது பார்வையிலிருந்து ஒருவன் தூரமாக இருந்தாலும் இவ்வொழுக்கங்களைப் பேணுமாறு இஸ்லாம் கூறுகின்றது.

ஒரு ஸஹாபி ''எம்மில் ஒருவர் தனித்து இருந்தால் அவ்ரத்தை மறைப்பது அவசியமா? எனக் கேட்ட போது நபி (ஸல்) அவர்கள் "நீ வெட்கப்படுவதற்கு அல்லாஹ் மிகப் பொருத்தமானவன்'' என்றார்கள்.(அஹ்மத், திர்மிதி, அபூதாவூத்)

இஸ்லாம் சுத்தம், அழகு, நேர்த்தி முதலானவற்றை பிரதானப்படுத்தும் மார்க்கமாகும். எல்லா விவகாரங்களிலும் சுத்தத்தை அது வலியுறுத்துகின்றது.

"சுத்தமாக இருங்கள் ஏனெனில் இஸ்லாம் சுத்தமானது'' (இப்னு ஹிப்பான்)

இஸ்லாம் உடல், உடை, இடச் சுத்தத்தை வலியுறுத்துகின்றது. ஒரு தொழுகையாளி அவனது உடல், உடை, இடம் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது பிரதான நிபந்தனையாகும். பற்கள், கைகள், முகம், தலை போன்ற உடலுறுப்புக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென இஸ்லாம் குறிப்பாகக் கூறியிருக்கின்றது. தொழுகையின் திறவுகோலாக வுழுவை இஸ்லாம் குறிப்பிடுகின்றது.

நபி (ஸல்) அவர்களுக்குப் பாலைவனச் சூழலில் வாழ்ந்த அரபு மக்களை எல்லாத் துறைகளிலும் நெறிப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அவர்களில் பெரும்பாலானோர் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் விடயத்தில் அசிரத்தை காட்டினார்கள். நபி (ஸல்) அவர்களின் போதனைகளால் அவர்கள் படிப்படியாக மாறி நாகரிமான, சீரான ஒழுங்கில் அமைந்த செயற்பாடுகளுக்கும் அழகு, நேர்த்தி, எழில்மிகு வாழ்க்கைக்கும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்திருந்த ஒருவரைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் "தனது ஆடைகளைக் கழுவிக் கொள்ள இவருக்கு ஏதும் கிடைக்கவில்லையா?; என்று கேட்டார்கள். ஒரு தடவை ஒருவர் தலைவிரி கோலமாகவும், தாடியை சீர்செய்யாமலும் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வந்த அவரிடம் தலை மயிரை வாரிக்கொள்ளுமாறு பணித்தார்கள். அவர் அவ்வாறு சீர் செய்துவிட்டு வந்த போது “உங்களில் ஒருவர் ஷைத்தானைப் போல தலைவிரி கோலமாக வருவதை விட இப்படி இருப்பது நல்லதல்லவா?’’ என்று கூறினார்கள். (மாலிக் முவத்தா) தரக் குறைவான ஆடை அணிந்து வந்த ஒரு மனிதரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் “உன்னிடம் செல்வம் இருக்கிறதா?’’ எனக் கேட்டார்கள். அதற்கவர் ஆம் என்றார். எத்தகைய செல்வம் எனக் கேட்க ‘சகலவித சௌபாக்கியங்களையும் அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான்’’ என்றான். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “உனக்கு அல்லாஹ் செல்வத்தைத் தந்தால் அவன் உன்னை கௌரவப்படுத்தி உன்மீது சொரிந்தள்ள அருட்கொடைகளுடைய அடையாளங்கள் உன்னில் வெளிப்படுவதை அவன் பார்க்க இடமளி’’ எனக் கூறினார்கள்.

மேற்படி போதனைகள் அழகு, நேர்த்தி, சுத்தம், ஒழுங்கு உடையில் பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், ஐவேளைத் தொழுகை, ஜுமுஆத் தொழுகை, பெருநாள் என்பவற்றுக்கு பிரத்தியேகமான ஆடைகளை வைத்திருக்க முடியும் என்ற அனுமதி இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

## ஆடை, அணிகலன்கள், அலங்காரங்கள் தொடர்பான சட்ட விதிகள்

உடை, அணிகலன்கள், அழகை வெளிப்படுத்தும், அலங்காரங்கள், ஒப்பனைகள் பற்றியெல்லாம் அல்குர்ஆனும், ஸுன்னாவும் தெளிவான போதனைகளை முன்வைத்துள்ளன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் பிரத்தியேகமான சட்டங்களை இது விடயத்தில் இஸ்லாம் முன்வைத்துள்ளது.

### ஆண்களுக்குரிய சட்டவிதிகள்

1. பட்டாடை தங்கம் ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளது.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ‘‘ஒரு பட்டாடையைத் தனது வலது கையிலும், தங்கத்தை இடது கையிலும் எடுத்தார்கள். பின்னர் இவை இரண்டும் எனது சமூகத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு ஹராமானதாகும். எனக் கூறினார்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் ‘‘நீங்கள் பட்டணிய வேண்டாம். உலகில் பட்டணிந்தவன் மறுமையில் அதனை அணியமாட்டான் என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

2. ஆண்களுக்கு வெள்ளியினாலான ஒரு மோதிரத்தைத் தவிர வேறு எந்த அணிகலன்களையும் அணியாதிருத்தல்
3. அவ்ரத்தை மறைக்கக் கூடியதாய் ஆடையை அமைத்துக் கொள்ளல்
4. பெண்களுக்குரிய பிரத்தியேகமான ஆடை அணிகலன்களை அணியாதிருத்தல்
5. வீண்விரயம், பகட்டு, அகம்பாவம், பெருமை ஆகியவற்றை முற்றாகத் தவிர்த்தல்
6. உடலுறுப்புக்களை வெளிக்காட்டக் கூடிய மெல்லிய ஆடைகளை அணியாதிருத்தல்
7. இறுக்கமான ஆடைகளை அணியாதிருத்தல்

## பெண்களுக்குரிய சட்டவிதிகள்

1. அவ்ரத்தை வெளிக்காட்டுவதாக ஆடை அமையக் கூடாது.

இன்னும் மு.்.மினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் தங்கள் அலங்காரத்தை (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது (அந்நூர்: 31)

இவ்வசனம் குறிப்பிடுகின்ற ''வெளியே தெரியக்கூடியவை; என்பது தவிர்க்க முடியாது வெளியில் தெரியும் உடற்பகுதியைக் குறிக்கும் என்பது இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களது விளக்கமாகவுள்ளது. இவ்விளக்கத்தின் படி பெண் உடம்பு முழுவதையும் மறைக்க வேண்டும். அவளது உடம்பு முழுவதும் இதன் மூலம் அவ்றத்தாக குறிப்பிடப்படுகின்றது.

''வெளியே தெரியக்கூடியவை; என்பது முகத்தையும், இரு கைகளையும் குறிக்கும் என இப்னு உமர் (ரழி) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். இக்கருத்தையே பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் கொண்டுள்ளனர். இக்கருத்தின் படி பெண்ணின் முகத்தையும் கைகளையும் தவிர அவளது உடம்பின் ஏனைய அனைத்துப் பகுதிகளும் கட்டாயமாக மறைக்கப்பட வேண்டும்.

''இரு சாரார் நரகவாசிகளாவர். அவர்களுக்கு நான் சாட்சியாக இருக்க மாட்டேன். அவர்களுள் ஒரு சாரார் மாட்டின் வாலைப் போன்ற சாட்டைகளை வைத்திருப்பர். அவற்றைக் கொண்டு மக்களை அவர்கள் அடிப்பர். மறு சாரார் ஆடை அணிந்த நிலையில் நிர்வாணமாகஇருக்கும் பெண்களாவர். அவர்கள் தீய வழியில் செல்வதுடன் பிறரையும் தீய வழியில் செலுத்துவர். அவர்களின் தலைகள் ஆடி அசையும் ஒட்டகைகளின் திமில்களைப் போன்று காணப்படும். இத்தகையவர்கள் சுவனம் நுழைய மாட்டார்கள். அதன் வாடையைக் கூட நுகரமாட்டார்கள். (முஸ்லிம்)

மெல்லிய ஆடைகள், அங்கங்களின் கவர்ச்சியை, அழகைப் பிரதிபலித்துக் காட்டக் கூடிய ஆடைகள், இறுக்கமான ஆடைகள், உணர்ச்சியைத் தூண்டக் கூடிய ஆடைகளைப் பற்றியே மேற்படி ஹதீஸ் எச்சரிக்கின்றது.

2. ஆண்களுக்கான பிரத்தியேகமான ஆடையாக அது இருக்கக் கூடாது. ஏனெனில் பெண்களின் ஆடைகளை அணியும் ஆண்களையும், ஆண்களின் ஆடைகளை அணியும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

3. பெண்கள் நறுமணம் பூசப்பட்ட ஆடைகளை அணியக் கூடாது. வீட்டில் அல்லது மஹ்ரமிகளோடு இருக்கும் போது நறுமணம் பாவிக்கலாம்.

''ஒரு பெண் நறுமணம் பூசி ஒரு கூட்டத்தினர் மத்தியில் அவர்கள் அந்நறுமணத்தை நுகர வேண்டும் என்ற நோக்கில் அவர்களைக் கடந்து செல்வாளாயின் அவள் ஒரு விபசாரியாவாள். அவளை இச்சையுடன் பார்க்கின்ற ஒவ்வொரு கண்ணும் விபசாரம் செய்கின்றது; என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

4. பிரபல்யம், பகட்டு, வீண்விரயம், பெருமை போன்றவற்றை வெளிக்காட்டுவதாக ஆடை அமையக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் இது பற்றிப் பின்வருமாறு கூறினார்கள். ''யார் பகட்டுக்காக (பிரபல்யமான) ஆடையை அணிகின்றாரோ அல்லாஹ் அவருக்கு மறுமையில் இழிவான ஆடையை அணிவிப்பான்; (அஹ்மத்)

5. மெல்லிய மற்றும் இறுக்கமான ஆடைகளையும், நஜீஸான மூலப் பொருட்களினால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளையும் அணியக் கூடாது.

6. பிறரைக் கவர்ந்திழுக்கும் வகையில் ஒப்பனை செய்யப்பட்ட நறுமணம் பூசப்பட்ட ஆடைகளை அணிதல் கூடாது.

### வீட்டு வாழ்க்கை தொடர்பான இஸ்லாமிய சட்டவிதிகள்

முஸ்லிமினது வீடு வாழ்வின் இலக்கை அடைந்து கொள்ளக் கூடிய அடிப்படைத் தளமாக அமைதல் வேண்டும்.

''அல்லாஹ் உங்களுடைய வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக மாற்றினான் (அந்நஹ்ல்: 80)

''நான்கு விடயங்கள் அதிஷ்டத்தில் அடங்கக் கூடியவை. அவை நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான், சிறந்த வாகனம் என்பனவாகும்; (நஸாஈ)

நான்கு சுவர்களால் வீட்டை அழகாக அமைத்து விட்டால் மாத்திரம் அது வீடாகி விடாது. அதற்கென பல்வேறு இலக்குகள் இருக்க வேண்டும். அதில் பல்வேறு செயற்பாடுகளும், வேலைத் திட்டங்களும் அமுலாக வேண்டும். ஒரு வீடு நிம்மதி, பாதுகாப்பு, சமாதானம், அன்பு, பாசம் என்பவற்றின் அரணாக அமைதல் வேண்டும். நற்பண்புகள், நற்பணிகளின் உறைவிடமாக இருக்க வேண்டும். சமூகத்திற்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்கும் கேந்திர நிலையமாக இருக்க வேண்டும். கல்விமான்கள், தியாகிகள், சமூக சேவையாளர்கள் உருவாகும் இடமாக அமைதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இலக்குகள், பணிகளை ஒரு வீடு நிறைவேற்றிட வேண்டுமாயின் அந்த வீடு பின்வரும் அம்சங்களைச் சிறப்பாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

- வீட்டின் பௌதிக அமைப்பு
- வீட்டின் பௌதிக சூழல்
- வீட்டின் ஆன்மீகச் சூழல்
- வீட்டு உறுப்பினர்களின் பொறுப்புக்கள், கடமைகள், உரிமைகள்

### வீட்டின் பௌதிக அமைவிடம், பௌதிக சூழல்

1. இஸ்லாம் வீட்டை வசதியாகவும், விசாலமானதாகவும், நேர்த்தியாகதாகவும் அமைத்துக்கொள்வதை அனுமதிக்கின்றது. வீட்டின் பௌதிக அமைப்பு வீட்டிலுள்ளோரின் செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாதவாறு அமைதல் வேண்டும். இஸ்லாம் கூறும் பண்பாடுகளுக்கமைய வீட்டை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

2. வீட்டின் உட்புற, வெளிப்புறச் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக் கொள்ளல்

‘‘உங்களது வீட்டு முற்றங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்; (திர்மிதி)

3. வீட்டின் அழகில் நேர்த்தியில் கவனமெடுத்தல்

(நபியே!) நீர் கேட்பீராக ‘‘அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்?

4. வீட்டின் வெளிப்புறச் சூழலை பசுமையாகவும், அழகாகவும் வைத்திருத்தல். வீட்டுப் பூந்தோட்டம் அமைத்தல், பலன் தரக்கூடிய பயிர்களை நடுதல்.

5. வீட்டின் உட்புற அலங்காரங்கள், தளபாடங்கள் இஸ்லாமிய வரையரைகளுக்கு உட்பட்டதாக இருத்தல். ஓவியம், சிற்பம், உருவப்படங்கள் கொண்ட அலங்காரங்கள் பாவிக்கப்படலாகாது.

வீட்டின் அமைப்பும், அதன் உட்புற வெளிப்புற சூழலும் அழகாகவும், அலங்காரமாகவும், நேர்த்தியாகவும் அமைந்துவிட்டால் அது நல்லதொரு வீடாக அமைவதற்கு பூரண தகுதி பெறும் எனக் கருத முடியாது. அந்த வீட்டில் வாழ்கின்றவர்களின் நிலைப்பாட்டைப் பொருத்தே அந்த வீடு பூரணத்துவமடையும். இஸ்லாம் கூறுகின்ற போதனைகள் அக்குடும்பத்தினரால் பின்பற்றப்படும் போது அந்த வீடு சிறந்த வீடாக மாறிவிடும். இவ்வாறான போதனைகளுள் பின்வருவன முக்கியமானவைகளாகும்.

1. ஈமானிய உணர்வும், இஸ்லாமிய செயற்பாடுகளும் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள் அவ்வீடுகளில் வாழுதல்
2. கடமைகள், உரிமைகள் பேணும் கனவன் மனைவி நல்ல வீட்டை உருவாக்கிக்கொள்ள முடியும்.
3. சிறந்த நற்பிரசைகளை உருவாக்கும் திறன் கொண்ட பெற்றோர் வீட்டுக்கமைதல்
4. பெற்றோருக்குப் பணிந்து நடக்கும் பிள்ளைகள் சிறந்த வீடு உருவாக காரணகர்த்தாக்களாவர்.
5. உறவினர்களது உரிமைகளைப் பேணும் வீடாக அமைதல்
6. அயலாரின் உரிமைகளைப் பேணும் வீடாக அமைதல்
7. விருந்தாளிகளை மதிக்கும் வீடாக அமைதல்
8. வீட்டில் பணிபுரிவோரின் உரிமைகள், தேவைகளை மதிக்கும் வீடாக அமைதல்
9. வீட்டினுள் பேண வேண்டிய ஒழுங்குகள் பேணப்படும் வீடாக அமைதல்

**வீட்டின் ஆன்மீகச் சூழல்**

ஒரு வீடு நிம்மதி உள்ளதாக சுபீட்சமானதாக அமைவதற்குப் பௌதிக அமைப்பு, பௌதிகச் சூழல், வீட்டு உறுப்பினர்கள் சிறந்ததாக அமைய வேண்டியதைப் போன்று அதன் ஆன்மீகச் சூழலை ஒழுங்காக அமைத்துக் கொள்வதற்குக் குடும்பத் தலைவன், தலைவி அதற்கான சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளுள் பின்வருவன முக்கிய கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

1. ஐம்பெரும் கடமைகளும் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக தொழுகை அதற்குரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். (ஆண்கள் தொடராக பள்ளிவாசலுக்கு சென்று ஐவேளைத் தொழுகைகளை ஜமாத்துடன் நிறைவேற்றல், நோன்பு நோற்றல், ஸகாத், ஹஜ் வாஜிபானவர்கள் அவற்றை நிறைவேற்றல்)

2. வீட்டில் ஸுன்னத்தான வணக்கங்களை நிறைவேற்றல் (ஸுன்னத்தான தொழுகைகள், நோன்பு நோற்றல், திலாவதுல் குர்ஆன், திகர், ஸலவாத், இஸ்தி.ஃபார்,தவ்பா)

3. இறை சிந்தனை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பயான், குர்ஆன் வகுப்புக்கள், கலந்துரையாடல்கள், இஸ்லாமிய வழிகாட்டல்கள் போன்றவற்றை வைத்துக் கொள்ளல்.

‘‘அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படுகின்ற வீட்டுக்கு உதாரணம் உயிருள்ள மனிதனைப் போன்றதாகும். அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படாத வீட்டுக்கு உதாரணம் உயிரற்ற மனிதனைப் போன்றதாகும்’’ (முஸ்லிம்)

**மேலதிக வாசிப்புக்குரியவைகள் :**


1. மன்ஸூர் எஸ்.எம், இஸ்லாத்தில் பெண்கள் உடை (2000), நெலேக் பதிப்பகம், மாதம்பை

2. முர்தழா முதஹ்ஹிரி, இஸ்லாமிய ஹிஜாப் (1996), இஸ்லாமிய சேவைகள் அமைப்பு, கொழும்பு

3. அப்துல் கப்பார் எஸ்.எம், ஹிஜாப் இறைவழி (1992), ஆமிலுல் இஸ்லாம் இயக்கம், நீர் கொழும்பு

4. ஹஜ்ஜுல் அக்பர் ஆர், பெண் நீதமும் நிதர்சனமும் (2013), அல்ஹஸனாலத் வெளியீட்டகம், கொழும்பு.

5. அகார் முகம்மத் ஏ.ஸீ, சன்மார்க்க சட்டவிளக்கங்கள் (1996), அல்கலம் பதிப்பகம், பேருவல.

6. நூஹ் மஹ்லரி, சுவனம் உங்கள் வீடுகளில் (2015), இஸ்லாமிக் பவுன்டேஷன் டிரஸ்ட், சென்னை.

7. மன்ஸூர் எஸ்.எம், உங்கள் இதயத்துடன் இஸ்லாம் பேசுகிறது (1999), நெலேக் பதிப்பகம், மாதம்பை

**தேர்ச்சி 08: தனிமனித குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி, குடும்ப வாழ்வைச் சீர்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 84: பலதாரமணம், விவாகரத்து மற்றும் இத்தா பற்றிய இஸ்லாத்தின் நோக்கை விளக்குவதோடு அதுபற்றிய விமர்சனங்களையும் தெளிவுபடுத்துவார்.**

**பாடவேளைகள் : 13**

**கற்றல்பேறுகள்**

- பலதார மணம் பற்றிய இஸ்லாத்தின் நோக்கினை விபரிப்பார்.
- பலதார மணம் பற்றிய விமர்சனங்களை தர்க்கரீதியாக நோக்குவார்.
- குடும்ப வாழ்வில் தோன்றும் பிரச்சினைகளை அணுகுவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை விளக்குவார்.
- குடும்ப வாழ்வில் தோன்றும் பிரச்சினைகளை இஸ்லாமிய வழிமுறையில் தீர்ப்பதற்கான ஆலோசகைகளை முன்வைக்கும் திறனைப் பெறுவார்.
- விவாகரத்துப் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைப்பார்.
- விவாகரத்தின் போதும் அதன் பின்னரும் பேண வேண்டிய ஒழுக்கங்கள் பற்றி எடுத்துக் கூறுவார்.
- விவாகரத்துத் தொடர்பான விமர்சனங்களைத் தர்க்கரீதியாக நோக்குவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**பலதாரமணம் பற்றிய இஸ்லாமிய நோக்கு**

- இஸ்லாம் ஓர் இயற்கையான மார்க்கமாகும். இவ்வகையில் அது மனிதனது இயல்புக்கு ஏற்ற பொருத்தமான வாழ்க்கை வழிமுறையை அறிமுகம் செய்துமுள்ளது. மனிதனது இயல்பு நிலைக்கு அமைவாகவே பலதாரமணத்தை இஸ்லாம் நோக்குகிறது.

  ''ஓர் ஆண் ஏக காலத்தில் சட்டரீதியாக ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மனைவிகளாக வைத்திருப்பதே'' பலதாரமணம் என அழைக்கப்படுகின்றது. இந்த மணமுறை தனிப்பட்ட, சமூக காரணங்களை அடிப்படையாக வைத்து இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

  உலக வரலாற்றில் ஓர் ஆண் பல பெண்களை மணந்திருந்ததையும், ஒரே பெண்ணை பல ஆண்கள் மணந்திருந்ததையும், பல பெண்களும் பல ஆண்களும் கூட்டு முறையில் ஒருவரையொருவர் மணந்திருந்ததையும் காண முடிகின்றது.

  நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய நபிமார்களான இப்ராஹீம் (அலை), ய.்.கூப் (அலை), தாவூத் (அலை), ஸுலைமான் (அலை) முதலானோர் பலதார மணம் செய்து வாழ்ந்துள்ளார்கள்.

  அறபு நாட்டில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன்னர் பலதார மணம் வழக்கிலிருந்தது. இதற்கு ஸஹாபாக்களது கூற்றுக்கள் சான்றுகளாகவுள்ளன. '' இஸ்லாத்தில்

இணையும் போது தனக்கு எட்டு மனைவிமார்கள் இருந்ததாக உமைரா (ரழி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்''

பல மன்னர்களும், பிரபுக்களும், செல்வந்தர்களும், பிரமுகர்களும் ஏக காலத்தில் உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகப் பற்றற்ற நிலையிலும் பல தாரங்களை வைத்திருந்தார்கள் என்பதைக் கதைகள், இலக்கியங்கள் வரலாறுகள் எடுத்துக்கூறுகின்றன.

- இஸ்லாத்தில் பலதார மணம் ஒரு சமூகவியல் நோக்கிலேயே அனுமதிக்கப்படுகின்றது. உஹதுப் போரில் அதிகமான ஸஹாபாக்கள் ஷஹீதானதால் முஸ்லிம்களுக்குள் விதவைகள், அனாதைகள் பெருகினர். அவர்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் முஸ்லிம்களது கடமையாக மாறியது. அவர்களைப் பராமரிப்பதற்கு அழகான, ஆரோக்கியமான வழியாகவே பலதார மணம் அமைந்தது. எனவேதான்; இஸ்லாம் ஏக காலத்தில் நான்கு பெண்கள் வரை திருமணம் செய்வதற்கு அனுமதியை வழங்கியது.

- நினைத்தவாறு ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ள இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை. அதற்கான நியதிகளையும், நிபந்தனைகளையும் அது வகுத்துத் தந்துள்ளது. தான் மணம் புரியும் பெண்களின் உணர்வுகளையும், உடலியல் தேவைகளையும் நிறைவு செய்யும் சக்தியும், பராமரிப்புச் செலவு கொடுப்பதற்கு வேண்டிய பொருளாதார வளம் என்பன பலதார மணம் புரிவதற்கு இருக்க வேண்டிய முக்கிய தகைமைகளாகும். உணவு, உடை, வீட்டு வசதியென வாழ்வாதாரங்கள் மனைவியருக்கு வழங்க வேண்டும்.

- மனைவியருக்கிடையே பாரபட்சமாக நடந்து கொள்வது பற்றி எச்சரிக்கும் இஸ்லாமியப் போதனைகள் காணப்படுகின்றன.
  ''நீங்கள் மிகக் கவனமாக இருந்தாலும்; பெண்களிடையே நீதி செலுத்துதல் என்பது உங்களால் முடியாததாகும். எனவே (ஒருவர் பக்கம்) முற்றிலும் சாய்ந்து விடாதீர்கள்.''(அந்நிஸா: 129)

  ''ஒருவருக்கு இரு மனைவியர்கள் இருந்து அவர்களில் ஒருவர் பக்கம் அடுத்தவருக்கு அநீதி இழைக்கும் வகையில் சாய்ந்தால் மறுமை நாளில் தன் உடம்பின் ஒருபக்கம் வீழ்ந்தவராக அல்லது சாய்ந்தவராக அதனை இழுத்துக் கொண்டு வருவார்.'' (திர்மிதி, நஸாஈ)

  இங்கு ஒருவர் பக்கம் சாய்தல் என்பதன் பொருள் உரிமைகளைப் பூரணமாகக் கொடுக்காது அநீதி இழைத்தலாகும். உளரீதியிலான அன்பை நபி (ஸல்) அவர்கள் இதன்மூலம்குறிக்கவில்லை. ஏனெனில், அன்பு செலுத்துவதிலும் நீதியாக இருப்பது மனிதனால் சாத்தியப்படாத ஒன்றாகும். அதனையே மேலே குறித்த குர்ஆன் வசனமும் கூறுகின்றது. எனவே, அல்லாஹ் அதனை மன்னித்து விடலாம்.

  எனவேதான் நபி (ஸல்) அவர்கள் பொருட்களைப் பகிர்ந்து கொடுக்கும் போது மிகவும் நீதியாகப் பங்கிட்டுக் கொடுப்பார்கள். பின்னர் கீழ்வருமாறு கூறுவார்கள், ''இறைவா எனது சக்திக்கு ஏற்ற முறையில் நான் பிரித்துக் கொடுக்கக் கூடியது இதுவே, உனது சக்திக்கு உட்பட்ட, என்னால் முடியாதவற்றில் என்னைக் குற்றம்

பிடிக்காதே.''(திர்மிதி, நஸாஈ). என்னால் முடியாதது என நபி(ஸல்) அவர்கள் கருதியது உளரீதியான அன்பையே. ஆகவே பலதார மணம் முடிப்போர் பராமரிப்புச் செலவு, அன்பளிப்பு வழங்கல், தங்குவதற்கான காலம் ஒதுக்குதல், பிரயாணங்கள் மேற்கொள்ளல் போன்றவற்றில் மனைவியரிடத்தே நீதியாக நடத்தல் வேண்டும்.

பலதார மணம் பற்றிய மேற்குறிப்பிடப்பட்ட விளக்கங்கள் ஊடாக அசாதாரண சூழ்நிலைகளில் எண்ணிக்கையை நான்காக வரையறுத்தும், சமநிலை பேண முடியாத சந்தர்ப்பங்களில் ஒன்றாக கட்டுப்படுத்தியும் இஸ்லாம் வைத்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் தனிமனித, சமூக தேவையை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாம் பலதார மணத்தை அனுமதித்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. மறுபக்கமாக குடும்ப, சமூக தீமைகள் இடம் பெறக் கூடாது என்பதற்காக சில வரையறைகளை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளதையும் மேற்குறித்த விளக்கங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

**குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளும் அதற்கான இஸ்லாத்தின் தீர்வுகளும்.**

- திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படுத்தி வைக்கப்படுகின்ற சட்ட ரீதியிலான பிணைப்பைக் குறிக்கின்றது. திருமணத்தின் பின் குடும்ப வாழ்க்கையில் பிரவேசிக்கின்ற கணவன் மனைவி நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எவ்விதக் குறைபாடுகளும் இல்லாமல் நிறைவேற்றும் போது மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்விற்கு அவர்களை அது இட்டுச் செல்லும். குடும்ப வாழ்வில் பொறுப்புக்கள் விடயத்தில் பெண்களை விட ஆண்கள் ஒரு படி உயர்ந்தவர்களாக இருப்பதனால் தமது கடமைகள் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தல் வேண்டும். நபகா, கிஸ்வா, ஸகன் எனும் செலவினங்களை நிறைவேற்றல், குடும்பத் தலைமைத்துவம், குடும்பத்தைச் சரியான முறையில் வழிநடத்தல் போன்ற மகத்தான பொறுப்புக்கள் கணவனுக்குரியன.
- மனைவியைப் பொறுத்தவரை கணவன் தனது கடமைகளை நிறைவேற்ற மிகச் சிறந்த முறையில் ஒத்தாசைகளை வழங்குதல், கணவனுடைய உடல், உள தேவைகளை நிறைவேற்றல், கணவனுக்கு விசுவாசமாக நடத்தல், கற்பைப் பேணி நடத்தல், கணவனது அனுமதியுடன் எதனையும் நிறைவேற்றல் போன்ற கடமைகள் மனைவியின் பொறுப்பில் உள்ளன.
- குடும்ப வாழ்வில் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோரது கடமைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொடுத்தல், வழிகாட்டல், கண்காணித்தல், இஸ்லாமிய வழியில் பயிற்றுவித்தல், ஆலோசனை கூறல் போன்ற இன்னோரன்ன பணிகள் இதில் உள்ளடங்குகின்றன. இவை நிறைவேற்றப்படாது விடுகின்ற குடும்ப வாழ்வு சிக்கலுக்குரியதாக மாறிவிடும். அதே போன்று பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகள், இரத்த உறவுகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எனப் பல்வேறு கடமைகளை இஸ்லாம் குடும்ப வாழ்வுப் பணியில் விதித்துள்ளது.
- இவை சரியாக நிறைவேற்றப்படாததனால் நாளுக்கு நாள் குடும்பங்களிடையே பிரச்சினைகள் வலுவடைந்து சமூகம், அமைதி, நிம்மதி மற்றும் பாசம் என்பவற்றை இழந்து இஸ்லாமிய வழியில் நின்றும் மாறிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

- குடும்ப வாழ்வில் கணவன் மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளச் சிறந்த ஒழுங்கு முறையொன்றை அல் குர்ஆனும், ஸுன்னாவும் முன்வைக்கின்றன. ஒரு கணவன், மனைவியின் பக்கத்திலிருந்து பிரச்சினைகளை எதிர்நோக்கினால்எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அல் குர்ஆன் மிகத் தெளிவான முறையில் முன்வைக்கின்றது.

  ''மனைவி (கணவனுக்கு) மாறு செய்வாள் என்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். (அவள் திருந்தாவிடில்) படுக்கையிலிருந்து அவளை அப்புறப்படுத்தி வையுங்கள். (அதிலும் அவள் திருந்தாவிடில்) அவளை (இலேசாக) அடியுங்கள். அதனால் அவள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால் அவள் மீது (வேறு குற்றங்களை சுமத்த) யாதொரு வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மேன்மையானவனும் பெரியவனாகவும் இருக்கிறான்''(அந்நிஸா: 34)

  மனைவிக்கு உபதேசித்தல், படுக்கையிலிருந்து அப்புறப்படுத்தி வைத்தல், இலேசாக அடித்தல் என்ற ஒழுங்கு முறை ஒன்றை இஸ்லாம் காட்டித் தருகின்றது. இவ்வழிமுறைகளுக்கூடாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத போது மற்றொரு வழிமுறையைக் குர்ஆன் கற்றுத் தருகின்றது.

  ''(கணவன் மனைவியாகிய) இவர்களுக்குள் (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவன் குடும்பத்தில் ஒருவரை மத்தியஸ்தராகவும், அவள் குடும்பத்தில் ஒருவரை மத்தியஸ்தராகவும் நீங்கள் ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை உண்டுபண்ண விரும்பினால் அல்லாஹ் இருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தோனும் கவனிப்போனுமாக இருக்கின்றான்''(அந்நிஸா: 35)

- கணவனிடமிருந்து மனைவி பிரச்சினைகளை எதிர் கொண்டால் அதனைத் தீர்த்துக் கொள்ளவும் இஸ்லாம் வழிகாட்டுகின்றது. தத்தமது எதிர்பார்ப்புக்கள் கருத்து வேறுபாடுகள் விரும்பாத அம்சங்கள் போன்றவற்றை இருவரும் மனம் திறந்து பேசி, தெரியப்படுத்தி வாழ்வை நெறிப்படுத்திக்கொள்ள இஸ்லாம் வழிகாட்டுகிறது. இவ்வாறான நிலைமைகளில் கணவன், மனைவி வாழ்க்கைப் பிரச்சினைகளை சீர்செய்ய முடியாதவாறு விரிசல் நிலை அதிகரித்து விடுமானால் குடும்பமாக வாழ முடியாத நிலை ஏற்படலாம். அவ்வாறான நிலைமையில் இருவரும் விவாக பந்தத்திலிருந்து பிரிந்து விடுவதற்கும் இஸ்லாம் அனுமதிக்கின்றது.

  ''(சுமுகமாக சேர்ந்து வாழ முடியாமல்) அவ்விருவரும் பிரிந்து விட்டாலோ அல்லாஹ் தன் (அருட்)கொடையைக் கொண்டு (அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு) முற்றிலும் தேவையற்றவராக ஆக்கிவிடுவான்: (கொடையளிப்பதில்) அல்லாஹ் விசாலமானவனும் ஞானமுடையவனுமாக இருக்கின்றான்.''(அந்நிஸா: 130)

  ''அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது தலாக் ஆகும்.''(அபூதாவூத்)

  குடும்ப வாழ்வில் கணவன் மனைவி பிரச்சினைகளை தீர்க்க அழகான முறைகளை முன்வைத்துள்ளதை மேற்படி விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன.

**விவாகரத்தும் அதன் வகைகளும்.**

- குடும்ப வாழ்க்கையில் கணவன், மனைவி பிரச்சினைகளை எதிர்க்கொண்டு அல் குர்ஆன், ஸுன்னா கூறும் முறையில் தீர்த்துக் கொள்ள முடியாத போது விவாகரத்துச் செய்து கொள்ள இஸ்லாம் அனுமதிக்கின்றது. இது அல்லாஹ் அனுமதித்தவற்றில் அவனுக்கு மிகவும் வெறுப்பானதாகும். இந்த வகையில் விவாகரத்தைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

''குடும்ப வாழ்க்கையில் பொறுப்பை நிறைவேற்றுவதில், நடத்தை ரீதியில், கருத்தொற்றுமை ஏற்படாத நிலையில் கணவன் மனைவிக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும் போது திருமண பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள அனுமதியே விவாகரத்தாகும்.''

விவாகரத்து என்பது நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவதற்குரிய ஒரு அனுமதியே தவிர அது மனமாற நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டதொன்றல்ல. இப்லீஸ் சந்தோஷப்படும் அளவுக்குள்ள ஒரு பாவச் செயலாகும்.

''மூன்று விடயங்களை வேடிக்கையாகச் செய்தாலும் அவை உண்மையானதென்றே கொள்ளப்படும். அதில் ஒன்று தலாக் ஆகும்.''(திர்மிதி) என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**விவாகரத்தின் வகைகள் அல்லது பிரிவுகள்**

விவாகரத்து முப்பிரிவுகளாக வகுக்கப்படுகிறது. அவையாவன:

1. தலாக்
2. பஸ்கு
3. குல்உ

**தலாக்:-**

தலாக் என்ற அறபுப்பதம் மணமுறிவு, சுதந்திரமடைதல் எனும் மொழிக் கருத்துக்களைத் தருகின்றது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஆண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விவாகரத்துரிமையைக் குறிக்கின்றது. இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் தலாக் பற்றிய சட்ட நோக்கினைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்கள்.

தலாக் சொல்லப்படும் முறை, சந்தர்ப்பம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து தலாக் இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படும்.

1. **முறையான தலாக் (தலாக் ஸுன்னி)**
2. **முறையற்ற தலாக் (தலாக் பிதஈ)**

முறையான தலாக் என்பது இஸ்லாம் கூறும் வரம்புகளைப் பேணித் தலாக் கூறுவதைக் குறிக்கும். அவ்வகையான தலாக் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக அமையும்.

i) பெண் சுத்தமாக (துஹ்ர்) இருக்கும் காலத்தில் தலாக் சொல்லல். அதாவது பெண்மாதவிடாய், பிரசவருதுவிலிருந்து நீங்கி சுத்தமாக இருக்கும் நிலையில் தலாக் கூறுவதைக் குறிக்கின்றது.

ii) பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் சொல்லல்.
iii) விவாகரத்துக் கூற வழங்கப்பட்டிருக்கும் மூன்று சந்தர்ப்பங்களையும் முதலாம், இரண்டாம், மூன்றாம் சுத்தமான காலங்களில் தனித்தனியாக சொல்லல். ஒன்று அல்லது இரண்டு தடவையுடன் நிறுத்திக் கொண்டாலும் அது முறையான தலாகாகவே அமையும்.

- முறையற்ற தலாக் என்பது இஸ்லாம் தலாக் கூற விதித்திருக்கும் நிபந்தனைகளைப் பேணாமல் தலாக் கூறுவதனைக் குறிக்கும். பின்வரும் அடிப்படையில் கூறப்படும் தலாக் ஸுன்னத்தான வழிமுறைக்கு மாற்றமானதாகும்.

i) பெண் அசுத்தமாக இருக்கும் காலப்பகுதியில் விவாகரத்துக் கூறல். அதாவது மாதவிடாய், பிரசவருதுவுடன் இருக்கும் காலத்தில் தலாக் கூறல்.
ii) இவற்றிலிருந்து பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொண்ட நிலையில் தலாக் கூறல்.
iii) விவாகரத்துக் கூற வழங்கப்பட்டிருக்கும் மூன்று சந்தர்ப்பங்களையும் ஒரே தடவையில் பயன்படுத்தி தலாக் கூறல். இவ்வாறான முறைகளில் தலாக் கூறினாலும் விவாகரத்துத் செல்லுபடியாகும்.
தலாக் சொல்லப்படும் சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொண்டு அது இரண்டு வகைகளாகப் பிரித்து நோக்கப்படும்.

**1. ரஜஈ (மீளத்தக்கது)**
**2. பாஇன் (மீள முடியாதது)**
i) பாஇன் ஸுக்ரா (சிறிய பிரிவினை)
ii) பாஇன் குப்ரா (பெரிய பிரிவினை)

- தலாக் ரஜஈ என்பது மீளவாய்ப்புள்ள தலாக் ஆகும். முறையான தலாக்கின் போது முதல் தடவை அல்லது இரண்டாம் தடவை தலாக் சொல்லப்பட்டு இத்தாக் காலம் முடிவதற்குள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்குத் தம்பதிகளுக்கு உரிமை உண்டு. இவ்வாறு சேர்ந்து வாழ்வதற்கு புதிய நிபந்தனைகள் எதுவும் இல்லை.

“(ரஜஈ ஆகிய) இந்தத் தலாக்கை இரு முறைதான் (கூறலாம்) பின்னும் (தவணைக்குள்) முறைப்படி தடுத்து (மனைவிகளாக) வைத்துக் கொள்ளலாம்: அல்லது (அவர்கள் மீது யாதொரு குற்றமும் சுமத்தாமல்) நன்றியுடன் விட்டுவிடலாம்.”(பகரா: 229)

“ஆனால் பெண்களின் கணவர்கள் (அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதன் மூலம்) இணக்கத்தை நாடினால் (அத்தவணைக்குள்) அவர்கள் மனைவியராகத் திருப்பிக் கொள்ள அவர்களுக்கு அதிக உரிமை உண்டு.”(பகரா: 228)

தலாக் பாஇன் ஸுக்ரா என்பது முறையான தலாக்கின் போது மூன்றாம் முறை தலாக் சொல்லப்படாத நிலையில் இத்தாக் காலம் பூர்த்தியாகி விடுமானால் புதியதொரு நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ அனுமதியுள்ள நிலையினையே குறிக்கின்றது. இது சிறிய பிரிவினையாகும்.

தலாக் பாஇன் குப்ரா என்பது மூன்று தலாக்கும் கூறப்பட்டு முடிவுற்ற நிலையில் உள்ள பெரிய பிரிவினையைக் குறிக்கின்றது. இதன் பின்னர் இவர்கள் திருமணத்தின்

மூலம் சேர்ந்து வாழ விரும்பினால் அதற்குரிய வழிகாட்டலையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது. (பகரா 230)

கணவன் பிரயோகிக்கும் வார்த்தைகள் அல்லது நடந்து கொள்ளும் முறைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு விவாக முறிவுக்கு வேறுபட்ட பெயர்களும் உண்டு. அவை பின்வருமாறு.

**லிஆன் :-**

- லிஆன் என்ற சொல் சாபமிடுதல் என்ற மொழிக்கருத்தினைத் தருகின்றது. ''ஒருவன் தன் மனைவியினை விபசாரக் குற்றம் சாட்டி விவாகரத்துப் பெறுவதைக் குறிக்கின்றது''. தன் மனைவி விபசாரம் புரிவதை தான் கண்டேன் என்று ஒருவன் காழி நீதிபதியிடம் முறையிட்டால் நான்கு சாட்சிகளைக் கொண்டு வருமாறு நீதிபதி கட்டளையிடுவார். விபசாரம் நடைபெறுவதை நேரடியாகக் கண்ட சாட்சிகள் நால்வரை அழைத்து வரமுடியாத போது தான் உண்மையே கூறுவதாக அல்லாஹ்வின் மீது நான்கு முறை சத்தியம் செய்து தன் மனைவி விபசாரம் புரிவதைத் தான் கண்டேன் என்ற தன் கூற்றை உறுதிப்படுத்திய பின் இவ்விடயத்தில் தான் பொய் கூறியிருப்பின் அல்லாஹ்வின் சாபம் தன்மீது உண்டாவதாக என்று சாபமிடுதல் வேண்டும். இக்குற்றச்சாட்டை மனைவி மறுப்பதாயின் தான் உண்மை கூறுவதாக அல்லாஹ்வின் மீது நான்கு முறை சத்தியம் செய்து கணவனின் குற்றச்சாட்டை நிராகரித்த பின் தான் பொய் கூறுவதாயின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாவதாக என்று கூறுதல் வேண்டும்.இவ்வாறு இருவரும் சத்தியம் செய்த பின் காழி நீதிபதி அவ்விருவரையும் பிரித்து வைப்பார். அதன் பின்னர் அவ்விருவரும் எச்சூழலிலும் மீண்டும் கணவன் மனைவியாக இணைந்து வாழவே முடியாது. இது பற்றி அல்குர்ஆனில் (அந்நூர்: 6-9) குறிப்பிடப்பட்டுள்ளது.

**லிஹார் :-**

- ஒருவன் தனது மனைவியை உடல் ரீதியாக தனது தாய்க்கு ஒப்பிட்டுக் கூறுவதனால் ஏற்படும் தலாக்கைக் குறிக்கின்றது. இக் கூற்றிலிருந்து மீண்டு விடாமல் ஒருவரை ஒருவர் தொடமுடியாது. அவ்வாறு கூறியதற்குக் குற்றப்பரிகாரமாக ஓரடிமையை விடுதலை செய்ய வேண்டும் முடியாது விடின் இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும். அதற்கும் முடியாதவர் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என இஸ்லாம் விதிக்கின்றது. பின்வரும் குர்ஆன் வசனத்தைக் குறிப்பிடலாம். (அல்முஜாதலா: 2-4)

**ஈலாஉ :-**

ஒருவன் தன் மனைவியை நோக்கி ''அல்லாஹ் மீது ஆணையாக நான் உன்னுடன் உடலுறவு கொள்வதில்லை'' என சத்தியமிடுவதையே இது குறிக்கும். இவ்வாறு சத்தியம் செய்தவருக்கு நான்கு மாதகாலம் தவணையுண்டு. அதற்குள் அவர்கள் மீண்டும் இணைந்து கொள்ள முடியும். நான்கு மாதங்களுக்கு மேலாக சத்தியத்தை நீடித்தால் தலாக் நிகழ்ந்து விடும். அல்குர்ஆனின் (2:226-227) வசனங்கள் இது பற்றிக் குறிப்பிடுகின்றன.

**குல்உ**

- ''குல்உ'' என்ற அரபுப் பதம் களைதல் அல்லது நீக்குதல் எனும் கருத்தினைத் தருகின்றது. இஸ்லாத்தில் ''ஒரு பெண் தன் கணவனுடன் இணைந்து வாழ முடியாத நிலையேற்பட்டு, அவன் மீது வெறுப்புக் கொண்டு, விவாக பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக ஒரு தொகைப் பணத்தை அல்லது பொருளைக் கொடுத்துவிட்டு விவாகவிடுதலை பெறுவதைக் குறிக்கின்றது'' குறிப்பிடத்தக்க நியாயமான காரணங்கள் எதுவும் இன்றி தன் கணவனிடம் விவாகரத்து(குல்உ) கோரும் பெண்ணுக்கு சுவர்க்கத்தின் வாடை கூட ஹராமாகி விடுகிறது என்றும் அப்பெண் முனாபிக் ஆவாள் என்று ஹதீஸ் குறிப்பிடுகிறது. குல்உ நடவடிக்கை காழி நீதிபதி முன்னிலையிலேயே இடம் பெற வேண்டும்.

**பஸ்கு**

- ''பஸ்கு'' என்ற அரபுச் சொல் முறித்தான் என்ற கருத்தினைத் தருகின்றது. விவாகம் செல்லுபடியற்றது என்பதை இது குறிக்கினறது. பஸ்கு மூலமான விவாகரத்து இரண்டு காரணங்களினால் இடம் பெற முடியும்.

  உடன்படிக்கையில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாகவோ திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்வு காரணமாகவோ பஸ்கு நிகழலாம். உ-ம் : திருமணம் முடிந்தபின் இருவரும் பால்குடிமூலம் மஹ்ரமான உறவினர்கள் எனத் தெரிய வருதல், அல்லது தம்பதிகளுள் ஒருவர் மதம் மாறுதல், மற்றும் தீராத நோய், கடும் வறுமை, ஆண்மைக் குறைபாடு போன்ற காரணங்கள் காணப்படின் காழியிடம் முறையிட்டு விவாக பந்தத்திலிருந்து பிரிவதையே இது குறிக்கும்.

- இஸ்லாம் அனுமதித்துள்ள விவாகரத்துத் தொடர்பாக விமர்சனங்கள் காணப்படுகின்றன. இவ்விமர்சனங்களை நியாயமான முறையில் நோக்கினால் இஸ்லாத்தின் விவாகரத்து பற்றிய நிலைப்பாட்டை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். பலகோணங்களில் தர்க்க ரீதியாக இதனை நியாயிக்க முடியும்.

- வரலாற்றில் விவாகரத்து எவ்வடிப்படைகளில் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை அறிந்து இஸ்லாத்தின் நிலைப்பாட்டை அவற்றோடு ஒப்பிடுவதன் மூலம் நியாயிக்க முடியும். ஜாஹிலியாக்கால அரபு மக்களிடமும் இஸ்லாம் அறிமுகமாக முன்னரே விவாகரத்து நடைமுறையில் இருந்தது. ஒரே பெண்ணை பல முறை வேண்டுமானாலும் விவாகரத்துச் செய்துவிட்டு மீண்டும் மீண்டும் மணமுடிக்கும் நிலை காணப்பட்டது. தனது மனைவியுடன் உடல் உறவு கொள்ள மாட்டேன் என்று தனது தெய்வத்தின் மீது சத்தியம் செய்து பாலியல் நடவடிக்கைகளிலிருந்து விலகி நின்று தன் மனைவியைத் துன்புறுத்தவும் ஆண் உரிமை பெற்றிருந்தான். அவளை விவாக விடுதலையும் செய்யாது அவளுடன் குடும்பமாகவும் வாழாது தன் வீட்டில் அவளைக் கைதி போல் நடத்தும் நடைமுறை ஜாஹிலியாக்கால அறபு மக்களிடம் இருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் தான் இஸ்லாம் ஆணுக்கு மட்டுமன்றி பெண்ணுக்கும் விவாகரத்துச் செய்யும் உரிமையை வழங்கியது.

- இஸ்லாத்திற்கு முற்பட்ட கால நாகரிக சமூகங்கள் விவாகரத்தைத் தத்தமது சிந்தனை வழியிலேயே நோக்கின. இந்து சமூகத்தில் விவாகரத்து அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. திருமணமுடித்த பெண் அக்கணவனுடனேயே வாழ்நாள் முழுவதும் வாழ்க்கை நடத்த வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. கணவன் இறந்துவிட்டால்

அவனது சிதையில் உடன்கட்டை ஏற வேண்டுமென மனுதர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மேற்குலக நாடுகளில் சமவுரிமை பேணப்பட வேண்டும் எனும் அடிப்படையில் விவாகரத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடற்ற இவ்வுரிமை குடும்பங்கள் சிதைவுற்றுச் சமூகம் ஆட்டம் காணக் கூடியளவுக்குச் சென்றுள்ளது. விவாகரத்துக்கு அஞ்சி திருமணம் முடிக்காமல் இருப்பதையே விரும்புமளவுக்கு ஆண்களையும் பெண்களையும் இட்டுச்சென்றுள்ளது. இதனால் தமது பாலியல் தேவைகளை முறைகேடாக ஆணும் பெண்ணும் தீர்த்துக் கொள்ளும் கேவலமான நிலை தோன்றியுள்ளது. குடும்பங்களின் பாதுகாப்பிற்காகப் பிரயோகிக்கப்பட வேண்டிய இவ்வுரிமை துஷ்பிரயோகம் செய்யப்பட்டு குடும்பங்களின், சமூகங்களின் அழிவுக்குக் காரணமாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

விவாகரத்துரிமையில் இஸ்லாம் இதர கொள்கைகளை விட குடும்பத்தை, சமூகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் நடுநிலையான போக்கையே கையாளுகின்றது.

- இஸ்லாம் விவாகரத்தை அனுமதித்திருந்த போதிலும் விருப்பத்துடன் அதனை அனுமதிக்கவில்லை. தேவையைப் பொறுத்து மாத்திரமே அது அனுமதிக்கப் பட்டிருக்கின்றது. இனிக் கணவன் மனைவி சேர்ந்து வாழ்ந்து வாழ்க்கைப் பணிகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலைமை உருவாகும் போதே இதனைச் சட்ட விதிகளுடன் அனுமதிக்கின்றது. விவாகரத்துச் சொல்வதே ஹலாலானவற்றுள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானதாகும். ''பெண்களை அனுபவிப்பதில் ஆசை கொண்டு அதிகமாக தலாக் சொல்பவனை அல்லாஹ் சபிக்கிறான்.'' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இஸ்லாத்தைப் பொறுத்தவரை விவாகரத்து அல்லாஹ்விடத்தில் வெறுப்பான செயலாகும். மிக அசாதாரண சூழ்நிலைகளில், மண வாழ்வு சீராக அமைவதற்குத் தடைகள் ஏற்படும் போதே இதனை இஸ்லாம் அனுமதிக்கின்றது.

- மணமுறிவு ஏற்படக் கூடாது என்பதற்காகத் திருமணத்திற்கு முன்னர் இஸ்லாம் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது. திருமணப் பேச்சுவார்த்தை மணப் பொருத்தம் பார்த்தல் என்பன இவற்றுள் முக்கியமானவையாகும். திருமண வாழ்வின் பின் மணமுறிவு ஏற்படாதிருக்கவும் இஸ்லாம் வழிகாட்டுகின்றது. ஒரு கணவன் மனைவியிடமிருந்து பிரச்சினைகளை எதிர்கொண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், மனைவி கணவனிடமிருந்து பிரச்சினைகளை எதிர்கொண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை குர்ஆன், ஸுன்னா தெளிவாகப் போதிக்கின்றன. இவ்வாறு நோக்கும் போது இஸ்லாம் விவாகரத்தைக் குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாப்பதற்காகவும் சுபீட்சமான வாழ்வுக்காகவும் ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றது.

- விவாகரத்தின் மூலம் பொருந்தாத உள்ளங்கள் பிரிந்து நிம்மதியான வாழ்வுக்கு தம்மை இட்டுச் செல்ல உதவியாக அமைகின்றது. இதனால் குடும்பங்களும், சமூகமும் நிம்மதி பெறுகின்றன. விவாகரத்தின் மூலம் மறுமணத்திற்கு வழி பிறக்கின்றது. பெற்றோரின் குடும்பப் பிரச்சினைகள் பிள்ளைகளையும் பாதிக்கச் செய்யும். ஏதோ ஒரு வகையில் விவாகரத்தின் மூலம் பிரிவது அக்குழந்தைகளுக்கும் நிம்மதி பெற வாய்ப்பை ஏற்படுத்தும். இவ்வாறு பல கோணங்களில் நோக்கும்

போது இஸ்லாம் அனுமதிக்கும் விவாகரத்து முறை நியாயமானதாக அமைவதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

**இத்தாவும் அதன் நோக்கங்களும்.**

'அத்த' என்ற அரபு மூல வேர்ச்சொல்லிலிருந்து தோற்றம் பெற்ற அரபுப் பதமே இத்தாவாகும். கணிப்பிடுதல், எண்ணுதல் எனும் மொழிக் கருத்துக்களில் இப்பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாத்தில் ''மரணத்தினால் அல்லது விவாகரத்தினால் கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் செய்து கொள்ளாமல் சில சட்ட விதிகளுக்கமைய சில காலம் வரை எதிர்பார்த்திருப்பதையே இத்தா என்ற பதம் குறிக்கின்றது.

இத்தா விதியாக்கப்பட்டதன் பின்னணியில் பல்வேறு நோக்கங்கள் பொதிந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

1. இத்தா என்பது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டுள்ள இபாதத் என்பதை விளங்கி நடைமுறைப்படுத்தல்.
2. இறந்த அல்லது விவாகரத்து செய்த கணவன் மூலம் குறித்த பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்வதற்குரிய கால எல்லை.
3. கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லையை வரையறுத்தல்.
4. ஒரு குழந்தையின் பல்துறைசார்ந்த உரிமைகளைப் பேணுவதற்கு இத்தா உதவுகின்றமை. (தந்தை யார், அதன் வாரிசுச்சொத்தை தீர்மானித்தல், மஹ்ரம் அஜ்னபி தீர்மானித்தல்)
5. தலாக் ரஜஈ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம். மேலும் தன் தவறுகளை புரிந்து அவற்றுக்காக வருந்தி மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறல்.

இந்நோக்கங்களின் அடிப்படையில் இத்தாவை ஆய்கின்ற போது அதை ஷரீஆவின் விதிகளுக்கமைய முறையாக அனுஷ்டிப்பதில் பல்வேறு சமூகவியல் சார்ந்த நலன்கள் உள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியும்.

**இத்தாவின் வகைகள்.**

1. கணவன் மரணித்த பெண்களது இத்தா
   கணவன் மரணித்த ஒரு பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால எல்லையை குர்ஆன் வரையறுத்துக் கூறுகின்றது.
   ''உங்களில் எவரேனும் மனைவிகளை விட்டு விட்டு இறந்தால் அவர்கள் நான்கு மாதம் பத்து நாட்கள் எதிர்பார்த்திருக்கவும்.'' (பகரா: 234)

2. தலாக் கூறப்பட்ட பெண்களது இத்தா
   விவாகரத்தினால் விவாகபந்தம் முறிந்த ஒரு பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால எல்லையை குர்ஆன் வரையறுத்துக் கூறுகின்றது.
   ''விவாகரத்துக் கூறப்பட்ட ஒரு பெண் தங்களுக்கு மூன்று மாதவிடாய் (மூன்று குறூஉகள்) காலம் எதிர்பார்த்திருக்கவும்.'' (பகரா: 228)

நிகாஹ் உரிய முறையில் நடைபெற்றிருந்தாலும் உடல் உறவு கொள்ள முன்பு தலாக் கூறப்பட்டால் இத்தா இருத்தல் கடமையாகாது.

மாதவிடாய் இன்னும் ஏற்படாத அல்லது மாதவிடாய் நின்றுவிட்ட தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கான இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால எல்லையை குர்ஆன் வரையறுத்துக் கூறுகின்றது.

''(தலாக் சொல்லப்பட்ட மனைவிகளாகிய) உங்கள் பெண்களில் எவரும் (அதிக வயதாகி) மாதவிடாயின் நம்பிக்கையிழந்து (இத்தாவைக் கணக்கிட என்ன செய்வதென்று) நீங்கள் சந்தேகத்திற்குள்ளாகிவிட்டால் அவர்களுக்கும் இன்னும் எவர்களுக்கு இது வரையில் மாதவிடாய் ஏற்படவில்லையோ அவர்களுக்கும் இத்தா(வின் தவணை) மூன்று மாதங்களாகும்.'' (அத்தலாக்: 4)

3. கர்ப்பிணிப் பெண்களுக்குரிய இத்தா.
   கர்ப்பிணிப் பெண்களுக்குரிய இத்தா அனுஷ்டிக்கும் கால எல்லையை குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.
   ''கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களுடைய இத்தா(வின் தவணை) அவர்கள் பிரசவிக்கும் வரையிலாகும்.'' (அத்தலாக்: 4)

தலாக் இற்கான இத்தாவிலும் சரி, அல்லது கணவனின் மரணத்திற்கான இத்தாவிலும் சரி பிரசவம் நிகழ்ந்துவிட்ட உடனே இத்தா முடிவுறும். அது குறைமாதச் சிசுக் கட்டி விழுந்தாலும் சரியே.

**மேலதிக வாசிப்புக்குரியவைகள் :**


1. ஆதம் முஹியத்தீன், ஷபிஈ பிக்ஹின் சட்டக் களஞ்சியம் (2002), தாருல் புஷ்ரா, சென்னை.
2. ஹஜ்ஜுல் அக்பர் ஆர், பெண் நீதமும் நிதர்சனமும் (2013), அல்ஹஸனாலத் வெளியீட்டகம், கொழும்பு.
3. மன்ஸூர் எம்.ஏ.எம், திருமணம் (1993), தாருல் அர்க்கம் பதிப்பகம், மல்வானை.
4. மஸாஹிர் எஸ்.எம். பலதாரமணம்
5. மன்ஸூர் எஸ்.எம், உங்கள் இதயத்துடன் இஸ்லாம் பேசுகிறது (1999), நெலேக் பதிப்பகம், மாதம்பை
6. பாதிமா ஜனூபா, இஸ்லாத்தில் பெண்ணுரிமை (2000), முனீரா பதிப்பகம், சென்னை.

**தேர்ச்சி 08: தனிமனித குடும்ப வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி, குடும்ப வாழ்வைச் சீர்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.5: வாரிசுரிமை பற்றிய விதிமுறைகளை அறிந்து விளக்கமளிப்பார்.**

**பாடவேளைகள் : 5**

**கற்றல்பேறுகள்**

- வாரிசுரிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்குவார்.
- வாரிசுரிமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒழுங்கு முறைகளை முன்வைப்பார்.
- இஸ்லாமிய அடிப்படையில் வாரிசுச் சொத்துப் பங்கீட்டு முறையை நியாயிப்பார்.
- முனாகஹாத் தொடர்பான ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளை எடுத்துக் கூறுவார்.
- விவாகரத்து, இத்தா, வாரிசுரிமை முதலானவற்றில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பண்புகளைத் தெளிவாக எடுத்துரைப்பார்.
- நடைமுறையில் உள்ள ஒழுக்கவீனங்களை விமர்சன ரீதியாக நோக்குவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**இஸ்லாத்தில் வாரிசுரிமையின் முக்கியத்துவம்**

- வாரிசுரிமை இஸ்லாமிய குடும்ப வாழ்விலும், பொருளாதார ரீதியான நடவடிக்கைகளிலும் மிக முக்கிய இடம் வகிக்கின்றது.
- இஸ்லாமிய சட்டக்கலையில் வாரிசுரிமை என்பது (இல்முல் மீராஸ்) வாரிசுச் சொத்து பற்றிய அறிவு (இல்முல் பராஇழ்) பர்ளுகள் குறித்த அறிவு, (அத்தரிகா) மரணித்தவர் விட்டுச் செல்லும் சொத்து பற்றிய அறிவு எனும் சொற்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- வாரிசுரிமை என்பது ''வாரிசுச் சொத்தில் ஒவ்வொரு வாரிசு தாரருக்கும் உரிய பங்குகளை வரையறுக்கும் சட்ட விதிகளைக் கொண்ட கலை'' என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.
- மேற்படி வரைவிலக்கணத்தின் மூலம் வாரிசுச் சொத்து என்பது ஒருவர் மரணித்த பின்னர் விட்டுச் செல்லும் சொத்துக்களைக் குறிக்கும். அச் சொத்துக்கள் அவருடைய வாரிசுகளுக்கு உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். மேலும் இறந்தவர் விட்டுச் செல்லும் வாரிசுச் சொத்துக்களுக்கு பூரண உரித்துடையவராக வாரிசுகள் மாறிவிடுகின்றனர் என்பது உணர்த்தப்படுகின்றது.
- வாரிசுரிமை தொடர்பான உலக வரலாற்றில் இஸ்லாமே முதன் முதலாகக் குரல் எழுப்பியது. ஆண், பெண், பலசாலி, பலவீனர், மூத்தவன், இளையவன், ஏழை செல்வந்தன் என்ற பாகுபாடின்றி வாரிசுகள் அனைவருக்கும் சொத்தில் பங்கிருப்பதனை

உறுதி செய்தது. ஆண், பெண் இருசாராருக்கும் வாரிசுச் சொத்தில் பங்குண்டு என்ற உண்மையை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்குப் பாகமுண்டு. அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு - (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்.''(அந்நிஸா: 7)

- நபி (ஸல்) அவர்கள் வாரிசுரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் பற்றி பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள். ''நீங்கள் வாரிசுரிமைச் சட்டத்தைக் கற்று அவற்றைப் பிறருக்குக் கற்பிப்பீர்களாக! ஏனெனில் அது அறிவின் ஒரு பகுதியாகும். மேலும் இக்கலை மறக்கக்கூடியதாகும் இதுவே எனது சமூகத்திலிருந்து அகற்றப்படும் முதல் அம்சமாகும்'' (இப்னு மாஜா)
- இவ்வாறு இஸ்லாம் வாரிசுச் சொத்து குறித்து தெளிவான கண்ணோட்டமொன்றை முன்வைத்து நீதியும், நியாயமும் மிக்க குடும்ப வாழ்வொன்றை உருவாக்குவதற்கு சிறந்த அடித்தளமிட்டுள்ளது.
- எனவே முஸ்லிம் தனியார் சட்டத்தின் பிரதான பகுதியாகக் காணப்படும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தைப் புரிந்து கொள்வது ஆரோக்கியமான குடும்ப வாழ்வுக்கும், பிரச்சினைகளற்ற சமூக வாழ்வுக்கும் வழிவகுக்கும். மேலும் இதனை நடைமுறைப்படுத்துவது சன்மார்க்கக் கடமையாகும்.

**வாரிசுரிமையோடு தொடர்பான விதிமுறைகள் :**

வாரிசுரிமைச் சொத்துக்கள் பகிரப்படுவதற்கு முன்னர் அவற்றிலிருந்து நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

1. ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றல்

   மரணித்தது முதல் அடக்கம் செய்யப்படும் வரை ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்ற ஏற்படும் செலவினங்களை அவர் விட்டுச் செல்லும் சொத்திலிருந்து மேற்கொள்ளல் வேண்டும். இவற்றுள் குளிப்பாட்டல், கபனிடல், தொழுவித்தல், அடக்கம் செய்தல் என்பனவே முக்கியமானவைகளாகும்.
2. மரணித்தவரின் கடன்களை நிவர்த்தி செய்தல்

   மரணித்தவரின் வாரிசுச் சொத்திலிருந்து நிறைவேற்றப்பட வேண்டிய கடன்கள் இரண்டு வகைப்படுகின்றன.

   1. அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் (உ-ம்: நத்ர், கப்பாரா, பித்யா)
   2. மனிதர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள்
3. வஸிய்யத்தை நிறைவேற்றல்

   வஸிய்யத் என்பது மரணசாசனம் அல்லது உயிலைக் குறிக்கும். ஜனாஸாவுக்குரிய செலவும், கடனும் போக எஞ்சிய சொத்திலிருந்து மரணித்தவரின் வஸிய்யத் நிறைவேற்றப்படும். இது வாரிசுகள் தவிர்ந்த ஏனையவர்களுக்கு மூன்றிலொரு பகுதிக்குள்ளால் வழங்கப்படும் அன்பளிப்புச் சொத்தைக் குறிக்கின்றது.

   ''வாரிசுகளுக்கு வஸிய்யத் இல்லை'' (அபூதாவூத்) என நபி ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

   மேற்குறிப்பிட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் எஞ்சிய சொத்துக்கள்

வாரிசுகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும்.

**வாரிசுரிமையின் நிபந்தனைகள்**

1. சொத்துக்குரிமையாளர் மரணித்திருக்க வேண்டும்.
   இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்கள் இறந்தவரின் சொத்துக்களுக்கே நடைமுறையாகின்றன. ஒருவர் காணாமல் போய் நீண்ட காலம் வராதிருந்தால் நீதிபதியின் தீர்ப்புக்கமைய அவரது சொத்து வாரிசுச் சொத்தாகக் கருதப்படும்.
2. சொத்துரிமையாளர் மரணிக்கும் போது அவரது வாரிசுகள் உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கர்ப்பத்தில் இருக்கும் சிசுவிற்கும் வாரிசுப் பங்கு ஒதுக்க வேண்டும் என்பது இமாம்களின் கருத்தாகும்.
3. வாரிசுச் சொத்தில் பங்கு பெறத் தடையாகவுள்ள எந்தவொரு அம்சமும் இல்லாதிருத்தல் வேண்டும்.

**வாரிசுச் சொத்தைப் பெற்றுக் கொள்ளத் தடையாக அமையும் காரணிகள்**

1. வாரிசாக இருப்பவர் சொத்துரிமையாளரைக் கொலை செய்தல்
   நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘கொலை செய்தவர் வாரிசுச் சொத்துப் பெறமாட்டார்’’ (திர்மிதி)
2. மதவேறுபாடு :
   ஒரு முஸ்லிம் காபிரின் வாரிசாகவோ ஒரு காபிர் முஸ்லிமின் வாரிசாகவோ இருக்க முடியாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘ காபிரிடமிருந்து முஸ்லிம் வாரிசுச் சொத்து பெறமாட்டார். முஸ்லிமிடமிருந்து காபிரும் வாரிசுச் சொத்து பெறமாட்டார்’’ (புகாரி)
3. அடிமையாக இருத்தல்

**வாரிசுச் சொத்தில் உரிமை பெறுவதற்கான காரணிகள்**

1. இனபந்தத் தொடர்பு :
   சொத்துரிமையாளருக்கும் வாரிசுக்கும் இடையிலான குடும்ப, இரத்த உறவு
2. திருமணத் தொடர்பு :
   திருமணத்துக்கூடாக கணவனின் வாரிசுச் சொத்தில் மனைவிக்கும், மனைவியின் வாரிசுச் சொத்தில் கணவனுக்கும் பங்குண்டு.

**வாரிசுகளின் வகைகள்**

வாரிசுச் சொத்துக்கு மூன்று வகையான வாரிசுகள் உள்ளனர்.

1) அஸ்ஹாபுல் புரூள் : -
   அல் குர்ஆன், ஸுன்னாவினால் பங்குகள் மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வாரிசுகளை அஸ்ஹாபுல் புரூள் குறிக்கின்றது. பின்வருவோர் இப்பிரிவில் அடங்குகின்றனர்.
   1. கணவன்
   2. மனைவி
   3. மகள்
   4. மகனின் மகள்
   5. தாய்

6. தந்தை
7. உடன் பிறந்த சகோதரி
8. தாயின் தாய்
9. தந்தையின் தாய்
10. தந்தையின் சகோதரி
11. ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள்

2). அஸபாக்கள் :

அல்குர்ஆன், ஸுன்னா பங்குகளை வரையறுத்துக் கூறாத மரணித்தவருக்கு நெருக்கமான ஆண் வாரிசுகளை அஸபா என்பது குறிக்கின்றது. அஸ்ஹாபுல் புரூள் பிரிவைச் சார்ந்தோர் பங்குகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் எஞ்சியதைப் பெறுபவர்களாக அஸபாக்கள் காணப்படுகிறார்கள். அஸபாவின் வகைகள் மூன்று

1. நேரடி அஸபாக்கள் :
   மரணித்தவரின் ஆண் வாரிசுகளை இது குறிக்கும். மகன், மகனின் மகன், தந்தை, தந்தையின் தந்தை, சகோதரன், சகோதரனின் மகன், தந்தையின் சகோதரன், தந்தையின் சகோதரனின் மகன் இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மரணித்தவரின் சொத்துக்கு அஸபாவாக இராது முன்னுரிமை அடிப்படையிலேயே அஸபாக்களாக இருப்பார்கள்.
2. பிறர் மூலம் அஸபாக்களாவோர் :
   சம தரத்திலுள்ள ஆணுடன் சம தரத்திலுள்ள பெண் அஸபாவாக மாறுவதை இது குறிக்கும். மகனுடன மகள், மகனுடைய மகனுடன் மகனுடைய மகள், சகோதரனுடன் சகோதரி, இரு வழி சகோதரர்களுடன் இரு வழி சகோதரி, தந்தை வழி சகோதர்களுடன் தந்தை வழி சகோதரி.
3. பிறருடன் சேர்ந்து அஸபாக்களாவோர் :
   மற்றொரு பெண்ணின் மூலம் அஸபாவாக மாறுவதை இது குறிக்கிறது. அதாவது மரணித்தவருக்கு ஆண் வாரிசுகள் யாருமில்லாமல் மகள் மட்டும் இருப்பின் மகளுக்குரிய பங்கைப் பெற்றதன் பிறகு சகோதரிகள் இருப்பின் அவர்கள் எஞ்சியதை அஸபாவாக சகோதரிகள் பெறுவார்கள்.

3) அல்- அர்ஹாம் அல்லது துல் அர்ஹாம் அல்லது தவில் அர்ஹாம்

அஸ்ஹாபுல் புரூள், அஸபாவுக்கு அடுத்த நிலையிலுள்ள குடும்ப உறவினர்களையே இது குறிக்கின்றது. இவர்கள் குறிப்பிட்ட சொத்துக்கு வாரிசுகளாக மூன்றாவது நிலையில் சேர்வார்கள். பின்வருவோரை உதாரணமாகக் குறிப்பிடலாம். மகனின் மகள், மகளின் மகனின் மகள், சகோதரியின் பிள்ளைகள், சகோதரியின் பெண் மக்கள்.

**வாரிசுக்குரிய பங்கு விபரம்**

| | |
|---|---|
| 1/4 | (2 பேர்கள்) கணவன், மனைவி |
| 1/2 | (5 பேர்கள்) கணவன், மகள், மகனுடைய மகள், உடன் பிறந்த சகோதரி, தந்தை வழிச் சகோதரி |
| 1/8 | மனைவி |

| | |
|---|---|
| 1/3 | (2 பேர்கள்) தாய், தாய்வழிச் சகோதரர்கள், சகோதரர்கள் |
| 2/3 | மகள்மார், மகனின் மகள்மார், இருவழிச் சகோதரிகள் |
| 1/6 | (7 பேர்கள்) தந்தை, தாய், பாட்டன், மகனின் மகள், தந்தைவழிச் சகோதரி, பாட்டி, தாய் வழிச் சகோதரன் அல்லது சகோதரி |

**அல்- ஹஜ்ப்- தடை செய்தல்**

வாரிசுகள் தமக்குரிய பங்கைச் குறைவாகப் பெறும் சந்தர்ப்பங்களும், முற்றாக இழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இதுவே ''ஹஜ்ப்'' எனப்படுகிறது. அதாவது வாரிசுகள் சிலர் இருப்பதனால் வேறு சிலருக்குச் சொத்தில் பங்கு இல்லாமலோ அல்லது குறைந்தோ வருவதாகும். இவ்வாறு பங்கு பெறத் தடையாக வருபவர் ''அல்-ஹாஜிப்'' என்றும் தடை செய்யப்படுபவர் ''மஹ்ஜூப்'' என்றும் அழைக்கப்படுவர். இது இரு வகைப்படும்.

1. ஹஜ்புன் நுக்ஸான் :
இது சிலர் இருப்பதனால் சிலருக்குக் கிடைக்க இருந்த பங்கு குறைந்து போவதனைக் குறிக்கும். உதாரணமாக கணவன், மனைவி ஆகியோருக்கு மரணித்தவருக்கு பிள்ளைகள் இருக்கும் போது பங்கு குறைவதைக் குறிப்பிடலாம்.
2. ஹஜ்புல் ஹிர்மான் :
சிலர் இருப்பதனால் வேறு சிலருக்குக் கிடைக்கவிருந்த பங்கு முற்றாகக் கிடைக்காமல் போவதைக் குறிக்கும். உதாரணமாக மரணித்தவருக்கு மகன் இருக்கும் போது மகனின் மகனுக்குப் பங்கு கிடைக்காமல் போவதைக் குறிப்பிடலாம்.

- பெண்கள் வாரிசுரிமையும் இஸ்லாத்தின் நீதியும்

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பரவலாக வரவேற்கப்படுகின்றதொன்றாக இருப்பினும் அதற்கெதிரான விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டமானது பெண்களின் உரிமைகளை மறுக்கின்றது. அவர்களைப் புறக்கணிக்கும் வகையில் ஏற்றத்தாழ்வு காட்டியுள்ளது. ஆணாதிக்கத்திற்கு வழிவகுக்கின்றது போன்ற குற்றச்சாட்டுக்கள் சமகால உலகில் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய குற்றச் சாட்டுக்கள் எந்தளவு தூரம் போலியானது என்பதையும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் பரந்துபட்ட தன்மையையும் இந்தப்பகுதி விவரிக்கின்றது.

வாரிசுகளுக்கு மத்தியில் பங்குகள் வித்தியாசமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மூன்று காரணிகள் ஏதுவாக அமைவதைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அவையாவன

1. மரணித்தவருக்கும் வாரிசுக்குமிடையிலான உறவின் தரம் : மரணித்தவருக்கு மிகவும் நெருக்கமானவராக வாரிசு இருப்பின் அதிகமான சொத்துக்களை வாரிசு சொத்தாகப் பெறுவார். மறுபக்கத்தில் தூரத்து உறவாயின் வாரிசுச் சொத்தில் குறைவான பங்கைப் பெறுவார். இந்த வகையில்தான் மகள் மகனின் மகளைவிட சொத்துக்களை அதிகமாகப்பெறுகிறார்.
2. மரணித்தவரின் வாரிசு வயதால் மூத்தவராயிருப்பின் வயதில் குறைந்தவரைவிடக் குறைவான பங்குகளையே வாரிசாகப் பெறுவார். இவ்வகையில்தான் மகள் தாயைவிட அதிக பங்கு பெறுகிறாள்.
3. வாரிசுகள் சிலரின் மீது இஸ்லாமிய ஷரீஅத் சுமத்திய பொருளாதாரச் சுமை : பொருளாதாரச் சுமையை ஆணின் மீதே இஸ்லாம் சுமத்தியுள்ளதென்பதால்

பெண்ணை விட ஆண் வாரிசுச் சொத்தில் பங்கு பெறுவது மிகவும் நியாயமானது. எனவே மேலுள்ள மூன்று அடிப்படைகளையும் நோக்கும் போது வெறுமனே ஆண், பெண் என்ற ஒரே காரணத்திற்காக வாரிசுச் சொத்துக்கள் ஏற்றத்தாழ்வான முறையில் பகிரப்படுவதில்லை என்பதையும் மிக நெருக்கமான உறவு, பின் வாரிசுகள், செலவினங்களைச் சுமப்பவர்கள் எனக் கருதியே அதிகமான பங்குகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு பெண் தாய், மனைவி, மகள், சகோதரி, ஒன்றுவிட்ட சகோதரி, தாயின் தாய் என்ற பல்வேறு நிலைகளில் வாரிசுச் சொத்தில் பங்குகளைப் பெற்றுக் கொள்கிறாள். பெண் வாரிசுச் சொத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் பங்குகளை ஆண் பெற்றுக் கொள்ளும் பங்குகளோடு சேர்த்து ஒப்பிட்டு ஆராயும் போது பெண்ணுக்கு இஸ்லாம் சொத்துப் பங்கீட்டில் வழங்கியுள்ள உரிமைகளை மிகவும் ஆழமாகப் புரிந்து கொள்ள முடிகிறது. பின்வரும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் தரவுகள் ஆண்களும், பெண்களும் பெற்றுக் கொள்ளும் பங்குகள் பற்றிய மிக நுணுக்கமான உண்மைகளைப் புலப்படுத்துவது மாத்திரமின்றி ஒரு பெண் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணைவிட அதிகமாகச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்கிறாள் என்ற உண்மையையும் தெளிவுபடுத்துகிறது. ஆண் பெண் இருபாலாரும் பெற்றுக் கொள்ளும் பங்குகளை நான்கு பிரதான பிரிவுகளுக்கூடாக வேறுபடுத்தி விளங்க முடிகின்றது.

1). ஆணை விட பெண் குறைவான பங்குகளைப் பெறும் நிலைகள்

1. மரணித்தவருக்கு மகனோடு மகளிருத்தல். இதன்போது முழுச் சொத்தையும் மூன்றாகப் பிரித்து அதில் இரண்டு பங்குகளை மகனும் ஒரு பங்கை மகளும் பெறுவர்.

   உ-ம் : மகன் மகள்
   
   2 1

2. மரணித்தவருக்கு தாயும் தந்தையும் மாத்திரம் இருப்பின் தந்தை பெறுவதில் அரைப் பங்கை தாய் பெறுவார்.

   உ-ம் தாய் தந்தை
   
   1/3 2/3

3. மரணித்தவரின் சகோதரன் அல்லது தந்தையின் சகோதரன், மரணித்தவரின் சகோதரிஅல்லது தந்தையில் சகோதரியோடு இருப்பின் மரணித்தவரின் சகோதரர்கள் பெறுவதில் அரைப்பங்கை சகோதரிகள் பெறுவர்.

   உ-ம் : சகோதரன் சகோதரி
   
   2 1

4. கணவன் மனைவி ஆகிய ஒவ்வொருவரும் பெறும் பங்கைப் பொறுத்தவரை கணவனைவிட மனைவி அரைப்பகுதி குறைவாகப் பெற்றுக் கொள்கிறாள்.

   உதாரணம் : மரணித்தவருக்குப் பிள்ளை இருப்பின்
   
   கணவன் மனைவி
   
   1/4 1/8

மேற்குறித்த நான்கு சந்தர்ப்பங்களில் மாத்திரமே பெண் ஆணை விட அரைப் பங்கே குறைவாகப் பெறுகிறாள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

2). ஆண் பெற்றுக் கொள்ளும் அதே அளவை பெண்ணும் பெறும் நிலைகள்

01. மரணித்தவருக்குப் பிள்ளைகள் இருப்பின் தாயும் தந்தையும் சமமாகப் பங்கு பெறுவர்.

உ-ம் :

| தாய் | தந்தை | மகன் |
|---|---|---|
| 1/6 | 1/6 | எஞ்சியவை 4/6 |

இவ்வாறு நான்கு சந்தர்ப்பங்களில் தாய், தந்தை சமனாகப் பங்கு பெறுவதை வாரிசுரிமைச் சட்டத்தில் அவதானிக்கலாம்.

02. ஒன்றுவிட்ட சகோதர, சகோதரிகள் சம அளவு பங்கையே பெறுவார்.

உ-ம் :

| கணவன் | தாய் | ஒன்றுவிட்ட சகோதரன்/ சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/3 | 1/6 |

03. ஒன்றுவிட்ட சகோதரிகள் ஒரு பங்கையும் உடன் பிறந்த சகோதரன் ஒரு பங்கையும் பெற்றுக் கொள்கின்றனர்.

உ-ம் தாய் ஒன்றுவிட்ட சகோதரிகள்

| உடன் பிறந்த சகோதரன் | | கணவன் |
|---|---|---|
| 1/6 | 1/3 | 1/2 |

04. ஒரு பெண் வாரிசு மாத்திரம் அல்லது ஒரு ஆண் வாரிசு மாத்திரம் மரணித்தவருக்கு இருப்பின் அனைத்துச் சொத்துக்களையும் குறித்த நபர் பெற்றுக் கொள்வார்.

05. துல் அர்ஹாமுக்கு மத்தியில் பெண்களும், ஆண்களும் சமஅளவு பங்கையே பெற்றுக் கொள்கின்றனர். மேற்குறித்த புள்ளிவிபரங்கள் ஆணும், பெண்ணும் சமனாகச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் பல சந்தர்ப்பங்கள் இருப்பதை நிரூபிக்கின்றன.

3). ஆணைவிட பெண் அதிகமான பங்குகளைப் பெறும் நிலைகள்

அல்குர்ஆன், ஸுன்னாவிலுள்ள வரையறுக்கப்பட்ட பங்குகள் பற்றிய அட்டவணையின்படி ஆணைவிடப் பெண் அதிகப் பங்குகள் பெறும் நிலைகள் வருமாறு.

01. அல் குர்ஆனின் வழங்கிய மிகக் கூடுதலான பங்கு 2/3 ஆகும். அதனை எந்த ஆணும் பெறுவதில்லை. பெண்கள் மாத்திரம் பெறுகின்றனர்.

02. 1/2 பங்கை ஆண்களில் கணவரைத் தவிர வேறுயாரும் பெறுவதில்லை. பெண்களில் நான்கு சாரார் 1/2 பங்கிற்கு உரித்துடையவர்களாகின்றனர்.

03. 1/3 பங்கை பெண்கள் மாத்திரமே பெறுகின்றனர்.

04. 1/6 பங்கை எட்டுப்பேர் பெறுகின்றனர். அவர்களுள் ஐவர் பெண்களாவர்.

05.1/8 பங்கை மனைவி மாத்திரம் பெறுகிறாள்.
இவ்வாறு பர்ளாகப் பெறும் பங்குகளில் அதிகூடுதலான பங்குகளை ஆண்களைவிடப் பெண்களே பெற்றுக் கொள்கின்றனர். அல்குர்ஆன், ஸுன்னா 23 சாரார்களுக்கு வரையறுத்த பங்குகளை வழங்கியுள்ளன. அவற்றுள் 17 சாரார் பெண்களாகவும் 06 சாரார்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர். இந்த வகையில் மேற்குறித்த கண்ணோட்டத்தின் பிரகாரம் ஆண்களைவிடக் கூடுதலான பங்குகளைப் பெண்கள் பெற்றுக் கொள்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

4) சமதரத்திலுள்ள ஆண் சொத்தில் பங்குகளைப் பெறாத நிலையில் பெண் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள்
உ-ம் தாயின் தாய் தாயின் தந்தை
1/6 எஞ்சியதை மீண்டும் பெறுவார்

இங்கு சமதரத்திலுள்ள தாயின் தந்தை எந்தப் பங்கும் வழங்கப்படவில்லை. ஏனெனில் தாயின் தந்தை அஸ்ஹாபுல் புரூள் பிரிவில் அடங்கவில்லை. எனவே இங்கு இருவரும் சம தரத்தில் உள்ள போதிலும் தாயின் தாய் மாத்திரம் சொத்தில் பங்கு பெறுவதை அவதானிக்கலாம்.

எனவே இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்களை முழுமையாக நோக்கும் போது ஆண், பெண் இருபாலாரும் மிக நீதமாக நடாத்தப்பட்டிருப்பதையும், பெண்களைவிட ஆண்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இரு மடங்கு பங்குகளை அதிகமாகப் பெற்றுக் கொள்வதாகக் கூறுவது எவ்வளவு போலியான வாதம் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. இஸ்லாம் பெண்களுக்குச் சொத்தில் பங்குண்டு என்று வலியுறுத்தியது மாத்திரமின்றி, அவளுக்குரிய பங்கை வரையறுத்துக் கூறியதோடு, ஆணுக்குச் சமாந்தரமாகவும் சிலபோது ஆணைவிட அதிகமாகவும் சொத்துக்களைப் பெறும் நிலையையும் தோற்றுவித்துள்ளது. இஸ்லாத்தில் சொத்துப் பங்கீட்டின் போது பெண்கள் பாதிக்கப்படுவதாகவும், ஆண்கள் முன்னுரிமைப்படுத்தப்படுவதாகவும் கூறுவது எந்தவித அடிப்படையுமற்ற மேலோட்டமான பார்வையின் விளைவு என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்தவகையில் இஸ்லாம் அதன் வாரிசுரிமைச் சட்டங்கள் பற்றிய வழிகாட்டல்களுக்கூடாக ஆணும், பெண்ணும் சமன் என்ற நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. மாறாக ஆண், பெண் இருபாலாரது இயல்பு, தேவை, பலம், பலவீனம், பொறுப்புக்கள் முதலானவற்றைக் கவனத்திற் கொண்டு நீதியான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

**அக்லாகிய்யதுல் முனாகஹாத்**

**திருமணத்திற்கான முன்னாயத்தின் போது கடைப்பிடிக்க வேண்டியவை.**

- கணவன், மனைவி தெரிவின் போது தக்வாவிற்கு முன்னுரிமை வழங்கி நற்பண்புகள் மிக்க ஒரு குடும்பம் உருவாகுவற்கு வித்திடல்
- உடல், உள, அறிவுப் பொருத்தத்திற்கு உப்பட்ட வகையில் கணவன், மனைவி

தெரிவை அமைத்துக் கொள்வதனூடாக அமைதி ஒழுக்கம் மிக்க குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ளல்.

- பெண்பார்த்தல் விடயத்தில் இஸ்லாமிய வரம்புகளைப் பேணுவதனூடாக ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பல்
- திருமணப் பேச்சுவார்த்தை மூலம் புரிந்துணர்வு கட்டியெழுப்பப்படுவதுடன், அதில் உருவாகும் முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு ஒழுக்ககம் நிறைந்த தம்பதியர்கள் உருவாக வாய்ப்பு ஏற்படுகின்றது.

**அக்துன் நிகாஹின் போது பேண வேண்டிய ஒழுக்கங்கள்**

- திருமணம் நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படல்
- திருமண நிகழ்வின் போது ஆண், பெண் கலப்பு இடம் பெறாமல் தவிர்த்தல்
- மணப்பெண்ணை காட்சிப் பொருளாக வைப்பதைத் தவிர்த்தல், ஆடை அலங்காரங்களில் இஸ்லாமிய வரம்புகளைப் பேணல்.
- நடனம் போன்றவற்றிலிருந்து முற்றாகத் தவிர்ந்திருத்தல்
- இஸ்லாமிய வரம்புகளைப் பேணி எளிமையாக நடந்து கொள்ளல்.

**விவாகரத்து, இத்தா, வாரிசுரிமை விடயங்களில் பேண வேண்டிய ஒழுக்கங்கள்.**

- விவாகரத்து உருவாவதற்குரிய பின்னணியினைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதனூடாக இவ்விடயத்தில் ஒழுக்கத்தைப் பேணல்.
- இஸ்லாம் விவாகரத்தை அனுமதித்திருக்கும் நோக்கத்தைப் புரிந்து இது விடயத்தில் ஒழுக்கம் பேணல்.
- விவாகரத்தைப் பிரயோகிப்பதற்கு ஆணுக்கும், பெண்ணுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளைப் பேணி அதில் ஒழுக்கம் பேணல்.
- விவாகரத்தைப் பிரயோகிப்பதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் பற்றி (குறிப்பாக தம்பதியினரின், குழந்தைகளில் ஒழுக்க, உரிமைகள்) சிந்தித்துச் செயற்படல்.
- இதனால் சமூகத்தில் நிலவ முடியுமான ஒழுக்க, உளவியல் பிரச்சினையைக் கவனத்திற் கொண்டு செயற்படல்.
- இத்தா என்பது இறை கட்டளை என்பதைப் புரிந்து அதன் ஒழுங்குகளைப் பேணல்
- இத்தாவின் நோக்கத்தைப் புரிந்து அதன் வரையறைகளைப் பேணுவதனூடாக ஒழுக்கம் பேணல்.
- இஸ்லாத்திற்கு முரணான சம்பிரதாயங்களைக் களைவதனூடாக அதன் ஒழுங்கு பேணல்.
- இத்தா ஆரோக்கியம், உள அமைதி பெற்றுத் தருவதால் அதன் ஒழுங்குகளைப் பேணல்.
- வாரிசுரிமையில் நீதி நேர்மையாக நடந்து கொள்ளல்
    - பாரபட்சமின்மை
    - வாக்குறுதிகளை நிறைவேற்றல்
    - புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளல்
    - ஷரீஅத் சட்டத்தில் மகத் திருப்தியை வெளிப்படுத்தல்.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**


1. அரபாத் கரீம் எம்.ஜே.எம், இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம், (2011), நதா பப்ளிகேஷன், பேருவல
2. அன்வருத்தீன் ஏ, இஸ்லாம் இயம்பும் பாகப்பிரிவினை(1987), ஹாஜியார் புக் டிபோர்ட், சென்னை
3. யூஸுப் கர்ளாவி, இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் நிலை (2016), இலக்கியச் சோலை, சென்னை.
4. அன்சார் எம்.ஐ, சொத்துப் பங்கீடு (ஹி 1426) இஸ்லாமிய அழைப்பு வழிகாட்டல்
5. இஸ்மாயில் எச்.எம், முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டம் (1972), அனஸ் புக் சென்டர், சென்னை.

**தேர்ச்சி 09: சமூக வாழ்வின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் விளங்கி சிறந்த ஒரு பிரஜையாக வாழ்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1: சமூக வாழ்வின் முக்கியத்துவத்தையும் இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களையும் எடுத்துக்காட்டுவார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றல்பேறுகள்**

- சமூக வாழ்வுக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தைத் தெளிவாக விளக்குவார்.
- இஸ்லாமிய சமூக அமைப்பின் தனித்துவமான பண்புகளை விளக்குவார்.
- இஸ்லாமிய சமூக அமைப்பு உருவாக்கப்படுவதன் ஊடாக ஏற்படும் நன்மைகளை விபரிப்பார்.
- இஸ்லாமிய சமூக அமைப்பின் தனித்துவமான பண்புகளை நடைமுறைப்படுத்தப் பங்களிப்புச் செய்வார்.
- இஸ்லாமிய சமூக அமைப்பில் பெண்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்தை ஒப்பிட்டு நோக்குவார்.
- இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதில் பங்கேற்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**சமூக வாழ்வின் முக்கியத்துவம்**

- மனிதன் சமூகமாக வாழ்வதை அடிப்படையாகக் கொண்டு சமூகவியல் அறிஞர்கள் அவனை ஒரு சமூகப் பிராணி என அழைப்பர். இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மனிதனை அல்லாஹ்வின் பிரதிநிதியாகவே கண்ணியப்படுத்திப் பார்க்கின்றது.

  ''அல்லாஹ் மனிதனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தான்'' (அர்ரஹ்மான்: 2) என அல்குர்ஆன் கூறுகின்றது. மேற்படி வசனத்தில் மனிதன் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கானஓர் ஊடகமாகப் பேச்சை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

- உலகிலுள்ள எல்லா உயிரினங்களையும் போலவே மனிதனும் பல்வேறு தேவைகளைக் கொண்டவன். மனிதன் சமகாலத்தில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், பகுத்தறிவு படைத்தவனாகவும் உள்ளதால் அவனது தேவைகள் எண்ணிலடங்காதவை. ஆனாலும் அத்தேவைகள் அனைத்தையும் அவனால் ஒரு போதும் தனித்து நின்று சுயமாகப் பெற்றுக் கொள்ள முடியாது. அவனது உடல் தேவைகளான பசி, தாகம், பாலுணர்வு போன்ற தேவைகளாக இருந்தாலும் உளவியல் தேவைகளான அன்பு, காப்பு, கணிப்பு தேவைகளாக இருந்தாலும், சமூகத் தேவைகளான போக்குவரத்து, கல்வி, மருத்துவம் விவசாயம் போன்றவற்றை நிறைவேற்ற மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கின்றது. உலகில் தோன்றிய நாகரிகங்கள், கலாசாரங்கள் என்பன மனிதன் சேர்ந்து வாழ்வதற்கூடாகவே தோன்றியிருக்கின்றன.

- நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு எமக்குச் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. அந்த வகையில் மக்கா காலப் பிரிவில் தனிநபர் உருவாக்கச் செயற்பாடும் மதீனா காலப்பிரிவில் தனிநபர்களை அடிப்படையாகக் கொண்டு சமூக உருவாக்கச் செயற்பாடும் இடம்பெற்றதைக் குறிப்பிடலாம். மதீனா வாழ்க்கையில் சமூக உருவாக்கப் பின்னணியில் பல முக்கிய அம்சங்கள் காணப்பட்டன. தனிநபர்களிடையே ஒத்ததன்மை அவர்களை ஒற்றுமைக்கும் சிறந்த ஆளுமைமிக்க தலைமைத்துவம், சுதந்திரமாகச் செயற்படக் கூடிய வகையிலமைந்த பிரதேசம் என்பன சமூக உருவாக்கத்துக்குச் சாதகமான காரணிகளாக அமைந்தன.

- நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமூக அமைப்பு நன்கு திட்டமிட்ட அடிப்படையில் அமைந்திருந்தது. குற்றங்கள் குறைந்த நீதியான ஒரு சமூக அமைப்புக்கு அவர் வித்திட்டார்கள். மக்காவில் வைத்து மதீனா வாசிகளைச் சந்தித்த போது செய்த முதலாவது அகபா உடன்படிக்கையில் இதனைத் தெளிவாகக் காண முடிகின்றது. ''நாங்கள் இணைவைக்க மாட்டோம்; களவெடுக்க மாட்டோம்; மானக்கேடான காரியங்களில் ஈடுபட மாட்டோம்; சந்ததிகளைக் கொலைசெய்ய மாட்டோம் எனக் கூறிய வாசகங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களின் தூதுவராகப் பிரசாரப் பணிக்கு மதீனாவுக்கு முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் சென்று அங்குள்ள உண்மையான நிலவரத்தை அறிந்து, மதீனாவின் பௌதிக ரீதியான விடயங்களை அவதானிக்கவும் முடிந்தது.

  இரண்டாவது அகபா உடன்படிக்கையின் போது நபி (ஸல்) அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்று அவரைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதம் கிடைத்தது. இறுதியாக மதீனாவுக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றதும் மஸ்ஜித் நபவியை நிர்மாணித்தமை அங்குள்ள சமூகத்தை ஒன்று படுத்துவதற்கும் வழிகோலியது.

  அது மாத்திரமன்றி நபி (ஸல்) அவர்கள் தனது வேட்கையாக இருந்த சமூக உருவாக்க சிந்தனையை அமுல்படுத்துவதற்குச் சமூகத்துடன் இணைந்து அதற்கு வடிவம் கொடுத்தார்கள். சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக 10 ஆண்டுகளைத் திட்டமிட்டு செலவிட்டார்கள். இதுவும் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் இஸ்லாம் என்ற கொள்கையை வாழ்வில் எடுத்து நடக்கும் போது பல்வேறு தவறுகள், குறைபாடுகள் என்பன நிச்சயம் இடம்பெறுவது வழக்கம். இவற்றைச் சரிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் சமூக வாழ்வின் ஊடாகச் சாத்தியப்படும். நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் தோன்றிய சிக்கலான நிலைமையின் போது தனிநபர்கள் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியமையைக் காணலாம்.

**இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள்**

- இஸ்லாமிய சமூக அமைப்பு அல்லாஹ்வினாலும் அவனது தூதரினாதும் வழிகாட்டலில் கட்டியெழுப்பப்பட்டதாகும். இதுவே ஏனைய சமூக அமைப்புக்களிலிருந்து இஸ்லாமிய சமூக அமைப்பை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இஸ்லாம் சமூக அமைப்புக்குரிய சில அடிப்படைகளைக் குறிப்பிட்டுள்ளது. அவற்றுள் தௌஹீத், தலையாய இடத்தைப் பெறுகின்றது. சமூக அமைப்பின் ஏனைய சிறப்பியல்புகளாக ஈமான், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், நீதி, கூட்டுப் பொறுப்பு, தலைமைத்துவம் என்பவற்றையும் குறிப்பிடுவர்.

- மேற்கூறிய விடயங்கள் ஒன்றோடொன்று இறுக்கமான தொடர்புகளைப் பேணிய வகையில் அமைந்துள்ளன. சகோதரத்துவம் மூலமாக அனைவரையும் ஒரு சீப்பின் பற்களைப் போல் சரிசமனாக நோக்குவார்கள். அதனால் அங்கு சமூக நீதி நிலவும். அதன் மூலமாக சமூகத்தின் ஒரு பகுதியினரை மன்னித்தும், மற்றொரு பகுதியினரைத் தண்டித்தும் வழங்குகின்ற பாகுபாடான தீர்ப்பு அங்கு காணப்படமாட்டாது.

- அனைவரும் பரஸ்பரம் கூட்டுப் பொறுப்புடன் செயற்படுவர். இவ்வாறான நடைமுறைகள் கட்டுக்கோப்பான தலைமைத்துவமுள்ள சமூகத்தில் காணப்பட முடியும். இது தவிர சமூக அமைப்பின் சிறப்பியல்புகளாக வேறு சில விடயங்களையும் கோடிட்டுக் காட்ட முடியும். இஸ்லாம் வெறுமனே அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்தும் ஆன்மீக செயற்பாடுகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கும் மார்க்கமன்று. மாறாக மனிதர்களுக்கிடையிலான தொடர்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு வாழ்க்கை முறையாகவும் உள்ளது. அந்த வகையில் இஸ்லாம் போதிக்கின்ற அதன் இபாதத்துக்கள், ஏனைய விவகாரங்கள் போன்றவற்றில் சமூகத்தை நோக்குகின்றது. சமூகப் பார்வை இஸ்லாமிய சமூக அமைப்பின் முக்கிய அம்சமாக உள்ளது.

- அவ்வாறான இஸ்லாத்தின் போதனைகள் தனிநபர்களை நோக்கியதாக அல்லாமல் சமூகத்தை நோக்கியே முன்வைக்கப்படுகின்றன.
  அல்குர்ஆன் அதிகமான இடங்களில் ''மனதர்களே, விசுவாசிகளே'' என்று விழித்துப் பேசியுள்ளது. இஸ்லாம் விதியாக்கியுள்ள தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் என்பன கூட்டுச் செயற்பாடாகவே காணப்படுகின்றன. அவ்வாறு செய்யுமாறு தான் முஸ்லிம்கள் ஏவப்பட்டுள்ளார்கள். சமூக ரீதியான ஒன்றிணைவுக்கு இவை கட்டியம் கூறுகின்றன. அல்குர்ஆன் கூறுகின்றது.
  ''அவர்களுக்குப் பூமியில் ஆட்சியை நாம் வழங்கினால் தொழுகையை நிலை நாட்டுவார்கள்'' (அல்ஹஜ்: 94)
  இஸ்லாமிய சமூக அமைப்பின் மற்றொரு சிறப்பம்சம் அது அகீதாவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. அங்கு இபாதத்கள், தெளிவான இஸ்லாமிய சிந்தனை, இஸ்லாமிய உணர்வுகள் தொடர்ந்தேர்ச்சியாகக் காணப்படுகின்றன. அங்கு அனைத்து விடயங்களும் ஷூறா என்ற ஆலோசனையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

- அது மாத்திரமன்றி, இஸ்லாமிய சமூகத்தின் மற்றொரு சிறப்பியல்பாக அது சகோதரத்துவ வாஞ்சையைக் கொண்டது. பரஸ்பரம் சகோதரத்துவ உணர்வுடன் ஒருவர் மற்றவரை நேசித்துப் பரஸ்பரம் உதவி செய்கின்ற, தனது தேவையைவிட பிறரின் தேவையை மேலாக மதிக்கின்ற, தக்வாவுடைய விடயங்களிலும் நன்மையான விடயங்களிலும் உதவி செய்கின்ற சமூகமாக இஸ்லாமிய சமூகம் காணப்படும்.

- இஸ்லாமிய சமூகம் ஒரு த.்.வா சமூகமாக் காணப்படுகின்றது. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தது. மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது அங்கு முக்கிய பண்பாகக் காணப்படும்.

- அது நடுநிலையான சமூகமாகும். உலக விவகாரங்களிலோ, ஆன்மீக செயற்பாடுகளிலோ எவ்வகையிலும் அது தீவிர வாதத்தை ஆதரிப்பதில்லை. துறவு

வாழ்க்கையை ஆதரிக்கவோ, உலக வாழ்வில் மூழ்கி அனுபவிக்கவோ அது தூண்டவில்லை. மாறாக மனோ இச்சையைக் கடவுளாக எடுத்துக் கொள்ளாமல் நடுநிலையாக வாழுமாறு அது பணிக்கின்றது.

- இஸ்லாமிய சமூகம் ஓர் யதார்த்தபூர்வமான இலட்சியவாத சிந்தனைப் போக்கைக் கொண்டது. எல்லாக் காரியங்களுக்கும் பின்னால் இறை திருப்தியும் சுவனத்தை அடைவதும், நரகத்திலிருந்து விடுதலையாவதுமே அடிப்படையாக இருக்கும்.

- அல் குர்ஆனிய சமூகமாக அது காணப்படுகின்றது. வஹியின் அடிப்படையில் அது தன் பாதையை அமைத்துக் கொண்டுள்ளது. அதில் ரப்பானிய்யா என்ற தெய்வீகப் பண்பும் இன்ஸானிய்யா என்ற மானுடப் பண்பும் இழையோடியிருக்கும். அதன் அங்கத்தவர்கள் நல்ல ஒழுக்கவிழுமியங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது தூதின் நோக்கத்தை விளக்குகையில் ''நிச்சயமாக நான் நற்குணங்களைப் பூரணப்படுத்துவதற்காகவே நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்'' எனக் கூறினார்கள்.

- முஸ்லிம் சமூகம் புவியியல் எல்லைகளால் பிரிக்கப்பட முடியாத, ஒரு சர்வதேச சமூகமாக உள்ளது. நாடு, இனம், மொழி, நிறம், கோத்திரம் போன்ற வேறுபாடுகள் அதனைத் துண்டாடமாட்டாது. இஸ்லாத்தின் போதனைகள் அனைவருக்கும் பொதுவானவை.

- இஸ்லாத்துக்கென்று தனியான பாரம்பரியங்கள் உள்ளன. அவை ஸஹாபாக்கள் காலம் தொட்டுப் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு வருகின்றன. அவர்களது அன்றாட வாழ்க்கை முதல் ஆன்மீகச் செயற்பாடுகள் வரை அனைத்திலும் அந்த பாரம்பரியம் பேணப்பட்டு வருகின்றது. எளிமையான வாழ்க்கை முறை, அனைத்திலும் ஹலால், ஹராம் பேணுதல், உறவினர்கள், விதவைகள், அனாதைகளை ஆதரித்தல், அனுமதி கேட்டல், ஸலாம் கூறுதல் போன்றன அவர்களது வாழ்வில் இரண்டறக் கலந்து காணப்படும்.

## 1. சமூக நீதி

- இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பின் முக்கிய சிறப்பியல்பாக சமூக நீதி காணப்படுகின்றது. இஸ்லாத்துக்கு முந்திய சமுதாய அமைப்புக்களில் சமூக நீதி தெளிவின்றிக் காணப்பட்டது. மனிதனுக்கு மனிதன் அடிமைப்பட்டு வாழும் சூழலே அன்று கோலோச்சியது.

  ''அமானிதங்களை அவற்றுக்குரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் மனிதர்களிடையே தீர்ப்புக் கூறினால் நீதத்துடன் தீர்ப்புக் கூற வேண்டும் என்றும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான்'' (அல்ஹஜ்: 4)

  ''ஒரு கூட்டத்தார் மீது நீங்கள் கொண்டுள்ள பகைமை நீதி செலுத்தாமல் இருப்பதற்குத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். ஏனெனில், அது இறையச்சத்திற்கு நெருக்கமானது (அல்மாஇதா: 08)

- இஸ்லாத்தில் நீதி என்பது மிக விரிவான கருத்தில் விளக்கப்பட்டுள்ளது. சமூகம், பொருளாதாரம், அரசியல், சட்டம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் நீதி

நிலைநாட்டப்பட வேண்டும். சமூகத்தின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.

இஸ்லாமிய நீதித்துறையில் சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பது முக்கியமானது. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை இஸ்லாம் அதன் வரலாறு நெடுகிலும் நிறுவி வந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''உங்களுக்கு முன்னால் சென்றவர்கள் ஏன் அழிந்து போனார்கள் என்றால் அவர்கள் கீழ் மட்ட மக்களின் மீது சட்டங்களைச் செயற்படுத்துவார்கள். உயர் குடியினரை விட்டுவிடுவார்கள். எவர் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் நான் அவள் கையை வெட்டுவேன்'' (புகாரி)

உமர் (ரழி) அவர்களது ஆட்சியின் போது எகிப்தின் கவர்னராக அம்ரு இப்னு ஆஸ் (ரழி) அவர்கள் இருந்தார்கள். இவரது மகன் ஒரு முறை எகிப்தைச் சேர்ந்த கிப்திய சமூக கிறிஸ்தவ இளைஞர் ஒருவருக்குக் கடுமையாக அறைந்து விட்டார். அவமானம் தாங்க முடியாத அந்த இளைஞன் இச்சம்பவத்தை ஜனாதிபதி உமர் (ரழி) அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார். ஆத்திர மேலீட்டால் கிப்திய இளைஞரைத் தாக்கிய கவர்னரின் மகன், தனக்கெதிராக யாரும் எதுவும் செய்ய முடியாது. நான் கவர்னரின் மகன் என இறுமாப்புக் கொண்டு பேசியதையும் ஜனாதிபதிக்கு முன்னால் இளைஞன் நினைவு கூர்ந்தான். ஜனாதிபதி உமர் கவர்னரையும், அவரது மகனையும் அழைத்து வருமாறு வேண்டினார்.

அம்ருப்னு ஆஸ் (ரழி) கவர்னரும், அவரது மகனும் தாக்கப்பட்ட இளைஞனும் நின்று கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி அந்த இளைஞனை நோக்கி ''உனக்கு கவர்னரின் மகன் எப்படி அறைந்தாரோ அப்படி ஒரு அறையை அவரது கன்னத்தில் விடு'' என்று கட்டளையிட்டார்கள். அறை விழுந்தது. கவர்னர் அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள் ''எல்லாத் தாய்மார்களும் தமது பிள்ளைகளைச் சுதந்திரவான்களாகவே பெற்றெடுத்துள்ளனர். அப்படியிருக்க எப்போது நீங்கள் அவர்களை அடிமைகளாக்கக் கற்றுக் கொண்டீர்கள்.''

- இஸ்லாம் நீதியை எல்லா இடங்களிலும் பிரயோகிக்குமாறு கட்டளையிடுகின்றது. நபிமார்களின் தூதின் நோக்கமும் நீதி செலுத்துவதாகவே இருந்துள்ளது. அல்லாஹ் அடியார்கள் விடயத்தில் மிகவும் நீதமானவன். அநீதி செய்வதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளான்.

''எனது அடியார்களே நான் அநியாயம் செய்வதை என் மீது ஹராமாக்கியுள்ளேன். நீங்களும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்து கொள்ளாதீர்கள் (முஸ்லிம்)

இஸ்லாம் வளங்களைப் பங்கீடு செய்தல், சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல், உழைப்புக்குரிய கூலி வழங்குதல், தொழில் வழங்குதல், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடயங்களில் நீதியை வலியுறுத்துகின்றது. அது மாத்திரமின்றி எதிரியாக இருந்தாலும் அவனுடனும் நீதியாக நடந்துகொள்ளுமாறு கூறுகின்றது. தனது குடும்பத்தவர்களுடன் உரிமைகள், கடமைகள் விடயத்தில் நீதியாக நடத்தல், கணவன் - மனைவியிடத்தே நீதியாகச்

செயற்படுதல் விடயத்திலும் இஸ்லாம் நீதியை வலியுறுத்துகின்றது. பலவீனமானவர்களுடனும், நலிவுற்றோருடனும் நீதியைப் பேணி நடக்குமாறும் வற்புறுத்துகின்றது.

## 2. தலைமைத்துவமும் கட்டுப்படுதலும் (அல் கியாதா)

- அல் கியாதா என்ற அறபுப் பதம் தலைமைத்துவம் என்ற கருத்தினைத் தருகின்றது. தலைமைத்துவத்திற்கு இஸ்லாமிய அறிஞர்கள் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளனர். அந்த வகையில் கலாநிதி ஹிஷாம் அத்தாலிப் அவர்கள் ''வற்புறுத்தலில்லாத முறைகளினூடாக மக்களைச் செயற்பட ஊக்குவிப்பதன் செயன்முறையே தலைமைத்துவம்'' என வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். மற்றொரு வரைவிலக்கணப்படி ''மனித இயல்போடு ஒன்றிச் செல்கின்ற, மனித நடத்தையில் தாக்கம் செலுத்துகின்ற குறித்த இலக்கின் பால் வழி நடாத்துகின்ற ஒரு கலையே தலைமைத்துவமாகும்''

  ''விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். அவ்வறே அல்லாஹ்வினுடைய தூதருக்கும் உங்கள் தலைவர்களுக்கும் கட்டுப்படுங்கள்'' (அந்நிஸா: 59)
  நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''உங்களில் மூன்று பேர் பயணம் மேற்கொண்டாலும் ஒருவரைத் தலைவராக நியமித்துக் கொள்ளட்டும் (புகாரி)

  இங்கு தனித்துச் செயற்படுவதையும், பிரிந்து வாழ்வதையும் கண்டிக்கும் இஸ்லாம் சமூகமாக வாழ்வதற்குத் தலைமைத்துவம் இன்றியமையாதது என்பதையும் விளக்கியுள்ளது. எந்தளவுக்கெனில் ''உங்களுக்குத் தலைவராக மூக்கறுபட்ட அடிமை நியமிக்கப்பட்டாலும் அவருக்கு முழுமையாகக் கட்டுப்படுங்கள்'' எனவும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

  உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள் ''தலைமைத்துவமின்றி கூட்டமைப்பு இல்லை. அடிபணிதல் இன்றி தலைமைத்துவமில்லை'' (தாரமி)

## 3. சமத்துவமும் சகோதரத்துவமும்

- சமத்துவம் என்ற சொல்லுக்கு அறபியில் 'முஸாவா' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. கலாநிதி ஹமுதா அப்துல் அதீ அவர்களது கருத்துப்படி ''ஒன்றைப் போல் மற்றொன்று ஒரே மாதிரியானது என்ற கருத்தைத் தவிர்த்து, அல்லாஹ்வின் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற கருத்தையே கொள்ள வேண்டும்.''

  மனிதனில் இஸ்லாம் மனிதத்தையே காண்கின்றது. மனித தேவை, மனித இயல்பு, மனிதப் பிரச்சினைகள் என்பவற்றையே முதன்மைப்படுத்துகின்றது. மொழி, நிறம், நாடு, இனம், கோத்திரம், வட்டாரம், குலம், சாதி என்பவற்றை மனிதனை தராதரப்படுத்துவதற்கும் வகை பிரிப்பதற்குமான அளவுகோல்களாக இஸ்லாம் கையாள்வதில்லை. நிறத்தால், இனத்தால், குலத்தால், கோத்திரத்தால் மனிதர்கள்

பிரிந்து பிளவுபட்டு ஒருவரையொருவர் எதிரிகளாய் பார்ப்பதை இஸ்லாம் ஏற்பதில்லை. இதனையே நபி (ஸல்) அவர்கள் தனது 'ஹஜ்ஜதுல் விதா' அரபா பேருரையின் போது எடுத்தியம்பினார்கள். ''மக்களே! உங்களது இறைவன் ஒருவனே! உங்கள் ஆதித் தந்தையும் ஒருவரே, நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர். ஆதமோ மண்ணினால் படைக்கப்பட்டவர். அறிந்து கொள்ளுங்கள் ஓர் அறபிக்கு அறபியல்லாதவர் மீதோ, அறபியல்லாதவருக்கு அறபியின் மீதோ, சிவப்பு நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவர் மீதோ, கறுப்பு நிறத்தவருக்கு சிவப்பு நிறத்தவர் மீதோ எந்த வழியிலும் மேன்மையோ, சிறப்போ கிடையாது. நிச்சயமாக உங்களில் மேலானவர் அல்லாஹ்வின் மீது அதிக அச்சம் (தக்வா) கொண்டவரே'' என்று குறிப்பிட்டார்கள்.

23 வருட கால நபிகளாரின் சமூக உருவாக்கத்தில் ரோமைச் சேர்ந்த ஸுஹைபும், பாரசீக ஸல்மானும், அபீஸீனிய பிலாலும் அறபு நாட்டு அறபிகளும் ஒரே அவையில் ஒன்றாகவும், சமத்துவமாகவும் அமர முடியுமென்றால் அது இஸ்லாத்தின் சமூக சாதனையாகும்.

- இஸ்லாம் வலியுறுத்தும் சமத்துவம் ஒரு முஸ்லிமின் வாழ்வில் நாளாந்தம், வாராந்தம், வருடாந்தம் என நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அமையப்பெற்றுள்ளது. உதாரணமாக தொழுகை, ஹஜ் என்பவற்றைக் குறிப்பிடலாம். இஸ்லாமிய வரலாற்றில் மாத்திரமே நீதியில் சமத்துவம் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. இஸ்லாமிய நீதிமன்றில் கலீபாவும் குற்றவாளியும் நிறுத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. மதீனாவுக்கான ஹிஜ்ரத்தின்போது நபி (ஸல்) அவர்களும் இணைந்து மண் சுமந்து, கல் சுமந்து மஸ்ஜிதுன் நபவியின் நிர்மாணப்பணிகளை மேற்கொண்டார்கள். ஒரு சமூகத்தின் தலைவன் அந்தச் சமூகத்தின் பணியாளனே''

இஸ்லாம் கூறுகின்ற சகோதரத்துவம் கொள்கைவழி சார்ந்ததாகும். மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே. ஏனெனில் அவர்கள் அனைவரும் ஒரே தாயிலிருந்தும் தந்தையிலிருந்தும் தோன்றியவர்கள். ''ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான். அவர் மற்றவருக்கு அநியாயம் செய்ய மாட்டார். (அநியாயக்காரரிடம்) அவரை ஒப்படைக்கவும் மாட்டார். யார் தனது சகோதரனின் தேவையைக் கவனிக்கிறாரோ அவரின் தேவையை அல்லாஹ் கவனிக்கிறான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை நீக்குகிறாரோ அவரின் கஷ்டங்களில் ஒன்றை அல்லாஹ் (மறுமையில்) நீக்குகிறான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ அல்லாஹ் அவரது குறையை மறுமையில் மறைப்பான்''

இஸ்லாம் சமூக உருவாக்கத்துக்குப் பெரிதும் உதவக்கூடிய சகோதரத்துவத்தை வளர்க்கக்கூடிய விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளதோடு அவற்றை ஊக்குவித்துமுள்ளது.

### 4. கூட்டுப் பொறுப்பு

- ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதுடன் பிறருக்கும் அவர்களது பொறுப்புக்களை கடமைகளை நிறைவேற்றுவதற்கு பரஸ்பரம் ஒத்துழைத்து நடப்பதே இங்கு கூட்டுப் பொறுப்பு எனப்படுகின்றது.

தனிமனிதர்கள் சிலபோது மறதி, தவறுகள் காரணமாகத் தமது கூட்டுப் பொறுப்பு விடயத்தில் தவறிழைத்து விடுவர். பிறருடன் சமூக ரீதியான தொடர்புகளைப் பேணி வாழ்ந்திட கூட்டுப் பொறுப்பு என்ற அம்சம் மிகவும் கட்டாயமானது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''மனித குலம் முழுவதும் அல்லாஹ்வின் குடும்பமாகும். மனித குலத்திற்கு அதிக நன்மை செய்பவர்தான் அல்லாஹ்விடத்தில் அதிக அன்புக்குரியவராவார்''

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருக்கும்வரை அல்லாஹ் அவருக்கு உதவி செய்து கொண்டிருப்பான்'' (முஸ்லிம்)

- இறைநம்பிக்கை கொண்டோர் பரஸ்பரம் இணைந்து ஓர் உடல் போல் திகழ வேண்டும். அவ்வுடலின் ஓர் உறுப்பு துயருறுவதை முழு உடலும் உணர்ந்து அதை அகற்ற முயல வேண்டும். அத்தகைய தன்மையுடன் இந்தச் சமூகம் இயங்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது. இஸ்லாம் பரஸ்பர ஒத்துழைப்பின் மீதும், கூட்டுப் பொறுப்பின் மீதும் சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றது.

ஒரு சாதாரண மனிதனைப் பொறுத்தவரையில் அவன் தனது குடும்ப உறுப்பினர்களான பெற்றோர், மனைவி மக்கள், சகோதரர்கள், உறவினர்கள் விடயத்தில் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளவனாவான். இவர்கள் மீதான பொறுப்புக்களாக அவர்களுக்கு நல்லவற்றை ஏவி, தீயவற்றைத் தடுத்து நல்வழிகாட்ட வேண்டியுள்ளான். தனது பிள்ளைகள் விடயத்தில் அவர்களைச் சிறந்த பண்பாடுகள் ஒழுக்க மாண்புகள் கொண்டவர்களாக வளர்க்க வேண்டிய பொறுப்புடையவனாவான்.

### 5. பொது நலன் பேணல்

- ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை சுயநலவாதியாக இருக்காமல் பிறர் நலன் பேணும் ஒருவனாக வாழ வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அல் குர்ஆனிய போதனைகளும் நபி (ஸல்) அவர்களது ஸீராவும் அவரது போதனைகளும் இதனையே வலியுறுத்துகின்றன.

அல்குர்ஆன் ஸூறதுல் ஹஜ் : 77 வது வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றது. ''ஈமான் கொண்டவர்களே நீங்கள் ருகூஉ செய்யுங்கள், மேலும் ஸுஜூது செய்யுங்கள். உங்களது இரட்சகனுக்கு (முழுமையாகக் கட்டுப்பட்டு) இபாதத் செய்யுங்கள். மேலும் நற்செயல்களைச் செய்யுங்கள். நீங்கள் வெற்றிபெறலாம். (அல் ஹஜ் :77) மேற்கூறிய வசனம் அல்லாஹ்வுக்கு அடியான் செலுத்த வேண்டிய ருகூஉ, ஸுஜூது, இபாதத் போன்றவற்றோடு இணைந்ததாக நற்செயல்களில் ஈடுபடுவதை முக்கியத்துவம் வழங்கிக் குறிப்பிடுவதனூடாகப் பிறருக்கு நன்மை செய்வது, உபகாரம் செய்வது, நற்காரியங்களில் ஈடுபடுவது எவ்வளவு இன்றியமையாதது என்பது புலனாகின்றது.

ஒரு முஸ்லிம் பொதுப்பணிகளில் ஈடுபடுவது தர்மம் செய்வதற்குச் சமனானது என இஸ்லாம் கருதுகின்றது. நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் ''நல்ல காரியங்கள் ஒவ்வொன்றும் தர்மமாகும்'' மற்றொரு தடவை நவின்றார்கள் ''மனிதர்களில் மிகச்

சிறந்தவன் மனிதர்களுக்கு அதிகம் பயன் கொடுப்பவனே''
பிறர் நலன் கருதிச் செயற்படுவது இபாதத்தாக, தர்மமாக கருதப்படுவது போலவே அவ்வாறு ஈடுபடுவது மனிதர்களிலேயே மிகச் சிறந்தவருக்குரிய பண்பாகும். எனவே பிறரின் அன்பையும், திருப்தியையும் பெற்றுக் கொள்வதோடு கூட்டு முயற்சியில் ஈடுபட்டு அதிகளவு நன்மையும் சம்பாதித்தக் கொள்கின்றான்''

ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''ஒரு மு.்மின் தனது மரணத்தின் பின்னர் பின்வரும் விடயங்களை விட்டுச் செல்கிறான்''

1. பிறருக்குப் போதித்த கல்வி
2. நன்னடத்தையுள்ள பிள்ளை
3. பிறர் ஓதுவதற்கென வக்பாக விட்டுச் செல்லும் குர்ஆன்
4. தான் கட்டிய பள்ளி
5. வழிப்போக்கர் ஒதுங்கிக் கொள்ளத்தக்க கட்டிய சத்திரம் (மடம்)
6. தான் வெட்டிய கிணறு
7. உயிரோடு தேகாரோக்கியமாக இருக்கும் போது செய்த நிலையான தர்மம்

என்பனவே ஒருவனது மரணத்தின் பின்பு நன்மையை ஈட்டித் தரும்'' (இப்னு மாஜா)

- இஸ்லாமிய சரீஆவின் துணை மூலாதாரங்களில் ஒன்றாக மஸ்லஹா முர்ஸலா அல்லது அல் இஸ்திஸ்லாஹ் காணப்படுகிறது. அதன் கருத்து சமூக நலனை ஆதாரமாகக் கொள்வதாகும். இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளில் ஒன்றாக மனித நலன்களைக் காத்தல் காணப்படுகிறது. மக்களது அத்தியவசியத் தேவைகள், சாதாரணத் தேவைகள், மேலதிகத் தேவைகள் என்ற மூன்று வகையான தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் மக்களது நலன்கள் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என ஷரீஆ குறிப்பிடுகின்றது. அந்தளவுக்கு பொது நலன் பேண வேண்டும் என்பதில் இஸ்லாம் கூடிய கரிசனை செலுத்துவதனைக் காண்கின்றோம்.

- நாட்டில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் போது இனம், நிறம், மொழி, மதம் என்பவற்றைத் தாண்டி பொதுநலன் பேணி உதவிக் கரம் நீட்டுவது எமது கடமையாகும். சுனாமி கடற்கோள் அனர்த்தம், வெள்ளப்பெருக்கு, வரட்சி, புயல் காற்றுத் தாக்கம்,மண்சரிவு,யுத்தம் என்று பல்வேறுபட்ட அனர்த்தங்களின் போது உணவு, உடை, தங்குமிட வசதிகள், வைத்திய உதவி, முதலுதவி போன்றவற்றைத் தாராளமாக மனித நேயத்துடன் வழங்குவதன் மூலமாக மனித நேயத்தைக் கட்டியெழுப்ப முடியும். இது தவிரப் போதைப் பொருள் ஒழிப்பு, டெங்கு ஒழிப்புத் திட்டம், சிரமதான நிகழ்ச்சிகள் எனப் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை யார் முன்னெடுத்தாலும் இன, மத, மொழி என்பவற்றுக்கப்பால் நின்று முனைப்புடன் நாமும் செயலாற்ற வேண்டும்.

- நன்கொடையாளர்கள் மூலமாக முஸ்லிம் தனிநபர்கள், முஸ்லிம் தொண்டு நிறுவனங்கள் முன்னெடுக்கும் பொது நலத் திட்டங்கள் சமூகத்துக்கும், நாட்டுக்கும் பயனுள்ள வகையில் உரிய பயனாளிகளைப் போய்ச் சேரக் கூடிய வகையில் திட்டமிட்ட ஒழுங்கில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**6. நன்மையை ஏவுதலும் தீமையைத் தடுத்தலும்**

- த.ஃவா என்பது அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வஹி மூலம் அருளிய இஸ்லாம் மார்க்கத்தின் பால் மனிதர்களை அழைக்கின்ற பணியைக் குறிக்கும். இது ஓர் உன்னதமான செயல், மக்களுக்குச் சரியான பாதையைக் காட்டும் உயர் பணியாகும். மனிதப் புனிதர்களான நபிமார்கள், ரஸூல்மார்கள் மேற்கொண்ட உன்னதமான உழைப்பு. மறுமை நாள் வரை இப்பணி தொடர வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். இதனை அழகிய வடிவில் மேற்கொண்டு எமக்குச் சிறந்த முன்மாதிரிகளை நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள்.

''அல் அம்ர் பில் ம.ஃரூப் வன்னஹ்யு அனில் முன்கர்'' என்ற நன்மையை ஏவுதலும், தீமையைத் தடுத்தலும் என்ற பணியையே நாம் இங்கு த.ஃவா என அழைக்கின்றோம். நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் என்ற பணியை ஒருவரோ அல்லது ஒரு குழுவோ மேற்கொள்ள முன்னால் அதன் கருத்தையும், முறைமையையும் ஒழுங்கு, சட்ட திட்டங்களையும் புரிந்து கொள்ளல் இப்பணியில் ஈடுபடுவோரின் முதற்பணியாக இருக்க வேண்டும்.

''நீங்கள் (இஸ்லாம் மார்க்கத்தை) அறிந்து கொள்ளுங்கள். உங்களிடமிருந்து மற்றவர்கள் அறிந்து கொள்ளட்டும். அவ்வாறு அறிந்து கொண்டவர்களிடமிருந்து ஏனையோர் அறிந்து கொள்ளட்டும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது முஸ்லிம்கள் மீது வாழையடி வாழையாக கட்டாயமாகச் செய்ய வேண்டிய கடமையாகும். என்றாலும் அத்தனை பேருக்கும் அப்பணியைச் செய்வது சர்த்தியமாகாது என்பதால் அதற்கென ஒரு கூட்டம் பயிற்றுவிக்கப்படவேண்டிய அவசியம் இருக்கின்றது.

''(விசுவாசிகளே) உங்களில் ஒரு கூட்டத்தார் தோன்றி அவர்களை (மனிதர்களை) நன்மையின்பால் அழைத்து, நல்லதை ஏவித் தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்கிக் கொண்டுமிருக்கட்டும்'' (ஆல இம்ரான்: 104)

நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கக் கூடியவர்களிடம் மிகச் சிறந்த ஒழுக்க மாண்புகள், முன்மாதிரிகள் இருக்க வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இப்பணியில் ஈடுபடுவோர் மக்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் கண்ணியமான முறையில் தர்க்கம் செய்வார்கள்.

''(நபியே!) நீர் (மனிதர்களை) நளினமாகவும், அழகாகன நல்லுபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவனின் வழியின்பால் அழைப்பீராக!. அன்றி, அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால்) நீர் (கண்ணியமான) அழகான முறையில் தர்க்கம் செய்வீராக!'' (இப்ராஹீம்: 125)

- நன்மையை ஏவி, தீயதைத் தடுக்கும் பிரசாரப் பணி இரு வகையாகப் பிரிகின்றது.

(அ) இறை வழிகாட்டலைப் புரிந்த கொள்ளாத, இறைத்தூது கிடைக்காத சமூகங்களிடையே அப்பணியை மேற்கொள்ளல்.

(ஆ) முஸ்லிம் சமூகத்தில் தீமைகள் தலையெடுத்துப் பரவி, வேரூன்றி அது



www.nie.lk info@nie.lk

அச்சமூகத்தினை அழித்து விடாது பாதுகாக்கும் தொழிற்பாங்கு :

இப்பொறுப்புகள் இரண்டையும் நிறைவேற்றும் பணி முறைகள், சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன. அதனையே ''பிக்ஹுத் த:்வா'' என்கின்றோம். அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பன இது தொடர்பாக நிறையவே பேசியுள்ளன. நபியவர்களுக்குப் பிறகு அவர்களுடைய சீடர்களும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஸஹாபாக்களும் அதனைத் தொடர்ந்து வந்த தாபிஈன்கள், தபஉத் தாபிஊன்கள், இறை நேசர்கள் இமாம்கள் என இப்பணி தொடர்ந்தேர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்திதூன் என்ற சீர்திருத்தவாதிகளை அல்லது புனர்நிர்மாணிகளை உலகில் பிறக்கச் செய்தும் நன்மையை ஏவி, தீயதைத் தடுக்கும் பணியை நிறைவேற்றி வைத்தும் வந்துள்ளான்.

## 7. சமூக வாழ்வில் பால் நிலை

- ஆண் - பெண் சமத்துவம் என்பது பண்டைய, வளர்ச்சியடைந்த, புகழ் பெற்ற நாகரிகங்களில் கூட இடம்பெறாதது, அண்மைக் காலம் வரை பொதுவான மானிடக் கருத்தரங்குகளிலும் அதற்குப் போதுமான இடம் தரப்படவில்லை. ஆனால், சமூகத்தின் சரிபாதியாகிய பெண் ஒதுக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும் நியாயமற்றது என்ற எண்ணமோ, குரலோ எழாத ஒரு காலத்தில் கி.பி ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாம் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

  பெண்கள் சமுதாயத்தின் சரிபாதியாகக் கணிக்கப்படுவதால் அவர்கள் புறக்கணிக்கப்படவோ, அநீதிக்குட்படுத்தப்படவோ கூடாது. மொத்தச் சனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாகவே இருக்கிறது. இந்த நிலையில் நல்லதையோ, தீயதையோ செயற்படுத்துவதில் ஆண்களைப் போலவே அவர்களுக்கும் பங்குண்டு என்பதை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

  ஒரு குழந்தையின் ஆரம்பப் பள்ளியாக தாய் கணிக்கப்படுகிறாள். அவளது சிறந்த பராமரிப்பு, நிருவாகத்தின் மூலமாகத் தான் நல்ல ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்க முடியும். இன்று பெண்களின் பால்நிலை சமத்துவ நிலை பற்றி எல்லோரும் பேசுகின்றனர். பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது, அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன, துஷ்பிரயோகம் மிக உச்ச கட்டத்தை அடைந்துள்ளது என்றெல்லாம் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது. இது தொடர்பான மகாநாடுகளும் நடைபெற்று வருகின்றன.

  கி.பி. 586 இல் கூடிய ஒரு மாநாடு, பெண்களை மனிதர்களாகக் கொள்வதா, பிராணியாக ஏற்பதா என வாதிட்டு, இறுதியாக அவள் ஆண்களுக்குப் பணிசெய்வதற்காகப் படைக்கப்பட்டுள்ள மனிதப்பிறவி என்ற தீர்மானத்துக்கு வந்தது. 1995 ஆம் ஆண்டு சீனாவில் பீஜிங் நகரத்தில் இடம்பெற்ற சர்வதேச பெண்கள் மகாநாடு பெரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் முடிவடைந்தது.

- இஸ்லாம் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பால்நிலை சமத்துவத்தை பின்வரும் விடயங்களில் வழங்கி அவர்களது உரிமைகளைப் பாதுகாத்துள்ளது.

1. ஒரே ஆன்மாவிலிருந்து தோன்றியவர்கள் :

ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள். மனிதன் என்ற வகையிலும் பொறுப்புக்களைச் சுமந்தவர்கள் என்ற வகையிலும் நற்கூலியைப் பெறுவதிலும் அவர்கள் சமமானவர்களாவர்.

''மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான் (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்தும் அனேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி) பரவச் செய்தான். ஆகவே அந்த அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள்.'' (4:1)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''நிச்சயமாக பெண்கள் ஆண்களின் உற்ற சகோதரர்களாவர்'' (அஹ்மத்)

2. மார்க்கம், விளக்கம் என்பவற்றில் சமத்துவம்

ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்தவர்களல்லர். இரு பாலாரும் சரிசமனானவர்களே என்பதைக் கீழ்வரும் வசனம் தெளிவுபடுத்துகிறது.

''நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும், பெண்களும் விசுவாசிகளான ஆண்களும், பெண்களும் (இறைவனுக்கு) வழிபடும் ஆண்களும், பெண்களும் உண்மையே கூறும் ஆண்களும், பெண்களும், தானம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும், தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வைத்திருக்கிறான்'' (அல்அஹ்ஸாப்: 35)

3. சமூகப் பொறுப்புக்களில் சமத்துவம்

- ''விசுவாசம் கொண்ட ஆண்களும், பெண்களும் தாம் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்களாயிருக்கின்றனர். அவர்கள் நன்மை செய்யும்படி தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும் தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்துக் கொடுத்தும் வாருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் வழிப்பட்டு நடப்பார்கள். (அத்தவ்பா: 71)

பெண்கள் பாவத்தின் வித்து என்றோ, தீமையின் பிறப்பிடமென்றோ, ஆண்கள் கெடுவதற்குப் பெண்களே காரணம் என்றோ இஸ்லாம் கூறவில்லை. முதற் பெண் ஹவ்வாவின் தூண்டுதலாலேயே தடுக்கப்பட்டதை ஆதம் சாப்பிட்டார் என்பர். உண்மையில் இருவரும் சேர்ந்து சாப்பிட்டதற்காகவே இருவரும் தவறை உணர்ந்து பாவமன்னிப்புக் கோரினர். இதனை அல்குர்ஆன் ''எங்கள் இரட்சகனே! நாங்கள் எங்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாவோம்'' (அல்அ.ஃரப்: 23) இவ்வசனம் மூலம் அந்தப் பாவத்தில் இருவருக்கும் பங்குண்டு என்பது தெளிவாகின்றது.

4. நற்கூலி பெறுவதிலும், சுவனத்தை அடைவதிலும் சம உரிமை
உங்களில் ஆணோ, பெண்ணோ எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக அதை நான் வீணாக்கி விடமாட்டேன் (ஆலஇம்ரான்: 95)

ஒப்பந்தங்கள் செய்வதற்கும், முதலீடு செய்வதற்கும், உழைப்பதற்கும், உழைப்பதை தமக்கென வைத்துக் கொள்வதற்கும் அவளுக்கு உரிமையுண்டு.

இஸ்லாம் பெண்களை உயர் தரத்தில் வைத்துப் பார்க்கின்றது. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''உலகம் முழுவதும் இன்பந் தரும் பொருளாகும். அவற்றுள் தலை சிறந்தது நல்ல பெண்ணாவாள். (முஸ்லிம்)

பெண் (மனைவி) ஆணுக்கு அமைதியளிக்கக் கூடியவள்.
''மனைவிமாரை நீங்கள் அவர்களிடம் நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்தான். உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும் ஆக்கியுள்ளான் (அர்ரூம் : 21)

6. ஆணைப் போலவே பெண் மீதும் இஸ்லாமிய கடமைகள் வாஜிபாகும்.
தொழுகை, நோன்பு மாத்திரமன்றி த.்வா, முஸ்லிம் சமூகத்துக்கு விசுவாசமாக நம்பிக்கையாக நடத்தல் என்பவற்றிலும் ஒரு பெண் ஈடுபடுவாள்.

''விசுவாசம் கொண்ட ஆண்களும், பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு பொறுப்பானவர்கள் ஆவார்கள். அவர்கள் (பிறரை) நன்மையைக் கொண்டு ஏவுகிறார்கள். தீமையை விட்டும் தடுக்கிறார்கள். (அத்தௌபா : 71)

7. இஸ்லாத்தைக் கற்பதும், அறிவைப் பெற்றுக் கொள்ளலும்.
கல்வியைப் பெற்றுக் கொள்வதில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பங்குண்டு.
''அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வது அனைத்து முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். (புகாரி)

''நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் (அந்நஹ்ல் : 43)

இஸ்லாமிய வரலாற்றில் ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி), பிந்தி ஷிபா, பாத்திமா ஸிர்ஹிந்தி போன்றோர் கல்வித் துறையில் சிறப்புற்று விளங்கினார்கள். அவர்களிடம் அதிகமான ஆண்கள் வந்து கல்வி பயின்றார்கள்.

8. சமூகப் பணிகளில் ஈடுபடல்
இஸ்லாமிய சட்டதிட்டங்களையும், வரம்புகளையும் பேணிச் சமூகப் பணிகளில் ஈடுபட இஸ்லாம் பெண்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. முதலில் இஸ்லாத்தைத் தழுவிய பெண்ணாக கதீஜா (ரழி) அவர்கள் திகழ்கிறார்கள். இதில் இஸ்லாத்துக்காக ஷஹீதான பெண்ணாக சுமையா (ரழி) அவர்கள் திகழ்கிறார்கள்.

கற்பித்தல், போராடுதல், காயமுற்றோருக்கு மருத்துவ உதவிகள் செய்தல், தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தல் போன்ற பணிகளில் பெண்கள் ஈடுபட்டனர். அந்த

வகையில் ஆயிஷா (ரழி), ரபீதா (ரழி), அஸ்மா (ரழி), உம்மு ஸுலைம்(ரழி) போன்றோர் இப்பணிகளில் ஈடுபட்டனர்.

உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் ''நான் நபி (ஸல்) அவர்களுடன் 7 யுத்தங்களில் கலந்து கொண்டுள்ளேன். (முஸ்லிம், அஹ்மத்)

அபூ தல்ஹா (ரழி) அவர்களின் மனைவி உம்மு ஸுலைம் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் ''ஹுனைன் போராட்டத்தின் போது சிறிய கத்தியொன்றை எடுத்துக் கொண்டேன். நபியவர்கள் என்னிடம் ''அது ஏன்'' என்று வினவிய போது ''என்னை முஷ்ரிகீன்களைச் சேர்ந்த ஒருவனேனும் நெருங்கினால் அவனுடைய வயிற்றை இதனால் கிழித்து விடுவேன்'' என்றேன். (முஸ்லிம்)

9. கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை :
''விசுவாசிகளே! நீங்கள் விபசாரத்திற்கு நெருங்கவும் வேண்டாம் (அல்இஸ்ரா:32) நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ் (ஹஜ்ஜதுல் விதா) உபதேசத்தில் ''பெண்கள் அமானிதமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். பெண்கள் விடயத்தில் அல்லாஹ்வை அதிகமாக அஞ்சிக் கொள்ளுங்கள் எனக் கூறி பெண்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

10. உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்புப் பெறும் உரிமை
''எவரேனும் யாதொரு விசுவாசியை வேண்டுமென்றே கொலை செய்தால் அவனுக்குரிய தண்டனை நரகம் தான் . அவன் அதில் என்றென்றும் தங்கிவிடுவான். அல்லாஹ் அவனம் மீது கோபம் கொண்டு அவனைச் சபிப்பான் (அந்நிஸா: 93)

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


1. யூஸுப் அல்கர்ளாவி, இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் நிலை (2016), இலக்கியச் சோலை, சென்னை.
2. மௌதூதி, இஸ்லாத்தில் மனித உரிமைகள் (2001), இஸ்லாமிய ட்ரஸ்ட் நிறுவனம், சென்னை.
3. ஆஸிம் அலவி, தலைமைத்துவம் ஓர் இஸ்லாமிய அணுகல் (2005), மெல்லினம் வெளியீடு, சென்னை.
4. முகம்மத் குதுப், ஐயமும் தெளிவும் (1978), இஸ்லாமிக் பப்ளிகேஷன், கொழும்பு
5. முஸ்தபா ஸிபாயி, இஸ்லாமிய நாகரிகம் (1999), இலக்கியச் சோலை, சென்னை.
6. ஹமூதா அத்தி, இஸ்லாம் உங்கள் பார்வைக்கு (1985), I.I.F.S.O வெளியீடு, குவைத்.

**தேர்ச்சி 09: சமூக வாழ்வின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் விளங்கிச் சிறந்த ஒரு பிரஜையாக வாழ்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2: சமூக அமைப்பில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கு இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல்பேறுகள்**

- சகவாழ்வு, நல்லிணக்கம் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை விளங்கி நடைமுறைப்படுத்துவார்.
- மஸ்ஜித்களின் புனிதத்துவம் மற்றும் அவற்றின் பணிகளையும் அறிந்து கூறுவார்.
- சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் வரலாற்றில் மஸ்ஜித்கள் ஆற்றிய பங்களிப்புக்களைச் சமகாலத்துடன் ஒப்புநோக்கி விளக்குவார்.
- மஸ்ஜித்கள் சமூக நல்லிணக்கத்திற்கான கேந்திர நிலையமாகச் செயற்படப் பங்களிப்புச் செய்வார்
- சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் மனித உரிமைகளைப் பேணுவதனூடாகப் பங்களிப்பார்

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**சமய, சமூக நல்லிணக்கம்**

- இஸ்லாம் ஒரு சம்பூர்ண வாழ்க்கைத் திட்டம் அது மனித சமூகத்திற்கு அருளப்பட்ட இறுதி வேதம். அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்ட ஒரே சத்திய மார்க்கம். அது மற்றைய மதங்களிலும், கொள்கை, கோட்பாடுகளினதும் இருப்பை ஏற்றுக் கொள்கின்றது. வித்தியாசமான மதங்களும், கொள்கை கோட்பாடுகளும் உலகில் காணப்படுவது பிரபஞ்ச நியதி. அது இறைவனின் ஏற்பாடு. இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

  ‘‘உமது இரட்சகன் நாடியிருந்தால் பூமியிலுள்ள எல்லோருமே ஈமான் கொண்டிருப்பர். அவ்வாறு உமது இரட்சகன் விரும்பவில்லை. எனவே மக்கள் அனைவரும் ஈமான் கொண்ட விசுவாசிகளாக மாறவேண்டுமென விரும்பி, அவர்களை நிர்ப்பந்திக்கின்றீர்களா? (யூனுஸ் :99)

- நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தைத் தொடர்ந்த மக்கா வாழ்க்கைப் பகுதியில் முஸ்லிம்கள் மிகச் சொற்பமாகவே இருந்தனர். ஆனால் மதீனா காலப் பகுதியில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். எனினும் அவர்கள் முஸ்லிம் அல்லாதோருடன் சமய நல்லிணக்கத்தைப் பேணி வாழ்ந்து வந்தனர். மக்கா காலப்பகுதியில் குறைஷியர்கள் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அத்துணை துன்பங்களையும் அவர்கள் சகித்துக் கொண்டனர். மதீனா காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு அதிகாரம் கிடைத்த போதும் கூடச் சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்தார்கள். இது ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திலும் பின்பற்றப்பட்டது.

- பல மதங்களின் இருப்பை ஏற்றுக் கொள்ளும் இஸ்லாத்தின் நிலைப்பாடு, இஸ்லாம் மட்டும் தான் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட சத்திய மார்க்கம் என்ற சிந்தனைக்கு முரண்பட மாட்டாது. ஒரு முஸ்லிம் ஏற்றுப் பின்பற்றுவதற்குரிய சத்திய மார்க்கம் இஸ்லாம் மாத்திரமே என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் ஏனைய மார்க்கங்கள் உயிர்வாழும் உரிமை கொண்டுள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மாற்று மதத்தவர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைப்பது, அதன் போதனைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் முஸ்லிம்களது கடமையாகும். அவர்களுக்கு ஹிதாயத் எனும் நேர்வழிகாட்டுவது அல்லாஹ்வுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

- இஸ்லாம் முன்வைக்கும் சமய நல்லிணக்கம் எவ்வாறு என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. ''உங்களுடைய மார்க்கம் உங்களுக்குரியது. என்னுடைய மார்க்கம் எனக்குரியது''

  ஒவ்வொருவரும் தத்தமது மார்க்கத்தைப் பின்பற்றி வாழச் சுதந்திரமாக விடப்பட வேண்டும். ஒருவர் அடுத்தவரின் மார்க்க விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற கருத்தையே மேற்படி வசனம் உணர்த்துகின்றது. இன, மத, மொழி வேறுபாடுகள் பிரபஞ்ச நியதி. அது இறைவனின் ஏற்பாடு என்பது மேற்குறிப்பிட்ட குர்ஆனிய வசனங்களினூடாகத் தெளிவாகின்றது.

- மனிதர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள வித்தியாசங்களுக்குப் பின்னாலுள்ள இன்னொரு இறை நாட்டம், மனிதர்களிடையே பரஸ்பர அறிமுகத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே என அல்குர்ஆன் கூறுகின்றது.

  ''மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பின்னர் உங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிறு சிறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக உங்களில் மிகவும் பயபக்தியுடையவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் உயர்ந்தவர், மிகவும் கண்ணியத்துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் நன்கறிந்தவன். (ஹுஜுராத் : 13)

- எனவே வித்தியாசங்கள் அல்லாஹ்வின் ஏற்பாடு என்பதை மனதில் ஏற்று, அடுத்த மதங்களினதும், அவற்றைப் பின்பற்றுவோரினதும் இருப்பை அங்கீகரிப்பது சக வாழ்வினை சாத்தியப்படுத்துவதற்கான அடிப்படை அம்சமாகும். அடுத்த மதங்களும், கொள்கைகளும் இஸ்லாத்திற்கு முரணான விடயங்களை தன்னகத்தே கொண்டிருந்த போதும் அவை குறித்து இழிவாகப் பேசலாகாது.

- இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆன் சமாதானத்தினதும், சக வாழ்வினதும் மார்க்கமாக இஸ்லாத்தை அறிமுகப்படுத்துகின்றது. இஸ்லாம் எனும் சொல்லின் கருத்தே அமைதியும், சமாதானமுமே. யுத்தத்தைக் குறிக்கும் 'ஹர்ப்' எனும் சொல் அல்குர்ஆனில் 6 இடங்களில் மாத்திரமே இடம்பெறுகின்றது. ஆனால் சமாதானத்தைக் குறிக்கும் 'ஸில்ம்' எனும் பதமும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் சுமார் 140 இடங்களில் இடம் பெறுகின்றன.

**இஸ்லாம் போதிக்கும் சமய, சமூக நல்லிணக்கத்தின் சில அடிப்படைகளைப் பின்வருமாறு முன்வைக்கலாம்.**

1. அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினமே
   ''மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பின்னர் உங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சிறு சிறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக உங்களில் மிகவும் பயபக்தியுடையவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் உயர்ந்தவர், மிகவும் கண்ணியத்துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் நன்கறிந்தவன். (ஹுஜுராத் : 13)

2. உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள். இந்தக் கண்ணியம் அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது.
   ''நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தி விட்டோம். கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்தோம்'' (அல்இஸ்ரா : 70)

3. கொள்கைச் சுதந்திரம் : - ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. எனவே, மாறுபட்ட கொள்கையையோ, மதத்தையோ பின்பற்றுபவர்கள் தமக்குள் பரஸ்பம் எதிரிகள் அல்லர். அவ்வாறே ஒருவர் ஏற்றிருக்கும் மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமையும் எவருக்குமில்லை. '' மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது. (அல்குர்ஆன்)

4. மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை. அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய மனிதன், சக மனிதனுக்கு நன்மை பயப்பவன் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.
   ''மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள். (முஸ்லிம்)

5. எல்லா மனிதர்களும் சகோதரர்கள் : சகோதரத்துவத்தைப் போன்று இஸ்லாம் வலியுறுத்திய வேறெந்த அடிப்படைகளும் கிடையாது. மனித இனத்தின் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே. அதனால் மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள்.

6. எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள். சூழ்நிலை நிர்ப்பந்தங்களே மனிதர்களின் நல்ல தன்மையைப் பாதிக்கின்றது.

7. சமூகங்கள், மொழிகள் போன்ற மதங்களிலுள்ள பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று. இப்பன்மைத்துவம் அழகானது, இயல்பானது, பிரபஞ்ச விதிகளில் அதுவும் ஒன்று. அல்குர்ஆன் கூறுகின்றது

   ''உமது இரட்சகன் நாடியிருந்தால் அனைத்து மக்களையும் ஒரே சமூகமாக ஆக்கியிருக்கலாம். ஆயினும் மக்கள் தொடர்ந்து கருத்து வேறுபாடு கொண்டவர்களாகவே உள்ளனர். (அல்குர்ஆன்)

நிற மற்றும் மத மொழி வித்தியாசங்கள் இறைவன் இருக்கின்றான் என்பதற்கான அத்தாட்சிகள் எனக் கூறிய அல்லாஹ், அந்த அத்தாட்சிகளைப் பற்றி அறிஞர்கள் சிந்தித்துப் படிப்பினை பெற வேண்டும் என்றும் பணிக்கின்றான்.

''வானங்கள் பூமியின் படைப்பும் அமைப்பும் உங்களது மொழிகளும் நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனைக் காட்டும் அத்தாட்சிகளைச் சேர்ந்தவையாகும். இதில் அறிவாளிகளுக்குப் பல அத்தாட்சிகள் உள்ளன. (அர்ரூம்: 22)

8. பரஸ்பர உதவிகள்
ஒரு முஸ்லிமை தன் கொள்கை சாராதவர்களுடன் இணைக்கும் பிரதான பாலமாக அமைவது பரஸ்பர உதவிகளும், ஒத்தாசைகளுமாகும். வறுமை, நோய், அறிவீனம் போன்ற நிலைகளில் சிக்கித் தவிக்கும் எவருக்கும் முஸ்லிம்கள் உதவிகளைச் செய்வது கடமையும், இறைவனிடம் நன்மையைப் பெற்றுத் தரும் கைங்கரியமுமாகும்.

''மார்க்க விடயத்துக்காக உங்களுக்கெதிராகப் போராடாமலும், உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருப்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செலுத்துவதையும் விட்டு உங்களை அல்லாஹ் தடுக்கமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கின்றான்.'' (அல்மும்தஹ்னா: 08)

9. யாவருக்கும் பொதுவான முறையில் நீதி செலுத்தப்பட வேண்டும்.
மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சரிசமனாக நடத்தப்பட வேண்டும். அதில் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர்கள், நண்பன் - பகைவன், உறவினன் - அல்லாதவன் போன்ற வித்தியாசங்கள் பார்க்கப்படக் கூடாது என்பதில் இஸ்லாம் மிகவும் உறுதியாக இருக்கிறது. நல்லிணக்கம், சமூக இணக்கப்பாடு பாதிக்கப்படுவதற்குப் பாரபட்சம், அநீதி, ஓரவஞ்சனை என்பன மிகப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளதை உலக வரலாறு நிரூபிக்கின்றது. யுத்தங்கள், கொலைகள் கூட இவ்வாறான காரணங்களால் நிகழ்ந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

அல்குர்ஆன் (அந்நிஸா: 105) ஆவது வசனம் நபி (ஸல்) அவர்களது ஒரு பிழையான அனுமானத்தைத் திருத்திக் கொடுப்பதற்காக இறக்கப்பட்டதாகும். ஒரு திருட்டுச் சம்பவத்தில் ஒரு முஸ்லிம் சம்பந்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் அப்படி செய்திருக்க மாட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் உறுதியாக நம்பினார்கள். காரணம், திருட்டில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டவர் இஸ்லாத்தை எதிர்த்து வந்த நயவஞ்சகர்களில் ஒருவராவார். ஆனால் அல்லாஹ் ''நீர் மக்களுக்கு மத்தியில் உமக்குக் காட்டித் தந்தபடி தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக உமக்கு வேதத்தை இறக்கினேன். நீர் மோசடிக்காரர்களுக்காக வாதிடுபவர்களில் ஒருவராக இருக்காதீர்... (4: 105) எனக் கூறினான்.

10. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது :-
முஸ்லிம்கள் - முஸ்லிம் அல்லாதவர்களுடன் சமாதான சக வாழ்வை மேற்கொண்டாலும் தமது தனித்துவங்களை விட்டுக் கொடுக்க முடியாது. ஒரு முஸ்லிமையும் முஸ்லிம் அல்லாதோரையும் பிரித்துக் காட்டும் பல வித்தியாசங்கள்

உள்ளன. நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், சட்டவிதிகள், பண்பாட்டு அம்சங்கள் என்பனவே அவைகளாகும். சமூக, மத நல்லிணக்கம் என்ற பெயரில் மார்க்கத்தின் அடிப்படையிலான அம்சங்களில் ஒரு போதும் நெகிழ்ந்து கொடுக்க முடியாது. தமது தனித்துவங்களை பேணிக் கொண்ட நிலையில் பிறரை மதித்து, கௌரவித்து இணங்கி வாழ்வதில் தப்பில்லை.

எனவே முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து முற்று முழுதாக ஒதுங்கியிருப்பது, அவர்களுடன் இரண்டறக் கலந்து தனித்துவங்களையும் கூட இழந்து விடுவது ஆகிய இரு துருவ நிலைகளில் ஏதாவது ஒன்றில் நிற்காமல் நடுநிலையில் நிற்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது என்பது இதனையே குறிக்கும்.

**சமய, சமூக நல்லிணக்கம், நடைமுறைகள்**

இஸ்லாமிய வரலாற்றில் சமய, சமூக நல்லிணக்கமானது உயர்ந்த நிலையில் பேணப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். பிற சமுதாயத்தவர்கள் தமக்கருகில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் அங்கீகாரம் வழங்கியது மாத்திரமன்றி அவர்களுடன் சகல விதத்திலும் சமூக உறவுகளைப் பேணி வந்திருக்கிறார்கள். அதற்காகப் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிட முடியும்.

1. முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில், முஸ்லிம் அல்லாதவர்களும் திம்மீக்கள் (முஸ்லிம்களது பாதுகாப்பைப் பெற்றவர்கள்) என்ற பெயரில் வாழ்வதற்கும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள்.

   நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் சிறுபான்மை என்ற பெயரில் யாரும் இருக்கவில்லை. அங்கு வாழ்ந்த எல்லோரும் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர். அதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு அமைந்தன.

   1. யூதர்களும், முஸ்லிம்களும் தத்தமது சமயத்தை முழுமையாகப் பின்பற்றலாம்.
   2. இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் யூதர்கள் உதவி செய்யப்படுவர், நீதியாக நடத்தப்படுவர்.
   3. தமது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அன்னிய சமூகத்தோடு இணைந்து போர் புரிய முஸ்லிம்களுக்கு யூதர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.
   4. பொது நன்மைகளை எட்டுவதற்காக யூதர்களும், முஸ்லிம்களும் பரஸ்பரம் உபதேசம் செய்து கொள்வார்கள். பாவங்கள் அத்துமீறல்களுக்கு பரஸ்பரம் உதவ மாட்டார்கள்.
   5. யாராவது ஏதும் ஒரு தவறு செய்தால் அது அவனுக்கு எதிரானதாக மட்டுமே பார்க்கப்படும். சமூக விவகாரமாக பார்க்கப்பட மாட்டாது.

   ஹுதைபிய்யா உடன்படிக்கை, நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட நஜ்ரான் ஒப்பந்தம், அபூ உபைதா (ரழி) அவர்கள் சிரியாவின் ஹிம்மஸ் பிரதேச மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், ஆர்மேனியர்களுடன் கலீபா முஆவியா (ரழி) அவர்கள் செய்த உடன்படிக்கை என்பன சமூக, சமய நல்லிணக்கத்துக்கான சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக

உள்ளன.

நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்கள் மதீனா வந்த போது நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட முறை இன்றும் போற்றப்படுகின்றது. அவர்களை அன்னார் மஸ்ஜிதுன் நபவியில் வரவேற்று தங்க வைத்ததோடு மஸ்ஜிதின் ஒரு பகுதியில் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இடமளித்தார்கள். அவர்கள் தமது மார்க்கம் பற்றி விவாதித்த போது அதற்குச் செவிமடுத்தார்கள். மிகவும் இங்கிதமான முறையில் கேள்விகளுக்கு விடை பகர்ந்தார்கள்.

2. மதீனாவில் முஸ்லிம் அல்லாத யூத, கிறிஸ்தவர்களும் பல தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டவர்களும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டனர்.

3. நபி (ஸல்) அவர்களும் அன்னாரது தோழர்களும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வறுமை, நோய், இறப்பு போன்ற துன்பங்கள் சம்பவித்த போது மனிதாபிமான உதவிகளைச் செய்திருக்கின்றார்கள்.

4. முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து அன்பளிப்புக்ளைப் பெற்றதுடன் அதற்குப் பதிலாக அன்பளிப்புக்களை வழங்கியமைக்கான பல சான்றுகளும் உள்ளன. எகிப்தின் கிறிஸ்தவ மன்னராக இருந்த முகௌகஸ் நபி(ஸல்) அவர்களுக்குப் பல அன்பளிப்புக்களை அனுப்பினான். நபியவர்கள் அவ்வன்பளிப்புக்களை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தியாவிலும் ஸ்பெய்னிலும் முஸ்லிம்கள் அமைத்த ஆட்சி பல்லின சமுதாயங்களுக்கான கொட்டிலாக அமைந்திருந்தது. உமைய்யா, அப்பாஸிய, உஸ்மானிய ஆட்சிக் காலங்களில் பிற சமயத்தவர்கள் ஆட்சி, கல்வி, சமூக முன்னேற்றம், பொருளாதாரம் போன்ற துறைகளில் முஸ்லிம்களோடு தோளோடு தோள் நின்று உழைத்திருக்கின்றார்கள்.

**மஸ்ஜிதும் அதன் பணிகளும்**

- நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது முதற் பணியாக மதீனாவின் எல்லையில் குபா என்னும் இடத்தில் ஒரு மஸ்ஜிதை நிர்மாணித்தார்கள். மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியை நிர்மாணித்தார்கள். இதன் மூலமாக நபி (ஸல்) அவர்கள் சமூக ரீதியான வழிகாட்டலுக்கும், சமூக நல்லிணக்கத்துக்கும் பள்ளிவாசலை முன்னுதாரணமாகக் காட்டித்தந்தார்கள்.

- இன்று மஸ்ஜிதை மையமாகக் கொண்ட நல்லிணக்கம் என்பது மிக இன்றியமையாத கருப்பொருளாகியுள்ளது. முஸ்லிம் சமூகத்தை ஐக்கியப்படுத்தி ஒரு கட்டுக்கோப்பான நிலையில் அதனைப் பேணுவதற்கும், ஆன்மீகச் செயற்பாடுகளையும், உலகியல் செயற்பாடுகளையும் சமநிலையில் பேணி வழிகாட்டுவதும் காலோசிதமாக உள்ளது.

''ஒரு மனிதன் மஸ்ஜிதுக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டால் அவன் ஈமானைப் பெற்றிருக்கின்றான் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்'' (திர்மிதி)

''மஹ்ஷரில் எந்த நிழலுமே இல்லாத அந்நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் கீழ் நிழல் பெறும் பேற்றை ஏழு தொகுதியினர் பெற்றுக் கொள்வர். அவர்களுள் மஸ்ஜித்களுடன் இறுக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்களும் ஒரு தொகுதியினராவர். (புஹாரி)

- மஸ்ஜித்கள் மூலமாக மனிதர்கள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் ஆன்மீகம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், ஆரோக்கியம், பண்பாடு, ஒழுக்கம் போன்ற துறைகளில் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுச் செயற்திறன் மிக்கவர்களாகவும் சமூகத்தை வழி நடத்துபவர்களாகவும் திகழுதல் வேண்டும். இத்தகைய தனிநபர்களை உருவாக்குவதற்கு முதல் இஸ்லாமிய சமூக உருவாக்கத்தில் மதீனா பள்ளிவாசல் எந்தப் பங்களிப்பைச் செய்ததோ அத்தகைய பணிகளை இன்றைய பள்ளிவாசல்கள் செய்ய வேண்டும்.

- மஸ்ஜிதுந் நபவி ஜமாஅத் தொழுகை இடம் பெற்ற இடமாக மாத்திரம் அல்லாமல் முஸ்லிம்களின் சமூகத் தலைமையகமாக, தூதுவர்களைச் சந்திக்கும் இடமாக தர்பிய்யா (ஆன்மீக, பண்பாட்டுப் பயிற்சி) வழங்கும் இடமாக பிற மதத்தவர்களுடன் கலந்துரையாடும் இடமாக ஒரு செயலகமாக என அதன் பங்களிப்புக்கள் பல்துறை சார்ந்ததாக இருந்தன. நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியை மையமாக வைத்தே முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள்.

- முஸ்லிம் சமூகம் அதன் தலைவரை எப்போதும் சென்று சந்திக்கக்கூடிய தலமாக மஸ்ஜித் அமைந்திருந்தது. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதின் ஒரு பகுதியில் தமது வாசஸ்தலத்தை அமைத்துக் கொண்டார்கள். தொழுகைக்கு வரும் மக்களையும் ஏனையவர்களையும் இலகுவாகச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வுகளை முன்வைக்க அது வசதியாக இருந்தது. மதீனாவுக்கு வெளியிலிருந்து வரும் முஸ்லிமல்லாதவர்களையும், தூதுவர்களையும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், சந்திப்பதற்கான இடமாகவும் மஸ்ஜித் அமைந்திருந்தது.

- பள்ளிவாசலில் சமூக விவகாரங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்ற வஹியுடன் தனிப்பட்ட தனது வழிகாட்டல்களுடனும் ஷூறா அடிப்படையிலும் வழங்கினார்கள். நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜித், கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் கல்வி நிலையமாகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அல்குர்ஆன் விளக்கங்கள், குத்பாக்கள், கலந்துரையாடல்கள் மூலம் பாட போதனைகளை நபி (ஸல்) அவர்கள் நடாத்தினார்கள். அஸ்ஹாபுஸ் ஸுப்பா எனும் திண்ணைத் தோழர்கள் பள்ளிவாசலில் நிரந்தரமாகத் தங்கியிருந்து நபியிடமிருந்து கற்றுக் கொண்டவற்றை பிற ஸஹாபாக்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

- ஸகாத், ஸதகா மற்றும் ஸகாதுல் பித்ர் போன்ற சமூகத்தின் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்யும் செயற்பாடுகள் இங்கு முன்னெடுக்கப்பட்டன. கனீமத் பொருட்கள் கூட சேகரிக்கப்பட்டு இங்கிருந்தே பகிரப்பட்டன.
- மஸ்ஜித்களில் பாட போதனைகள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னரும் நீண்ட காலம் நடைபெற்று வந்திருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஸஹாபாக்கள்,

தாபிஊன்கள், தபஉத் தாபிஈன்கள் காலங்களிலும் அந்த நடைமுறை காணப்பட்டது. பெரும்பாலான இமாம்கள் பாடபோதனைகளை மஸ்ஜிதை மையமாகக் கொண்டு நடாத்தினார்கள். இமாம் மாலிக் (ரஹ்), ஸஈத் இப்னு முஸய்யப் (ரஹ்) போன்றோர் மஸ்ஜித் நபவியில் பாடம் நடாத்தினார்கள். இமாம் ஷாபிஈ (ரஹ), இமாம் ஜரீருத் தபரீ (ரஹ்) ஆகியோர் பள்ளிவாசல்களில் பாடபோதனை நடாத்தினார்கள். எகிப்தில் ஜாமிஉல் அஸ்ஹர், டியூனீஸியாவில் ஜாமிஆ ஸைத்தூனிய்யாவிலும், பக்தாதில் ஜாமிஆ மஸ்ஜிதிலும், டமஸ்கஸ் ஜாமிஆ உமரிலும் பிரபல்யம் வாய்ந்த அன்றைய இமாம்கள் கல்விப் பணி புரிந்தார்கள். இங்கு வெறுமனே சன்மார்க்கப் போதனைகள் மாத்திரம் பாடங்களாகப் போதிக்கப்படாமல் இலக்கியம், மருத்துவம், கவிதை, தத்துவம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டுள்ளன. எனவே தான் கலாநிதி முஸ்தபா ஸிபாஈ அவர்கள் ‘‘மஸ்ஜித் இபாதத்துக்குரிய இடமாக மட்டுமன்றி முஸ்லிம்களுக்கு மார்க்கக் கல்வியையும் உலகக் கல்வியையும் போதிக்கும் கலாபீடமாகவும் விளங்கியது’’ எனக் குறிப்பிடுகின்றார்கள்.

- இது தவிர மஸ்ஜித்களை அடிப்படையாகக் கொண்ட பிரபல்யம் வாய்ந்த நூல் நிலையங்கள் உருவானமையும் குறிப்பிடத்தக்கது. மதீனா, எகிப்து, டமஸ்கஸ், கைரவான், டியூனீஸியா போன்ற நகரங்களில் காணப்படும் நூலகங்கள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

- எனினும் காலவோட்டத்தில் மஸ்ஜித்கள் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய உண்மையான பணிகளைக் கைவிட்டு வெறுமனே வெளிப்படையான ஆன்மீக கிரியைகள் நடைபெறும் இடமாக மாறியமை துரதிஷ்டமான நிகழ்வாகும். இதனால் தீன், துன்யா என்று செயற்பாடுகள் இரு கூறுகளாக்கப்பட்டு அரசியல், பொருளாதார, சமூக, கல்வி, கலாசார, சர்வதேச விவகாரங்கள் என்பன மஸ்ஜித்களை விட்டு வேறு இடங்களுக்கு இடமாற்றப்பட்டன. இதன் காரணமாக ஆன்மீக உயிரோட்டத்தை இழந்தன. இதனால் முஸ்லிம் சமூகத்தின் செயற்பாடுகள் வீழ்ச்சியை நோக்கிச் சென்றன.

எனினும் இவ்வீழ்ச்சி நிலையிலிருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்றும் முயற்சியில் பிற்காலத்தில் தோன்றிய சீர்திருத்தவாதிகளும், முன்னோடிகளும் பல்வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டதன் விளைவாக மீண்டும் பள்ளிவாசல்களிலும் மஸ்ஜித் நபவியை முன்மாதிரியாகக் கொண்டு சமூக நல்லிணக்கத்துக்குரிய வழிவகைகளைச் செய்து வருகின்றன.

எமது இலங்கைத் தாய் நாட்டைப் பொறுத்த வரை சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு மஸ்ஜித்கள் பின்வரும் பணிகளை ஆற்ற வேண்டிய கட்டாய நிலையில் உள்ளன. அவை பின்வருமாறு

1. மனிதர்களைக் கட்டியெழுப்புவதற்குரிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல் :

மஸ்ஜித் நிருவாகத்தில் பல்துறை அறிஞர்களையும், மார்க்க அறிஞர்களையும் இணைத்தல்
கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தல், பாடசாலை, பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்களை மிகச் சரியாகப் பயன்படுத்தல்

திட்டமிட்ட குத்பாக்கள்
வாசிகசாலை வசதிகளைப் பெருக்குதல்
உயர் கல்வி வழிகாட்டல்களை வழங்குதல்
கல்விக்கான பொருளாதார வசதிகள்
பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களை இனங்கண்டு வழிகாட்டல்
கல்வி ஆலோசனை உளவளத்துணை தொழில் வழிகாட்டல் நிலையமாகச் செயற்படல்
பெற்றோருக்கான வழிகாட்டல்
ஆசிரியர்கள், மாணவர்களது செயற்பாடுகளுக்கான உற்சாகமூட்டல்

2. சமூக ஒற்றுமையையும், சமய, இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வழிகளில் கவனத்தைக் குவித்தல் :

- சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான இணக்க சபைகளை ஏற்படுத்தல்
- பள்ளிவாசல் சம்மேளனங்களை ஏற்படுத்தி சமூக ஐக்கியத்துக்காக வழிகாணல்
- இஸ்லாமிய இயக்கங்கள், தரீக்காக்கள், நிறுவனங்களை உள்ளடக்கிய சமூக ஐக்கிய ஒன்றியங்களை உருவாக்குதல்
- பிற சமூகங்களுடனான உறவை மேம்படுத்திச் செயற்திட்டங்களை முன்கொண்டு செல்லல். (சிரமதான நிகழ்ச்சிகள், இரத்ததானம், மருத்துவ முகாம்கள்)
- அனைத்து சமயங்களும் ஏற்றுக்கொள்கின்ற பாவங்களில் இருந்து சமூகத்தையும் தேசத்தையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கூட்டாக ஈடுபடுவதற்கான திட்டங்களை உருவாக்குதல். (போதை ஒழிப்பு, மது பாவனை)

3. தகவல் திரட்டுதல், மதிப்பீட்டு பணிகளில் கூடிய கவனம் செலுத்துதல்

4. சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்தல்

5. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தல்

6. இளைஞர்களுக்கான வழிகாட்டல்களை வழங்குதலும், எதிர்கால ஆளுமைகளையும் உருவாக்க வழிசெய்தலும்

**மனித உரிமைகளைப் பேணல்**

- ஹிஜ்ரி முதலாமாண்டில் (கி.பி 622) மதீனா சாசனம் மூலம் இஸ்லாம் மனித உரிமைகளை அறிமுகப்படுத்தியது. 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட மனித உரிமைப் பிரகடனம் மதீனா சாசனத்தினூடாக வழங்கிய மனித உரிமைகள் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

- இஸ்லாம் வழங்கிய உரிமைகள் அனைத்தும் நேரடியாக அல்லாஹ்விடமிருந்து வந்த தெய்வீகத் தன்மை கொண்டதாகும். அதனை யாரும் அபகரிக்கவோ, மீறவோ உரிமை கிடையாது. அதில் கூட்டல் குறைத்தல் எதுவும் செய்யத் தேவையில்லாத அளவுக்கு முழுமை பெற்றதாகவும், நெகிழாத் தன்மை கொண்டனவாகவும். அந்த உரிமைகள் விடயத்தில் ஆட்சியாளன் - குடிமகன் என்ற பேதங்கள் கிடையாது. எல்லாக் காலங்களையும் அறிந்து கால, இட, தேச, பரப்புக்களைத் தாண்டி

அல்லாஹ் மனித உரிமைகளை வழங்கியுள்ளான்.

அந்த வகையில் இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. உயிர் வாழ்வதற்கான உரிமைகள் :
   ''வறுமைக்கு அஞ்சி உங்களது குழந்தைகளைக் கொல்லாதீர்கள் (கொலை செய்யக் கூடாதென்று அல்லாஹ் தடுத்துள்ளான்) எந்த மனிதனையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்'' (அல்அன்ஆம்: 151)
   வாழ்வதற்குரிய உரிமையை மறுப்பது ஷிர்க்குக்கு அடுத்த மிகப் பெரிய பாவச் செயலுமாகும்.

2. உயிர், உடமை என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை :
   அல் குர்ஆன் கூறுகின்றது ''எவனொருவன் மற்றொருவனை அநியாயமாகக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தவன் போலாவான். எவன் உயிரை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவன் போலாவான்'' (அல்மாஇதா: 32)
   அந்த வகையில் நோய், காயப்படல், பசி, பட்டினி, நீரில் மூழ்குதல் போன்ற மரணத்துக்கு இட்டுச் செல்லும் செயல்களிலிருந்து காப்பாற்றுவதும் இதில் அடங்குகின்றது.

3. நீதி, சமத்துவம் கோரும் உரிமை :-
   ''விசுவாசிகளே! நீதத்தை நிலை நாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீதுள்ள துவேசம் (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கவும். (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியையே செலுத்துங்கள்.... (அல்மாஇதா: 8)

   ''எந்த அறபியும் அஜமியைவிட மேலானவரல்லர். எந்த அஜமியும் அறபியைவிட மேலானவரல்லலர். அனைவரும் ஆதமின் மக்களாவர். ஆதம் மண்ணினால் படைக்கப்பட்டவராவார்.'' (பைஹகி)

4. கற்பைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை :-
   அல்குர்ஆன் ''(விசுவாசிகளே!) நீங்கள் விபசாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது. (அல்இஸ்ரா: 32)

   நபி (ஸல்) அவர்கள் தனது 'ஹஜ்ஜதுல் விதா' பிரசங்கத்தில் ஒவ்வொருவரதும் உயிர், பொருள், கற்பு என்பன பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

5. தனி மனித உரிமை : -
   ''மூன்று மனிதர்களுக்கு எதிராக நான் மறுமையில் வாதிடுவேன். அவர்களுள் ஒருவர் மனிதர்களை அடிமைப்படுத்தி அவர்களை விற்று அந்தப் பணத்தில் சாப்பிடுபவர்'' (புஹாரி)

6. அடிப்படை வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை :-

''அவர்களுடைய செல்வத்தில் இரப்போருக்கும், வசதியற்றோருக்கும் பாத்தியதை உண்டு'' (அத் தாரியாத்: 19)

அந்த வகையில் ஒரு மனிதனின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளான உணவு, உடை,உறையுள், மருத்துவம், கல்வி ஆகியவற்றைக் கேட்டுப் பெறும் உரிமை உண்டு. யாருமே உதவாத போது ஆட்சித் தலைவர் அப்பணியை நிறைவேற்ற வேண்டும்.

7. மனித கௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை :-
முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம் (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்)- ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம் இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள் ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும் எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள். (ஹுஜுராத்: 11)

8. வழிபாட்டுரிமை :-
அனைவருக்கும் வழிபாட்டுரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது.
''(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது'' (பகரா: 256)

''வேதங்கள் கொடுக்கப்பட்ட மக்களோடு பண்பட்ட அழகிய முறையிலன்றி வாதிக்காதீர்கள்'' (அஷ்ஷுஅரா: 46)

''அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் அழைக்கின்றார்களோ அவர்களை நீங்கள் திட்டாதீர்கள்'' (அல்அன்ஆம்: 104)

9. கருத்து வெளிப்பாட்டு உரிமை :
கருத்துச் சுதந்திரம் ஒரு குடிமகனுக்குரிய முக்கிய உரிமையாகும். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

''உங்களில் யாராவது ஒருவர் ஒரு தீமையைக் கண்டால் அதனைத் தனது கரத்தால் தடுக்கவும். முடியாவிட்டால் நாவினால் தடுக்க வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் தனது உள்ளத்தினாலாவது வெறுக்கட்டும். இது ஈமானின் மிகவும் பலவீனமான படித்தரமாகும்'' (முஸ்லிம்)

10. கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடும் உரிமை :-
கொடுங்கோல் ஆட்சியாளனுக்கெதிராகக் குரல் கொடுக்கும் உரிமை, ஒரு குடிமகனுக்கு இருக்கிறது. அநீதி, அராஜகம், நீதியற்ற நிலை தொடர்ந்தும் காணப்படுகின்ற போது பாதிக்கப்பட்டோர், நிர்க்கதிக்குள்ளானோர் அவ்வாட்சிக் கெதிராக போராட முடியும்.

"அநியாக்கார ஆட்சியாளனுக்கு முன்னால் சத்தியத்தை முன்வைப்பது அறப் போராட்டங்களில் மிக உயர்ந்ததாகும்" (ஹதீஸ்)

மேலே குறிப்பிட்ட எல்லா உரிமைகளோடு கூட்டம் கூடும் உரிமை, அரசியல் பங்கு கொள்ளும் உரிமை, தனிப்பட்ட வாழ்வில் தனது கண்ணியத்தைப் பாதுகாக்கும் உரிமை போன்றனவும் இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள உரிமைகளாகும். பெண்களுக்கு வாழும் உரிமை இருக்கவில்லை. கருத்து வெளிப்பாட்டு உரிமை, சொத்துரிமை, கல்வி பெறும் உரிமை இருக்கவில்லை. மறுக்கப்பட்ட உரிமைகளையும் இஸ்லாம் வழங்கிக் கௌரவித்தது.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**


1. சுக்ரி எம்.ஏ.எம், இஸ்லாமும் மனித உரிமைகளும் (1995), நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டு பணியகம்,பேருவல.
2. அமீன் ஸீ.எம்.ஏ, சமூக புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்கு(1994), ரேஷ்மா பதிப்பகம், திஹாரிய.
3. மணவை முஸ்தபா, இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்(1996), சௌதா பப்ளிகேஷன், சென்னை.
4. அன்ஸார் மௌலானா, எப்.எம்.எஸ்.ஏ இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லினக்கங்கள் (2008), முஸ்லமும் பெண்கள், ஆராய்ச்சி வெளியீடு, கொழும்பு

5 ஸாஹிர் எம்.ரீ.எம், சகவாழ்வு (2014), ஸாஹிர் பதிப்பகம், மாவனல்லை.

**தேர்ச்சி 09 : சமூக வாழ்வின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் விளங்கிச் சிறந்த ஒரு பிரஜையாக வாழ்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.3 : குற்றச் செயல்கள் அற்ற சமூக அமைப்பை உருவாக்குவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றல் பேறுகள் :**

- குற்றம் நிகழாதிருக்க இஸ்லாத்தின் வழிகாட்டல்களை அறிந்து கூறுவார்
- குற்றம் நிகழாத சூழலை உருவாக்குவதில் பங்கேற்பார்.
- இஸ்லாம் வகைப்படுத்தியுள்ள குற்றங்களையும் அவற்றுக்கான தண்டனைகளையும் விளக்குவார்.
- இஸ்லாத்தின் குற்றவியல் தண்டனைகளை தர்க்க ரீதியாக நியாயிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**குற்றமும் தண்டனையும்**

- இஸ்லாம் எல்லா நிலைமைகளிலும் சில அடிப்படைகளைப் பாதுகாப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றது. அவை (தீன்) மார்க்கம், பொருள், உடல், உயிர், பரம்பரை, புத்தி, மானம் என்பனவாகும். இவை பாதுகாக்கப்படாவிட்டால் ஒழுங்கீனம், அநீதி, அராஜகம் தலை தூக்கிவிடும். இதனால்தான் இஸ்லாம் இவற்றை பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் அதன் கவனத்தைச் செலுத்துகின்றது. இஸ்லாத்தில் குற்றம் தண்டனை பற்றிய கோட்பாடுகளும் இப்பிரமாணங்களுக்கமையவே நிறுவப்பட்டுள்ளன.

- பொதுவாக குற்றமென்பது, குறித்த சட்ட வரையறைகளுக்கு அல்லது உடன்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உடன்பட்ட ஒருவர் அதனை மீறுவதனைக் குறிக்கின்றது. அவ்வாறு மீறிய ஒருவனை முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் மாற்று வழி அல்லது அத்தகைய வரையறை மீறல்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படுகின்ற ஷரீஅத் குறிப்பிடுகின்ற பரிகார நடவடிக்கை தண்டனை என அழைக்கப்படுகின்றது.

- இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பருவ வயதையடைந்த, புத்தி சுவாதீனமுள்ள ஒருவர் அல்லாஹ்வும், ரஸூலும் விதித்த ஒன்றை விடுவதும், தடுத்த ஒன்றைச் செய்வதும் குற்றமெனக் குறிக்கப்படுகின்றது. இதனைச் சமூகக் கண்ணோட்டத்தில் குறிப்பிடுவதாயின் ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவினர் இன்னொரு தனிநபரின் அல்லது குழுவினரின், உடலுக்கு அல்லது சொத்துக்களுக்கு அல்லது கௌரவத்திற்கு பங்கமேற்படுத்தக் கூடிய விதத்தில் செயற்படுவதையும், செயற்படத் தூண்டுவதையும் குறிக்கின்றது. இவ்வாறான சமூக விரோதச் செயல்களிலிருந்து மார்க்கத்தையும் தனிநபர்களையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஷரீஅத் குறிப்பிடுகின்ற பரிகார நடவடிக்கை தண்டனை என அழைக்கப்படுகிறது.

- இஸ்லாம் மேற்குறிப்பிட்ட அடிப்படைகளைப் பாதுகாப்பதற்காக குற்றங்களை வகைப்படுத்தி அவற்றுக்கு மிகப் பொருத்தமான தண்டனைகளை நிர்ணயித்து தனிநபர்களையும் சமூகத்தையும் மார்க்கத்தையும் அரசையும் பாதுகாக்கின்றது.

- குற்றங்கள் இஸ்லாத்தில் 'ஜராஇமுல் ஹுதூத்' தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள், 'ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா' பழிவாங்கல், நஷ்டஈடு பெறல் எனும் தண்டனைகளையுடைய குற்றங்கள், 'த.்.ஸீர்' குற்றங்கள் அல்லது சாதாரண குற்றங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சமூகம் எழுந்து நிற்கும் அடிப்படைகளைப் பேணும் வகையில் அதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் நிர்ணயித்துள்ளது.

- தண்டனைகளை வழங்குமுன் இஸ்லாம் சில அடிப்படைகளைக் கருத்திற் கொள்கிறது.

    1. நிர்ணயிக்கப்படும் தண்டனை குற்றம் நிகழாது தடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
    2. தண்டனை மிகப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
    3. தண்டனைகளின் போது குற்றமிழைத்தவனின் பதவி, அந்தஸ்து போன்றனவற்றைப் பொருட்படுத்தலாகாது.
    4. தண்டனைகள் சமூகப் பாதுகாப்பு, சமூக நிலைப்பாட்டை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.
    5. தண்டனைகள் சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும்.
    6. சாதாரண குற்றங்களின்போது தண்டனைகள் குற்றவாளியைப் பொறுத்து வேறுபடலாம்.

    இஸ்லாமிய தண்டனைகள் கொண்டிருக்கும் இவ்வடிப்படைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளன. அவை நியாயமானதுதான் என ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள போதிய சான்றுகள் உள்ளன.

- இஸ்லாமிய தண்டனையின் நோக்கங்கள், இலக்குகள் பற்றிய தெளிவுபடுத்தல் அவசியமாகும்.

    1. அறிவு புகட்டி, நேர்வழி காட்டி நல்ல மனிதர்களாக மாற்றுதல்.
    2. தீமைகளைக் களைந்து சமூக ஒழுங்கையும் நீதியையும் பாதுகாத்தல்.
    3. சமூகத்தை, சீர்திருத்தல், கட்டுப்படுத்தல்
    4. தனிமனித, சமூக உரிமைகளைப் பாதுகாத்தல்
    5. மக்களை நன்மையின்பால் வழிநடத்தல், சுயகட்டுப்பாட்டையும் பொறுப்புணர்வையும் ஏற்படுத்தல்.
    6. குற்றவாளியை நல்வழிப்படுத்தல்.
    7. எதிர்காலத்தில் குற்றம் நிகழாமல் தடுத்தல்
    8. செய்த குற்றத்திற்குக் கூலி வழங்கல்

    இவ்வாறான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. அதன் மூலம் குற்றம் நிகழாத சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கின்றது.

- இஸ்லாமிய தண்டனைகள் மிலேச்சத்தனமானவை, மிருகத்தனமானவை, மனித உரிமைகளில் தலையிடுபவை, கொடூரமானவை என்றவாறான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. உண்மையில் இஸ்லாமிய குற்றவியல், தண்டனைச் சட்டங்கள்

தவறாகப் புரியப்பட்டமையால் எழுந்த விமர்சனங்களே இவை.

- இஸ்லாமிய தண்டனைகளுக்கான நியாயங்கள்

1. இஸ்லாம் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்ட இவ்வுலகத்தையும் மறுமையையும் தொடர்புபடுத்தியுள்ள பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். அதன் சட்ட யாப்புக்கள் அனைத்தும் ஈருலகத்தையும் தொடர்புபடுத்தியவை. எனவே இவ்விரண்டையும் தொடர்புபடுத்தி ஆராய்கின்றவர்களுக்கே அதனை விமர்சிக்கலாம். வெறுமனே உலகத்தை இலக்காக வைத்துக் கொண்டு சிந்திப்பவனுக்கு இதன் அர்த்தமே புரியாமல் போகும்.

2. இஸ்லாம் என்ன நோக்கங்களை இலக்காகக் கொண்டு தண்டனைகளை அமுல்படுத்து கின்றதோ அந்த நோக்கங்களை அடையக்கூடியதாக இருப்பதனால் அது நியாயமான தாகும். இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட நபி (ஸல்) அவர்களதும், குலபாஉர் ராஷிதூன்களதும் காலங்களிலும் இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படும் நாடுகளிலும் இதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

3. குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கியதன் பின்னரே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. அதன் நம்பிக்கைக் கோட்பாடுகள், சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீக, ஒழுக்கப் போதனைகள் குற்றம் நிகழாத சூழ்நிலைகளை ஏற்படுத்த வழியமைக்கின்றன. இதற்கு உதாரணம்: திருமணம், பலதாரமணம் என்பன விபசாரத்தைத் தடுக்கும். இஸ்லாமிய உடை ஆண்-பெண் தொடர்பு சம்பந்தமான ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படும்போது அங்கே தகாத தொடர்புகள், நடத்தைகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஸகாத், வாரிசுரிமை, மரண சாசனம், ஸதகா, ஸகாதுல் பித்ர் அமுலாகும் இடத்தில் களவு இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. இஸ்லாம் இவ்வாறானதொரு சூழலிலேயே தண்டனைகளை அமுல்படுத்த முனைவதால் அது நியாயமானதாகவுள்ளது.

4. குற்றம், தண்டனை பற்றி முன்கூட்டியே தெளிவை இஸ்லாம் வழங்கியுள்ளது. மிகத் தெளிவான முறையில் 'ஜராஇமுல் ஹுதூத்', 'ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா' பற்றி குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விளக்கப்பட்டுள்ளதால் இஸ்லாத்தை ஏற்ற ஒரு முஸ்லிம் இவற்றை ஏற்று நடப்பது இலகுவாகின்றது. ஸஹாபாக்கள் இதற்கு உடன்பட்டார்கள் என்பதை ஸஹாபியான 'மாஇஸ்' என்பவரின் வரலாற்றுச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது

5. மறுமையில் வழங்கும் தண்டனைகளை வலியுறுத்துவதன் ஊடாக உளப் பக்குவத்தை இஸ்லாம் வழங்குகின்றது. இவ்வாறான உளப்பக்குவம் உள்ளவர்களிடம் குற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பிருக்காது. மறுமையின் தண்டனையுடன் ஒப்பிடும்போது உலகியல் தண்டனை அற்பமானதே என்ற உளப் பக்குவமுள்ளவர்களாக நபித் தோழர்கள் இருந்ததனால்தான் அவர்களிடமிருந்து குற்றங்கள் நிகழ்வது அரிதாகவிருந்தது.

6. தண்டனைகளை வழங்குவதற்கு இஸ்லாம் நிபந்தனைகள் விதித்துள்ளது. குற்றங்கள் சாட்சிகளுடன் நிறுவப்படல் வேண்டும் அல்லது குற்றவாளி தானாகக் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். குற்றம் இழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடாது. அறிவு, சுதந்திரம் உள்ள நிலையில் குற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். குற்றமிழைக்கும் மனநிலையில் குற்றத்தைச் செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு விதிக்கப்படும்

தண்டனை ஆதாரபூர்வமானதாகவும் தர்க்க வாதத்துக்கும் மதிநுட்பமிக்க பகுத்தறிவுக்கும் பொருத்தமாகவும் இருக்குமேயன்றி அது எவ்விதமான குற்றவியல் கொள்கைகளையும் தழுவியதாகவோ அல்லது ஒரு தேசத்தின் அல்லது தனிநபரின் விருப்பு வெறுப்புகளால் பாதிக்கப்பட்டதாகவோ இருக்க மாட்டாது.

7. குற்றம் நிகழ்ந்த சூழலைக் கருத்திற் கொண்டு இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படுவதால் அது நியாயமானதாகவுள்ளது. களவெடுத்தவனின் கையைத் துண்டிக்க வேண்டுமென்பது இஸ்லாமியத் தண்டனையாயினும் திருடனுக்குத் திருட்டைச் செய்யத் தூண்டியது அவனுடைய பசியாகவிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுமாயின் அவனுக்கு அத்தண்டனை அளிக்கப்படுவதில்லை. உமர் (ரழி) அவர்கள் பசியின் காரணமாக மக்கள் திருடக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் பஞ்ச காலம் ஒன்றில் திருட்டுக்குரிய தண்டனையை நிறைவேற்றாது விட்டார்கள். இது இஸ்லாமியத் தண்டனை என்ன இலக்கை அடிப்படையாக வைத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

8. இஸ்லாம் கண்மூடித்தனமாகத் தண்டனைகளை அமுல்படுத்த இடமளிப்பதில்லை. ''சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகளை நிறைவேற்றுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்'' இதனை உமர் (ரழி) காலத்தில் இடம்பெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. ஹாதிப் இப்னு அபீ பால்தஆவிடம் பணிபுரிந்த சில பையன்கள் முஸ்னா குலத்தைச் சேர்ந்த ஒருவரின் பெண் ஒட்டகை ஒன்றைத் திருடி விட்டதாக உமர் (ரழி) அவர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. உமர் (ரழி) இதனை விசாரித்தபோது அப்பையன்கள் தாம் திருடியதாக ஒப்புக் கொண்டமையால் அவர்களின் கைகளைத் துண்டிக்குமாறு தீர்ப்பளித்தார். மறுகணம் சற்று சிந்தித்து விட்டு ''இறைவன் மீது ஆணையாக இப்பையன்களை நீர் வேலைக்கமர்த்தி அவர்களைப் பட்டினி போட்டதையும் அதன் காரணமாக அவர்கள் அவ்விலக்கப்பட்ட உணவைப் புசிக்க நீர் காரணமாயிருந்ததையும் நான் அறிந்திருக்காவிட்டால் நிச்சயமாக நான் அவர்களின் கைகளைத் துண்டித்திருப்பேன்'' எனக் கூறி அப்பையன்களின் எஜமானை விளித்து ''இறைவன் மீது ஆணையாக நான் அவர்களுடைய கையைத் துண்டிக்காமல் விட்டமைக்காக உம்மைத் துன்புறுத்தக் கூடிய ஒரு தண்டத்தை விதிக்கப் போகிறேன்'' என்று கூறி அந்த ஒட்டகையின் விலையைப் போல் இரு மடங்கைத் தண்டமாகச் செலுத்தும்படி அப்பையன்களின் எஜமானனுக்கு உத்தரவிட்டார்.''
ஒருவனுக்கு குற்றச் செயலைச் செய்யத் தூண்டும் ஒரு சந்தர்ப்பமிருப்பின் அவனுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை என்பதை இச்சம்பவம் உறுதிப்படுத்துகின்றது.

9. குறிப்பிட்ட குற்றச் செயல்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் தண்டிக்கப்படுபவனின் குடும்ப நலனில் இஸ்லாம் காட்டும் அக்கறை, இஸ்லாமியத் தண்டனை கொடூரமானவை அல்ல என்பதை நிரூபிக்கின்றது. தண்டிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் பொது நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகின்றது.

10. தனிநபர் சுதந்திரம் எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இஸ்லாமியத் தண்டனை உதவுவதால் அது நியாயமானதாகவுள்ளது. ஏனெனில், குற்றமிழைப்பவர்களின் கையோங்கி, அவர்கள் கட்டுப்பாடின்றி வெறுமனே விடப்படுவது சமூக நாசத்திற்குக் காரணமாகின்றது.

11. நபி (ஸல்) அவர்களது காலத்திலும், குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் தண்டனைகள் மிகக் குறைவாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு அடிப்படைக்


www.nie.lk info@nie.lk

காரணங்கள் பல இருக்கின்றன. ஒன்று இஸ்லாமியத் தண்டனைகள் குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கூடிய சூழலைக் கொண்டு வந்தமை. இரண்டு மக்கள் குற்றங்களி லிருந்து விடுபவதற்கான சமூகச் சூழல் உருவாகியமை.

12.இஸ்லாமிய வரலாற்றில் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட விதம் தண்டனைகள் கொடூரமானவையல்ல என்பதையும், தண்டனை வழங்குவதுதான் இஸ்லாம் மார்க்கத்தின் நோக்கமல்ல என்பதும் உறுதியாகின்றது. விபசாரம் செய்த ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு தண்டனை வழங்குமாறு வேண்டினாள். குழந்தையைப் பெற்றதன் பின்னர் வா என நபி (ஸல்) அவர்கள் அவளைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள். குழந்தை கிடைத்ததும் அப்பெண் மீண்டும் வந்தாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் குழந்தை தாய்ப்பாலை மறந்ததன் பின்னர் வா என அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடங்கள் கழிந்து வந்ததன் பின்னரே அப்பெண்ணுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

இஸ்லாத்தையும், அதனது தண்டனை முறைகளையும் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் அது பற்றித் திறந்த மனதுடன் நியாயமாகச் சிந்திப்பதனூடாக ஒரு ஆரோக்கியமான முடிவுக்கு வரலாம் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட நியாயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**

1. முகம்மத் குத்ப், ஐயமும் தெளிவும் (1978), இஸ்லாமிக் பப்ளிகேஷன் சென்டர், கொழும்பு.
2. முகம்மத் அக்ரம், நடைமுறைக்கேற்ற இஸ்லாம் (2003), முஸல்மான் பதிப்பகம், பஸ்யால.
3. ஹமூதா அத்தி, இஸ்லாம் உங்கள் பார்வைக்கு (1985), IIFSO வெளியீடு

**தேர்ச்சி 10: இஸ்லாத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றிய வரலாற்றையும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பங்களிப்பு பற்றிய அறிவையும் பெற்று சிறந்த முஸ்லிமாகவும், குடிமகனாகவும் வாழ்வார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1: இஸ்லாத்தின் தோற்றம் முதல் அல்-கிலாபதுர் ராஷிதா முடியும் வரையிலான சமய, சமூக அரசியல் நிலைகளை விளங்கிக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல்பேறுகள்**

- இஸ்லாத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விரிவாக விளக்குவார்.
- ஜாஹிலிய்யாக் கால சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை எடுத்துக்காட்டுவார்.
- நுபுவ்வத்திற்கு பின்னர் மக்காவிலும் மதீனாவிலும் இடம்பெற்ற சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை விளக்குவார்.
- அல் குலபாஉர் ராஷிதூன்களின் காலப்பகுதியில் காணப்பட்ட சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை விபரிப்பார்.
- ஒவ்வொரு காலப்பிரிவிலும் இடம்பெற்ற சமய சமூக அரசியல் பொருளாதார நிலைகளை ஒப்பிட்டு விளக்குவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் என்பது, நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை அறிமுகப்படுத்துவதற்கு முன்புள்ள காலப் பகுதியாகும். இதனை சுமார் ஒன்று அல்லது ஒன்றரை நூற்றாண்டுகள் என வரையறுப்பர். இக்காலப்பகுதி இஸ்லாமிய வரலாற்றில் ஜாஹிலிய்யாக் காலம் என வழங்கப்படுகின்றது.

- ஜாஹிலிய்யா என்ற சொல்லுக்கு அறியாமை எனப்பொருள் கூறுவர். 'இல்ம்' என்ற அறபுப் பதத்தின் எதிர்ப்பதமான ஜஹ்ல் என்ற சொல்லிலிருந்தே ஜாஹில் (அறிவில்லாதவன்) ஜாஹிலிய்யா (அறியாமை) என்ற சொற்கள் பிறந்துள்ளன. மட்டுமன்றி சமய, சமூக, ஒழுக்கத்துறைகளில் அக்காலத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. மற்றொரு வகையில், ஜாஹிலிய்யா என்ற சொல் இஸ்லாத்துக்கு எதிரானது என்ற கருத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

- அல் குர்ஆனில் ஜஹ்ல் எனும் சொல்லின் அடியாகப் பிறந்த பல சொற்கள் காணப்படுகின்றன. (உ-ம் : 3:154, 5:50, 33:33, 48:26) அபூ தர்தா (ரழி) அவர்கள், பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து கறுப்பியின் மகனே என்று சொன்ன போது, 'உம்மிடம் ஜாஹிலிய்யத் உணர்வு இன்னும் நீங்கவில்லை என நபி (ஸல்) அவர்கள் கடிந்து கொண்டார்கள். ஜ.்.பர் (ரழி) அவர்கள் நஜ்ஜாஷி மன்னனிடம் உரையாற்றிய போது 'நாங்கள் ஜாஹிலிய்யத்தில் இருந்தோம்' என்று கூறிய விளக்கமும், இஸ்லாத்துக்கு எதிரான பண்பு ஜாஹிலிய்யத் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

- இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறபிகளின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு முறைகளும், சமூக நடைமுறைகளும் அவர்கள், ஜாஹிலிய்யத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைகின்றன.

- பொதுவாக எல்லாச் சமயங்களிலும் இறைவன் பற்றிய கோட்பாடு முதலிடத்தை வகிக்கின்றது. அதேபோல ஜாஹிலிய்யாக் கால மக்கள் அல்லாஹ்வை அரைகுறையாக நம்பினார்கள். '(நபியே) அவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் அவர்களிடம் கேட்டால் அல்லாஹ்தான் என்று அவர்கள் நிச்சயமாக பதில் சொல்வார்கள். (அஸ்ஸுக்ருப்: 87) என்று அல்லாஹ்வே குறிப்பிடுகின்றான். ஆனால், அவர்கள் முஸ்லிம்கள் நம்புவது போல் அல்லாஹ்வை நம்பவில்லை.

- அவர்களுக்கு மத்தியில் அல்லாஹ் பற்றிய கோட்பாடு இருந்து வந்தது என்பதற்குப் பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. ஜாஹிலிய்யாக் கால கவிதைகளும் அதனை நிரூபிக்கின்றன. கவிஞர் ஸுஹைரின் ஒரு கவிதையில் 'உங்கள் உள்ளத்திலுள்ள இரகசியங்களை அல்லாஹ்வுக்கு மறைக்க வேண்டாம். நீங்கள் மறைக்க விரும்பும் அவற்றை அல்லாஹ் ஏற்கனவே அறிந்துள்ளான்' எனக் குறிப்பிடப்படுகின்றது.

- மக்கள் சிலைவணக்கத்தில் ஈடுபடுவதை இஸ்லாம் கண்டித்த போது, முன்வைத்த அவர்களின் பதில்களில் கூட 'அல்லாஹ் அல்லாதவர்களை (த் தங்களுக்கு) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள். அத்தெய்வங்கள் எங்களை அல்லஹ்வுக்கு மிக்க சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவன்றி, நாம் அவைகளை வணங்கவில்லை (அஸ்ஸுமர்: 03) என்று அல்லாஹ்வை சிலைகளுடன் இணைத்துக் கூறியுள்ளதை அவதானிக்கலாம். அவர்களிடம் காணப்பட்ட 'பிஸ்மிகல்லாஹும்ம' என்ற சொற் பிரயோகமும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை அவர்களிடம் இருந்ததை காண்பிக்கின்றது.

- அவர்கள் அல்லாஹ்வை அறிந்திருந்தாலும் அவனைப் பற்றி உரியவாறு நம்பவில்லை என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. இதற்கு, அவர்கள் முன்னைய வேதங்களிலிருந்து திரிபுபட்ட கருத்துக்களையே தெரிந்திருந்தார்கள். அல்லது நீண்ட காலமாக அவர்களுக்கு ரிஸாலத் கிடைக்காமை காரணமாக இருக்கலாம். எனவேதான், சிலை வணக்கத்துடன் தொடர்புறுத்தி அல்லாஹ்வை நம்பியுள்ளதைக் காண்கிறோம்.

- தவ்ஹீதின் மையமாக அமைந்த க.்.பதுல்லாஹ் மக்கா நகரில் இருந்த போதும் அங்குள்ள மக்கள் சிலை வணக்கத்தையே அனுட்டித்து வந்தனர். ஷாமுக்கு வியாபாரத்துக்குச் சென்ற குறைஷித் தலைவர் ஒருவர் - அம்ர் இப்னு லுஹை அங்கிருந்த சிலை வணக்கத்தை மக்காவில் அறிமுகப்படுத்தினான். அவன் கொண்டு வந்த சிலை (ஹுபல்) க.்.பாவுக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து வேறுபலரும் அங்கு சிலைகளைக் கொண்டு வந்து நிறுத்தினர். இதனால் முன்னூற்றுக்கு மேற்பட்ட சிலைகள் காணப்பட்டன. பின்னர் தினமும் ஒவ்வொரு சிலையை வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. ஒவ்வொரு கோத்திரமும் தமக்கென தனியான சிலைகளைக் குலதெய்வங்களாக வைத்திருந்தனர். வணக்க வழிபாடுகளுக்குப் பூசாரிகளாக காஹின் எனப்பட்டோர் பணியாற்றினர்.

- அம்பெய்து குறிபார்ப்பதன் மூலம் சிலைகளிடம் அனுமதி கோரினர். மணமுடிக்க,

பயணம் செய்ய, போராட வென எல்லா விவகாரங்களுக்கும் சிலைகளிடம் அனுமதி கோரும் வழக்கமிருந்தது. தமது விருப்பத்துக்கு மாறாக தீர்வு அமைந்தால் சிலைகளைத் தூஷிக்கும் வழக்கமும் இருந்தது. ஒவ்வொரு சிலைக்கும் தனித்தனி கோயில்களையும் அமைந்திருந்தனர். லாத்தை ஸகீப்கள் பூசித்தனர். தாயிபில் அதற்கான கோயில் இருந்தது. உஸ்ஸாவை குறைஷியரும் வேறு பலரும் பூசித்தனர். அதற்கான கோயில் நக்லாவில் இருந்தது. மனாத்தை குழாஆக்கள் பூசித்தனர். அதற்கான கோயில் குதைத் எனுமிடத்திலிருந்தது. இவை தவிர, வத், ஸுவா, யகூஸ், யஊக், நஸ்ர் எனும் சிலைகளும் பூசிக்கப்பட்டன. அவை இறைவனிடம் பரிந்து பேசுவதாக நம்பி வந்தனர். மனித உருவில் வடிக்கப்பட்ட சிலைகளை அஸ்னாம் என்றும், ஏனையவற்றை அவ்தான் என்றும் வழங்கினர்.

- சிலைகளுக்குப் பலியிடும் வழக்கமும் இருந்தது. பலியிடப்பட்ட பிராணிகளின் இரத்தத்தைத் தோய்த்து வந்தனர். தவிர, சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களையும் வணங்கினர். சிலைகளதும், கிரகங்களதும் பெயர்களைத் தமது பிள்ளைகளுக்கு சூடினர். (உ-ம் : அப்துல் உஸ்ஸா, அப்துஷ் ஷம்ஸ்) மரங்களும் பூசிக்கப்பட்டன. அதே நேரத்தில் அல்லாஹ்வையும் நம்பினர். எனவே, அவர்கள் ஷிர்க்கில் ஆழ்ந்திருந்தனர் எனலாம். எனினும் ஆண்டு தோறும் மக்காவுக்கான யாத்திரை இடம்பெற்று வந்தது.

- அதேவேளை, ஜாஹிலிய்யத்திலிருந்து விடுபட்ட ஒரு பகுதியாரும் வாழ்ந்தனர். அவர்கள் இப்றாஹிம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக கூறிக் கொண்டனர். ஹுனபா என அழைக்கப்பட்டனர். சிலை வணக்கத்தில் ஈடுபடல், பலியிடப்பட்ட பிராணிகளின் மாமிசத்தை உண்ணல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் போன்றவற்றிலிருந்து விலகியிருந்தனர். அவற்றுக் கெதிராக குரல் எழுப்பினர். குஸ் பின் ஸாஇதா, உபைதுல்லா பின் ஜஹ்ஷ், ஸைத் இப்னு அம்ர், உஸ்மான் பின் அபூகுவைரித் முதலானோர் அவர்களில் குறிப்பிடத்தக்கோராவார். தாங்கள் எந்த மார்க்கத்திலுமில்லை எனக் கூறி உண்மையான மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருந்தனர்.

- பலஸ்தீனிலிருந்த யஹுதிய ஆட்சியை உரோமப் பேரரசு வெற்றி கொண்ட போது (கி.பி. 44) அங்கு வாழ்ந்த யூதர்கள், அறபு நாட்டில் கைபர், பிதக், யஸ்ரிப் முதலிய பிரதேசங்களில் குடியேறினர். அவர்களுள் கைனுகா, நுழைர், குறைழா எனும் கோத்திரங்கள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இதன் மூலம் அறபு நாட்டில் யூத மதம் அறிமுகமாகியது,

- வட ஆபிரிக்காவைக் கைப்பற்றிய உரோமப் பேரரசு அபீசீனியாவுக்கூடாக தென்னரேபியாவுக்குள் நுழைந்ததால் அங்கு கிறஸ்தவம் வேரூன்றியது. ஷாம் தேசத்தை அண்டிய அறபுப் பிரதேசம் பைசாந்தியரின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் அங்கும் கிறிஸ்தவ சமயம் காணப்பட்டது.

- அறபு நாட்டின் எல்லைப் பகுதியில் பாரசீகத்தில் நிலவிய மஜூஸியமும், தென்னறேபியாவில் ஸாபியூன்களும் காணப்பட்டனர். இவர்கள் பற்றி அல்குர்ஆன் (22:17) குறிப்பிடுகின்றது. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களிலும் யூத, கிறிஸ்தவ, மஜூஸிய சமயங்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

**சமூகக் கட்டமைப்பும் அதன் ஒழுங்குகளும்**

- இஸ்லாத்துக்கு முற்பட்ட அறபு நாட்டில், பெரும்பாலும் கோத்திரங்களை மையப்படுத்தியே சமூகக் கட்டமைப்பு அமைந்திருந்தது. இதற்கு அறபு நாட்டின் புவியியல் நிலை காரணமாக இருந்திருக்கலாம். அங்கிருந்த அரிதான வளங்களைப் போட்டிபோட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. போட்டியில் வெற்றி பெறுவதற்கும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் அவர்களுக்கு ஆள்பலம் தேவைப்பட்டது. அப்பலத்தை ஈட்டிக் கொள்வதற்காகக் கோத்திர அமைப்பிலான ஒரு சமூகக் கட்டமைப்பை அவர்கள் உருவாக்கியிருந்தனர்.

- தனிநபர் இணைந்து குடும்பமாகவும், குடும்பங்கள் இணைந்து ஷுஊப்களாகவும், ஷுஊப் (கிளை)கள் இணைந்து கபாஇல் (கோத்திரம்)களாகவும் விரிவுபடுத்தித் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர். உதாரணமாக குறைஷ் என்ற கபீலா, ஹாஷிம், உமையா, ஸுஹ்ரா, அஸத், அதீ, தைம் முதலான ஷுஊப்களைக் கொண்டிருந்தது. இந்த அமைப்பு, காலப் போக்கில் அஸபிய்யா என்ற கோத்திர உணர்வாகவும், வெறியாகவும் வளர்ந்து வந்தது. இதனைத் தவிர்ப்பதற்காக, ''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன். (ஹுஜுராத்: 13) என்று அல்குர்ஆன் அறிவுறுத்தியது.

- அஸபிய்யா என்பது எல்லா நிலையிலும் நிபந்தனையின்றிக் கோத்திரத்துக்கு விசுவாசமாக இருந்ததைக் குறிக்கின்றது. இது, இரத்த உறவை நேரடியாகப் பாதுகாத்தல், அல்லது தனிமனிதன் கோத்திரத்தையும், கோத்திரம் தனி மனிதனையும் பாதுகாத்தல் என்ற நோக்கில் தோன்றியது எனலாம்.

- ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு தலைவர் இருப்பார். அவர் செய்கு அல்லது செய்யித் எனப்பட்டார். அவர் அறிவும் அனுபவமும், வல்லமையும் வீரமும், நன்னடத்தையும் செல்வாக்கும் உடையவரிலிருந்து தெரிவு செய்யப்படுவார். அவர் 'மலஉ' என்ற மன்றத்தில் கலந்துரையாடித் தீர்மானங்களை மேற்கொள்வார். கோத்திரத்தின் செல்வங்கள், மேய்ச்சல்தரை போன்றவற்றைப் பாதுகாத்தல், முகாம்களை அமைத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், இழப்பீடுகளைப் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொண்டார்.

- சுய பாதுகாப்புக்காக உருவான கோத்திர அமைப்பு அவர்களிடம் அஸபிய்யா என்ற உணர்வை ஏற்படுத்தி போரூக்கத்தை வளர்த்தது. இதனால், ஜாஹிலிய்யா சமூகத்தில் போர் முக்கிய இடத்தைப் பெற்றது. 50 ஆண்டுகள் 132 போர்கள் இடம் பெற்றதாகக் கிடைக்கும் தகவல், அவர்கள் அற்ப விடயங்களுக்காகவும் போரிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒட்டகமொன்று காயப்பட்டதற்காக பக்ர்- தக்லப் கோத்திரங்கள் பஸுஸ் யுத்தத்தை நடத்தினர். இது 40 ஆண்டுகாலம் நீடித்தது. அபஸ் - துப்யான் கோத்திரங்களுக்கிடையிலும், கினானா -கைஸ் கோத்திரங்களுக்கிடையிலும் இவ்வாறான யுத்தங்கள் தொடர்ந்து நடந்திருக்கின்றன.

- பொதுவாக, மது அருந்துதல், களவெடுத்தல், கொள்ளையிடுதல், சூதாடல், விபசாரம் செய்தல், வட்டி வாங்குதல் போன்றன குற்றங்களாகக் கருதப்படாமல் இயல்பாகவே இடம் பெற்று வந்தன. அதே நேரத்தில் எளிமை, வாக்குமீறாமை, விருந்தோம்பல், சுதந்திர வேட்கை, வீரம் போன்ற நற்பண்புகளும் காணப்பட்டன.

- குடும்ப அமைப்பைப் பொறுத்தவரை, ஒழுங்கான திருமணமுறை ஒன்று காணப்படவில்லை. பல்வேறு மணமுறைகள் காணப்பட்டன. மேன்மக்கள் பின்பற்றிய ஒப்பந்தமுறையிலான திருமணம் (நிகாஹ் அஸ் ஸாலிஹ்) தவிர்ந்த, ஏனைய அனைத்தும் ஜாஹிலிய்ய தன்மையுடன் காணப்பட்டன. நல்ல சந்ததியைப் பெறுவதற்காகவும், ஆண்பிள்ளைகளைப் பெறுவதற்காகவும் தமது மனைவியரைப் பிற ஆண்களிடம் அனுப்புதல், ஒரு பெண் பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளல், தனது விருப்புக் கேற்ப தந்தையைப் பிரகடனப்படுத்தல், பிள்ளையின் சாயலுக்குரியவரைத் தந்தையாகப் பிரகடனப்படுத்தல், மூத்த சகோதரனின் மனைவியை இளைய சகோதரர்களும் அனுபவித்தல், மனைவிமாரை மாற்றி அனுபவித்தல் தந்தையர் தமது பெண்பிள்ளைகளை மாற்றிக் கொண்டு மணம்புரிதல், கோத்திர ஆணின் அழைப்பைப் புறக்கணிக்க முடியாமல் தொடர்பு கொள்ளல், தந்தையின் மறுதாரத்தைத் தந்தைகக்குப் பின் மகன் மணமுடித்தல் போன்ற அருவருக்கத்தக்க மணமுறைகள் காணப்பட்டன.

- ஆண்கள், உயர்வாகக் கணிக்கப்பட்டனர். ஆண் குழந்தை பிறந்தால் மகிழ்ந்து விழா எடுப்பர். பெண் குழந்தை பிறந்தால் உயிருடன் புதைக்கும் வழக்கமும் சில கோத்திரங்களில் காணப்பட்டது. எனினும் வேறு சில கோத்திரங்களில் பெண்களை கௌரவமாக நடத்தும் பண்பும் காணப்பட்டது. மலக்குகள் அல்லாஹ்வின் பெண்மக்கள் என்ற அவர்களின் ஊகமும் சிலைகளை பெண்களின் வடிவில் அமைத்தலும் பெண்கள் மதிக்கப்பட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

- நகர்ப்புற அறபிகளுக்கும், நாட்டுப்புற அறபிகளுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. நாட்டுப்புற அறபிகள் நாடோடிகளாக வாழ்ந்தனர். அவர்கள் 'பதவி'கள் எனப்பட்டனர். கூடாரங்களில் வாழ்ந்தனர். மந்தை மேய்த்தும், வேட்டையாடியும், கரவான்களைக் கொள்ளையடித்தும் வாழ்ந்தனர். அங்கு அடிமைச் சமூகமொன்றும் வாழ்ந்தது. போர்களில் கைதிகளாகப் பிடிபட்டோர் அடிமைகளாகக் கணிக்கப்படுவர். பணங்கொடுத்து அடிமைகளை வாங்கும் வழக்கமும் இருந்தது. பெரும்பாலும் உரிமை இழந்த நிலையிலேயே அடிமைகள் வாழ்ந்தனர்.

- அறபுநாடு பாலைவனமாக இருந்தமையால் அங்கு நிரந்தர ஆட்சியோ நிருவாக ஒழுங்குகளோ காணப்படவில்லை. பொரும்பாலானோர் தமது அன்றாட வாழ்வுக்காக மந்தை மேய்த்தும் வேட்டையாடியும் வாழ்ந்தமையால் அவர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாக குடியிருக்கவில்லை. தமது மந்தைகளையும் கூடாரங்களையும், பிள்ளைகளையும் சுமந்து கொண்டு நாடோடிகளாக திரிந்தனர்.

- இப்றாஹீம் (அலை), அவர் மனைவி ஹாஜர், மகன் இஸ்மாயில் ஆகியோரைக் குடியிருத்தியமையாலும், ஸம்ஸம் நீரூற்று அமையப் பெற்றதாலும், கஃபதுல்லா நிர்மாணிக்கப்பட்டதாலும் மக்கா ஒரு வணிக மையமாகவும், யாத்திரைத் தலமாகவும் உயர்வடைந்தது. இதனால் அங்கு மக்கள் நிரந்தரமாகக் குடியிருந்தனர். இவ்வாறு குடியிருந்து கஃபாவைப் பரிபாலித்தமையால் ஏனையோரால் மதிக்கப்பட்டனர்.

அவர்களும் யாத்திரிகர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து, தமது கௌரவத்தை நிரந்தரமாக்கிக் கொண்டனர். அவர்களுக்கு அறபுநாட்டில் ஏனைய பகுதிகளிலும் மதிப்பும் மரியாதையும் இருந்தன.

- இடைக்காலத்தில் மக்காவில் செல்வாக்குப் பெற்றிருந்த குழாஆ கோத்திர செய்கு, ஹுலைல் என்பவரின் மகளை குறைஷியரான குஸை இப்னு கிலாப் மணமுடித்ததால் ஹுலைலின் மரணத்துக்குப் பின்னர், குஸை தனது அறிவு, செல்வம், செல்வாக்கு, மக்களாதரவு என்பவற்றின் மூலம் க.ஃ.பாவின் பரிபாலகராக உயர்வடைந்தார்.

- இவர் பதவியேற்றதும் சிதறி வாழ்ந்த குறைஷியரை க.ஃ.பாவுக்கு அருகாமையில் குடியிருக்க வீடுகளை அமைத்துக் கொடுத்தார். தாமும் அங்கு குடியிருந்ததோடு தனது நிருவாகப் பணிகளை நிறைவேற்றுவதற்காக தாருந் நத்வா என்ற கட்டடத்தையும் நிறுவினார். மக்காவில் முக்கிய நிகழ்வுகள் யாவும் அதில் இடம்பெற்றன. யாத்திரீகர்களின் வசதிக்காக ரிபாதா (உணவு வழங்கல்) ஸிகாயா (நீர் வழங்கல்) ஹிஜாபா (க.ஃ.பாவை பரிபாலித்தல்) லிவா (போர் தொடுத்தல்) நத்வா (கலந்தாலோசித்தல்) என்ற அதிகாரங்களை வகுத்தார். அவர், கலந்தாலோசிப்பதற்காக நிறுவிய கட்டடமே தாருந்நத்வா எனப்பட்டது.

- குஸை மரணமடைய புதல்வன் அப்துத்தார் பதவியேற்றார். எனினும் அவருக்குப் பின்னர் அவர்களின் புதல்வர்களிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. அப்துத் தாரின் பேரர்களான ஹாஷிம், அப்துஷ்ஷம்ஸ், அப்துல் முத்தலிப், நவ்பல் ஆகியோர் க.ஃ. பாவின் பொறுப்பை ஏற்க விரும்பிய போது பிளவு தோன்ற ஆரம்பித்தது. ஒரு பகுதியார் ஹில்புல் முதய்யிபீன் என்றும் மறு பகுதியார் ஹில்புல் அஹ்லாப் என்றும் பிரிந்தனர். பின்னர் சமரசம் செய்யப்பட்டு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அப்துத்தாரின் வழித்தோன்றல்களுக்கு ஹிஜாபா, லிவா, நத்வா பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

- மக்களை நிருவகிப்பதற்காக மலஉ என்ற மேல்சபை இருந்தது. இதில் கோத்திர தலைவர்களும், பிரதானிகளும் உறுப்புரிமை பெற்றனர். இவர்கள் செல்வம், அறிவு, இராச தந்திரம், முர்வத் உடையவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். எனினும் இச்சபைக்கு அதிகாரங்கள் இருக்கவில்லை. ஏகோபித்த முடிவுகள் செயற்படுத்தப்பட்டன. உதாரணமாக, யாத்திரீகர்களுக்கான தற்காலிக மலசலகூடமமைத்தல், அடிமைகள் குடிநீர் சுமந்து வருதல், கோத்திரங்கள் தாம் வாழும் நகர்ப்பகுதிகளில் குப்பைத் தொட்டிகளை வைத்திருத்தல் மலையுச்சியில் நெருப்பு மூட்டி இரவில் பயணிகளுக்கு வழிகாட்டல் போன்றன இடம்பெற்றன.
- முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், அறபு நாட்டில் மக்கா நகரில் பிரபலமான குறைஷிக் குலத்தில், பனூ ஹாஷிம் கோத்திரத்தில் அப்துல்லா என்பவருக்கு மகனாகப் பிறந்தார். அவர் பிறந்த ஆண்டு யானை ஆண்டு (கி.பி.570/71) எனப்படுகின்றது. அவர் பிறக்கும் போதே தந்தையை இழந்திருந்தார். ஆறு வயதில் தாயையும் இழந்தார். அன்றைய மரபின்படி ஸஃதுக் கிளையைச் சேர்ந்த ஹலீமா அம்மையாரிடம் சில ஆண்டுகள் பாலருந்தினார். இதனால் கிராமிய சூழலில் வாழ்ந்து பழகினார். அங்கு வாழும் காலத்தில் அவரது உள்ளம் மலக்குகளால் தூய்மைப்படுத்தப்பட்டது.

அவர்கள் சிறுவயது முதல் நல்லொழுக்கத்துடனும், பண்பாட்டுடனும் நடந்து

கொண்டதால் அல் அமீன், அஸ்ஸாதிக் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். குறைஷிகளின் தலைவரான பாட்டன் அப்துல் முத்தலிபுடன் நெருங்கி வாழ்ந்தார். இதனால் இளமையிலேயே சமூகாபிமானமும், தலைமைத்துவப் பண்புகளும் அவரிடம் வளர்ச்சியடைந்தன.

- இளம் பருவத்தில் குறைஷிகள் பங்கு கொண்ட ஹர்புல் புஜ்ஜாரில் கலந்து கொண்டார். அதில் எதிரிகள் எய்யும் அம்புகளை பொறுக்கி எடுக்கும் பணி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்போரில் கலந்து கொண்டதால் அவருக்கு போரனுபவம் கிடைத்தது.

  இடைக் காலத்தில் ஹில்புல் புழூல் என்ற சமூக ஒப்பந்தமொன்றில் கலந்து கொண்டார். இதன் மூலம் சமாதான முயற்சிக்கான ஒரு முன்னனுபவம் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது.

- சிறுவயதிலேயே ஆடுமேய்த்துப் பழகிய நபி (ஸல்) அவர்கள் பின்னர் மக்காவிலும் ஆடு மேய்த்தார்கள். அபூதாலிபுடன் வியாபாரத்துக்காக ஷாம் சென்றார்கள். ஸாயிப் மக்ஸூமி என்பாருடன் சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். அவ்வேளையில் தான், அவர்களது வியாபார நேர்மை பகிரங்கமானது. கதீஜா (ரழி) அவர்கள் நேர்மையான வியாபார முகவர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்களின் நேர்மை பற்றி தெரியவந்ததும், அவர்களை அழைத்து, தமது பண்டங்களை மைஸரா என்ற பணியாளருடன் சேர்த்து ஷாமுக்கு அனுப்பிவைத்தார்கள். பயணத்தில் நபி (ஸல்) அவர்களின் நேர்மைக் குணங்களை அவதானித்த மைஸரா, அவற்றை எசமானி கதீஜா (ரழி) அவர்களிடம் முன்வைத்தார். இதைக் கேட்ட கதீஜா (ரழி) அவரை மணமுடிக்க விரும்பி தூதனுப்பினார். இரு குடும்பங்களதும் ஆசிர்வாதத்துடன் திருமணம் நிறைவேறியது.

  இது நிகழ்ந்து பத்தாண்டுகளில் மக்காவிலேற்பட்ட பெரு வெள்ளம் க.்பாவைப் புனரமைப்பதற்கான தேவையை ஏற்படுத்தியது. ஹலாலான வழியில் திரட்டப்பட்ட பொருள் மூலம் அதனைக் கட்ட வேண்டுமென குறைஷியர் தீர்மானித்தனர். கட்டி முடிக்கப்பட்ட பின்னர், ஹஜ்ருல் அஸ்வதை யார் பதிப்பது என்பதில் கருத்து வேறுபாடு தோன்றியது. அபூ உமையா மக்ஸூமி அவர்களின் கருத்துப்படி அடுத்த நாள் காலையில் யார் பள்ளிக்குள் முதல் நுழைகிறாரோ அவரின் ஆலோசனையைக் கேட்பதென முடிவெடுக்கப்பட்டது.

  எதிர்பாராத வகையில், நபி (ஸல்) அவர்களே முதலில் நுழைந்தார்கள். அவரிடம் தீர்வை எதிர்பார்தார்கள். தாம் போர்த்தியிருந்த மேலாடையை விரித்து அதில் ஹஜ்ருல் அஸ்வதை வைத்து கோத்திரத் தலைவர்கள் எல்லோரும் அதனை சுமந்து செல்ல, நபி (ஸல்) அவர்கள் உரிய இடத்தில் அதனைப் பதித்தார்கள். இந்நிகழ்வு நடக்கவிருந்த ஒரு போரைத் தவிர்த்தது.

**சமயம்**

- இந்தப் பின்னணியில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்படவிருந்த காலமும் நெருங்கியது. இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகியோர் அல்லாஹ்வின் தூதை எத்திவைத்து சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கடந்திருந்தன. நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் ''எங்கள் இறைவனே!

அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுந்திடச் செய்வாயாக - நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனாகவும், பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்.'' (பகரா: 129) என்ற பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் கால கட்டமாகவும் அது இருந்தது.

முன்னர் அருளப்பட்ட வேதக்கருத்துக்கள் திரிக்கப்பட்டு சில சடங்குகளோடு மாத்திரம் சுருங்கியிருந்தன. அவை அருளப்பட்ட மொழிகளும் வழக்கொழிந்திருந்தன. அறபு நாட்டின் வடக்கிலும் தெற்கிலுமிருந்த பிரதேசங்களுக்கு வணிகத்துக்காகச் சென்றோர் அப்பிரதேசங்களில் காணப்பட்ட திரிபுற்ற யூத, கிறிஸ்தவ அனுட்டானங்களையும் மரபு ரீதியான சடங்குகளையும் கண்டு வந்தனர். வரவிருக்கும் நபி பற்றிய முன்னறிவிப்புக்களையும் தெரிந்து வந்தனர். ஹுபல் என்ற சிலை கஃ பாவுக்கருகாமையில் நிறுத்தப்பட்டதும் சிலை வணக்கம் அறிமுகப்படுத்தப்பட்டதும் வேறுபல சடங்குகள் இடம்பெற்றதும் இவ்வகையினவே. ஒரு கோத்திரத்தை மறு கோத்திரம் பின் தொடர மறுத்து போட்டியுணர்வை ஏற்படுத்திய நிலையில் தனித்தனி சிலைகளும் சடங்குகளும் ஏற்பட்டிருந்தன. போலிக் குருமார் (காஹின்) மக்களை ஏய்த்து தமது வயிறை வளர்த்துக் கொண்டிருந்தனர். எழுத்தறிவற்ற அந்த மக்களிடம் வேதக் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் காணப்படாமையால் உண்மையான சமயத்தை இனம் காணவும் முடியாதிருந்தனர்.முன்னைய வேதங்களைப் படித்தறிந்த ஒரு சிலர் இருந்தாலும் கூட, அவர்களை வழிகாட்டியாக ஏற்கும் மனோநிலையில் சமூகம் இருக்கவில்லை. அந்த நிலையில்தான் வரகா பின் நவ்பல் போன்றோரும், ஹுனபாக்களும் காணப்பட்டனர்.

இவை மட்டுமன்றி முன்னர் அருளப்பட்ட வேதங்கள் குறிப்பிட்ட இனத்துக்கு அல்லது பிரதேசத்துக்குரிய வேதங்களாக இருந்தமையால் அவை ஏனைய பிரதேசங்களுக்கோ, மொழியினருக்கோ பொருத்தமாக இருக்கவில்லை. காடுகளாலும், ஆறுகளாலும், பாலை வனங்களாலும் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்தமையால் குறுகிய வட்டத்திலான தூது வழங்கப்பட்டு வந்தது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் அரசுகளின் தோற்றத்தாலும் வணிக விருத்தியாலும் தேசங்களுக்கிடையிலான தொடர்புகள் வளர ஆரம்பித்தன. எனவே, சர்வதேச தூதுக்கான காலகட்டமாகவும் அது காணப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மனித சமுதாயம் முழுவதற்குமான தூதராகவும், அல்குர்ஆன் மனித சமுதாயம் முழுவதற்குமான வேதநூலாகவும் எடுத்துக்காட்டப்பட்டன.

- ஒரு நபி தோன்றுவதற்கு, முன்னைய நபிமார்களின் போதனை அழிந்து போதல், முன்னைய நபிமார்களின் போதனை பூரணமடையாதிருத்தல், முன்னைய நபிமார்களின் போதனைகள் குறிப்பிட்ட சமுதாயத்துக்கு மட்டும் உரியதாக இருத்தல் என்ற மூன்று நிலைகளில் ஒன்று காணப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் பிறந்த காலகட்டத்தில் இந்த மூன்று நிலைகளுமே காணப்பட்டன. இதனை அல்குர்ஆன், பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது.

(நபியே!) நீர் கூறுவீராக ''மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை

- அவனே உயிர்ப்பிக்கின்றான். அவனே மரணம் அடையும்படியும் செய்கின்றான் - ஆகவே, அல்லாஹ்வின் மீதும், எழுதப் படிக்கத்தெரியாத நபியாகிய அவன் தூதரின் மீதும் ஈமான் கொள்ளுங்கள், அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார் - அவரையே பின்பற்றுங்கள் நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்."(அல்அ.்.ராப்: 158)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் குறிப்பிட்ட சமுதாயத்துக்கு மட்டுமே அனுப்பப்பட்டார்கள். ஆனால், நான் உலக மக்கள் அனைவருக்கும் ரஸூலாக அனுப்பப்பட்டுள்ளேன். (முஸ்லிம்)

- வஹீ அருளப்பட்ட ஆரம்ப கட்டத்தில், நபி (ஸல்) அவர்கள் மக்காவில் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளைப் பற்றியே விளக்கமளித்தார்கள். நற்குணங்களையும், பண்பாடுகளையும் வளர்த்துவிட்டார்கள். பொறுமை, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் போன்ற பண்புகளுக்கூடாக எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்த முயன்றார்கள். நபி (ஸல்) அவர்களின் 13 வருட கால மக்கா வாழ்க்கைப் பகுதியில், இரகசிய பிரசாரத்தில் ஈடுபட்டார்கள். உறவினர்கள், நண்பர்கள், நல்லுள்ளம் கொண்டவர்கள் அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். தாருல் அர்கம் எனும் அர்கம் (ரழி) அவர்களின் வீட்டில் அவர்களுக்கான அறிவும், பயிற்சியும் வழங்கப்பட்டன. பிரசாரம் தொடர்ந்து வலுப்பெற்ற போதுதான் வசை மொழிகளுக்கும் உடற் காயங்களுக்கும் உட்பட்டார்கள். எனினும் அவர் தமது பிரசாரத்தைக் கைவிடவில்லை. குறைஷிகளின் எதிர் நடவடிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. சலித்துவிடவுமில்லை. இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் இன்னலுற்ற முஸ்லிம்கள் சிலரை ஹபஷாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

  ஹபஷாவுக்குச் சென்ற குழுவுக்கு தலைமை தாங்கிய ஜ.்.பர் இப்னு அபூதாலிப் (ரழி) அவர்கள், நஜ்ஜாஷி மன்னனிடம், ''மன்னனே, நாங்கள் ஜாஹிலிய்யத்தில் சிக்கியிருந்தோம். விக்கிரகங்களை வணங்கிவந்தோம். இறந்த பிராணிகளின் மாமிசத்தைக்கூட உண்டு வந்தோம். எல்லா வகையான இழி செயல்களையும் செய்துகொண்டிருந்தோம். எங்களுடைய உறவினர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறிக் கொண்டிருந்தோம். அண்டை வீட்டாரைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தோம். எங்களிடையேயுள்ள வல்லவர்கள், எளியவர்களை அடக்கியாண்டு வந்தார்கள்.

- இறுதியாக, எங்களை நல்வழிப்படுத்த அல்லாஹ் ஒரு தூதரை அனுப்பினான். அவருடைய ஒழுக்கம், நேர்மை, உண்மை, இறைபக்தி ஆகியவற்றை நாங்கள் எல்லோரும் நன்கறிந்திருந்தோம். அவர் ஒரே இறைவனை வணங்குமாறு எங்களுக்குப் போதித்தார்கள். கற்களையும், விக்கிரகங்களையும் வணங்க வேண்டாமென்று கூறினார்கள். உண்மையே பேசுமாறும், பொறுப்புக்களை நிறைவேற்றுமாறும் உறவுகளை மதித்து நடக்குமாறும், அண்டை வீட்டாருக்கு நன்மை செய்யுமாறும் எங்களைத் தூண்டினார்கள். அநியாயங்கள் செய்வதையும், இரத்தம் சிந்துவதையும் தவிர்க்குமாறு உபதேசித்தார். பொய் சொல்லுதல், அநாதைகளின் உடமைகளை அபகரித்தல் பெண்களின் கற்பு பற்றி பொய்க் குற்றச் சாட்டுகளை முன்வைத்தல் போன்ற கேவலமான செயல்கள் எல்லாவற்றையும் அவர் தடை செய்தார். ஆதலால், அவர் மீது விசுவாசம் கொண்டோம். அவரைப்

பின்பற்றினோம். அவரின் போதனைப்படி செயலாற்றினோம்.

இவை நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சமய சமூக சீர்திருத்தங்களை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

வணங்கத்தக்க நாயகன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லுங்கள். வெற்றியடைவீர்கள் என்று மக்களுக்கு உபதேசித்தார்கள். அல்லாஹ்வின் படைப்புகளுக்கு வணக்கம் செலுத்துவதை விடுத்து அல்லாஹ்வை மாத்திரம் வணங்குமாறு மக்களுக்கு அழைப்புவிடுத்தார்கள். அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவி தேடுவதை விடுத்து அல்லாஹ்விடம் மட்டுமே உதவி தேடுமாறு வேண்டிக் கொண்டார். தமது தொழுகையில், ஸூறதுல் பாத்திஹாவை ஓதி ''உன்னையே வணங்குகின்றோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்' எனத் தினமும் பதினேழு தடவையாவது உறுதியளிப்பதற்கு வழிகாட்டினார்கள்.

- கல்லுக்கும் மண்ணுக்கும் அடிமைப்பட்டிருந்த மக்களை, தம்மையும் ஏனைய படைப்புகளையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வின் அடிமையாக வாழ்வதற்கு அழைப்பு விடுத்தார். எனவேதான், பிற்காலத்தில், பாரசீக தளபதி ருஸ்தும் உங்களது வருகையின் நோக்கம் என்ன என்று முஸ்லிம் தூதுக்குழுவிடம் விசாரித்த போது, 'மனிதன் மனிதனுக்கு வழிபடும் வாழ்விலிருந்து அல்லாஹ் ஒருவனை மாத்திரம் வணங்கி வழிபடவும், உலக நெருக்கடியிலிருந்து அவர்களை விடுவித்து மறுமை சுபீட்சத்தின் பால் இட்டுச் செல்லவும் மதங்களின் அநியாயங்களிலிருந்து எமது மக்களை விடுவித்து இஸ்லாமிய நீதியின் பக்கம் வழிப்படுத்தவும் அல்லாஹ் எங்களை இங்கு அனுப்பினான்; என்று ருபை இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

  மனோ இச்சைக்கு வழிபட்டு வாழ்ந்த மக்களை அல்லாஹ்வின் விருப்பத்துக்கு உட்பட்டு வாழும் மக்களாக மாற்றியமைத்தார்கள். அல்லாஹ் மீதான அச்சத்தை உள்ளங்களில் பதியவைத்தார்கள். எதையும் அல்லாஹ்வுக்காகவே செய்வது, அல்லாஹ்வுக்காவே செய்யாமல் விடுவது என்ற நிலைப்பாட்டில் வாழப் பயிற்றுவித்தார்கள்.

- சத்தியத்தைப் போதித்த தமக்கும் அதனை பெற்றுக் கொண்ட முஸ்லிம்களுக்கும் குறைஷியர் காட்டிய எதிர்ப்பும், எதிர்வினைகளும் நபி (ஸல்) அவர்களைப் பெரிதும் வாட்டின. ஏற்கனவே முஸ்லிம்களை ஹபஷாவுக்கு அனுப்பி வைத்தாலும் அது முழுமையான பாதுகாப்பாக அமையவில்லை. எனவே, ஸைத் இப்னு ஹாரிதா (ரழி) உடன் தாயிபுக்குச் சென்று அங்கு இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுவரை, சாதாரண பொது மக்களை அணுகி, இஸ்லாத்தை முன்வைத்த நபி (ஸல்) அவர்கள், தாயிபின் பிரதான கோத்திரங்கள் மூன்றின் ஷெய்குமார்களை அணுகி பிரசாரத்தை மேற்கொண்டார்கள். எனினும் அது தோல்வியில் முடிவுற்றது. மக்காவுக்கு மீண்ட நபி (ஸல்) அவர்கள், யாத்திரைக் காலத்தில் யஸ்ரிபுலிருந்து வந்த யாத்திரீகர்களை சந்திக்க முயற்சித்தார்கள். மூன்று கட்டங்களில் இரண்டாண்டுகள் இடம்பெற்ற சந்திப்பு நபி (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. அவர்களுடன் செய்துகொண்ட பைஅதுல் அகபா என்ற உறுதிமொழி, இஸ்லாமிய பிரசாரத்துக்கான ஒரு புதிய களத்தை ஏற்படுத்திக்கொடுத்தது.

- ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள், அங்கு முதன் முதலாக மஸ்ஜித் ஒன்றை நிர்மாணித்தார்கள். மஸ்ஜிதுந்நபவி எனப்பட்ட அது இஸ்லாத்தின் போதனா பீடமாகவும், பயிற்சிக்கூடமாகவும் அமைந்தது. ஜமாஅத் தொழுகை மூலம் மஸ்ஜிதோடு சமூகத்தைப் பிணைத்து அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தினார்கள். இ∴திகாப், த∴லீம் போன்ற இபாதத்துகளுக்கூடாகவும், குத்பாக்கள் மூலமாகவும் அறிவூட்டினார்கள். ஸுப்பாக்களில் கருத்துப்பரிமாறி அறிவைப் பெருக்கிக் கொள்ள வழிகாட்டினார்கள். அஹ்லுஸ்ஸுப்பா எனப்பட்ட தோழர்கள் மஸ்ஜிதில் தங்கி நின்று தாமும் கற்றுக் கொண்டதோடு மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். இறங்கிக் கொண்டிருக்கும் அல்குர்ஆன் வசனங்களை உடனுக்குடன் மனனமிட்டுக் கொண்டார்கள். இயலுமானவர்கள் எழுதிக் கொண்டார்கள். எழுதுவதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்த குத்தாபுல் வஹி எனப்பட்டோர்களும் அங்குதான் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகும் ஹதீஸ்களையும் மனனமிட்டுக் கொண்டார்கள். முடியுமானவர்கள் எழுதிக் கொண்டார்கள். தமக்கு மத்தியில் கலந்துரையாடிச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்களிடம் கேட்டு விளக்கம் பெற்றுக் கொண்டார்கள். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டார்கள். தினமும் கலந்து கொள்ள முடியாதவர்கள் வேறுவகையான ஒழுங்குகளைச் செய்து கொண்டார்கள். உதாரணமாக மஸ்ஜிதிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலிருந்த உமர் (ரழி) அவர்களும் அவரது அன்ஸார் தோழரும் மாறிமாறி வந்து கற்றுக் கொண்டதோடு தமக்குள் அவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- படிப்படியாக வஹி இறங்கிக் கொண்டிருந்தது. முதலில் தொழுகையும் ஹி. 2 இல் ஸகாத், நோன்பு ஆகிய கடமைகளும் ஹி 9 இல் ஹஜ்ஜும் விதியாக்கப்பட்டன. மக்களின் கேள்விகளுக்குப் பதிலாகவும், பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருந்தன. அல்குர்ஆன் கொள்கைகளை வழங்க, நபி (ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஊறிப்போன ஜாஹிலிய்யாப் பழக்கங்களைப் படிப்படியாக களைந்தெறிந்தார்கள். எனவே, ஹஜ்ஜதுல் விதா இன்றைய தினம் நாம் உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டோம். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தோம் (5:3) என்று இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டுவிட்டது என அறிவிக்கப்பட்டது. அத்தினத்தில் 124000 முஸ்லிம்கள் திரண்டிருந்தனர்.

**சமூகம்:**

- நபி (ஸல்) அவர்களின் சமூக சீர்திருத்தப் பணிகள் மதீனா வாழ்க்கைப் பகுதியிலேயே இடம் பெற ஆரம்பித்தன. மக்கா வாழ்க்கைப் பகுதியில் அதிகமான எதிர்ப்புகள் காணப்பட்டதால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களில் கொள்கை ரீதியான மாற்றங்களையும், பண்பாட்டு ரீதியான மாற்றங்களையுமே செய்ய முடிந்தது. அதாவது தனிநபர்களைச் சிறந்த மனிதர்களாகவும் முஸ்லிமாகவும் வாழ வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இக் கால கட்டத்தில் ஷிர்க்குக்குப் பதிலாக தவ்ஹீதை முன்வைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இதனால் தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது தெய்வங்களைப் புறக்கணிக்கிறார் என்றும் தமது குடும்பங்களையும் கோத்திரங்களையும் பிரிக்கிறார் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இஸ்லாத்தை ஏற்ற மக்கள், தமது குடும்பங்களோடு சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களின் வணக்க வழிபாடுகளை புறம் ஒதுக்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் பயிற்சி கொடுத்த தாருல் அர்கமில் கலந்து இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டார்கள். அதனடிப்படையில் செயல்பட்டு வந்தார்கள். குடும்பத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செல்வாக்கு மிக்கவர்களின் அனுசரணையில் வாழ்ந்தார்கள்.

இந்த ஒதுங்கிய வாழ்வுமுறையிலிருந்து சுதந்திரமாக வாழ்வதற்கான இடம் தேடியே முஸ்லிம்கள் சிலரை அபிசீனியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். அது இரண்டு கட்டங்களில் இடம்பெற்றாலும் நஜ்ஜாஷி மன்னனின் பாதுகாப்பு கிடைத்தாலும் குறைஷிகளின் வேண்டாத தலையீடுகள் இடம்பெற்றே வந்தன.

- நபி (ஸல்) அவர்கள் தாயிபுக்குச் சென்று களம் தேடியும் அது சாத்தியமாகவில்லை. எனவே, மக்காவுக்கு யாத்திரை வந்த யஸ்ரிப் வாசிகளுடன் இரகசியத் தொடர்பு கொண்டு, ஈராண்டு கால முயற்சியின் பின் யஸ்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்லும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்கள். இதனால் தான், ஒரு சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தோடு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை வரலாற்றாசிரியர்கள் முன்வைக்கிறார்கள். இஸ்லாமிய அரசின் கண்காணிப்பின் கீழ் அமையக் கூடிய சிறப்பு வாய்ந்த உன்னதமான இஸ்லாமிய சமூகமொன்றை உருவாக்குவதற்காகவே நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்க ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை கலாநிதி யூசுப் அல் கர்ழாவி குறிப்பிடுகிறார்.

  அகபா உறுதி மொழியின் வசனங்கள், நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்கு யஸ்ரிபு வாசிகளால் அளிக்கப்பட்ட உறுதிமொழியாகவும், ஒன்றுபட்ட சமூகமாக வாழ்வதற்கான உறுதியாகவும் அமைந்தன. முஹாஜிரீன்களை யஸ்ரிபுக்கு அனுப்பிவைத்த நபி (ஸல்) அவர்கள், எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுக்கு சகோதர்களைத் தந்துள்ளான்: நிலத்தையும் தந்துள்ளான், அதில் நீங்கள் அமைதியாக வாழலாம் எனக் கூறினார்கள்.

  இதனை அல் குர்ஆன், ‘நீங்கள் பூமியில் (மக்காவில்) சிறு தொகையினராகவும், பலவீனர்களாகவும் இருந்த நிலையில், உங்களை (எந்த நேரத்திலும்) மனிதர்கள் இறாஞ்சிக் கொண்டு சென்று விடுவார்கள் என்று நீங்கள் பயப்பட்டுக் கொண்டிருந்த போது அவன் உங்களுக்கு (மதீனாவில்) புகலிடம் அளித்துத் தன் உதவியைக் கொண்டு உங்களை பலப்படுத்தினான் - இன்னும் பரிசுத்தமான ஆகாரங்களையும் அவன் உங்களுக்கு அளித்தான் இவற்றை நினைவு கூர்ந்து (அவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்துவீர்காளாக!’(அல்அன்பால்: 26) என்று வேறு வார்த்தைகளில் எடுத்துக் காட்டுகின்றது. ஹிஜ்ரத் நிகழ்ந்த பின், எடுக்கப்பட்ட குடிசன கணக்கெடுப்பில் 1500 பேராக இருந்த முஸ்லிம்கள் எட்டு ஆண்டுகளில் 18,000 பேராக பெருகி ஒரு சமுதாயமாக உயர்ந்தனர். அவர்களில் அறபிகள் மட்டுமன்றி, பாரசீகர், ஷாமியர், எகிப்தியர், ஹபஷியர், உரோமர் எனப் பலரும் இருந்தனர். அச்சமுதாயத்தை சிறந்த சமுதாயம் (ஆல இம்ரான்: 110) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய காலத்தில் மக்கா வாசிகளிடம் எளிமை, வீரம், வாக்கு மீறாமை, விருந்தோம்பல் போன்ற நல்ல குணங்களும் மது வருந்துதல், விபசாரம், பழிக்குப்பழி வாங்குதல், கொள்ளையிடுதல், வட்டி, அற்ப விடயங்களுக்காகப் போராடுதல் போன்ற கூடாத செயல்களும் காணப்பட்டன. அவர்களிடம் காணப்பட்ட நல்ல குணங்களை நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்துக்குச் சாதகமாக மாற்றம் செய்தார்கள். அவர்களின் எளிமையான வாழ்வு இஸ்லாத்துக்காகத் தம்மை அர்ப்பணிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் வீரம் எதிரிகளைப் பயமுறுத்தியது. வாக்கு மீறாத பண்பு மதம் மாறாமல் பாதுகாத்தது. விருந்தோம்பும் பண்பு புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை அனுசரிக்க வழிகோலியது. போரூக்கம் சத்தியத்துக்காக போராடும் பண்பை வளர்த்தது.

அவர்களிடம் காணப்பட்ட மோசமான நடத்தைகள் படிப்படியாக உதிர்ந்து போகுமளவு இஸ்லாத்தின் போதனைகளின் படிமுறைகளும், வழிமுறைகளும் காண்பிக்கப்பட்டன. ஆரம்ப கட்டத்தில் வழங்கப்பட்ட அடிப்படைப் போதனைகள் மக்களின் உள்ளங்களைப் பண்படுத்தின. பண்பட்ட உள்ளங்கள் தவறுகளிலிருந்து விலகிக் கொண்டன. நபி (ஸல்) அவர்கள் யஸ்ரிபில் பிரவேசிக்க முன்பே முதலாவது அகபா உறுதி மொழியில், அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்க மாட்டோம், திருடமாட்டோம், விபசாரம் செய்ய மாட்டோம், பிள்ளைகளைக்கொலை செய்ய மாட்டோம், அவதூறு சொல்ல மாட்டோம், நபி (ஸல்) அவர்களுக்கு மாறு செய்ய மாட்டோம் என்று உறுதியளித்தார்கள். இதனை அல்குர்ஆன் (6:12) சுட்டிக்காட்டுகிறது. எனவே, தவறு நிகழாத சூழலை- ஒரு சுற்றாடலை நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் எதிர்பார்த்தார்கள் என்பதை உணர்கிறோம்.

இவ்வாறான சூழலிலும் தவறு செய்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. களவெடுத்தமை நிரூபிக்கப்பட்டால் கை துண்டிக்கப்படல், மது அருந்தியமை நிரூபிக்கப்பட்டால் கசையடித்தண்டனை, விபசாரம் செய்தமை நிரூபிக்கப்பட்டால் மண முடிக்காதவருக்குக் கசயைடியும், மண முடித்தவருக்கு கொலையும், அவதூறு சொன்னவனுக்கு கசையடியும் கொலைக்குப் பழிவாங்கலும் எனத் தண்டனை முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வேண்டும் என்பதால் அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது. சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தாமல் குற்றம் செய்தவர்கள் தாமாகவே முன்வந்து அதற்குரிய தண்டனைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு சிறந்த சமுதாயமாக அது இருந்தது.

- ஹிஜ்ரத்தின் பின்னர், நபி (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்களுக்கும், அன்ஸாரீன்களுக்குமிடையில் புதுமையானதொரு சகோதரத்துவ அமைப்பை உருவாக்கினார்கள். அனைத்தையும் விட்டு வந்த முஹாஜிரீன்களுக்கு ஒவ்வோர் அன்ஸாரியை சகோதரர்களாக நியமித்தார்கள். உதாரணமாக, அபூபக்ர் (ரழி) அவர்கள் காரிஜா (ரழி) அவர்களுடன் உஸ்மான் (ரழி) அவர்கள் அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்களுடன் ஜ.்.பர் (ரழி) இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுடனும் சகோதரத்துவ உறவில் பிணைக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். அவ்வாறு பிணைக்கப்பட்டவர்களுள் அன்ஸாரிகள் தமது நிலத்திலும், சொத்திலும், வீட்டிலும் பாதியை வழங்கினார்கள். விருப்பமாயின் தமது மனைவியருள் அவர் விரும்பிய ஒருவரை மணமுடித்து வைப்பதற்கும் இசைந்தார்கள். ஆனால் அதற்கு முஹாஜிர்கள் சந்தையைக் காட்டித் தருமாறும் தாம் வியாபாரம் செய்து வாழ்வதாகவும் குறிப்பிட்டார்கள். ஏனெனில் மக்கா வாசிகளுக்கு விவசாயம் செய்யும் அறிவோ,

அனுபவமோ இருக்கவில்லை. இதனை வெளிப்படுத்திய போது, ‘நாங்களே தோட்டங்களில் பயிரிடுகிறோம், வேலைகளையும் செய்கிறோம். விளைவில் பாதியை உங்களுக்குத் தருகிறோம் என்றார்கள். ஹி 4இல் பனூ நழீர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட போது அவர்களின் வளங்களை முஹாஜிர்களுக்கு வழங்குவதற்கு நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளிடம் அனுமதி கேட்டார்கள். அப்போது நாம் கொடுத்த பயிர் நிலங்களும் அவர்களிடமிருக்கட்டும் புதிதாக கிடைத்தவற்றை அவர்களுக்கே கொடுத்துவிடுங்கள் என அனுமதியளித்தார்கள்.

- மதீனாவில் விதியாக்கப்பட்ட ஜமாஅத் தொழுகையை நபி (ஸல்) அவர்கள் சமூக அமைப்புக்கான ஒரு முன்னுதாரணமாக அமைத்தார்கள். ‘அதான்; ஒலி கேட்டதும் அனைவரும் மஸ்ஜிதுக்கு வருவது சமூகம் தலைமைத்துவத்தின் குரலுக்கு செவிமடுப்பதாக அமைந்தது. தொழுகைக்காக இமாமைத் தெரிவது தலைமைத்துவத்தின் தேவையை உணர்த்தியது. இமாம் குனியும் போது குனிந்தும், நிமிரும் போது நிமிர்ந்தம் இயங்குவது தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுவதாக அமைந்தது. இமாம் பிழைவிடும் போது திருத்துவது தலைமைத்துவம் பிழைவிட்டால் திருத்த வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இமாமினால் தொழுகையைத் தொடர முடியாத போது முன்னணியில் நிற்கும் ஒருவருக்கு இடமளிப்பது, தலைமை இயலாத நிலையை அடையும் போது தகுதியான ஒருவருக்கு இடமளித்துவிட்டு விலகிச் செல்ல வழிகாட்டுகின்றது. எனவேதான், நபி (ஸல்) அவர்களுக்குப் பின் தொழுகைக்கு இமாமாக நிறுத்தப்பட்ட அபூபக்ர் (ரழி) அவர்களை முஸ்லிம் சமூகம் தமது இமாமாக, கலீபாவாக ஏற்றுக் கொண்டது.

- ஒழுக்கமான சமூக அமைப்புக்கு நியமமான குடும்ப அமைப்பொன்று காணப்பட வேண்டும். ஜாஹிலிய்யா சமூகம் கோத்திரமாக பிரிந்திருந்ததையும் அதன் விளைவையும் அவதானித்தோம். எனவேதான் அல்குர்ஆன் இதனை தெளிவுபடுத்தியது. (49:13) அன்றிருந்த விபசாரத்துடன் தொடர்புடைய விவாகமுறைகள் ஒழுங்கான குடும்பத்தை உருவாக்குவதற்குப் பொருத்தமாக அமையாது என்பதால் வழக்கிலிருந்த நிகாஹ் அஸ்ஸாலிஹ் என்ற முறையை மாத்திரம் அங்கீகரித்து ஏனைய மண முறைகள் அனைத்தையும் நிராகரித்தார்கள். புறநடையானவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய பலதார மணம் அங்கீகரிக்கப்பட்டது.
- பெண் குழந்தையை உயிருடன் புதைத்த சமூகத்துக்கு அது பற்றி எச்சரிக்கை செய்ததோடு பெண்கள் சுதந்திரமானவர்களாக உரிமையுடன் வாழ வழி காண்பிக்கப்பட்டது. அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த மணவுரிமை, மணவிலக்குரிமை, சொத்துரிமை நீதி கோரும் உரிமை போன்றவற்றை அவர்களின் இயல்புக்கேற்ப வழங்கி சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ இடமளிக்கப்பட்டது. ஹலாலான சந்ததியை உருவாக்க வழியமைக்கப்பட்டது. கணவன், மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் செலுத்த வேண்டி கடமைகளும் பெற முடிந்த உரிமைகளும் வகுத்துத் தரப்பட்டன. உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவிக்கு நல்லவர் என்பது நபி (ஸல்) அவர்களின் வாக்காகும்.
- எழுத வாசிக்கத் தெரியாதிருந்த உம்மிச் சமூகத்தை, நபி (ஸல்) அவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்த சமூகமாக மாற்றியமைத்தார்கள். சிறுவர்களுக்கு எழுத்துக் கற்பிப்பதற்காகப் பத்ருக் கைதிகளைப் பயன்படுத்தி அதனை ஆரம்பித்தார்கள் அவர்கள் முதலில் அல்குர்ஆனையும் ஹதீஸ்களையும் எழுதினார்கள். தொடர்ந்து

கடிதங்கள் எழுதவும், அரச ஆவணங்களைப் பதிவு செய்யவும் பயிற்றுவிக்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் பின்னர் சுற்றியிருந்த சிற்றரசர்களுக்கும் பேரரசர்களுக்கும் அழைப்புக் கடிதங்களை விடுவிக்கவும், நிருவாகப் பணிகளை விபரிக்கவும் ஆவணங்களை எழுதுவித்துள்ளார்கள்.

- சமூகத்தை ஒன்றிணைப்பதற்காகப் பரஸ்பரம் புரிந்துணர்வோடு வாழ்வதற்கான இலகுவான ஆறு கடமைகளைக் குறித்துக்காட்டியுள்ளார்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் ஆறு உள்ளன. அவை, ஸலாம் கூறினால் பதில் ஸலாம் கூற வேண்டும். தும்மி அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால் யர்ஹகுமுல்லாஹ் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். விருந்துக்கு அழைத்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆலோசனை கேட்டால் நல்லாலோசனை வழங்க வேண்டும். நோயுற்றால் நலம் விசாரிக்க வேண்டும். மரணித்தால் மரண சடங்கில் கலந்து கொள்ள வேண்டும். இவை எல்லோராலும் இலகுவாக நிறைவேற்ற முடிந்த கடமைகளாக இருப்பது கவனிக்கத் தக்கதாகும். இவ்வாறே சமூகத்தில் நலிவுற்ற - பிறரது உதவி தேவைப்படுகின்ற அநாதை, விதவை, அங்கவீனர், வயோதிபர், சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் அல்லாதவர் (திம்மி) பிரயாணிகள் போன்றோரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். மனிதர்களல்லாத விலங்குகள், பறவைகள் தாவரங்கள், நீர் நிலைகள் போன்றவற்றுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அந்த சமூகத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

- அவர்கள் உருவாக்கிய சமூகத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன வலியுறுத்தப்பட்டன. பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து, கறுப்பியின் மகனே என்று விளித்த போது, அது ஜாஹிலிய்யத் எனக் கூறி கண்டித்தார்கள். குருடராக வாழ்ந்த இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்களை, நபி அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேறிய சந்தர்ப்பத்தில் தனது பிரதிநிதியாக அமர்த்திச் சென்றார்கள். அடிமையாகவிருந்து விடுதலை பெற்ற பிலால் (ரழி) அவர்களை மஸ்ஜிதுந் நபவியின் முதல் முஅஸ்ஸினாக அமர்த்தினார்கள். அடிமையாக இருந்து விடுதலையான ஸைத் (ரழி) அவர்களின் மகன், உஸாமா (ரழி) அவர்களை குறைஷியர் உள்ளடக்கிய படைக்குத் தளபதியாக நியமித்தார்கள். இவை இஸ்லாத்தின் சமத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

- நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தை ஆரம்பித்த போது மிக மோசமான ஒரு சமூகத்தைக் கண்டார்கள். அவர்களது நுபுவ்வத் பணி நிறைவேறிய போது மிக உன்னதமான ஒரு சமூகத்தைக் கண்டார்கள். அது அவர்களது சாதனையாகவே அமைந்தது.

  இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட ஸஹாபா என்ற சமூகம் பின்னர், வந்த முஸ்லிம்களுக்கு ஒரு முன்னோடிச் சமூகமாக அமைந்தது. அவர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும் நடுநிலைச் சமூகமாகவும், சிறந்த சமூகமாகவும் இடம் பிடிக்கிறார்கள்.

**அரசியல்**

- மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் அங்கு ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பியதோடு, அந்தச் சமுதாயத்தை வழி நடத்தக்கூடிய ஓர் அரசாங்கத்தையும் ஏற்படுத்தினார்கள்.

- இஸ்லாத்தை முழுமைப்படுத்துவதற்காக, நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆட்சியை நிறுவும் நோக்கத்தோடு ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை ஹஸனுல் பஸரி (ரஹ்) இப்னு ஜரீர் (ரஹ்) போன்ற அறிஞர்கள் முன்வைக்கிறார்கள். ஹிஜ்ரத்தின் போது 'என் இறைவனே என்னை (மதீனாவில் நுழையவைக்க வேண்டுமென்று நீ கருதினால்) சத்தியத்தின் வழியாக என்னை நுழைய வைப்பாயாக. (மக்காவிலிருந்து வெளிப்படுத்த வேண்டுமென்று நீ கருதினால்) சத்தியத்தின் வழியாக என்னை வெளிப்படுத்தி வைப்பாயாக. உன்னிடமிருந்து எனக்குதவியாக ஓர் ஆட்சி அதிகாரத்தை தந்தருள்வாயாக என்று நீர் சொல்வீராக (17:80) என்று அருளப்பட்ட அல்குர்ஆனின் வசனம் இதற்காதாரமாகவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

- அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் தெய்வீக உரிமைக் கோட்பாடு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு என்பவற்றை விடச் சமூக உடன்படிக்கை கோட்பாடு பலமானதாகக் கொள்ளப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் உருவாக்கிய அரசு இந்த நிலைப்பாட்டைக் கொண்டமைந்தது. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் பின்னர் முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையில் ஏற்படுத்திய சகோதரத்துவ பிணைப்பு, யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை (மதீனா சாசனம்) என்பன இதனை நிரூபிக்கின்றன.

  எனவேதான், இவ்வுடன்படிக்கையின் அரசியல் முக்கியத்துவத்தைக் கருதி, மதீனா சாசனம் எனும் பெயர் வழங்கப்படுகின்றது. பிரித்தானியாவில் மன்னராட்சியை மக்களாட்சியாக மாற்றியமைத்த மகாசாசனம் பெறுகின்ற முக்கியத்துவத்தை மதீனா சாசனம் பெற்றுள்ளது. மகாசாசனம் கி.பி. 1215 இல் இடம்பெற மதீனா சாசனம் கி.பி. 622 இடம் பெற்றிருப்பது உலகில் தோன்றிய முதல் அரசியல் சாசனம் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக கலாநிதி எம்.ஹமீதுல்லாஹ் குறிப்பிடுகிறார். அதில் தனிநபர்களதும், யூத கோத்திரங்களினதும், முஸ்லிம்களதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலமே நபி (ஸல்) அவர்கள், மதீனா அரசியல் சமூகத்தின் தலைவராக ஏற்றுக் கொள்கிறார்கள்.

  இது பற்றி, கலாநிதி ராஷித் அல் கன்னூஷி பின்வருமாறு கூறுகிறார். நபி (ஸல்) அவர்கள் மக்காவில் நம்பிக்கையால் பிணைக்கப்பட்ட ஒரு சமூகத்தை நிருவகித்தார்கள். இது இஸ்லாத்தின் இலக்காக இருக்கவில்லை. இஸ்லாத்தின் இலக்குகளை அடைவதற்கு சாதகமான மதீனாவைக் கண்டார்கள். நிலத்தையும் அதன் தலைமைத்துவத்தையும் பெற்றதன் பின்னரும் கூட, மதீனாவில் இந்நம்பிக்கைக் கோட்பாடுகளை மையப்படுத்திய சமூகத்தை நிர்மாணிப்பதற்குப் பதிலாக, பூரண சுதந்திரம் மற்றும் பன்மைத்துவம் போன்ற தூண்களின் மீது மதீனாவை வடிவமைத்தார்கள். இந்தப் பின்புலத்தில் மதீனா சமூகம் சுதந்திரம், பன்மைத்துவம் என்ற அடிப்படைகளில் தோற்றம் பெற்ற ஓர் அரசியல் சமூகமாக (உம்மதுஸ்ஸியாஸிய்யா) தோன்றியது எனக் குறிப்பிடலாம்.

- முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏக காலத்தில் மார்க்கத்தையும், அரசையும் கட்டியெழுப்பினார்கள். அவையிரண்டும் அவரது வாழ்நாள் முழுதும் ஒன்றோடொன்று இணைந்தே காணப்பட்டன என்று பேராசிரியர் சீ.எ. நல்லினோ குறிப்பிடுகிறார்.

  இஸ்லாம் என்பது, மார்க்கம் மற்றும் அரசியலின் தோற்றப்பாடாகும். ஏனெனில், அதனைக் கட்டியெழுப்பியவர் ஓர் இறை தூதராகவும், ஞானமிக்க அரசியல்வாதியாகவும், நாட்டின் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள் என்று பேராசிரியர் ஸ்ரோத்கன் கூறுகிறார்.

  மதீனாவில் தான், முதலாவது அரசு உருவானது. மேலும் இஸ்லாமிய சட்டத்துக்கான அடிப்படைக் கோட்பாடுகளும் அங்குதான் உருவாக்கப்பட்டன என்று பேராசிரியர் மெக்டொனால்ட் குறிப்பிடுகிறார்.

  இவை இஸ்லாத்துக்கும் அரசியலுக்குமிடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன. தொழுகையின் இமாமத், சமூகத்தின் இமாமத்தை வழிநடத்திய நபி (ஸல்) அவர்களின் வழிமுறையைச் சட்ட அறிஞர் அஹ்மத் காதிரி என்பார் மூலம் தொழுகையின் ஜமாஅத்தை இமாமதுஸ்ஸுக்ரா என்றும் முஸ்லிம் அரச சமூகத்தை இமாமது குப்ரா என்றும் குறிப்பிடுகிறார். அல்குர்ஆன் போதனையால் நிர்மூலமாக்கப்படாத தீமைகளை அல்லாஹ் அரச அதிகாரத்தின் மூலம் இல்லாமலாக்குகிறான் என்ற உஸ்மான் (ரழி) அவர்களின் கருத்தும் இங்கு நோக்கத் தக்கதாகும்.

- ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்தும் சாதனமாக பைஅத் அமைகிறது. இதனை நவீன சர்வசன வாக்குரிமையுடன் ஒப்பிட்டு நோக்கலாம். அல்குர்ஆன், ஸுன்னா வழியிலான தெய்வீக சட்டங்கள் ஆளுவோரும் ஆளப்படுவோரும் பின்பற்றத்தக்க ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தின. சட்டத்தின் முன் இரு சாராரும் சமம் என்பதை நபி(ஸல்) அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். ‘எனது மகள் பாத்திமா களவெடுத்தாலும் அவரது கையை துண்டிக்காமல் விடமாட்டேன்; என அவர்கள் பகிரங்கப்படுத்தினார்கள்.
- அரச நிருவாக விடயங்களில் கலந்தாலோசிப்பதை அவர்கள் கட்டாயப்படுத்தினார்கள். அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் கலந்தாலோசித்துக் காரியமாற்றுமாறு அறிவுறுத்துகின்றது. எனவே தான் உமர் (ரழி) அவர்கள் மஜ்லிஸுஷ் ஷூறாவை அரசின் ஓர் அங்கமாக ஏற்படுத்தியிருந்தார்கள். ஈஜாப், கபூல் பைஅத் என்பவற்றுக்கூடாக தலைமை உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய சனநாயகம் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளிலிருந்தே பல விடயங்களைக் கண்டுள்ளது.

- நபி (ஸல்) அவர்கள் தமது நிருவாகத்தில் தகுதியானவர்களை அமர்த்தினார்கள். இராச தந்திர விவகாரங்களுக்கு உபைதா (ரழி) அவர்களும், உடன்படிக்கைகளுக்கு அலி (ரழி) அவர்களும் வெளிநாட்டு விவகாரங்களுக்கு முஆவியா (ரழி) அவர்களும் பொறுப்பாக அமர்த்தப்பட்டிருந்தார்கள். ஒரு முறை அபூதர் (ரழி) அவர்கள் நிருவாகப் பதவியொன்றைக் கேட்டு நின்ற போது, ‘நீர் பலவீனர், உமக்கு நிர்வாகப் பணிகளைப் பொறுப்பேற்க முடியாது. மறுமையில் கவலையும் துயரமும் பிரதிபலிக்கும் என அறிவுறுத்தினார்கள்.‘ தகுதியுடையவரிருக்கத் தகுதியற்றவருக்குப் பதவி வழங்குவது அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மோசடி செய்வதாகும்.; என எச்சரித்தார்கள் (அஸ்ஸியாஸதுஷ் ஷரீஆ - இப்னு தைமியா)

நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய அரசில் மதீனா தலைநகராக இருந்தது. அரச நிருவாகங்கள் யாவும் மதீனாவை மையப்படுத்தியே நடந்து வந்தன. நபி (ஸல்) அவர்கள் அங்கேயே இருந்தார்கள். ஏதாவது தேவைக்காக வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் தமது நாஇபாக (பிரதிநிதி) மற்றொருவரை அமர்த்திச் செல்வார்கள். உதாரணமாக பத்றுக் களத்துக்குச் செல்லும் போது அபூலுபாபா அன்ஸாரி (ரழி) அவர்களையும் தபூக் போருக்கு செல்லும் போது முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) அவர்களையும் ஹஜ்ஜதுல் விதாவுக்குச் சென்றபோது இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்களையும் வதானுக்குச் சென்ற போது ஸஅத் இப்னு உப்பாதா (ரழி) அவர்களையும் புவாதுக்குச் சென்ற போது ஸஅத் இப்னு முஆத் (ரழி) அவர்களையும் அமர்த்திச் சென்றார்கள். ஆனால் ஒவ்வொரு சந்ததர்ப்பத்திலும் வெவ்வேறு நபர்களை அமர்த்திச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- பிரதேசங்களில் வாலி எனப்பட்ட நிருவாகிகளை அமர்த்தியிருந்தார்கள். இவ்வாறு 32 பேர் அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் நிருவாகத்துக்கு அப்பால் சமய சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். தக்வாவுடன் நடத்தல், சத்தியத்தைப் பேணல், மக்களுக்கு நல்லாட்சி வழங்குதல், குர்ஆனைக் கற்பித்தல், தீமையைக் களைதல், கடமை உரிமைகளை எடுத்துக்காட்டல், அநியாயம் செய்வோரை தண்டித்தல், சுவர்க்கத்தின் பால் ஆசையூட்டல், நரகத்தின் மீது வெறுப்பை உண்டாக்குதல் போன்றனவும் அதில் அடங்கும்.

  பிரதேச தலைவர்கள் ருஅஸா எனப்பட்டனர். கோட்பாட்டுத் தெளிவும் நிருவாகத் திறமையுமுடையவர்களிலிருந்து அவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். வரி அறவிடும் பொறுப்பும் இவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. சந்தைகளைக் கண்காணிப்பதற்காக ஸாஹிபுஸ் ஸூக் அமர்த்தப்பட்டார். பிரதேச மக்களின் உள்விவகாரங்களைக் கவனிப்பதற்காக அவர்களிலிருந்தே நகீப் எனப்பட்ட பிரதிநிதிகளை நியமித்திருந்தார்கள். இவர்கள் ஸகீபா எனப்பட்ட நிழல் தரும் இடங்களில் அமர்ந்து கலந்தாலோசித்துத் தீர்மானங்களை எடுத்தார்கள். அரசு விரிவடைந்த போது ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதற்கு முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் யமனுக்கு அனுப்பப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- நபி (ஸல்) அவர்கள் சர்வதேச தூதராகவும், இறுதித் தூதராகவும் இருந்தமையால் தனது அரச அதிகாரத்தின் மூலம் இஸ்லாத்தைப் பல நாட்டுத் தலைவர்களுக்கும் தூதர்களை அனுப்பி அதனை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களுள் ஹபஷா, பஹ்ரைன் தலைவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். எகிப்தின் ஆட்சியாளர் இஸ்லாத்தை ஏற்காவிட்டாலும் தூதரை வரவேற்று அன்பளிப்புக்களையும் வழங்கி அனுப்பி வைத்தார். பைசாந்திய மன்னன் தூதரை வரவேற்றாலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பாரசீக மன்னன் நிரூபத்தை துண்டுதுண்டாகக் கிழித்து நபி (ஸல்) அவர்களை கைது செய்து வருமாறு தூதர்களை அனுப்பி வைத்தான். யமாமாவின் தலைவர் மதீனா அரசில் பாதியைக் கேட்டார். கஸ்ஸானிய சிற்றரசன் தூதரைக் கொலை செய்தான். உம்மான், யமன் அதிபர்கள் நிரூபத்துக் கெதிராகப் பதிலளித்தார்கள். இதனால் பிற்காலத்தில் உரோம, பாரசீக எல்லையில் போர்கள் நிகழ்ந்ததோடு இஸ்லாமும் பரவ ஆரம்பித்தது.

- நபி (ஸல்) அவர்கள் தமது அரசுக்கு வலுசேர்க்கும் வகையில் சிலருடன் சமாதான உடன்படிக்கைகளையும் செய்து கொண்டார்கள். அவற்றுள், குறைஷிகளுடன் செய்து

கொள்ளப்பட்ட ஹுதைபியா உன்படிக்கை மிகப் பிரதானமானது. அதில் நபி (ஸல்) அவர்களின் இராசதந்திரம் வெளிக்காட்டப்பட்டது. போரின் மூலம் ஒரு பிரதேசம் வெற்றி கொள்ளப்படுவதை விட, உடன்படிக்கை மூலம் இணக்கம் காண முயல்வது வலுவானது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்கள். மட்டுமன்றி வடக்கே யூதரும், தெற்கே குறைஷியரும் சமகாலத்தில் போர்தொடுக்கும் நிலை ஏற்பட்டால் இரு முனைப் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதை கருத்திற் கொண்டார். மதீனா அரசைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள். குறைஷியர் உடன்படிக்கையை மீறிய போது போராடாமலே மக்காவைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். இவ்வாறே யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் (மதீனா சாசனம்) மதீனா அரசைப் பாதுகாத்தது.

இவ்வாறான நடவடிக்கைகளால் நபி (ஸல்) அவர்களின் ஹஜ்ஜதுல் விதாவின் போது, வடக்கே ஷாம் முதல் தெற்கே யமன்வரையும் கிழக்கே இராக் முதல்மேற்கே பலஸ்தீன் வரை முஸ்லிம் அரசு விரிவடைந்திருந்தது.

- நபி (ஸல்) அவர்களின் ஆட்சியில் போர்கள் நிகழ்ந்தன. எனினும் அவை ஆக்கிரமிப்புப் போர்களாக இருக்கவில்லை. உடன்படிக்கைகள், உறுதி மொழிகள் மீறப்படும் போது உரிமைகள் பறிக்கப்படும் போதுமே போர்கள் நிகழ்ந்தன. இஸ்லாம் அவற்றை ஜிஹாத் என்றே அழைத்தது. அங்கு காவல் படை என்று ஒன்று இருக்கவில்லை. ஜிஹாதுக்கென நிர்ப்பந்தம் ஏற்படும் போது பொது அறிவித்தல் கொடுக்கப்பட்டு மக்கள் திரட்டப்பட்டனர். தம்மிடமிருக்கும் ஆயுதங்களோடு அவர்கள் ஒன்று கூடினர். தேர்ந்தெடுக்கப்படுவோர் போரில் கலந்து கொண்டனர். போர் முடிந்ததும் கலைந்து விடுவர். கனிமத்திலிருந்து அவர்களுக்குப் பங்கு கிடைக்கும். பொதுவாகத் தொண்டர் படையாகவே அது இருந்தது.

  நபி (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட தூதர் கொலை செய்யப்பட்டதற்கு எச்சரிக்கை விடுக்கும் பாங்கில் இடம்பெற்ற மு.்.தாப் போருக்குச் சென்ற படையினரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். மோசடி செய்யாதீர்கள். பதுக்காதீர்கள், குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், கோயில் குருமார்கள் முதலானோரைக் கொலை செய்யாதீர்கள். பேரீத்த மரங்களை மட்டுமல்ல எந்த மரங்களையும் வெட்டாதீர்கள். கட்டடங்களை இடிக்காதீர்கள். (புகாரி) இந்த யுத்த தர்மங்களை பின்வந்த கலீபாக்களும் வலியுறுத்தினார்கள்.

  எனவே, நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முன்மாதிரியான ஓர் ஆட்சியை நடத்தித் தம்மைத் தொடர்வோருக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

- ஸஹாபாக்களின் சிரேஷ்டமானவர்களே நபி (ஸல்) அவர்களுக்குப் பின் சமூகத்துக்கு தலைமை தாங்கினார்கள். அவர்கள் நேர்வழி நடந்த கலீபாக்கள் எனப்பட்டனர். நபி (ஸல்) அவர்கள் தமது தலைமைத்துவத்தை எந்த அடிப்படையில் நடத்தினார்களோ அதே அடிப்படையில் தொடர வேண்டியவர்களே, சமூகத்தின் தலைமைகள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அந்தத் தலைவர்கள் கலீபாக்கள் எனப்பட்டனர்.

- அவர்கள் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள். ஒவ்வொருவரும் தமது சுயநலத்தைவிட சமூக நலத்தையே முற்படுத்தினார்கள். கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் கிலாபத்துக்கு உருக்கொடுத்தார்கள். உமர் (ரழி) அவர்கள்

அதனை வடிவமைத்தார்கள். இதனால் அவர்களின் காலம் குலபாஉர் ராஷிதூன்களின் காலம் எனப்பட்டது.

- இக்காலத்தில் கலீபாக்கள் சமய, சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் பல சவால்களை எதிர்கொண்டார்கள். குடிமக்களின் முழுமையான ஒத்துழைப்போடு அவற்றை எதிர்கொண்டார்கள். தொடர்ந்து வரும் சமூகத்துக்கு வழிகாட்டினார்கள்.

- கலீபா அபூபக்ர்(ரழி) அவர்களின் காலத்தில் பொய் நபிகளின் தோற்றம், ஸகாத் கொடுக்க மறுத்தோரின் செயல்பாடுகளும், ஹாபிழ்களின் இழப்பும் சவால்களாகவே அமைந்தன. நபி (ஸல்) அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து சில கோத்திரத் தலைவர்கள், தாமும் நபியெனப் பிரகடனப்படுத்தி மக்களைத் தமது பக்கம் இழுத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வேளை, கலீபா பதினொரு படைப்பிரிவுகளை உருவாக்கி அவர்கள் மூலம் அந்தச் சவாலை முறியடித்தார்கள்.

- யமாமாவில் முஸைலமா என்ற போலி நபியுடன் தொடரப்பட்ட போரில் தொகையான ஹாபிழ்கள் ஷஹீதானார்கள். இதன் விளைவை உணர்ந்த உமர் (ரழி) அவர்கள், அல்குர்ஆன் அழிந்துவிடுமோ என்ற அச்சத்தை கலீபாவிடம் தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் தான், ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவினர் மூலம் அல்குர்ஆன் நூலுருப்படுத்தப்பட்டது.

- இதே கால கட்டத்தில் நாடோடி அறபிகளிடையே ஸகாத் கொடுக்க மறுத்த ஒரு குழுவினரும் குழப்பம் விளைவித்தனர். அவர்களுக்கெதிராக கலீபா அபூபக்ர்(ரழி) அவர்கள் கடுமையாக நடந்து கொண்டதால் ஸகாத் கொடுக்க மறுத்தோர் சரணடைந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அழைப்புக்கடிதங்கள் சுற்றுவட்டார மன்னர்களால் தவறாகப் புரியப்பட்டதால் அவர்கள் தொடர்ந்த எதிர்க்கிளர்ச்சி, அபூபக்ர் (ரழி) காலத்தில் கடுமையானது. கலீபா அவர்களையும் அடக்கினார்.

- கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் ஸகீபா பனீ ஸாஇதாவில் கூடிய முஹாஜிர் அன்ஸார்கள் உள்ளடங்கிய பிரமுகர்களால் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் நோயுற்ற போது அடுத்த கலீபாவாக, சிரேஷ்ட ஸஹாபாக்களின் ஆலோசனையோடு உமர் (ரழி) அவர்களை நியமித்தார். உமர் (ரழி) அவர்கள் விரும்பாத போதும் அவர் கலீபாவாக பைஅத் செய்யப்பட்டார்.

- உமர் (ரழி) காலத்தில் பைசாந்திய, பாரசீக வல்லரசுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. கலீபா, அவர்களை அடக்குவதற்கு எடுத்த முயற்சிகள் பல நகர்களை கிலாபத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன. ஹி.12 இல் ஹீரா, 14 இல் காதிஸிய்யா, டமஸ்கஸ், 16 இல் மதாயின், 19 இல் எகிப்து 21 இல் நிஹாவந்த், அலக் சாந்திரியா என நகர்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன. இதனால் கிலாபத்தின் எல்லை விரிவடைந்தது. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் கடற்படை அமைக்கப்பட்டதால் மத்தியதரைக் கடல் தீவுகள் சிலவும் கிலாபத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டன.

- ஆட்சி விரிவடைந்ததால் மதீனா சிற்றரசு ஆளப்பட்ட முறையில் நிருவாகத்தை நடத்துவது பொருத்தமாக இருக்கவில்லை. எனவே உமர் (ரழி) அவர்கள் ஆட்சியில்

புதிய நிருவாக அமைப்பொன்றை உருவாக்கினார்கள்.

- இதுவரை தேவையின் போது கூடிக்கலையும் நிலையிலிருந்த மஜ்லிஸுஷ்ஷூறா ஒரு நிருவாக அங்கமாக மாறியது. நிரந்தர உறுப்பினர்களையும், சமயாசமய உறுப்பினர்களையும் கொண்ட அச்சபையின் அனுசரணையோடே கிலாபத் நிருவாகம் இயங்கியது. கிலாபத் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பாக வாலி எனப்படும் கவர்னர் நியமிக்கப்பட்டார். நிதிக்குப் பொறுப்பாக ஆமிலும், இராணுவத்துக்குப் பொறுப்பாக அமீரும் நியமிக்கப்பட்டனர். ஸகாத், ஜிஸ்யா, கராஜ், கனீமத் உஷ்ர் முதலான பெயர்களில் வரி அறவிடப்பட்டது. நிதி நிருவாகம் பைதுல் மால் எனப்பட்டது. கிடைக்கும் வருமானம், அரச நிருவாக செலவினங்களுக்கும், பொது நலப் பணிகளுக்கும் செலவிடப்பட்டன. நீதிபதிகள் சுதந்திரமாக இயங்கினர். தகுதியானோர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்கப்பட்டது. நிருவாகத்தை இலகுபடுத்த தீவான் எனப்படும் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன. தீவானுல் ஜுந்த் (இராணுவம்) தீவானுல் பரீத் (தபால்) தீவானுல் ஷுர்த்தா (பொலீஸ்) என திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன.

- மக்கள் தேவைக்காக மஸ்ஜித்கள் கட்டப்பட்டன, பாதைகள் வெட்டப்பட்டன. பாலங்கள் கட்டப்பட்டன. விடுதிகள் அமைக்கப்பட்டன. நிழல் மரங்கள் நடப்பட்டன. கால்வாய்கள் வெட்டப்பட்டன. பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. ஹிஜ்ரி ஆண்டுக் கணிப்பு வழக்கில் வந்தது. நில அளவையாளர், குறைகேள் அதிகாரி, ஸாஹிபுஸ்ஸூக் முதலான தனி நபர்களும் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

- கலீபா உமர் (ரழி) காலத்தில் பாரசீக, பைசாந்திரிய பேரரசுகள் ஒடுக்கப்பட்டதால் அவை கிலாபத் மீது காழ்ப்புணர்வு கொண்டன. அவற்றின் செயல்பாடுகளாகவே கலீபா உமர், கலீபா உஸ்மான் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். கலீபா உஸ்மான் (ரழி) காலத்தில் அப்துல்லா இப்னு ஸபா என்ற முனாபிகின் துர்ப்பிரசாரத்தால் முஸ்லிம்கள் மத்தியில் பிளவு உண்டாக்கப்பட்டது. இதனால் இறுதி இரு கலீபாக்களின் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் உருவாகின. பிற்காலத்தில் ஷீஆ, ஸுன்னி, கவாரிஜ் என்ற பிரிவுகள் தோன்றுவதற்கான வித்துக்கள் ஊன்றப்பட்டன. முஸ்லிம்களுக்கு மத்தியில் ஜமல், ஸிப்பீன், நஹ்ர்வான் போர்கள் இடம்பெற்றன.
- இதனால் சமூக ஒற்றுமை குலைந்தது. சமய ஒருமைப்பாடும் குன்றியது. பாரசீக பைசாந்திய செல்வாக்குகள் உறுதி பெற ஆரம்பித்தன. எனவே 30 வருட காலத்தில் குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சி முற்றுப் பெற்றது. உமையா வம்ச ஆட்சி ஆரம்பித்தது. அவர்களைத் தொடர்ந்து அப்பாஸியர் ஆண்டனர். சிலுவைப்போர்கள், தாத்தாரியரின் படையெடுப்பு என்பன அப்பாஸிய ஆட்சியை வீழ்த்தின.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**


1. அமீன் எம்.ஐ.எம், முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் (2002), அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம.
2. அப்துல்ஹை அபூ ஸாலிம், அண்ணல் நபியின் அழகிய வரலாறு (1998), இஸ்லாமிய டிரஸ்ட் நிலையம்(IFT) சென்னை.
3. அமீன் எம்.ஐ.எம், அரேபியர் வாழ்வியல் (1999), இஸ்லாமிக் புக் ஹவுஸ்,கொழும்பு
4. நாளிர் எம்.எச்.எம். இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்சசியும் (1983) அஷ்ஷபாப் பதிப்பகம், கொழும்பு
5. ஸைபுர் ரஹ்மான் முபாரக் கபூரி, அர்ரஹீக் (1979) தாருல் ஹிதா, சென்னை.

**தேர்ச்சி 10: இஸ்லாத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றிய வரலாற்றையும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பங்களிப்பு பற்றிய அறிவையும் பெற்று சிறந்த முஸ்லிமாகவும், குடிமகனாகவும் வாழ்வார்.**

**தேர்ச்சி மட்டம் 10.2: இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியையும் முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்களையும் கண்டறிந்து விளக்கமளிப்பார்.**

**பாடவேளைகள் : 25**

**கற்றல்பேறுகள்**

- இலங்கைக்கும் அறேபியர்களுக்கும் இடையிலான தொடர்பின் பின்னணியை விபரிப்பார்.
- இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை விளக்குவார்.
- முஸ்லிம்களின் ஆரம்ப கால குடியிருப்புக்களை இனங்காட்டுவார்.
- முஸ்லிம்களின் குடியிருப்பின் பரம்பலுக்கான காரணிகளை விளக்குவார்.
- இலங்கை மன்னர்களுடனான முஸ்லிம்களின் உறவையும் தேசிய பங்களிப்புக்களையும் விபரிப்பார்.
- காலனித்துவக் காலத்தில் முஸ்லிம்களின் தேசிய நலனுக்கான பங்களிப்பை விளக்குவார்.
- சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்களை விரிவாக எடுத்துக் கூறுவார்.
- தாய் நாட்டின் அபிவிருத்திக்கு பங்காற்றுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும் என்பதை வலியுறுத்துவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**அறேபியருக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள்**

- இலங்கையில் மனிதர்கள் கிருஸ்துக்கு முன்பிருந்தே வாழ்ந்துள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்து சமுத்திரத்தைக் கடந்தே இவர்கள் இலங்கைக்கு வந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

- மேற்குறித்த வரலாற்றுப் பாரம்பரியத்துக்கு உரித்துடைய இலங்கையின் பூர்வீகக் குடிகளாக வேடர்கள் அமைந்துள்ளனர். இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட புராதன மனிதர்களுக்கும் வேடர்களுக்குமிடையே கலாசார உறவுகளும், உயிரியல் உறவுகளும் காணப்படுவதை நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. வேடர்களைத் தவிர்த்து இலங்கையில் இன்று வாழும் சகல இன மக்களும் இங்கு வந்து குடியேறியவர்களாவர் என்ற கருத்து நிலவுகிறது.

- மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு மிக நீண்ட காலங்களுக்கு முன்பிருந்தே நிலவியுள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. மகாவலி திசைதிருப்பும் திட்டத்தின் கீழ் நடைபெற்ற அகழ்வு வேலைகளின் போது மாதுருஓயாவின் மிகப் பழமையான வெள்ள நீர் கட்டுப் பாட்டு வாசல் (Sluice - Gate) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. வாஷிங்டனில் செய்யப்பட்ட கார்பன் சோதனையில்

அது 4000 ஆண்டுகள் பழைமயானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இத்தொழிநுட்பம் எகிப்து, மொஸபதோமியா, வட அறேபியாவின் ஹழரமௌத் போன்ற நாகரிகங்களில் காணப்பட்டது. இப்பிரதேசங்களுடன் நிலவிய உறவின் காரணமாகவே இது இலங்கைக்கு அறிமுகமாகியுள்ளது எனலாம்.

- கி.மு. 500 முதல் இங்கு ஆரியர்கள் குடியமர ஆரம்பித்துள்ளனர். விஜயன் வருகை, பாண்டுவாசுதேவன் குழுவினர் வருகை, பந்த கச்சனா குழுவினர் வருகை என்பன ஆரியக் குடியமர்வுகளை இலங்கையின் பண்டைய இலக்கியங்கள் குறித்துக் காட்டுகின்ற முறைகளாகும்.

- வரலாற்றுக்கு உட்பட்ட கால இலங்கையில் வந்து குடியேரிய பிரதான இனக் குழுக்களில் ஆரியர்கள், திராவிடர்கள், அறேபியர்கள் எனும் முப்பிரிவினரும் அடங்குகின்றனர். இன்று இலங்கையில் வாழ்கின்ற சகலரும் இந்த இனக் குழுக்களின் வம்ச வழியில் வந்தவர்களாவர்.

- பண்டுகாபய மன்னன் கி.மு. 377-307 அனுராதபுரத்தை ஆட்சி புரிந்த காலத்தில் அனுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி ''யவன'' வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என மகா வம்சம் குறிப்பிடுகின்றது. யவன என்ற பதம் மிக ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும் பிற்காலத்தில் அரேபியரைக் குறிப்பதாக மகா வம்சத்தை மொழிபெயர்த்த ஆனந்த டப்ளியு. பி. குருகே குறிப்பிடுகிறார். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபய மன்னனின் காலப்பிரிவில் காணப்பட்ட யோனாஸ் அறபு வணிகர்களே என மகாவம்சத்தை மொழி பெயர்த்த டப்ளியு. கைகர் கருதுகிறார். (Mahawansa, Ed by W. Geiger, London, 1950-xv-90)

- கி.மு. 1000 ஆண்டுகளில் நபி சுலைமான் (அலை) அவர்கள் காலப்பிரிவில் சாம்பிராணி, வாசனைப் பொருட்கள், குதிரை என்பவற்றுக்கு மாற்றுப் பொருட்களாக இலங்கையில் இருந்து நறுமணச் சரக்குகள், மாணிக்கக் கற்கள், கருங்காலி, மயில், யானைத் தந்தம் முதலியவை எடுத்துச் செல்லப்பட்டன. இவை அனைத்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே காணப்பட்ட உறவின் தொன்மையைக் காட்டுகின்றன.

- வரலாற்றுப் பேராசிரியைகளான கலாநிதி சிறிமா கிரிபமுன, கலாநிதி லோனாதேவராஜா ஆகியோர் ''யோனாஸ்'' எனும் பதம் அறேபியர்ளைக் குறிப்பதாக கருதுகின்றனர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு சந்தேச இலக்கியங்கள் முஸ்லிம் பெண்களைக் குறிக்க ''யொன்லிய'' எனும் சொல்லைப் பயன்படுத்துவது இதற்கு சான்றாகும் என்பது கலாநிதி லேனாதேவராஜாவின் கருத்தாகும்.

- கி.மு. 4ஆம் நூற்றாண்டிலேயே அறபு வணிகர்கள் தமது குடியிருப்பினை இலங்கையில் நிறுவியுள்ளனர். J.R. சின்னத்தம்பி எனும் வரலாற்றாய்வாளர் ''lCeylon in ptomay's Geography' எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார். ''தெதுருஓயா சோணா நதி அல்லது அறேபியரின் நதி என்று கூறப்பட்டது. தெதுருஓயாவுக்கு வடபாகத்தில் சோணாள் அல்லது அறேபியப் பழங்குடிகள் வாழ்ந்துள்ளனர். Igonacivitas என்பது மாந்தோட்டத்தின் தென்பாகத்தில் உள்ள அரிப்பை அல்லது தற்போதைய புத்தளம் பொன்பரப்பினைக் குறிக்கின்றது. இது பெரும்பாலும் அறேபியர் வாழ்ந்த பட்டினமாகும். சோணா நதி என்பதன் பொருள் சோனகர் நதியாகும். இது தெதுரு ஓயாவுக்கு வடக்கே உள்ள புத்தளம் பிரதேசத்தினைக் குறிக்கின்றது. கிறிஸ்துவுக்கு முன்னர்

இருந்தே இங்கு அறேபியர் வாழ்ந்து வந்ததற்கான தடயங்களாக இவை அமைந்துள்ளன.

- ஜாஹிலிய்யாக் கால கவிஞரான இம்ரஉல் கைஸின் கவிதைகளில் கற்பூரம், இஞ்சி, கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இது இலங்கை, கேரளம் முதலிய இடங்களுக்கும் அறபு நாட்டுக்குமிடையே இருந்த வணிகத் தொடர்புக்கான சான்றாகும்.
- இவையனைத்தும் இஸ்லாம் அறபுலகில் அறிமுகமாவதற்கு முன்னரே அறேபியர் இலங்கையோடு தொடர்புற்றிருந்தனர் என்பதையும், இங்கு குடியிறுப்புக்களை அமைத்து வாழ்ந்துள்ளனர் என்பதையும் காட்டுகின்றன.

**இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகமும் பரவலும்**

- இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் கிழக்கு-மேற்கு வர்த்தகப் பாதையின் நடுவாக இலங்கை அமைந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இலங்கை சர்வதேச உலகில் அறியப்பட்டிருந்தமைக்கு இதுவே பிரதான காரணியாக அமைந்தது. அவ்வாறே இலங்கையின் இயற்கைச் சூழலும், பௌதீகக் நிலக் கட்டமைப்பும், இயற்கையாக அமைந்த துறைமுகங்களும் இலாபம் தரும் வணிகப் பொருட்களும் பிறநாட்டவர்களை இலங்கையை நோக்கி ஈர்க்கும் அம்சங்களாக அமைந்தன.
- பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சிபுரிந்த காலப்பிரிவில், அராபியர்கள் வணிகர்கள் என்ற வகையில் இலங்கையில் அறிமுகமாயிருந்தனர். பண்டுகாபய மன்னன் தலைநகரான அநுராதபுரியில், பல்வேறு வணிகர்களுக்குமாக சில குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கியிருந்தான். அநுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி யவன வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. யவனர் என்ற பதம் மிக ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும், இது பிற்காலத்தில் அராபியரையும் குறித்ததாக மகாவம்சத்தை மொழிபெயர்த்த கலாநிதி ஆனந்த குருகே கருத்துத் தெரிவிக்கின்றார். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபய மன்னரின் காலப்பிரிவில் காணப்பட்ட யோனர்கள் (Yonas) அரபு வணிகர்களே என மகாவம்சத்தை மொழிபெயர்த்த Willhelm Geiger கருதுகின்றார்.
- இவ்வாறு இலங்கையில் கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து அறபு வணிகர்கள். இந்திய கரையோர நகர்களுடனான வர்த்தகத்தில் பெரும்பங்கு வகித்தனர். இஸ்லாம் அறபு தீபகற்பத்தில் அறிமுகமான கி.பி. 610ஆம் ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்ட கடற்கரையோரங்களில் வலிமைமிக்க வணிகர்களாக அறேபியர் நிலைபெற்றிருந்தனர். அறபு தீபகற்பத்தில் மிகப்பெரும் சக்தியாக இஸ்லாம் வளர்ச்சியடைந்தபோது கீழைத்தேய நாடுகளில் வாழ்ந்த அறபு வணிகர்களும் இஸ்லாத்தை தமது நெறியாக ஏற்றுக்கொண்டனர்.
- இலங்கையில் இஸ்லாம் எப்போது அறிமுகமானது என்பது குறித்து தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. எனினும், இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான காலப்பிரிவு பற்றி பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலப் பிரிவில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது.

2. கலீபா உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் அறிமுகமானது.

3. உமையாக்கள் காலப்பிரிவில் இடம்பெற்ற ஹாஷிமியர் புலம்பெயர்வுகள் மூலம் அறிமுகமானது.

- நபி (ஸல்) அவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீஹப்ஸா (ரழி) இலங்கைக்கும் வந்ததாகவும் இலங்கை அரசனுக்கு இஸ்லாத்தின் அழைப்பை விடுத்ததாகவும் அறிஞர் சித்திலெவ்வை (கி.பி 1838 - 1898) ஹுஸைன் இப்னு முஹம்மத் என்பவர் கோவை செய்த 'அல்கியா பாக்கரி' எனும் நூலின் முதலாம் பாகத்தின் 184 ஆம் பக்கதிலிருந்து பெற்றுக் கொண்டதாக ஆதாரம் காட்டி முஸ்லிம் நேசனில் பின்வரும் செய்தியைத் தந்துள்ளார்.

  > *ஹிஜ்ரி ஆறாம் வருடத்திற்குச் சரியான கி.பி. 628 ஆம் ஆண்டில் வஹப் இப்னு அபீ ஹப்ஸா எனும் பெயருடைய ஒரு ஸஹாபியை நபிகளார் இலங்கை அரசனிடத்தில் அனுப்பியதாகவும் அவர் நபிகளாரின் கடிதத்தை இலங்கை மன்னனிடம் கொடுத்ததாகவும் அதில் அம்மன்னனுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் அந்த ஸஹாபிக்கு மார்க்கத்தைப் போதிப்பதற்கு அனுமதியளித்து பள்ளியொன்றைக் கட்டவும் விரும்பியோர் அம்மதத்தை ஏற்கவும் சுயாதீனம் கொடுத்தார். அவர் ஏற்கனவே இங்கிருந்த அறேபியருக்கும் பின் பிறருக்கும் உபதேசித்து சிலரைத் தம் மதத்தவராக்கி ஹிஜ்ரி பத்தில் (கி.பி 632இல்) அறேபியாவுக்குச்* சென்றார். (முஸ்லிம் நேசன் 1898 ஒக்டோபர் 22)

- நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவில் இஸ்லாத்தின் அழைப்பு உலகின் பல நாடுகளுக்கும் விடுக்கப்பட்டது. உரோம, பாரசீக ஆட்சியாளர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் எழுதிய கடிதங்கள் இதற்கு ஆதாரமாக அமைகின்றன. அவ்வாறே கீழைத்தேய நாடுகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்ற கருத்தை சில வரலாற்றாசிரியர்கள் முன்வைத்துள்ளனர். இவ்வகையில் கி.பி. 628ஆம் ஆண்டு சீனாவுக்கு நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை வஹப் இப்னு அபீஹப்ஸா (ரழி) அவர்கள் எடுத்துச் சென்றார்கள் என சேர் தோமஸ் ஆர்னல்ட் தனது The Preaching of Islam எனும் நூலின் முதற்பதிப்பில் குறிப்பிடுவதாக கலாநிதி ஹமீதுல்லாஹ் தனது Foreign Relations of the Prophet Muhamad எனும் நூலில் குறிப்பிடுகிறார். மார்சல் புரூம்ஹால் என்பவர் 'சீனாவில் இஸ்லாம்' எனும் தனது நூலில் சீனாவில் இஸ்லாத்தின் பரவல் பற்றி எழுதும் போது அங்கு வழக்கில் உள்ள மரபு வழிக்கதை ஒன்றைக் குறிப்பிடுகிறார். கி.பி 628இல் அல்லது 629இல் வஹப் இப்னு அபீ ஹப்ஸா என்பவர் கடல் வழியாகக் கன்டன் துறைமுகத்தை அடைந்து தலைநகர் செயின் பூவில் வைத்து இஸ்லாமியப் பிரசாரம் செய்யவும் கன்டனில் மஸ்ஜித் ஒன்றைக் கட்டவும் அனுமதி பெற்ற பின் கி.பி. 632 அல் மதீனாவுக்கு மீண்டார். இச்செய்தி சித்திலெப்பை தரும் தகவல் பற்றி சாதகமாக சிந்திக்க உதவுகிறது எனலாம்.

- கி.பி. 7 ஆம் நூற்றாண்டுகளில் அநுராதபுர ஆட்சியாளர்களின் முக்கிய துறைமுக நகரமாக மாந்தை விளங்கியது. இத்துறைமுக நகரம் கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்திய நிலையமாக விளங்கியது.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும் கண்டெடுக்கப்பட்ட அறபு கல்வெட்டுகளும் அறபுக் குடியிறுப்புகள் காணப்பட்டமைக்கான சான்றுகளாக அமைவதாக கலாநிதி ஷுக்ரி குறிப்பிடுகிறார். 'மாந்தையிலும், அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட கி. பி. 8 ஆம் - 11 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையிலான மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த மட்பாண்டங்களும் சீனாவைச் சார்ந்த மட்பாண்டங்களும் இவ்வணிகத்தில் அறேபியா, சீனா (ஆகிய நாடுகள்) வகித்த பங்கை விளக்குகின்றன.' எனவே இக்காலப்பகுதியில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியிருக்கலாம் எனக் கொள்ளலாம்.

கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப்பகுதியில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது என்ற கருத்தை கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு ஷஹ்ரயார் தாம் எழுதிய 'அஜாஇபுல் ஹிந்த்' எனும் நூலில் தருகிறார். இலங்கை மக்கள் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கேள்வியுற்றனர். அது பற்றி சரியான தகவல்கலை அறிந்துவர இலங்கை மன்னன் (அக்ரபோதி III) ஒரு தூதுவரை அனுப்பினார் என்ற தகவலை கலாநிதி சிறிமா கிரிபமுன Muslims of Sri Lanka Avenues to Antiquity எனும் நூலில் சுட்டிக்காட்டுகிறார். மன்னனால் அனுப்பப்பட்ட அத்தூதர் அங்கு சென்றடைந்த போது நபி (ஸல்) அவர்களும், அபூபக்ர் (ரழி) அவர்களும் காலஞ்சென்று கலீபா உமர் (ரழி) அவர்கள் (கி. பி. 634 - 644) ஆடசி செய்து கொண்டிருந்தார். அவரிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொண்டு இலங்கைக்கு மீண்டார். அவர் வரும் வழியில் இன்றைய பாகிஸ்தானில் உள்ள மக்ரான் கரையில் காலமானார். அவருடன் வந்த பணியாள் இலங்கையை அடைந்து இஸ்லாம் பற்றிய செய்தியை வழங்கினார்.

- கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய கிலாபத்தில் ஆட்சியாளர்களாக இருந்த உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வான், வலீத் இப்னு அப்துல் மலிக் ஆகியோரது ஆட்சிக்காலத்தில் ஈராக்கின் கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைக்கு அஞ்சி உமையாக்களின் அரசியல் எதிரிகளாக இருந்த ஹாஷிம் கிளையினர் தென்னிந்திய இலங்கைக் கரையோர நகரங்களில் குடியேறினர். வரலாற்றாசிரியர் James Tannat தனது 'Ceylon' எனும் நூலில் இவ்வாறு புலம் பெயர்ந்து வந்த பனூ ஹாஷிம் கிளையினர் இலங்கையின் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கொழும்பு, காலி, பேருவளை ஆகிய இடங்களில் குடியமர்ந்ததாக குறிப்பிடுகிறார்.

- இதே காலப்பிரிவில் நடைபெற்ற இன்னோர் நிகழ்வையும் வரலாற்றாசிரியர் அல் பலாதுரி தமது 'புதூஹுல் புல்தான்' எனும் நூலில் தருகிறார். 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட மன்னனான மாணவம்மன் (கி. பி. 684 – 719) இலங்கையில் காலஞ்சென்ற அறேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவைகளையும். பெண் மக்களையும் அறேபியாவுக்கு அனுப்பி வைத்தான். இவர்கள் பிரயாணம் செய்த கப்பலை இந்தியாவின் தேபல் (Daybal) (தற்போதைய கராச்சி) எனும் இடத்தில் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கி கைப்பற்றிக் கொண்டனர். பெண்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களில் பனூயர்பூக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண் 'யா ஹஜ்ஜாஜ்' என சப்தமிட்டாள். இவ்விடயத்தை ஈராக்கின் ஆட்சியாளராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுப் கேள்வியுற்றதும் சிறைபிடிக்கப்பட்ட பெண்களை

விடுவிக்குமாறு சிந்தின் அப்போதைய ஆட்சியாளரான ராய் தாஹிருக்கு (Rai Dahir) செய்தி அனுப்பினார். இதற்கு எத்தகைய பதிலும் கிடைக்காததால் முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கி. பி. 715 இல் சிந்து வெற்றி கொள்ளப்பட்டது.

- இது ஹி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக வாழ்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை மன்னர் இந்த அநாதைப் பெண்களை அவர்களின் தாய் நாட்டிற்கு அனுப்பியமையை உமையா மாகாண அதிபரான ஹஜ்ஜாஜுடன் நல்லுறவை வளர்க்க எடுத்த முயற்சியாகவும் கருத முடியும்.

- இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான காலப்பிரிவு பற்றிய மேற் குறித்த தகவல்கள் இஸ்லாம் அறபுத் தீபகற்பத்தில் அறிமுகமான அதே காலப்பிரிவில் இலங்கைக்கும் அறிமுகமானது என்பதில் ஒன்றுபடுகின்றன.

**இலங்கையில் முஸ்லிம்களின் பரவல்.**

- கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. அநுராதபுர ராஜதானியின் முக்கிய துறைமுகமான மாந்தையிலும் அதை அண்டிய பிரதேசங்களான திருக்கேதீஸ்வரம், எல்லுப்பிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட அறபு சிலாசனங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்று கலாநிதி எம். ஏ. எம். ஷுக்ரி தனது இலங்கை முஸ்லிம்கள் எனும் நூலில் (பக். 08) சுட்டிக்காட்டுகிறார்.

- கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுகளில் இக்குடியிருப்புகள் படிப்படியாக இலங்கையின் உள்ளக நகரங்களை நோக்கி நகர்ந்த அமைப்பினைக் காணலாம். இஸ்லாமிய உலகைப் பொறுத்தவரையில் இது அப்பாஸியரின் பொற்காலமாக அமைந்தது. இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்பாஸிய கலீபாக்களுடன் தொடர்புள்ளவர்களாக விளங்கினர். இலங்கை முஸ்லிம்களின் சமய அறிவை மேம்படுத்த அப்பாஸிய கலீபா, காலித் இப்னு அபூ பகாயா என்ற மார்க்க அறிஞரை அனுப்பி வைத்தார். இது இலங்கையில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தவும், போதிக்கவும் எடுக்கப்பட்ட நிறுவன ரீதியான முதல் முயற்சியாக அமைந்தது. இலங்கை வந்த அவர் இங்கு தங்கி இஸ்லாமிய வாழ்க்கை முறையையும் போதித்து வந்தார். இங்கேயே வாழ்ந்து கி. பி. 929 இல் (ஹிஜ்ரி 317) காலஞ்சென்ற இவரது கல்லறை நடுகல் கேம்ப்ரிரிஜ் பல்கலைக்கழகத்தின் அறபுப் பேராசிரியர் சாமுவேல் லீ (Samuwal lee) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. பின்னர், 1827 ஆம் ஆண்டு பிரிடன் ரோயல் ஆராய்ச்சிக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- கி. பி. 10,12ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் உள்ளக நகரங்களில் பல முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்பட்டமையை இலங்கையின் உள்ளக நகரங்களான கம்பொளை, கலகெதர பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட உமையா, அப்பாசிய கால நாணயங்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறே, இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்ற பொலனறுவைக் காலப் பகுதியில் முஸ்லிம்களின் பரவல் கணிசமாக இருந்திருக்க வேண்டுமென்பதற்கான சான்றுகளை நாம் காண முடிகின்றது.

- பொலனறுவைக் கால மன்னர்களுள் சிறப்பிடம் பெறும் மகா பராக்கிரமபாகு (1156-1186) வின் காலப் பகுதியில் தேசிய வர்த்தகத்தில் முக்கியத்துவம் மிக்கவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். இதுவே, ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்த மன்னன் உருவாக்கியிருந்த 'அந்தரங்கதுர' என்ற மேல் சபையில் நான்கு முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்தமைக்கு காரணமாக இருந்திருக்கலாம். அறபுப் புவியியலாளரான அல் இத்ரீஸ் தரும் இத்தகவலை இலங்கையின் தொல்பொருளியல் பேராசிரியராக இருந்த எஸ். பரனவிதாரன History of Ceylon எனும் நூலில் Civiliztion of Polonnaruwa Period எனும் பகுதியில் குறிப்பிடும் இக்கருத்தை கலாநிதி வஸன்தரா மோகன தனது Muslims in Sri Lanka எனும் நூலில் பக்கம் எட்டில் குறிப்பிட்டுள்ளார். இத்தகவல் பொலனறுவை ராஜதானியில் செல்வாக்குள்ளவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர் என்பதற்கும் சான்றாக அமைகின்றது.

- பொலனறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி.1232இல் தம்பதெனிய இலங்கையின் தலை நகராகியது. இக்காலப்பகுதியில் தம்பதெனிய அரசுக்கு வலுவூட்டும் வளம்மிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. கி.பி.1270 தம்பதெனிய அரசின் மன்னனாக முடிசூடிய 4ம் விஜயபாகு அவரது இராணுவத் தளபதியாக இருந்த 'மித்த' என்பவனால் கொலை செய்யப்பட்ட போது அந்த இராணுவத்தின் இன்னொரு பிரிவுக்கு தலைமை தாங்கிய 'தாகூர்' எனும் முஸ்லிம் இராணுவ வீரர் 'மித்த' வைக் கொன்று அரசைப் பாதுகாத்ததோடு 1272இல் யாப்பஹுவையை தலைநகராகக் கொண்டு புவனேகுபாகு ஆட்சியமைப்பதற்கும் காரணமாக இருந்தார் என ஆய்வாளர் என ஜே. கருணாதிலக தனது வயம்பலங்காவே ராஜதானி எனும் நூலில் குறிப்பிடுகிறார். இது இலங்கையின் உள்ளக நகரங்களில் முஸ்லிம்கள் வலுவான சமூகமாக பரவி வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

- யாப்பகுவை அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் இடமே 1283இல் எகிப்துக்குச் சென்ற வர்த்தகத் தூதுக்குழுவின் தலைமைப் பதவி அபூ உஸ்மான் என்ற முஸ்லிம் பிரதானிக்கு கிடைப்பதற்கு காரணமாகியது.

தம்பதெனிய, யாப்பகுவை ஆசியல் காலப்பிரிவில் நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வுகள் முஸ்லிம்களின் உள்நாட்டுப் பரவலுக்கான சான்றுகளாக அமைகின்றன. இக்கருத்துகள் அக்காலப்பிரிவில் உள்நாட்டில் முஸ்லிம்கள் அரசர்களோடு சமதரத்தில் உறவாடக்கூடிய பிரதானிகளின் அந்தஸ்த்தைப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.

- 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியலில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வலிமைமிக்க சமூகமாக வளர்ச்சி பெற்றிருந்தனர். 13ம் நூற்றாண்டின் இறுதிக்கூறில் குருநாகலை இலங்கையின் தலைநகராகியது. 2ம் புவனேகபாகு குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1287-1293 வரை ஆட்சி செய்தான். இம்மன்னன் குருநாகலை அஸ்வத்தும பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பிரபுவாக விளங்கிய அதினாவிதின வீர விக்ரமசிங்க என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட முஸ்லிம் பிரமுகரின் மகளாகிய மெதகெடிய குமாரி என்ற யுவதியை திருமணம் செய்தான். இருவருக்கும் பிறந்த முஸ்லிம் மகனே 'வத்ஹிமி' என்ற

பெயரில் இலங்கையின் வரலாற்றில் குறிக்கப்படுகிறார். இத்தகவலை ஆய்வாளர் என். ஜே. கருனாதிலக தனது 'வயம்ப லங்காவே ராஜதானி' என்ற நூலில் தருகிறார்.

- 2ம் புவனேகபாகுவின் பின் அவரே குருநாகலையில் இலங்கையின் மன்னனாக முடிசூட்டப்பட்டார். எனினும் சூழ்ச்சியாளர்கள் சதி செய்து இவரைக் கொலை செய்தனர். அரசனின் சிங்கள மனைவிக்குப் பிறந்த மகனை 4ஆம் பராக்கிரமபாகு என்ற பெயரில் மன்னராக முடிசூட்டினர்.

- குருநாகலை ராஜதானியாக மாற்றப்பட்டமைக்கான காரணிகள் பல கூறப்பட்டாலும் கூட 2ம் புவனேகபாகுவின் அரசியல் வாழ்வை உற்று நோக்கும் போது அங்கு குடியேறி வாழ்ந்த பொருளாதாரப் பலமிக்க சமூகமாக இருந்த முஸ்லிம்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் அதற்கான ஒரு காரணியாக இருந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

- கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இலங்கையின் உள்ளகப் பகுதிகளில் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் கி.பி.1344ல் இலங்கையைத் தரிசித்த இப்னு பதூதா விட்டுச் சென்றுள்ள குறிப்புகள் முக்கியம் பெறுகின்றன. அவர் புத்தளத்திலிருந்து சிலாபம், குருநாகல், கம்பொள, வழியாக ஆதம் மலையைத் தரிசித்து இரத்தினபுரி, தெவுந்தர, காலி, கொழும்பு வழியாக புத்தளம் நோக்கித் திரும்பிச் சென்றுள்ளார். இப்பயணப் பாதையில் தான் சந்தித்த பல முஸ்லிம் பெரியார்களைப் பற்றியும் அவர்களைச் சூழ இருந்த பள்ளிவாயில்கள், குடியிருப்புக்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தவகையில் பார்க்கும் போது இலங்கையின் கரையோர நகரங்களில் போலவே உள்ளக நகரங்களிலும் முஸ்லிம்கள் இக்காலப் பிரிவில் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

- கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் அரசியலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாக போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். கி. பி. 1505 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து பாரசீகக் குடாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓர் அறபுக் கப்பல் கூட்டத்தை தாக்கி கைப்பற்றுவதற்காக கோவாவிலிருந்து புறப்பட்ட டொன் லோரன்ஸோ டீ அல்மேய்டா கடும் புயலில் சிக்குண்டு திசைமாறி இலங்கையின் காலிக் கரையை வந்தடைந்தான். இவனது இவ்வருகை இலங்கையின் வரலாற்றுப் போக்கையே மாற்றியமைத்துவிட்டது. போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த நேரத்தில் இலங்கையின் கரையோர நகரங்களில் வர்த்தக வலிமை பெற்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. பொதுவாக முஸ்லிம்களை தமது வர்த்தகப் போட்டியாளராகக் கண்ட போர்த்துக்கேயர்கள் அவர்களைத் தமது எதிரிகளாகவே கருதினர். முஸ்லிம் ஸ்பெய்னில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகக் கடுமையான போக்கை கடைபிடித்ததைப் போலவே போர்த்துக்கேயர்கள் இலங்கையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கையே தமது எல்லா நடவடிக்கைகளிலும் கடைப்பிடித்தனர். கோட்டை இராச்சியத்தில் உருவான அரசியல் பிரச்சினைகளும், அது துண்டாடப்பட்டமையும் போர்த்துக்கேயர் இலங்கையில் நிரந்தரமாக காலூன்றுவதற்கு காரணமாகியது.

- ஆரம்பத்தில் முஸ்லிம்கள் விடயத்தில் ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு நடந்துகொண்ட போர்த்துக்கேயர்கள் 1597ம் ஆண்டில் கோட்டை அரசின் கடைசி மன்னனான டொன் ஜோன் தர்மபால வாரிசின்றி இறக்க அவன் எழுதி வைத்திருந்த சாசனத்தின்படி போர்த்துக்கேய மன்னனே கோட்டை அரசுக்கும் அதிபதியானவுடன் கடும் போக்கை கடைபிடிக்கத் தொடங்கினான். இதன் விளைவாக கி.பி.1575ஆம் ஆண்டு முதல் கரையோர நகரங்களில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாண்டில், வெலிகம பிரதேசத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வங்களை கொள்ளையடித்ததோடு பலரைக் கொலையும் செய்தனர். கி.பி.1626ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த எல்லா பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கண்டி மன்னன் செனரத் (கி.பி. 1604-1635) கண்டியின் உட்புறங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகலிடமளித்து குடியமர்த்தினான். மட்டக்களப்பில் மட்டும் நாலாயிரம் பேர் குடியமர்த்தப்பட்டனர். கி.பி.1642ல் மாத்தறையில் 200-300 வரையிலான முஸ்லிம் ஆண்கள் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களது பெண்களையும், பிள்ளைகளையும் கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்றனர். இதுவும் முஸ்லிம்கள் புலம்பெயரத் தூண்டியது.

- எனவே, கி. பி. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் குடியேறியிருந்தனர் என்ற முடிவுக்கு வரலாம். பாணகமுவ, கண்டி, கம்பளை போன்ற உள்ளக நகரங்களில் கணிசமாக அளவு முஸ்லிம்கள் குடியேறி இருந்தனர்.

- கி. பி. 1656 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் ஆட்சியிலும் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. முஸ்லிம்களின் வர்த்தக முயற்சியில் ஒல்லாந்தர் தலையிட்டனர். குறித்த சில தொழில்களை மட்டுமே முஸ்லிம்கள் செய்ய வேண்டுமென்றும் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் ஒல்லாந்தர்களுடன் சேர்ந்தே செயற்பட வேண்டுமென்றும் சட்டமியற்றினர்.

- ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுடன் முறன்பாடு கொண்டிருந்த போதிலும் தமது சுய தேவைகளுக்காக இந்தோநேசிய முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்தனர். அவ்வாறே அங்கு ஒல்லாந்தருக்கு எதிராக கிளர்ச்சி செய்த இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்கள் முதலானோர் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர். இதனால் இலங்கை முஸ்லிம்களிடையே மலாய் சமூகம் தோற்றம் பெற்றது. இது முதல் அறேபிய, பாரசீக, இந்திய சுதேச முஸ்லிம்களை உள்ளடக்கியிருந்த இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மலாய் சமூகமும் ஓர் அங்கமாகியது. ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளைப் போன்று இவர்களுக்கு கொடுமைகள் எதுவும் செய்யவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக கலாசார வாழ்வில் 18ம், 19ம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தர்களாலும் இன்னல்களுக்குள்ளான முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின் ஆதரவைப் பெற்று கண்டி அரசியலிலும் முக்கியத்துவம் மிக்கவர்களாகினர். மலையக

ராஜதானியின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்ந்த முஸ்லிம்கள் பொறுப்புவாய்ந்த அரச பதவிகளையும் வகித்தனர்.

- கண்டி அரசியலில் உள்நாட்டு நிர்வாகம் மிகத் திட்டமிட்ட அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டு அரசனின் நிர்வாகம் கிராமிய மக்கள் வரைக்கும் சென்றமை இக்காலப் பிரிவின் சிறப்பியல்பாகும். ஒழுங்கான சமூக, பொருளியல், தொழிநுட்ப முறையொன்று சமகால திணைக்கள முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த திணைக்களங்கள் ஒவ்வொன்றும் குறித்த சில நிர்வாகப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தது.

- இத்திணைக்களங்கள் சிலவற்றின் பொறுப்பாளர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கனின் (1747-1781) காலப்பிரிவில் மீன்பிடித்தலுக்கும் தவளம் வியாபார முறைக்குமான திணைக்களமாக இருந்த ‘மடிகே பத்த’ திணக்களத்தின் தலைமைப் பதவியான ‘மடிகே பத்த நிலமே’ பதவியை ஷேக் ஆலிம் எனும் முஸ்லிம் வகித்துள்ளார். இவரது மறைவுக்குப் பிறகு இவரது பேரப்பிள்ளையான ஷேக் அப்துல் காதர் என்பவரும் ஏழுகோறளையில் இப்பதவியை மௌலா முஹாந்திரம் என்பவரும் வகித்துள்ளனர். இவை தவிர மிகக் குறைவான எண்ணிக்கையிலானவர்கள் சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து கிராமத்தின் தலைமைப் பொறுப்புக்குரிய ‘லேகம்’ ‘முஹாந்திரம்’ போன்ற பதவிகளையும் முஸ்லிம்கள் வகித்துள்ளனர் எனக் கலாநிதி லோனா தேவராஜா தனது நூலில் குறிப்பிடுகிறார்.

- நாம் இதுவரை நோக்கிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது அநுராதபுர ராஜதானியின் தோற்றம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரையான மிக நீண்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆரம்பகால முதலேயே அறிமுகமாகி கடைசி வரைக்கும் நிலைத்து நின்ற வரலாறு முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். பெரும்பான்மை சமூகத்தோடு ஒரு சிறுபான்மை சமூகம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தனது தனித்துவத்தைப் பேணிக் கொண்டே இணைந்து சுமுகமாக வாழ்ந்த வரலாறு இலங்கை முஸ்லிம்களின் சிறப்புக்கு சான்றாகின்றது.

**முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு**

- ஒரு சமூகத்தின் சமூக, பண்பாட்டுப் பங்களிப்புகள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் அதன் நம்பிக்கைகள், விசுவாசக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றின் பின் புலத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டு பங்களிப்புகள் பற்றிய ஆராய்வுக்கும் இக்கருத்து ஏற்புடையதாகவே அமைகின்றது.

- இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும், பரவலும் வணிக முயற்சிகளினடியாக நடைபெற்ற போதிலும், இலங்கை மக்களோடு நல்லுறவைப் பேணி நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டவர்களாக வாழ்நதனர். எனினும், முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ இயல்புகளையோ அல்லது பண்பாட்டுக் கூறுகளையோ இழந்து இரண்டறக் கலந்த

நிலையை வரலாற்றில் எங்கும் காணமுடியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்த போதிலும், எக்குழுவினருக்கு மத்தியில் இருந்த போதிலும் தமது வாழ்க்கைக்கும், நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைகின்ற அல்குர்ஆன், சுன்னா என்பவற்றின் போதனைகளுக்கு அமைய நடந்துகொள்வதாகும். இலங்கை முஸ்லிம்களும், ஐரோப்பியரின் வருகை வரை குறிப்பாக ஆங்கிலேயரின் அரசியல் யாப்பு, சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படும் வரை சிங்கள சமூகத்தோடு தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டே இணைந்து வாழ்ந்தனர். ஐரோப்பியர் தமது அரசியல் நோக்கங்களுக்காக இரு சமூகங்களுக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்ததாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பிரதான சமூகக் குழுவாக வாழ்ந்த முஸ்லிம்களின் சமூக பண்பாட்டுப் பங்களிப்புகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் நோக்கலாம்.

1. பொருளியல் பங்களிப்பு
2. அரசியல் பங்களிப்பு
3. தேசிய பாதுகாப்புப் பங்களிப்பு
4. மருத்துவத் துறைப் பங்களிப்பு
5. கலாசார பண்பாட்டுப் பங்களிப்பு

**பொருளியல் பங்களிப்புகள்.**

- இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் வரலாற்றில் முஸ்லிம்கள் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அநுராதபுர ஆட்சிக்காலம் முதல் இலங்கையின் சர்வதேச வணிகத்தை இலங்கை முஸ்லிம்களே பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கையை ஊடறுத்துச் சென்ற சர்வதேச வணிகப் பாதைகளில் இவர்களுக்கிருந்த பரிச்சயம், உள்நாட்டு வணிகத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கு உதவியது. அநுராதபுர ஆட்சிக்காலப் பிரிவின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாந்தையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

- அநுராதபுர ஆட்சிக்காலப் பகுதிகளில் நடைபெற்ற படையெடுப்புக்களின் போது பாதிக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள் என்பவற்றை புனர்நிர்மாணம் செய்யவும், சிதைந்து போன விவசாய நடவடிக்கைகளை மீளமைக்கவும் பயன்படுத்தப்பட்ட நிதி வெளிநாட்டு வணிகத்தின் மூலமாகவே பெறப்பட்டது. இலங்கையின் நீர்பாசன நாகரிகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசரியர் ஆர். ஓ. எல். எச். குணவர்தன தரும் இத்தகவல் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் வகித்த பங்கிற்கு ஆதாரமாகின்றது.

பொலனறுவைக் காலப்பிரிவில், கொழும்பு வளர்ச்சியடைந்த ஒரு துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் கொழும்பில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதைக் கொழும்பு சிலாசனம் உணர்த்துகின்றது.

பொலனறுவையின் பொற்காலத்துக்கு உரிமை கோரும் மன்னனாக மகா பராக்கிரமபாகு (கி.பி.1156-1186) வின் காலப்பிரிவில் முஸ்லிம்கள் வணிகத்துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த 'அந்தரங்கதுர' என்ற மேல்சபையில் அங்கம் வகித்தமை வணிகத்துறையில் அவர்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கு சான்றாகின்றது.

- இலங்கை மாணிக்கக் கற்களுக்கு பிரபல்யம் பெற்றிருந்தது. இலங்கையில் இரத்தனக்கற்களை சர்வதேச வர்த்தக உலகிற்கு முஸ்லிம்கள் தான் அறிமுகப்படுத்தினர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அல் பெரூனி எழுதிய 'கிதாபுல் ஜமாஹிர் பீ ம.்.ரிபதில் ஜவாஹிர்' என்ற நூலில் இலங்கையின் இரத்தினக்கல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது, அக்காலப் பகுதியில் இலங்கையின் இரத்தினக்கற்கள் பற்றிய அறிமுகம் முஸ்லிம் உலகுக்கு இருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றும் காலப்பிரிவுகளிலும் தேசிய வர்த்தகத்தில் முஸ்லிம்களே முன்னணி வகித்தனர். கரையோரப் பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்படுவதற்கும் அவர்கள் பெற்றிருந்த வர்த்தக வலிமையே பிரதான காரணமாகியது. 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகமாகிய போது குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்களும் பெருந்தோட்டத்துறை உரிமயாளர்களாகக் காணப்பட்டனர். இது தவிற ஏற்கனவே இருந்த இரத்தினக்கல் வியாபாரத்திலும், நகை வியாபாரம், புடைவை வியாபாரம் என்பவற்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் முஸ்லிம்களின் வணிக வலிமை படிப்படியாகக் குறையத் தொடங்கியதைக் காணலாம்.

**அரசியல் பங்களிப்புகள்.**

- இலங்கையின் அரசியலிலும் முஸ்லிம்கள் அநுராதபுரம் ஆட்சிக்காலம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரைக்கும் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றங்களிலும், அமைச்சரவைகளிலும் முஸ்லிம்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இது முஸ்லிம்கள் இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலம் முதல் இன்று வரை தேசிய அரசியலில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இனமாக வாழ்ந்தமைக்கான சான்றாகும்.

  அநுராதபுர, பொலனறுவைக் காலங்களில் துறைமுக நகரங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் நாட்டின் வணிகத்துறைப் பகுதிக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

- பொலனறுவையின் முதல் மன்னனாக விஜயபாகு (கி.பி.1055-1070) மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கி, மன்னனின் வலது கரமாக செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர் ஒருவர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. பெரிய தம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட இவர் அரசனது விசுவாசத்துக்குரியவராகவும், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். அவ்வாறே, பராக்கிரமபாகு மன்னனின் காலப்பிரிவிலும் தாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அரசனின் நிதித்துறை ஆலோசகர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர்.

- இலங்கையின் தலைநகரங்கள் இடம் விட்டு இடம் நோக்கி நகர்ந்து சென்ற வேளைகளில் குறித்த தலைநகரங்களில் முஸ்லிம்களும் குடியேறி வாழ்ந்துள்ளனர்.

இக்காலப் பிரிவுகளில் அரசனின் ஆலோசகர்களாக, வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பணிபுரிந்த முஸ்லிம் பிரதானிகளை இலங்கையின் வரலாற்றில் காணலாம். கி.பி.1282 இல் புவனேகபாகுவின் தூதுவராக எகிப்துக்குச் சென்ற அபூ உஸ்மான், குருனாகளை அரசின் மன்னனாக முடிசூடிய வத்ஹிமி போன்றவர்கள் அதற்கான வரலாற்று உதாரணங்களாவர்.

- கண்டிய அரசியலில் முஸ்லிம்கள் வகித்த பங்கு மகத்தானதாகும். அரச திணைக்களங்களின் தலைவர்களாக, அரச தூதுவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கி.பி1762 இல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேய தூதுவரான ஜோன் பைபஸை வரவேற்று அழைத்து வர மன்னனால் அனுப்பப்பட்ட உதுமான் லெப்பை, மடிகேபத்த நிலமே பதவியை வகித்த ஷேக் ஆலிம், ஷேக் அப்துல் காதர், கர்நாடக நவாப் முஹம்மத் அலியிடம் தூதுவராகச் சென்ற உதுமான் லெப்பை ஆகியோர் கண்டி அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கான ஆதாரங்களாக அமைகின்றன.

- அவ்வாறே கண்டியின் இறுதி மன்னனாக சிறி விக்ரம ராஜசிங்கனின் (கி.பி.1798-1815) காலப்பிரிவில் பிரதம அமைச்சராக இருந்த பிலிமத்தலாவை திசாவையுடனும், எஹெலேபொல திசாவையுடனும் இணைந்து பிரதம நீதிபதியாக ராஜ கருண கோபால் முதியான்ஸே ராலகாமி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் பிரமுகர் கடமையாற்றினார் என கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார். சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் அரச துறைகளில் முக்கிய பங்காற்றியுள்ளனர். பாராளுமன்ற சபாநாயகர் பதவியைக் கூட முஸ்லிம்கள் வகித்துள்ளனர். இவை அனைத்தும் முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புக்கான சான்றுகளாகும்.

**தேசிய பாதுகாப்புப் பங்களிப்புகள்.**

- இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளனர். தம்பதெனிய அரசியலில் கி.பி1270 இல் இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்த முஸ்லிம் தளபதி தாஹோர் அவ்வாண்டு உருவாகிய கிளர்ச்சியை அடக்கி 1272 இல் 1ம் புவனேகபாகு யாப்பஹுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியமைப்பதற்கு காரணமாக அமைந்தார்.

- கோட்டை அரசிலும், கண்டி அரசிலும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்களிப்பு நல்கிய முஸ்லிம்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளன. சீதாவக்கை இராச்சியத்தின் மன்னனாக மாயாதுன்னை (கி.பி.1521-1581) யின் காலப்பிரிவில் போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னையின் இராணுவத்தில் இணைந்து போராடினர். அத்தோடு கல்லிக்கோட்டை மன்னனாக இருந்த ஸமோரினின் கடற்படை உதவியைப் பெற்றுக் கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர். இம்மன்னனது புதல்வரான 1ம் இராஜசிங்கன் (கி.பி.1582-1592) காலத்திலும் அரச படையில் இணைந்து போராடினர். போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் Queyroz தரும் தகவல்களின் படி மேற் குறித்த இராணுவ நடவடிக்கைகளில் துப்பாக்கிப் படைப் பிரிவாக முஸ்லிம்களே செயற்பட்டுள்ளனர்.

- கண்டி மன்னனான 1ம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்தில் கரையோரப் பாதுகாப்புக்கான தளபதியாகவும், பிரதான கட்டளையிடும் அதிகாரயாகவும் ஒரு முஸ்லிம் பணி புரிந்தார். இவர் போர்த்துகேயரால் கைது செய்யப்பட்ட போது இவரை விடுவிக்க மன்னன் 5000 வெள்ளி நாணயங்களைக்கூட வழங்கத் தயாரானமை இவர் மீது மன்னனுக்கிருந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகும். அவ்வதறே, 2ம் இராஜசிங்கனின் காலப்பிரிவில் (கி.பி.1634-1684) நடைபெற்ற வெள்ளவாயப் போரில் 'ஒடுபந்திய' என அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒட்டகப்படை மிக முக்கிய பங்காற்றியது. இப்போரில் தானடைந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் ஹங்குரன்கெட்ட மகா தேவாலயத்துக்கு வழங்கிய அன்பளிப்புப் புடவையில் இந்த ஒட்டகப்படையை மன்னன் ஓவியமாக சித்தரித்து வைத்துள்ளான். கண்டியின் இறுதி மன்னன் வரை முஸ்லிம்கள் தேசிய இராணுவத்தில் முக்கிய பங்காற்றியுள்ளனர். கி.பி.1810 ஆம் ஆண்டு தேசிய இராணுவத்தில் 850 முஸ்லிம் வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

**மருத்துவத்துறைப் பங்களிப்புகள்.**

- இலங்கைக்கு யூனானி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தி அதனை ஒரு தனிப்பெரும் துறையாக விருத்தி செய்த பெருமை முஸ்லிம்களையே சாரும். இது இலங்கைக்கு எக்காலப்பிரிவில் அறிமுகமானது என்பது பற்றி உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. கி.பி. 10ம் நூற்றாண்டளவில் சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸுல்தானின் புதல்வரான இளவரசர் ஜமாலுத்தீன் ஒரு மருத்துவராக விளங்கினார் என்றும் பேருவலையில் குடியேறிய இவரும், இவரது புதல்வர்களுமே யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியதாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. கி.பி.7-9ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மருந்துகளை சேமித்து வைப்பதற்கான ஸஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிகிந்தலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது புராதன மருத்துலமனையொன்றின் இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்டன. இது யூனானி மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.

  வரலாற்றாசிரியர் கலாநிதி லோனா தேவராஜா தரும் தகவலொன்றின் படி தம்பதெனிய மன்னனான 2ம் பராக்கிரமபாகு (கி.பி.1236-1270) தனது 22 ஆலது ஆட்சியாண்டில் பேசமுடியாத நிலைக்குள்ளான போது, அரசனின் வேண்டுகோளின் பேரில் டில்லி சுல்தான் வட இந்திய மாநிலமான சிந்து பிரதேசத்தின் 'புழி' பகுதியில் இருந்து ஸ்பெயின் வழி வந்த ஒரு மருத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவரே, இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தி வளர்த்ததாகவும் அறிய முடிகின்றது. வைத்தியரத்ன கோபால முதலிகே அன்சார் இப்னு துபைல் உடையார் என்ற பெயரை உடைய இம்மருத்துவரது சந்ததியினரே பிற்கால இலங்கையின் அரச மருத்துவர்களாக பணிபுரிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

- கண்டிய அரசின் யூனானி மருத்துவத்துறை சிறப்புற்று விளங்கியது. பல யூனானி மருத்துவர்கள் கண்டிய மன்னர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்துள்ளனர்.

கீர்த்தி சிறி ராஜசிங்கன் (1749-1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் 'பெஹேத்கே முஹாந்திரம் நிலமே' பதலியை வகித்து வந்த பல முஸ்லிம் மருத்துவர்களைக் காண முடிகின்றது. இவர்கள் கண்டி மாவட்டத்தில் உடுநுவரைத் தொகுதியில் அரசனால் நிலங்கள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இத்தகைய மருத்துவர்கள் 'ராஜபக்ஷ வைத்தியதிலாகே கோபால முதலி' 'ராஜகருண வைத்தியதிலக கோபால முதலி' எனும் பெயர்களை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இக்காலப்பிரிவில் கண்டியில் மட்டுமல்லாது இலங்கையின் கரையோர நகரங்களான கொழும்பு, காலி, மாத்தறை முதலிய பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் நிறுவியிருந்த வைத்தியசாலைகளிலும் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தனர். கி.பி. 1791 ஆம் ஆண்டு மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பை ஆகியோர் இவ்வைத்தியசாலைகளில் பிரதம மருத்துவர்களாக இருந்தனர். இன்று யூனானி மருத்துவம் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்த்து பெற்ற ஒரு துறையாகவும் சுதேச மருத்துவத்துறையின் ஒரு கூறாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்புகள்.**

- இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள் சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்புகளோடு ஒப்பு நோக்கி ஆராயப்பட முடியாத ஒன்றாகவே விளங்குகின்றது. எந்த ஒரு சமூகத்தின் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் அந்த சமூகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்த நாடுகளிலும், நகரங்களிலுமே வளர்ச்சி பெறும். ஆட்சியாளர்களின் அனுசரனையின்றி இவை வளர்ச்சிபெற முடியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

- இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித்கள் ஓரளவுக்கு தனித்துவமான கட்டிடக்கலைப் பாரம்பரியமொன்றைக் கொண்டுள்ளது. முஸ்லிம்களின் பொதுவான கட்டிடக்கலை அம்சங்களான கும்மட்டம், அறபு எழுத்தணி மரபுகள் ஆரம்ப கால மஸ்ஜித்களில் காணப்படவில்லை. ஏனைய நாடுகளில் காணப்படாத 'ஹவுள்' உட்பள்ளி, வெளிப்பள்ளி என்பன இங்கு காணப்பட்டன.

  இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப கால முதலேயே இஸ்லாமியப் பண்பாடுகளைப் பேணிக்காக்கும் இயல்புள்ளவர்களாக இருந்தமையால் சுதேசிகளின் வாழ்விலும் அதன் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்துள்ளனர்.

- ஆங்கிலேயர் காலப்பிரிவில் தமது பண்பாட்டுச் சின்னமாக அமைந்த துருக்கியத் தொப்பியை நீதிமன்றத்தில் அணிய அனுமதி தரப்படல் வேண்டுமென சட்டத்தரணி எம். ஸி. அப்துல் காதர் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட அறிவுபூர்வமான போராட்டமாக அமைந்தது. இது சிங்களத் தலைவர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தூண்டுதலில் ஒன்றாக விளங்கியது.

- இவ்வகையில் பார்க்கும்போது, இலங்கையின் வரலாற்றில் அதன் ஆரம்ப கட்டங்களிலேயே அறிமுகமாகும் அறபிகளின் வழித்தோன்றல்களாக அமைந்த முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இரண்டறக்கலந்து வாழ்ந்த ஒரு

சமூகமாக அமைகின்றனர். அநுராதபுர அரசு முதல் சுதந்திர இலங்கை வரைக்கும் அதற்குப் பின்னும் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும், பாதுகாப்பதிலும், முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமொன்றின் பங்குதாரர்கள் என்ற வகையில் இனி வரும் காலங்களிலும் எம்மால ஆற்ற முடியுமான எல்லாப் பணிகளுடாகவும் இத்தேசத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயலாற்ற பாடுபடுவது ஒவ்வொரு இலங்கை முஸ்லிமினதும் கடப்பாடாகும்.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**

1. அமீன் எம்.ஐ.எம், இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (2000), அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம.

2. சுக்ரி எம்.ஏ.எம், இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை (2010), ஏ.ஜே பதிப்பகம், கொழும்பு

3. அஸீஸ் ஏ.எம்.ஏ, இலங்கையில் சோனகர் வரலாறு, சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையம், கொழும்பு.

4. மரிக்கார், ஏ.ஐ.எல் குழு, இலங்கையில் சோனகர் பற்றிய கடந்தகால நினைவுகள் (1981), சோனகர் இஸ்லாமிய கலாசார நிலைய வெளியீடு

5. அமீன் எம்.ஐ.எம், முன்னோடிகள் (2010), அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகமை.